# தொல்காப்பியம்

## செய்யுளியல், மரபியல்

தொகுதி 4

தமிழண்ணல்

புதிய முறை எளிய உரை

# தொல்காப்பியம்

## பொருளதிகாரம்

தொகுதி - 4

**செய்யுளியல், மரபியல்**

**தமிழண்ணல்**

விற்பனை உரிமை

**மீனாட்சி புத்தக நிலையம்**

மயூரா வளாகம், 48, தானப்ப முதலி தெரு, மதுரை - 625 001.
தொலைபேசி: அலுவலகம் : 2345971 வீடு : 2560517
ஈமெயில்: meenakshiputhakam@hotmail.com

முழுவதும் திருத்திய முதற் பதிப்பு : நவம்பர், 2010.
திருவள்ளுவர் ஆண்டு : 2041, கார்த்திகை
விலை உரூவா : 75

## நூல் விவரம்

| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | : | தொல்காப்பியம்<br>பொருளதிகாரம் தொகுதி - 4<br>செய்யுளியல், மரபியல் |
| உரையாசிரியர் பெயர் | : | தமிழண்ணல் |
| முதற்பதிப்பு | : | நவம்பர், 2010<br>(தி.வ. ஆண்டு 2041) |
| நூலின் தன்மை | : | இலக்கண விளக்கம் |
| நூல் அளவு | : | 14 X 22 செ.மீ. டெம்மி |
| தாள் | : | வெள்ளைத்தாள் |
| மரபுரிமை | : | உரையாசிரியர்க்கு |
| அச்சு எழுத்து அளவு | : | 12 புள்ளி |
| பக்கங்கள் | : | 160 |
| நூலின் விலை | : | உரூவா.75 |
| அச்சிட்டோர் | : | மோனார் கிராபிக்ஸ், சென்னை. |
| ஒளி அச்சுக் கோர்வை | : | ஆதவன் பிரிண்டர்ஸ், மதுரை. |
| வெளியீடு | : | சிந்தாமணிச் செல்வம் |

**SELLING RIGHTS**

**MEENAKSHI PUTHAKA NILAYAM**

Mayura Complex 48, Dhanappa Mudali Street, Madurai - 625 001.

☎ Off : 2345971 Resi : 2560517

E-Mail: meenakshiputhakam@hotmail.com

# முன்னுரை

**தொல்காப்பியம் எழுத்தும் சொல்லும்** வெளிவந்து மாணவர்களும் மக்களும் பயன்பெற்றனர்.

எழுத்தும் சொல்லும் அறிந்தோர் பொருளதிகாரத்தைக் கட்டாயம் படிக்க வேண்டும்.

உலக இலக்கண நூல்களில், இவ்வளவு தொன்மைமிக்க காலத்தில் இலக்கியத்திற்கு - அதன் படைப்புத் திறனுக்கு - அதில் இடம்பெறும் இலக்கிய வகைகள், கொள்கைகள், உத்திகளுக்கு ஒரு பெரிய பகுதியை ஒதுக்கி எழுதித் தந்திருப்பது நம் தொல்காப்பியம் ஒன்றேயாகும். தொல்காப்பியர் நம் வணக்கத்திற்குரியவர். ஆண்டுதோறும் அவருக்கு விழா எடுக்கத் தமிழர் கடமைப்பட்டுள்ளனர். தமிழிலக்கியத் தோற்றம் புராணம் அன்று; இதிகாசம் அன்று; கட்டுக்கதைகள் அன்று. அது மானுட வாழ்வு பற்றியது; இவ்வுலகம் பற்றியது; நம்மைப் பற்றியது. காதல்வாழ்வும் அதனுடன் இணைந்த புறஉலகமும் பற்றியது.

பொருளதிகாரத்தைப் படித்தால், அது தமிழர் நாகரிகம், பண்பாடு, பழக்கவழக்கம் பற்றிய வரலாறோ என்று தோற்றும். அத்துணை அளவு அது மனிதவாழ்வு பற்றிப்பேசுகிறது. ஆனால், உண்மையில் அது இலக்கியக் கலை பற்றியது.

தமிழ்ப் பண்பாடு தனித்தன்மையுடையது. தமிழிலக்கியம் உலக இலக்கியப் பரப்பில், வேறுபட்டு நின்று, தனிச்சிறப்புக்களுடன் ஒளிவீசித் திகழ்வது. ஆனாலும் தமிழர்களே இன்னும் நன்கு இவற்றை அறிந்திலர்.

சதாசிவ நகர், **தமிழண்ணல்**
மதுரை - 625 020.

# உள்ளுறை


| | | பக்கம் |
|---|---|---|
| | முன்னுரை | |
| 1. | செய்யுளியல் | 5 |
| | இயல் கருத்து நிரல் | 6 |
| | செய்யுளியல் நூற்பா முதற்குறிப்பு அகரநிரல் | 106 |
| 2. | மரபியல் | 110 |
| | மரபியல் நூற்பா முதற்குறிப்பு அகரநிரல் | 159 |

# 1. செய்யுளியல்

**செய்யுள்** – செய்யப்பெறுவது. அது பாட்டு எனும் பொருளில் சுருங்கிவிட்டது. படைக்கப்படுவது படைப்பு. இன்று படைப்பிலக்கியம் என்கிறோமே, அதே பொருளில்தான் தொல்காப்பியர் செய்யுள் எனும் சொல்லை ஆள்கின்றார். செய்யுள் – படைக்கப்பெறும் இலக்கியம். செய்யுளியல் – இலக்கிய இயல்.

யாப்பு எனும் சொல்லின் பொருளும் இடைக்காலத்திலேயே சுருங்கிவிட்டது. யாப்பு – பாட்டுவடிவம் பற்றியதாகிவிட்டது. யாப்பருங்கலம், யாப்பருங்கலக் காரிகை எல்லாம், பாட்டுக்கு உறுப்பாவனவற்றைக் கூறிப் பாட்டுக் கட்டும் கலையை மட்டுமே 'யாப்பு' என ஆக்கிவிட்டன. தொல்காப்பியர் யாக்கப்படும் நூல் வகைக்கெல்லாம் 'யாப்பு' என்பதைப் பொதுப் பெயராக ஆள்கின்றார்.

இச் செய்யுளியல் பாட்டுக்கட்டும் 'யாப்பு'ப் பற்றி மட்டுமல்லாமல், இலக்கியம் பற்றிய அனைத்தையும் கூறுகிறது. எழுத்து அசை சீர் அடி தொடையாகப் பாட்டுக் கட்டுதல், இலக்கிய வகைகள், கொள்கைகள், உத்திகள் யாவும் இங்கு விரித்துரைக்கப்படுகின்றன. உலக வழக்கிற் காணப்பட்ட இலக்கிய வகைகளுக்கும் இதில் இடமுண்டு என்பதைப் பலர் கருதுவதே இல்லை. தொல்காப்பியர் எதைக் கூறினாலும் அது ஒன்று உலக வழக்கும் இலக்கிய வழக்கும் கலந்ததாய்ப் பொதுவானதாய் இருக்கும் அல்லது தனித்தனி வழக்குப் பற்றியதாய் இருக்கும்.

செய்யுளியல் முதல் நூற்பா இலக்கியத்துள் அமையும் 34 உறுப்புக்களைக் கூறுகின்றது. அதில் ஒரு வரிசை நிரல் உளது. அவை சிற்சில தொகுதிகளாக்கிக் கூறப்படுகின்றன. தொல்காப்பியர் இலக்கிய முழுமையையும் அது பாட்டு உறுப்பேயாயினும் திறனாய்வேயாயினும் இலக்கியத்தின் உட்கூறுகள் என்றே கருதுகிறார். பல கூறுகளின் உறுப்புக்களின் கூட்டமைப்பே இலக்கியம் என்று கருதியது. நுட்பமாய் ஆராயற் பாலது. இலக்கியத்தை ஒரு முழுமையின் உறுப்புக்களாகவும் உறுப்புக்களின் முழுமையாகவும் பார்க்கும் இன்றைய ஒப்பியல் பார்வை ஒன்றை விஞ்சுகிறது தொல்காப்பியம்.

முதல் நூற்பா கூறும் 34 உறுப்புக்களும் சிறிதும் மாறாமல் அதே வரிசையில், செய்யுளியலில் விளக்கப்படுவது இத்தொன்னூலின் கட்டமைப்பையும் ஒருநூல் எழுதப்படவேண்டிய நெறிமுறையையும் காட்டுகிறது.

முதலில் பாட்டுவடிவம், அதனுள்ளே அவ்வடிவத்தை விட்டுப் பிரிக்க முடியாத அமைப்பும் நோக்கும் கூறப்படுகின்றன. பின்னர் தமிழுக்கேயுரிய அகத்திணை அமைப்பு; அதற்குப் பிறகு அகப்பாடலில் (ஓரளவு புறப்பாடலிலும்) பொருள் கொள்ளும் முறை; இறுதியில் வண்ணமும் வனப்பும் எனச் செய்யுளியல் அமைகிறது.

தொல்காப்பியத்தில் வரும் பாட்டுக்கட்டும் அமைப்புப் பற்றிய செய்திகள் பழைமையானவை. சங்கப் பாடல்களுக்கும் முற்பட்டவை.

கலிப்பா, பரிபா, வரிப்பா - நாட்டுப்புறப் பாடல் வகைகளின் இலக்கிய வடிவங்கள். தமிழ்ப்பா வகைகள் வாய்மொழிப் பாடல்களிலிருந்து கிளைத்தவை. முதுமொழி (பழமொழி) பிசி (நொடி அல்லது விடுகதை), உரை (கதைகள்) என்பனவும் இலக்கிய அடிப்படை வடிவங்களே என முதன்முதல் சொன்ன பெருமை தொல்காப்பியர்க்கே உண்டு. இன்று மேனாட்டார் மதிக்கும் நாட்டுப் புறவியற் கூறுகளுக்கு அன்றே இலக்கியவானில் விண்மீன் இடம் தந்தவர் அவர். வண்ணமும் வனப்பும் பெரிதும் வாய்மொழியிலும் வழங்கியவை. அதனால் உரையாசிரியர்கள் காட்டுத்தர இடர்ப்படுகின்றனர்.

தமிழிலக்கண, இலக்கிய ஊற்றுக்கண் தொல்காப்பியம், தனக்கும் முற்பட்ட கடந்த காலத்தைத் தனக்குப் பிற்காலத்துக்கும் தரத் தன் காலத்தைப் பாலமாக்கிக் கொண்டமைந்தது. இவ்வுலகப் பெருநூல், இன்றளவும் தன் வீச்சால் தமிழுக்கு ஒளி பாய்ச்சுவது அது. அருவியாய், ஆறாய், பெரு வெள்ளமாய் ஓடிவந்து, தமிழர்களின் நெஞ்சக் கடல்களிலே சங்கமிக்கும் தொல்காப்பியம் தமிழர் இல்லங்களில் எல்லாம் இடம் பெறவேண்டும். அம் மாபெரும் நூல் உலகெலாம் பரப்பப்பட வேண்டும். அந்நூற்கல்வி உள்ளவரை தமிழும் தமிழ்ப் பண்பாடும் காக்கப்படும்.

## இயல் கருத்து நிரல்

**செய்யுள் உறுப்புக்கள் (34)**

1. மாத்திர எழுத்து அசை, 2. சீர் அடி யாப்பு, 3. மரபு தூக்கு தொடை, 4. நோக்கு பா அளவியல், 5. திணை கைகோள் கூற்று, 6. கேட்போர் களன்

காலம், 7. பயன் மெய்ப்பாடு எச்சம், 8. முன்னம் பொருள் துறை, 9. மாட்டு வண்ணம் ஆக 26.

வனப்பு வகை (8) : அம்மை, அழகு தொன்மை தோல் விருந்து இயைபு புலன் இழைபு. (26 + 8 =34)

1. மாத்திரை

எழுத்துக்கள் ஒலிக்கும் கால அளவு – முன்னரே நூன் மரபில் கூறப்பட்டது.

2. எழுத்து

இதுவும் நூன் மரபில் முன்னரே கூறப்பட்டது. பா ஓசை தழுவியதாகலின், அதனடிப்படையில் மாத்திரையளபை முதலிற் கூறினார்.

3. அசை

நேர், நிரை, நேர்பு, நிரைபு பற்றியன. பின்னர்க் கூறிய குற்றியலுகர அசை வகை பின்னர் கை விடப்பட்டது. நாள் மலர் காசு பிறப்பு என இவை வெண்பா இறுதி ஓரசைச் சீராக மட்டுமே விளக்கப்பட்டன.

'அசை' கணக்கிடும் முறைகள் இங்குக் கூறப்படுகின்றன.

4. சீர்

ஈரசைச்சீர், மூவசைச்சீரே அடிப்படை; பெரும்பான்மையாக வழங்குவன.

இயலசை : நேர், நிரை, உரியசை : நேர்பு, நிரைபு.

இயலசை மயக்கம் இயற்சீர் எனப்படும். நேர் நேர், நிரை நேர், நேர் நிரை, நிரை நிரை.

உரியசை சேர்ந்து வருதல் ஆசிரியவுரிச்சீர் எனப்படும்.

நேர்பு நேர்பு, நிரைபு நேர்பு, நேர்பு நிரைபு, நிரைபு நிரைபு. ஈரசையுடன் இறுதியில் 'காய்' என நேரில் முடிவன நான்கும் வெண்பாவுரிச்சீர். (தேமாங்காய் போல்வன.)

கனியில் முடிவன வஞ்சியுரிச்சீர் (தேமாங்கனி போல்வன). இன்ன பாவிற்கு இன்ன சீர் வருமெனவும், இன்ன தளை (சீருடன் சீர் சேர்தல்) வருமெனவும் கூறப்படுகின்றன.

## 5. அடி

நாற்சீர் கொண்டதே கட்டளை அடி. அடி வகைகள் எழுத்தெண்ணி அமைக்கப்படுவது முன்னைய முறை; சீர் அடிப்படையில் பகுப்பது பிற்கால முறை.

ஓரசையே நின்றும் சீராதல் உண்டு.

'கூன்' எனத் தனிச்சீர் அல்லது தனி அசை அடியின் தொடக்கத்தில் நிற்பதும் உண்டு.

சீர் வகைகள் அடியில் நிற்குமிடங்களும் கூறப்படுகின்றன.

குறளடி (இருசீரடி), சிந்தடி (முச்சீரடி), அளவடி (நேரடி, கட்டளையடி, நாற்சீரடி), நெடிலடி (ஐஞ்சீரடி), கழிநெடிலடி (அறுசீரடி) என்பன, எழுத்தெண்ணிப் பாடும்போது ஆசிரியத்துள் ஓரடிக்குள்ளேயே வந்த காலம் உண்டு.

3 முதல் 20 எழுத்து வரை அடி அமையுமென்பதால், எழுத்தெண்ணிக்கைப்படி இவை 17 ஆகும். இவ்வாறு வரும் அளவடி (நாற்சீரடி மட்டும்) 625 ஆகும்.

இரண்டு சீர் தம்முள் கூடுவது - புணர்வது - சேர்வது தளை எனப்படும். தொல்காப்பியர் தளையுறுப்பைத் தனியே கூறாமல், அடிப்புணர்ச்சி வகையில் கூறுகிறார்.

அசைச்சீர், இயற்சீர், ஆசிரியவுரிச்சீர், வெண்சீர், வஞ்சியுரிச்சீர் என ஐவகைச் சீர்கள் உள.

இவை இரண்டு சீராகத் தன்முன் தான் புணரும் போது பத்து வகை ஆகும்.

தளைவகை (சீர்கள் புணரும் வகை) ஏழு.

நேரொன்றாசிரியத்தளை - மாமுன்நேர்

நிரையொன்றாசிரியத்தளை - விளம்முன் நிரை.

இயற்சீர் வெண்டளை - மாமுன் நிரை, விளம்முன் நேர்.

வெண்சீர் வெண்டளை - காய் முன் நேர்

கலித்தளை - காய் முன் நிரை

ஒன்றிய வஞ்சித்தளை - கனி முன் நிரை

ஒன்றாவஞ்சித்தளை – கனி முன் நேர்

இவை அவ்வப் பாவில் பயின்று(மிகுந்து) வரும். இவை ஏழுடன் முன்பு கூறிய பத்தினைப் பெருக்க எழுபது வகை அடிகள் வரும்.

சீர் 5 வகை. அவை வரும் சீருடன் மாறிமாறிப் புணருங்கால் 25 ஆகும். மேலும் ஓரசை சேர்த்து முச்சீராகப் புணர்க்கும் போது 125 ஆகும். மேலும் ஓரசை சேர்த்து நான்கு சீரடியாகப் பெருக்கும் போது 625 ஆகும். இது அளவடி (நாற்சீரடிக்கு மட்டுமே) கூறப்பட்ட கணக்கு.

தொடர்ந்து படிக்கும் போது, தொல்காப்பியர் முதலில் கணித ஆசிரியராக இருந்தவரோ எனும் ஐயம் ஏற்படும்.

'தளை'யைத் தனி உறுப்பாகக் கூறாது – சொற்புணர்ச்சி போலச் சீர்ப் புணர்ச்சியாக விளக்கி, அதனுள் அடக்கி விடுகிறது தொல்காப்பியம்.

பிற்காலத்தார் தெளிவு கருதி, இவற்றை ஏழு தளைகள் எனக் கொண்டனர்.

அடிகள் விரவி – ஒன்றுடன் ஒன்று கலந்து ஒரு பாவில் வரும். ஓரடியே நின்றும் பாட்டாகும். ஒரு பாவில், ஒவ்வோரடியும் தன்னிறைவுடையதாகப் பாடப்படும். ஒவ்வோரடியும் தனித்து நின்று சிறந்து – பிறகு தொடர்ந்து நின்றும் சிறப்பதைச் சங்கப் பாடல்களில் மிகுதியாகக் காணலாம்.

'யாதும் ஊரே யாருவம் கேளிர்', 'தீதும் நன்றும் பிறர்தர வாரா', 'நோதலும் தணிதலும் அவற்றோரன்ன, சாதலும் புதுவதன்றே...' பூங்குன்றனாரின் இப்பாடல் போல் அமைவன மிகப்பல. ஓரடி மட்டுமே தனிப் பாப் போல இருப்பதைக் கருதுக. மேலும் தளை, தொடையழகு முதலியனவும் ஓரடிக்குள் மட்டுமே கருதப்படும்.

பிற்காலத்தார் ஆசிரியம், வெண்பா என எடுத்துக்கொண்டு, அவற்றின் இலக்கணமனைத்தையும் ஒரு சேரக் கூறுவர்.

தொல்காப்பியர் சீர், அடி என எடுத்துக்கொண்டு, அவற்றின் வரிசை நிரலின்படி, ஒவ்வொன்றும் எவ்வாறு வரும் – எவ்வெப்பாவில் வரும் என விளக்குகிறார். இதனை ஓர் உத்தியாகக் கொள்ளலாம்.

இவற்றை இணைத்துப் பார்த்து, வேறு ஒரு விதத்தில் ஓரிடத்தே தொகுத்து எழுதியவையே யாப்பருங்கலக் காரிகை போன்றவை.

## 6. யாப்பு

பல அடிகளால் நிறைவுற முடிவது பா மட்டுமன்று. முற்கால மரபுப்படி யாக்கப்படுவன எல்லாம் யாப்பு. அதாவது படைக்கப்படும் யாப்பு வகையெல்லாம் அக்கால 'இலக்கிய வகைகள்'. அவற்றில் பா அல்லது பாட்டு தனித்தன்மையுடையது; பெரும்பான்மையானது; அடிவரையறைக் குட்பட்டது; மக்களின் நாட்டுப்புற வழக்கிலிருந்து புலவர்களால் இலக்கிய வடிவம் ஆக்கப்பட்டது.

தமிழில் 'யாப்பு' (படைப்பு) வகைகள் ஏழு. அவற்றுள் பாட்டுத் தவிர்த்தவை ஆறு : உரை (கதையும் உரை விளக்கமும் உரையாடலும் உரைநடையின் அடிப்படையும்), நூல் (இலக்கண நூல்கள், அன்று இவை தனி வகைமையாய் வளர்ந்திருந்தமை வியப்பளிப்பது), வாய்மொழி (மந்திரம், வழிபாட்டு மொழி, நீதி அல்லது அற இலக்கியம்.)

பிசி (விடுகதை, புதிர், இவையும் பாட்டுப்போலப் பெருவழக்காக மக்களிடையே வழங்கின. மிக அரிய பட்டறிவு பளிச்சிடும். இன்றைய புதுக்கவிதை, ஹைறக்கூ என்பன எல்லாம் இவற்றின் முன் நிற்பது கடினம். மக்கள் வழக்கிலிருந்து மறைந்தவை கோடி. இலக்கியப்பாக்களில் இவற்றின் தாக்கம் மிகுதி.)

அங்கதம் – இன்று ஆங்கிலத்தில் 'சட்டையர்' (Satire) என்பர். உலக இலக்கிய வரிசையில் இடம் பெறத்தக்க இதுவும், மக்கள் வழக்கில் மிகுதியாக இருந்து மறைந்தது. இதன் செல்வாக்கு சங்கப் பாடல்களிலும் திருக்குறளிலும் காணப்படும் இடங்கள் தேடப்பட வேண்டும். இன்று கவிமணி, பாரதிதாசன் போல அங்கதம் பாடும் வன்மை யாரிடத்தும் காணப்படவில்லை. புதுக்கவிதை அங்கதங்கள் மத்தாப்புப் போல ஒளிவீசி, உடனே நினைப்பைவிட்டு நீங்கி விடுகின்றன. கூட்டத்தில் 'கைதட்டுக்குப்' பேசுவது போன்ற ஒளிவீச்சுக்கள் அவை. பிசியோடு முதுசொல்லுடன் அதாவது பழமொழியுடன் 'உரை' எனப்படும் கதை கூறுதலும் மக்கள் வழக்கினவே. அதனால் இந்த இடத்தில் மட்டும் தமிழ்நாட்டு எல்லைகளைக் கூறி, அதற்குள் வாழும் மக்கள் படைக்கும் யாப்பு வகை (இலக்கிய வகைமை) எனச் சுட்டிச் சொல்கிறார், தொல்காப்பியர்.

7. மரபு

மரபு என்பதைத் தொல்காப்பியர் சொல் மரபு என்றே கொள்கிறார். மரபியலில் அது கோடிட்டுக் காட்டி விளக்கப்படுகிறது.

8. தூக்கு

இது ஓசையைக் குறிக்கும். பாவுக்கு அதனதன் ஓசையே உயிர். ஆசிரியம் – அகவலோசை, அகவிக் கூவிக் கூப்பிடுவது போல் அமையுமென்பர். வெண்பா – அது போன்றதன்று என்றார் தொல்காப்பியர். அதைப் பின்பு செப்பலோசை என்றனர். கூவுவதற்கு மறுமொழிவது போல இருக்கும் எனலாம். கலி – துள்ளலோசை; வஞ்சி – தூங்கலோசை. இவை இசை, ஆடல், குழுப்பாடல் கூடியன.

9. தொடை

மோனை எதுகை முரண் இயைபு.

அளபெடையும் ஒரு தொடையாகும்.

சீர்களை வரிசைபெறத் தொடுப்பதால் இது தொடை எனப்பட்டது. தொடை, தொடையல் – பூமாலையையும் குறிக்கும்.

பூத் தொடுப்பது போன்றதே பாத்தொடுப்பதும்.

ஓரடிக்குள் பொழிப்பு, ஒரூஉ, செந்தொடை மூன்றும் வருமென்பார் தொல்காப்பியர்.

கட்டமைப்பான தொடை எதுவுமின்றி, இயல்பாகத் தொடுப்பது செந்தொடை.

நிரல் நிறுத்து அமைக்கும் நிரல்நிறை

இரட்டை யாப்பு – இரட்டைக் கிளவிகளும் கூடத் தொடை வகையில் சேரும்.

மோனை – அடிதோறும் அல்லது ஓரடிக்குள் சீர்தோறும் முதலெழுத்து ஒத்து வருவது.

எதுகை – முதலெழுத்து அளவொத்திருக்கும், அஃது ஒழிந்த இரண்டாமெழுத்து முதலியன ஒத்து வருவது.

இவை கிளை எழுத்து – இனவெழுத்து வரினும் மோனை, எதுகையாகும்.

முரண் தொடை சொல் முரண், பொருள் முரண் என இரண்டாகும்.

இயைபு என்பது அடிதொறும் இறுதி எழுத்து, அசை, சீர் ஒன்றி வருவது.

பொழிப்பு – ஒரு சீர் இடையிட்டு வருவது.

ஒரூஉ – இரு சீர் இடையிட்டு வருவது.

தொடைக்குக் கூறிய இலக்கணங்களின் வேறுபட்டு வருவது செந்தொடை.

தொடை வகைக்கும் ஒரு மொத்தக் கணக்குப் போட்டு, பதின்மூவாயிரத்து எழுநூற்றெட்டு எனக் கூறுவது, கணித மேதைகளையும் திகைக்க வைக்கிறது. உரையாசிரியர்கள் வெவ்வேறு விதமாகக் கணக்குப் போடுவர்.

10. நோக்கு

தொல்காப்பியரே குறிப்பிடும் மிகச் சிறந்த இலக்கியக் கோட்பாடு. ஒரு பாடலில் ஒரு மாத்திரை முதல், ஓரடி அல்லது பா முடிய, ஒவ்வொன்றும் காரணங் கருதிப் படைக்கப்படுவதே நோக்கு அமைந்த பாட்டு. 'மறித்து நோக்கி இலக்கியச் சுவையாம் பயன்கோடல்' இது தமிழர்கண்ட திறனாய்வு முறை என்றும் கூறலாம்.

11. பா

ஆசிரியம் வஞ்சி வெண்பா கலி என நான்கு வகைப்படும்.

இவை அறம் பொருள் இன்பமாம் விழுமியங்களைப் பாடப் பயன்படும்.

ஆசிரியத்துள் வஞ்சியும் வெண்பாவினுள் கலியும் அடங்கும். இவை நடையொப்புமையால் இணைபவை.

'வாழ்த்துப்பா வகை' பாடலால் பெயர் பெறும். கலி, வஞ்சியில் அவை பாடப்பெறா.

புறநிலை வாழ்த்து, வாயுறை வாழ்த்து, அவையடக்கியல், செவியறிவுறூஉ, அங்கதச் செய்யுள் என்பன பொருளாலும் பாக்கள் அன்று பெயர் பெற்றன என்பதை உணர்த்துகின்றன.

வெண்பா வகை, பரிபாடல் அமைப்பு, அங்கதப் பா வகை, கலிப்பா வகை, ஆசிரிய அமைப்பு யாவும் மிகவும் விரிவாகக் கூறப்படுகின்றன.

கலிப்பா ஒத்தாழிசைக்கலி, கலி வெண் பாட்டு, கொச்சகம், உறழ்கலி என நான்கு வகைப்படும்.

இவற்றின் உறுப்புக்கள் விரிவாக விளக்கப்படுகின்றன.

கலிவெண்பாட்டு என்பது வெள்ளடிகள் மிக்கு, ஒரே பொருள் பற்றி முழுவதும் அமையும் என்றது, பிற்பாடு சிற்றிலக்கிய வகைகள் பல அவ்வடிவத்தில் கிளைக்க வழிவகுத்தது.

கலிப்பா, பரிபாடல் (தொல்காப்பியர் குறிப்பிடாத வரிப்பாடல்) ஆகியவற்றைக் கருத்திற் கொண்டு, ஆராய்ந்தால் பிற்காலத்தில் விருத்தப் பா வகைகளும் சந்தப் பாக்களும் பல்கிப் பெருக அவை முன்னோடியாய் இசையுடன் பாடப் பட்டவை என்பது விளங்கும்.

## 12. அளவியல்

நான்கு வகைப் பாக்களுக்கும் அடிவரையறை கூறப்படுகிறது.

ஆசிரியப்பா – சிற்றெல்லை 3 – பேரெல்லை 1000 அடி

வெண்பா – குறள்வெண்பா 7 சீர் – பேரெல்லை 12 அடி

அங்கதப்பாட்டு – குறள்வெண்பா போல்வது – பேரெல்லை 12 அடி.

பரிபாட்டு – சிற்றெல்லை 25 – பேரெல்லை 400 அடி

பிறவற்றிற்கும் அடியமைப்புக் கூறப்படுகிறது.

அடிவரையறை இல்லாத வகைகள்

இவை பா வகை தவிர்த்தவை. நூல் (இலக்கணம்), உரை (கதை, செய்யுளுக்கு உரை போல்வன), நொடி (பிசி, விடுகதை, புதிர்), முதுமொழி (புழமொழி), வழிபாடு, அறவழி, சமய நெறி சார்ந்த மந்திரம் (மறைமொழி, வாய்மொழி) என்பன ஆறும் அடி வரையறை கூற இயலாதன.

இவை ஒவ்வொன்றும் நிரல்பட விளக்கப்படுகின்றன.

பண்ணத்தி – இராகம் தழுவிய பாடல்கள், நாட்டுப்புற இசைப்பாடல்கள் ஒருவகையினவாக விளக்கப்படுகின்றன.

## 13. திணை

அகம் சார்ந்தவை கைக்கிளை முதல் பெருந்திணை ஈறாக ஏழு. இவை முன்பே கூறப்பட்டன. (புறத்திணை இவற்றின் சார்புடையன. எனவே தனியே கூறிற்றிலர்.)

**14. கைகோள்**

களவு, கற்பு எனக் கைகோள் இருவகைப்படும்.

**15. கூற்று**

களவில் கூற்று நிகழ்த்துதற்குரியவர் ஆறுபேர் என்பார். பார்ப்பான், பாங்கன், தோழி, செவிலி, தலைவன், தலைவி.

கற்பில் கூற்று நிகழ்த்துதற்குரியவர் - மேலே கூறிய அறுவருடன், பின் வருபவரும் எனச் சேர்த்துக் கூறப்படுகிறது. பாணன், கூத்தன், விறலி, பரத்தை, அறிவர், கண்டோர் ஆவர். 'பேணுதகு சிறப்பின் பார்ப்பான் முதலா முன்னுறக் கிளந்த அறுவரொடு' இருவரும் உரியர் என மீண்டும் கூறுவதால், பார்ப்பனர் தூய தமிழரே என்பது பெறப்படுகிறது. தொழில் கருதியே, அவர்கள் வடமொழியைப் பற்றிக் கொண்டுள்ளனர்.

தாமே கூற்று நிகழ்த்தாமல் பிறரால் எடுத்துப் பேசப்படுபவர் ஆறுபேர் உளர். ஊரார், அயலார், சேரியோர், நோய் பற்றி அறிய வல்லவர். தந்தை, தமையன்மார்.

**16. கேட்போர்**

மேலே கூறிய கூற்றுக்களைக் 'கேட்பவர்' பற்றிய விளக்கமும் தொடர்கிறது.

பார்ப்பார், அறிவர் கூற்றை அனைவரும் கேட்பராம்.

பார்ப்பார், அந்தணர், அறிவர், முனிவர், ஆசான்மார், கணியர், பொருநர் என வாழ்ந்த பலரும் கலந்த கலப்பே இன்றைய 'பார்ப்பனியம்' என்பது அறிஞர்களால் விரித்துரைக்கப்பட்டுள்ளது.

ஒருவர் சொல்வதைக் கேட்க இயலாத அஃறிணைப் பொருள்களை முன்னிறுத்தி, அழைத்தும் கூற்று நிகழ்த்துவதுண்டு. அவை வருமாறு : ஞாயிறு, திங்கள், அறிவு, நாண், கடல், கானல், விலங்கு, மரம், பொழுது (பருவமும் மாலைப் பொழுதும்), பறவை, நெஞ்சு, இவையல்லாத பிறவும் சொல்லுந போலவும் கேட்குந போலவும் கூற்றுக்கள் நிகழ்த்தப்படுவதுண்டு.

**17. களன்**

ஓர் இலக்கியத்தில் அடிக்கருத்து - அதில் வரும் நிகழ்ச்சிகள் - ஒருமையுடன்

அமைவதே 'களம்' ஆகும். மற்றொன்று விரித்தல், பிறிதுபட மொழிதல் கூடா.

18. காலம்

அந் நிகழ்வுகள் கால வழுவின்றி, முக்காலமும் தெளிவுபட அமைதல் இது.

19. பயன்

ஒரு பாடலில் வரும் செய்தியால், ஒரு பயன் விளைய வேண்டும். அதன் பயன் பாடலில் கூறப்பட்டிராது. அது கூறப்பட்டு முடிந்தபின் அதனால் ஒரு 'பயனை' விளைவிக்கவே அது கூறப்பட்டது என உணருமாறு பாடற்கருத்து அமைய வேண்டும்.

20. மெய்ப்பாடு

இங்கு கூறப்படுவது இலக்கிய மெய்ப்பாடு – இது நாடக மெய்ப்பாடு அன்று என்பது இந்நூற்பாவால் விளக்கப்படுகின்றது.

ஒரு பாட்டின் பொருளை மேலோட்டமாகப் படித்ததும், அதன் கடினமற்ற பொருளால், உள்ளத்தில் மெய்ப்பாட்டுச் சுவை தோன்றப் படைப்பது இது. அதாவது ஆராய்ச்சியெல்லாம் இல்லாமல், படித்ததும் சுவை தோன்ற வேண்டும். அது எட்டுவகை என்பது முன்னே கூறப்பட்டது.

தொல்காப்பியர் ஓர் இலக்கணப் பேரறிஞர் மட்டுமல்லர், ஓர் இலக்கியக் கோட்பாட்டாளர், அத்தகைய நுண்மாண் நுழைபுலம் உடையவர் என்பன இந் நூற்பாவால் உறுதிப்படுகின்றன.

21. எச்சம்

ஒரு பாடலைப் படித்து முடித்துவிட்டபின், அதன் பொருள், பாட்டுக்கு வெளியே நிற்பது இது. சொல் எஞ்சி நின்றால் சொல்லெச்சம். குறிப்பு எஞ்சி நின்றால் குறிப்பெச்சம்.

பயன், எச்சம் – இவற்றிடைச் சான்றுப் பாடல்களைப் படித்து வேறுபாடறிய வேண்டும்.

களம், காலம் – இவற்றின் கோட்பாட்டு அடிப்படை நன்கு உணரப்பட வேண்டும்.

நோக்கு, மெய்ப்பாடு உட்பட இவை யாவும் உலகளாவிய இலக்கியக் கோட்பாடுகள். எந்த மொழி இலக்கியத்திலும் ஏற்றிப் பார்க்கக் கூடியவை.

ஒவ்வொன்றையும் பல நூறு பக்கங்களில், விளக்கி எழுதச் சங்கப் பாடல்கள் மட்டுமன்றி, இன்றைய புதுக்கவிதைகள் வரை உதவும்.

### 22. முன்னம்

மிகச் சிறந்த கோட்பாடு இது. முன்னம் - முகக் குறிப்பு. இங்கு பாட்டிலுள்ள, அதன் சூழல் பற்றிய குறிப்பு.

ஓர் அகப்பாடலில் அது நாடக வடிவினதாகலின், இது யார் கூறியது; யாருக்குக் கூறியது; எச் சூழலில் கூறியது எனும் விவரம் பாடலுள் இராது. படிப்பவர்தான் இவற்றை உய்த்துணர வேண்டும். அவ்வாறு உய்த்துணருமாறு, அதில் சிறு குறிப்பு இருக்க வேண்டும்.

இன்றையத் திறனாய்வாளர் கூறும் 'இருண்மை'யிலிருந்து, இது சற்று வேறுபட்டது. அதனிலும் சிறந்தது.

### 23. பொருள்

ஒரு பாடலில் வரும் உரிப்பொருளே, அதன் அடிக் கருத்து - அது தவிர முதலும் கருவும் பின்புலமாய் வரும். இவை போல அமையாது, பொதுவான பொருள்பற்றிய பாடல்களும் அன்று பாடப்பட்டன என்று தெரிகிறது. இவ்வாறான பாடற் கருத்தே, இங்கு 'பொருள்' எனப்படுகிறது.

### 24. துறை

'துறை' என்பது புறப்பாடலில் அமைவது. அகப்பாடலில் 'கூற்று' ஒன்றே உண்டு. அது நாடகப் பாங்குடையது. நீர்த் துறைபோல, பலவகைப்பட்ட பொருளும் ஒரு நெறிப்பட வருவது இது.

### 25. மாட்டு

இது கொண்டுகூட்டு எனப்படும். பெரும்பாணாற்றுப்படை போல மிக நீண்ட பாடலாயினும் குறுந்தொகை போல மிகச் சிறிய பாடலாயினும் அதனை உரைநடை வாக்கிய வடிவப்படுத்தி, அதன் பொருளை அறிவது மாட்டு ஆகும்.

இவ்வாறு 'மாட்டு' எனக் கொண்டு கூட்டாமலும் எச்சம் எனப் பொருள் எஞ்சி நிற்காமலும் கிடந்தவாறே பாடலைப் பாடி முடிப்பதும் உண்டு.

## 26. வண்ணம்

இதனைச் சந்த வேறுபாடு என்பர். தன, தான, தனதன, தனதான என்பதுபோல் இதற்குச் சந்த வாய்பாடு பல கூறுவர்.

இஃது இருபது வகைப்படும்.

### எழுத்து அடிப்படை வண்ணங்கள்

1. வல்லிசை வண்ணம் – வல்லெழுத்தே மிக்குவரும்.
2. மெல்லிசை வண்ணம் – மெல்லெழுத்தே மிக்குவரும்.
3. இயைபு வண்ணம் – இடையெழுத்தே மிக்குவரும்.
4. நெடுஞ்சீர்வண்ணம் – நெட்டெழுத்தே மிக்குவரும்.
5. குறுஞ்சீர் வண்ணம் – குற்றெழுத்தே மிக்குவரும்.
6. சித்திர வண்ணம் – நெடிலும் குறிலும் மிக்குவரும்.
7. நலிபு வண்ணம் – ஆய்த எழுத்து மிக்குவரும்.

### சொல், சீர் வண்ணங்கள்

8. பாஅவண்ணம் – நூற்பா, சூத்திர வடிவம்
9. எண்ணுவண்ணம் – 'சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்று ஐந்தின்' – இதுபோல் எண்ணுப் பயிலும்.
10. ஏந்தல் வண்ணம் – வந்த சொல்லே திரும்ப வரும் – சொற்பின்வரு நிலையணி போல.

### 'தொடை' வண்ணம்

11. தாஅ வண்ணம் – பொழிப்புத்தொடை மிக்கது.
12. அளபெடை வண்ணம் – அளபெடை மிக்கு வருவது.

### 'ஓசை' வண்ணம்

13. ஒழுகு வண்ணம் – நீரோட்டம் போல ஒழுகும் ஓசை.
14. ஒரூஉ வண்ணம் – அடிகள் தனித்தனி நிற்கும்.
15. அகைப்பு வண்ணம் – பாடல் இடைவிட்டுவிட்டு அமையும்.

16. தூங்கல் வண்ணம் - வஞ்சிக்குரிய தூங்கலோசை.

17. உருட்டு வண்ணம் - உருள்வது போன்ற ஓசையுடையது.

18. முடுகு வண்ணம் - நாற்சீரடிக்கும் கூடுதலாக வந்து உருளோசையுடையது.

'நடை' வண்ணம்

19. அகப்பாட்டு வண்ணம் - பாட்டு முடிவுற்றிருக்கும், பொருள் முடிந்திராது.

20. புறப்பாட்டு வண்ணம் - பொருள் முற்றுப் பெற்றிருக்கும். பாடல் முடிவு பெறாதது போலத் தோன்றும்.

வனப்பு

எட்டு வகைப்படும். தமிழ் இலக்கிய அடிப்படை வகைகளை 'எட்டு யாப்பு'க்களாக கூறிய தொல்காப்பியர், அழகுணர்ச்சி அடிப்படையில் எட்டுவகை 'வனப்புக்களாக'த் தமிழ் இலக்கியத்தைப் பாகுபடுத்துகிறார்.

வனப்பு என்பதற்கு, 'உறுப்புக்கள் அனைத்தும் திரண்டவழிப் பெறுவதோர் அழகு' என்று பேராசிரியர் பொருள் கூறுவார். அதாவது மொத்த அழகு, முழுமை அழகு.

1. அம்மை - சில சொற்கள், குறைந்த அடிகளாலானது.
2. அழகு - செறிவுமிகுந்த சொற்கள், கற்பனைக் கவின் கொண்டவை.
3. தொன்மை - பழைய தொன்மைக் கதைகள் - நல்ல கற்பனை வளமிகு புராணங்கள்.
4. தோல் - அற நூல்கள், கூடுதலான அடிவரையறைகள், காப்பியங்கள்
5. விருந்து - புதிய வடிவம், புதிய கருத்து, புதிய வகைகள், புத்தம் புதிய இலக்கிய வரவுகள்.
6. இயைபு - ஞணநமன யரலவழள - 11 எழுத்துக்களை இறுதியிற் கொண்ட, தொடர்நிலைச் செய்யுள்கள்.
7. புலன் - மக்கள் மொழியாலானவை. எளிதில் எல்லோர்க்கும் விளங்குபவை. தெருக்கூத்துப் போன்றவை.

8. இயைபு – ஒற்றும் வல்லினம் ஆறும் சேர்ந்து வராது. குறளடி முதலாகிய ஐந்தடியும் வரும். ஓங்கிய சொற்களுடன் வரும். இவை சில வழக்கில் இன்று இல.

வண்ணத்துடன் 26 + வனப்பு 8 ஆகச் செய்யுளுறுப்பு 34 ஆகும்.

**எதிர்கால உணர்வு**

தொல்காப்பியர் தமிழ் இலக்கணம் முழுவதையும் தாமே கூறி முடித்துவிட்டதாகக் கருதவில்லை. இப்பெரு நூலில் வருவன பல முன்மாதிரிகளே. ஒரு மொழி மிகப் பரந்துபட்டது; நாள்தோறும் வளர்வது; கற்றோரும் மற்றோருமான மக்கள் அனைவரும் பயன்படுத்துவது.

இதனால் எதிர்கால வளர்ச்சி, மாற்றம் ஆகிய இவற்றுக்கு ஏற்ப, யான் கூறியன கொண்டு, கூறாதவற்றையும் வகுத்துக்கொள்க எனப் பல 'புறனடைச் சூத்திரங்களை' எழுதியுள்ளார்.

அவர்தம் இறுதிப் புறனடை, எதிர்காலம் அனைத்திற்கும் வழிகாட்டுவதாகும்.

இலக்கிய வளர்ச்சியில் உட்புகுந்து
ஆராய்ந்து, இதுவரை எழுதியவை
பிழைத்தன போல – காலப் பழைமையால்
வேறுபட்டனவாகித் தோன்றும் – அவ்வாறு
தோன்றுவது இயல்பே. அங்ஙனம்
தோன்றினும், யான் இதுகாறும் கூறிய
நெறிமுறைப்படி, அவ்வக் காலத்திற்கு ஏற்ப,
முரண்பாடின்றிப் புதிய இலக்கணம்
படைத்துக்கொள்ளுதல், தெளிந்த
அறிவுடையவர் கடமையாகும்.

# செய்யுளியல்

## இலக்கிய உறுப்புக்கள்

**மாத்திரை எழுத்தியல் அசைவகை எனாஅ,**
**யாத்த சீரே அடி யாப்பு எனாஅ,**
**மரபே தூக்கே தொடைவகை எனாஅ,**
**நோக்கே பாவே அளவியல் எனாஅத்**
**திணையே கைகோள் கூற்று வைக எனாஅக்**
**கேட்போர் களனே காலவகை எனாஅப்**
**பயனே மெய்ப்பாடு எச்சவகை எனாஅ,**
**முன்னம் பொருளே துறை வகை எனாஅ,**
**மாட்டே வண்ணமொடு யாப்பியல் வகையின்**
**ஆறுதலையிட்ட அந்நால் ஐந்தும்**
**அம்மை அழகு தொன்மை தோலே**
**விருந்தே இயைபே புலனே இழைபு எனாஅப்**
**பொருந்தக் கூறிய எட்டொடும் தொகைஇ**
**நல்லிசைப் புலவர் செய்யுள் உறுப்பென**
**வல்லிதிற் கூறி வகுத்துரைத் தனரே. (1259)**

இந்நூற்பாவைத் தமிழிலக்கியத்தின் ஆலமரம் எனலாம். இதன் விழுதுகளும் கிளைகளும் பிறவுமே இலக்கிய உறுப்புக்கள் அனைத்தும். தொல்காப்பியர்தான் ஒழுங்குபடுத்தித் தந்திருந்தாலும், இலக்கணம், மொழி, இலக்கியம் என்பன பலர்தம் கூட்டு முயற்சியே. வழிவழி வரும் மரபையே தாம் அறிந்து உரைப்பதால், அம் மாபெரும் இலக்கியப் பரப்புக்குத் தாம் ஒரு 'எழுது கருவியே' என அறிஞர் எளிமையாய் உணர்வர். 'நல்லிசைப் புலவர், இந்த 34-யும் செய்யுள் (இலக்கிய) உறுப்பு என, வல்லிதிற் கூறி (அழுத்தமாய்க் கூறி) வகுத்துரைத்தனர் என்பார் அவர். அவை முறையே வருமாறு 1. பாட்டின் முதல் அடிப்படைச் சிற்றுறுப்பு, எழுத்தொலியின் கால அளவு 2. பாடலுக்கேற்ப அமையும் எழுத்துக்களின் இயல்பு 3. அவ் எழுத்தாலாகி, பாடலின் ஓசையை - சந்தத்தை உருவாக்க உதவும் அசைவகை 4. அந்த அசை வகைகளை இணைத்து அமைத்த சீர்கள் 5. சீர்களை ஒன்றுடன் ஒன்று தளைத்துக் கட்டி உருவாக்கும் பாடலடிகள் 6. இலக்கிய வகையாக யாக்கப்படும் யாப்பு. அடிதோறும்

பொருள்பெற்று நிற்பச் செய்யும் செய்கை என்பர் பேராசிரியர். 7. வழிவழியாக வரும் இலக்கிய மரபு. 'காலந்தொறும் இடந்தொறும் வழங்கிவரும் வழக்குக்கு ஏற்ப வழுப்படாமற் செய்வதொரு முறை' 8. தூக்கு என்பது ஓசைவகை. 9. சீர்களைப் பாடல்களில் தொடுக்கும் தொடை வகைகள் 10. பாடல்களைக் கேட்போர்க்கு நோக்குப்பட, பயன்படுமாறு செய்யும் நோக்கு. இது ஒரு தமிழ்த்திறனாய்வு. பாடலில் வரும் எவ்வுறுப்பையும் ஏன்? எதற்கு? – என மறித்து நோக்கிப் பயன் கோடல் இது. 11. பா வகைகள் பேராசிரியர் விளக்கம் காலத்தால் அழியாதது. 'பா என்றது இவ்வுறுப்புக்களையுடைத்தாய்ச் சேட்புலத்திருந்து சொல்லும் பொருளும் தெரியாமல் ஒருவன் கூறிய வழியும், இஃது இன்ன செய்யுள், என்று அறிவதற்கு ஏதுவாகிப் பரந்து படச் செய்வதோர் ஓசையை 12.பாக்களுக்குரிய அடிவரையறையைக் கூறுவது அளவியல் 13. அகத்திணையும் புறத்திணையும் 14. திணை ஒழுக்கம். அகத்தில் களவும் கற்பும் இரு கைகோள்கள். 15. கூற்று – ஓர் அகப்பாடலில் கூறுகின்றார் இன்னாரென அறியச் செய்தல் 16. கேட்போர் – அதைக் கேட்போர் யாரென்று தெரியச் செய்வது. 17. களன் – அவ்வாறு கூறவும் கேட்கவுமான சூழல் (நாட அரங்குபோல) 18. காலவகை – முக்காலமும் பாடல் வழி உணரச் செய்தல். களம்போல நிகழும் காலமும் அறியும்படி அகப்பாடல் பாடப்படவேண்டும் 19. பயன் – பாடலில் வரும் கூற்றினால் வரும் பயன் அகப்பாடலில் இராது. பாட்டுப் பொருளால், பயனை உணர வைப்பது பயன் 20.மெய்ப்பாடு என்பது பாட்டுப்பொருளை உணர வைப்பது; சுவைக்க வைப்பது. 'மெய்ப்பாடென்றது சொல் கேட்டார்க்குப் பொருள் கட்புலனாதலை' – பேரா. 21.எச்சவகை – பாட்டு முடிந்ததும் பொருள் முடியாது எஞ்சி நிற்பது. சொல்லியதால், சொல்லாது விட்டதை அறிவது எச்சம். அது கூற்றெச்சம் (சொற்கள் எஞ்சி நிற்பது), குறிப்பெச்சம் (மனக்குறிப்பு எஞ்சி நிற்பது). இதுவும் 'பயன்' போன்றதென்றாலும், பாடலுடன் பொருந்தி, அதன் எச்சமாக நிற்பது இது. 22.முன்னம் – குறிப்பால் அறியவைப்பது. ஒரு பாடலில் கூறுவாரையும் கேட்பாரையும் சூழலையும் குறிப்பால் எல்லோரும் அறியவைப்பது 23. பொருள் – புலவன் சொல்லக்கருதிய பாட்டுப்பொருள் (புறப்பாடலில் வருவது) 24. துறை – புறத்துறைகளில் யாதென உணர வைத்தல் 25. மாட்டு – கொண்டு கூட்டு. பாடலில் அகன்றும் அணுகியும் கிடக்கும் பொருள்களைக் கொண்டு கூட்டி, ஒரு தொடராக்கிப் பொருள் கொள்ளும் முறை. பாடல் வடிவை உரைநடை (வசன) வடிவாக்குதல் 26.வண்ணம் – பாவில் நிகழும் ஓசை – சந்த வேறுபாடுகள். வனப்புக்கள் எட்டு: அம்மை, அழகு, தொன்மை, தோல், விருந்து, இயைபு, புலன், இழைபு.

ஆகச் செய்யுளாம் இலக்கிய உறுப்புக்கள் முப்பத்து நான்கு.

## எழுத்ததிகாரத்தில் கூறப்பட்டன

## மாத்திரையும் எழுத்தியலும்

**அவற்றுள்**
**மாத்திரை அளவும், எழுத்தியல் வகையும்**
**மேற்கிளந்தன்ன என்மனார் புலவர். (1260)**

மாத்திரை அளவு - எழுத்துக்கள் ஒலிக்கும் கால அளவு. எழுத்துவகை. மேற்கிளந்த அன்ன - முன்னே எழுத்ததிகாரத்தில் கூறியதைப் போன்றன.

## அசைவகை

**குறிலே, நெடிலே, குறில் இணை, குறில் நெடில்,**
**ஒற்றொடு வருதலொடு மெய்ப்பட நாடி**
**நேரும் நிரையும் என்றிசின் பெயரே. (1261)**

குறில் நெடில் தனித்தும் ஒற்றடுத்தும் வரும். க, கா; கல், கால். குறிலிணை குறில்நெடில் தனித்தும் ஒற்றடுத்தும் வரும். கல, கலா; கலம், கலாம்.

ஒற்றொடு வருதலொடு என்றதால், முன்னர்க் கூறப்பட்டவை ஒற்றன்றி வருமெனப் பொருள்படும். மெய்ப்படநாடி - பொருள் பொருந்த ஆராய்ந்து. முன்னர்ச் சொன்னவை நான்கும் நேரசை, பின்னர்ச் சொன்னவை நான்கும் நிரையசை, நேர் - நெடில் ஒற்றடுத்த நேரசை, நிரை - குறில்நெடில் இணைந்த நிரையசை. அவையே உதாரணமும் ஆயின.

## இருவகை உகர இறுதிகள்

## நேர்பு, நிரைபு எனவும் வருதல்

**இருவகை உகரமொடு இயைந்துஅவை வரினே**
**நேர்பும் நிரைபும் ஆகும் என்ப;**
**குறில்இணை உகரம் அல்வழியான. (1262)**

இருவகை உகரம் - குற்றியலுகரம், முற்றியலுகரம், முன்னே சொன்ன எழுத்துக்கள் பொருந்தி ஈற்றில் உகரம் பெற்றுவரின் நேர்பு, நிரைபு என ஆகும். கன்று, காசு, காற்று - குற்றுகர நேர்பு அசைகள், கல்லு, காவு, சார்பு - முற்றுகர நேர்பு அசைகள்.

அலகு, அலக்கு, மலாடு, பனாட்டு - குற்றுகர நிரைபசைகள்
இரவு, புணர்வு, உலாவு, உராய்வு - முற்றுகர நிரைபசைகள்.

குறில் இணை உகரம் – கடு, பசு, மழு, கணு – இவை நிரையசையாகும்; நேர்பு அசையாகாது.

நேர்பு – நெடில் ஒற்றடுத்து குற்றுகரம் பெற்றது.

நிரைபு – குறில் நெடில் இணைந்து குற்றுகரம் பெற்றது.

அவை தாமே உதாரணமும் ஆயின, நேர் நிரை என்றன போல.

## இயலசை, உரியசை

**இயலசை முதலிரண்டு; ஏனைய உரியசை. (1263)**

முதல் இரண்டு: நேர், நிரை இவை இயலசை எனப்படும். ஏனைய – அடுத்த இரண்டு நேர்பு, நிரைபு. இவை உரியசை எனப்படும்.

## ஒரு சொல்லைச் சிதைத்து, முதலிலுள்ள தனிக்குறில் அசை ஆகாது

**தனிக்குறில் முதலசை மொழி சிதைத்து ஆகாது. (1264)**

அழகு – இதை அழ + கு; நிரை நேர் எனல் வேண்டும். பலா – இது குறில் நெடில் இணைந்த நிரையசை அ + ழகு என்றோ, ப + லா என்றோ சொல்லைச் சிதைத்து முதலிலுள்ள குறிலைத் தனியே அசையாக்கக் கூடாது. ‘அ ஆ, இழந்தான் என்று எண்ணப்படும்’. அ, ஆ விட்டிசைப்பதால், முதலிலுள்ள தனிக்குறில் (அ) அசையாகும். அ ஆ – நேர்நேர்.

## குற்றியலிகரமும் ஒற்றுப் போல அலகு பெறாமை

**ஒற்றெழுத்தியற்றே குற்றிய லிகரம். (1265)**

அசை கணக்கிடும்போது ஒற்று அலகு (அளவு) பெறாது. அதாவது க என்பதும் நேரசை; கல் என்பதும் நேரசை. ஒற்றுக்கு என ஒலி அளவு சேர்த்துக்கணக்கிடுவதில்லை. குற்றியலிகரமும் இந்த ஒற்றைப்போல், அசைக்குக் கணக்கில் சேராது, ஒற்றெழுத்துப் போலவே கொள்ளப்படும். ‘குழலினி தியாழினி தென்ப’ – நிரைநிரை நேர்நிரை நேர்நேர். ‘தி’ யில் உள்ள குற்றியலிகரமும் ஒற்றுப்போலவே அலகு பெறாது.

## முற்றியலுகரமும், குற்றியலுகரமும் போல் அசையாகாத இடம்

**முற்றிய லுகரமும் மொழிசிதைத்துக் கொளாஅ**
**நிற்றல் இன்றே ஈற்றடி மருங்கினும். (1266)**

முற்றியலுகரமும் குற்றியலுகரமும் மொழி சிதைத்து அசைகொள்ளப்படாது. மொழி சிதைத்து ஆகாது (1264) என்பதை ஒப்பிடுக. நாணுடையரிவை. இது 'நாண் உடையரிவை' என்பது. 'நாணு' எனப்பிரித்து நாணு டையரிவை என நேர்பு அசை ஆக்கக் கூடாது; பெருமுத் தரையர் – இதில் பெருமு என மொழி சிதையுமிடத்தில், நிரைபசையாகாது. அது பெரு + மு = நிரைநேர் எனவே ஆகும். 'அரவு வாய் அவை பட்டென' – அரவு என்பது நிரைபு அசை, மொழி சிதையாமையின் அவை ஈற்றடியிலும் மொழிசிதைத்து அசை ஆகா, ஏறு, களிறு – நேர்பு, நிரைபு. ஏ + று எனவோ களி + று எனவோ மொழி சிதைத்து அசை ஆகாது.

### இருவகை உகரமும் ஒற்றுப் பெற்றால் அசையாகும்

**குற்றிய லுகரமும் முற்றியலு கரமும்**
**ஒற்றொடு தோன்றி நிற்கவும் பெறுமே. (1267)**

குற்றியலுகரம் முற்றியலுகரம் புணர்ச்சியால் ஒற்றுப் பெற்றவழி அசையாகும். வேண்டு – டு அசையாகாது. இது நேர்பு எனப்படும். வேண்டும் பொருள் – ஒற்றுப் பெற்றதால் வேண் + டும் என அசை பெறும். கடவு – நிரைபு. கடவுள் – கட + வுள், என்ற வழி அசையாகும். (கடவு – வில் 'வு' அசையாகாது.) இறுதியில் ஒற்றுப் பெற்ற வழி அசையாதல் காண்க.

### ஓசைக்கு ஏற்பவே அசையும் சீரும் பகுக்கப்படும்

**அசையும் சீரும் இசையொடு சேர்த்தி**
**வகுத்தனர் உணர்த்தலும் வல்லோர் ஆறே. (1268)**

அசை, சீர் என்பன பாட்டின் ஓசை கருதியன. அங்கு ஓசையே முக்கியம். எனவே 'இசையோடு சேர்த்தி வகுத்தனர்' என்று இசைக்கேற்பப் பகுத்து உரைத்தல் வேண்டும். 'நிலமிசை நீடுவாழ்வார்' எனப் பிரித்துப் பாடிப் பார்த்தால், அதன் செப்பலோசை விளங்கும். 'பகவன் முதற்றே உலகு' – சொற் பிரிப்பின்றி அசையும் சீரும் அமைந்துள.

### சீர்கள் இருவகையவாதல்

**ஈரசை கொண்டும் மூவசை புணர்ந்தும்**
**சீர் இயைந்து இற்றது சீர் எனப் படுமே. (1269)**

இரண்டு அசைகளைக் கொண்டும் அவற்றின் மேல் மூன்றாவதாக ஓரசை சேர்த்தும், சீர்பெறத் தம்முள் இயைந்து ஒன்றுபட்டு நிற்பது சீர் எனப்படும்.

## ஈரசைச்சீர்கள்

### இயற்சீரும் உரிச்சீரும்

**இயலசை மயக்கம் இயச்சீர்; ஏனை**
**உரியசை மயக்கம் ஆசிரிய உரிச்சீர். (1270)**

இயலசை எனப்பட்ட நேரும் நிரையும் தம்முள் ஒத்தும் மாறியும் வரும் மயக்கம் இயற்சீர் எனப்படும். நேர் நேர், நிரைநிரை – ஒத்துவந்தன. நேர்நிரை, நிரைநேர் – மாறிவந்தன. ஏனைய உரியசை எனப்பட்ட நேர்பும் நிரைபும் தம்முள் ஒத்தும் மாறியும் வரும். மயக்கம் ஆசிரியவுரிச்சீர் எனப்படும். நேர்பு நேர்பு, நிரைபு நிரைபு – ஒத்துவந்தன. நேர்புநிரைபு, நிரைபுநேர்பு – மாறிவந்தன.

### உரியசைகளுடன் இயலசை 'நிரை' கலத்தல்

**முன் நிரை உறினும் அன்னவாகும். (1271)**

முன் 'நிரை' உறுதல். நேர்பு நிரை, நிரைபு நிரை. அன்னவாகும் – ஆசிரிய உரிச்சீராகும்.

### உரியசைசளுடன் இயலசை 'நேர்' கலத்தல்

**நேர் அவண் நிற்பின் இயற்சீர்ப் பால. (1272)**

நேரசை முன்னேவரின் அது இயற்சீர்ப் பாற்படும் நேர்பு நேர். நிரைபு – நேர்.

### நேர், நிரை முன் நேர்பு நிரைபு வரல்

**இயலசை ஈற்றுமுன் உரியசை வரினே**
**நிரையசை இயல வாகும் என்ப. (1273)**

நேர் நிரை எனப்பட்ட இயலசைகளின் முன்னர் உரியசை (நேர்பு, நிரைபு) வரின், அவை நிகரஈற்று இயற்சீர்களின் பாற்பட்டு அவைபோலத் தளை பெறும். நேர் நேர்பு, நேர்நிரைபு, நிரைநேர்பு, நிரை நிரைபு.

### உயிர் அளபெடை அசைக்கு உறுப்பாதல்

**அளபெடை அசைநிலை ஆகலும் உரித்தே. (1274)**

உயிரளபெடை அசைக்குறுப்பாகி அலகு பெறுதலுமுண்டு. (அலகு பெறுதல் – எழுத்தாம் தன்மை பெற்று மாத்திரை அளவு பெறுதல்.) 'நற்றாள்

தொழாஅர் எனின்' – தொழாஅர் – நிரைநேர். 'ஆகலும்' என்பதால், சிறுபான்மை ஆகாமையுமுண்டு என்பது பெறப்படும்.

### ஒற்றளபெடையும் அசைக்கு உறுப்பாதல்

**ஒற்று அளபெடுப்பினும் அற்றென மொழிப. (1275)**

ஒற்றளபெடையும் மாத்திரை ஒலி அளவு பெற்று, அசைக்கு உறுப்பாதலும் உண்டு. அற்றுஎன – உயிரளபெடைக்குப் போல. கண்ணண் தண்ண்ணெனக் கண்டும் கேட்டும் – நேர்நேர் + நேர்நிரை + நேர்நேர் + நேர்நேர். தண்ண் என்பதில் ஒற்றளபெடை அலகு பெறவில்லை என்பர்.

### வெண்பா உரிச்சீர்

**இயற்சீர் இறுதிமுன் நேர் அவண் நிற்பின்**
**உரிச்சீர் வெண்பா ஆகும் என்ப. (1276)**

இயற்சீர் இறுதி முன் – இயற்சீர் நான்கு இறுதியில் 'நேர்' வருதல்.

நேர்நேர் + நேர் = தேமாங்காய்
நேர்நிரை + நேர் = கூவிளங்காய்
நிரைநேர் + நேர் = புளிமாங்காய்
நிரைநிரை + நேர் = கருவிளங்காய்
இவை நான்குமட்டும் வெண்பாவுரிச்சீர்.

### வஞ்சி யுரிச்சீர்

**வஞ்சிச் சீர் என வகை பெற்றனவே**
**வெண்சீர் அல்லா மூவசை யான. (1277)**

இவ் வெண்பாவுரிச்சீர் அல்லது வெண்சீர் எனப்பட்ட நான்கும் தவிர, ஏனைய மூவகைச்சீர் அனைத்தும் வஞ்சியுரிச்சீர் அல்லது வஞ்சிச்சீர் எனப்படும். இயற்சீர் 4. உரிச்சீர் 4. இயற்சீர் உரிச்சீர் கலந்தவை 8. இவற்றுடன் இறுதியில் நேர் நிரை நேர்பு நிரைபு நான்கையும் சேர்த்தால் மூவகைச்சீர் 16 X 4 = 64 சீர் வரும். இவற்றுள் வெண்பாவுரிச்சீர் நான்கு தவிர, ஏனைய அறுபதும் வஞ்சியுரிச்சீர் ஆகும்.

### வஞ்சியுரிச்சீர் வஞ்சிப்பாவுக் குரியதாகும்

**தன் பா அல்வழித் தான் அடைவு இன்றே. (1278)**

வஞ்சியுரிச்சீர் வஞ்சிப்பாவில் மட்டுமே தொடர்ந்து வரும். அடைவு - சேர்ந்துவருதல். அதாவது ஏனைய வெண்பா, ஆசிரியம், கலிப்பாவில் வஞ்சிச்சீர் வராது; வரினும் தனித்துச் சிறுபான்மை வரும். அடைவு பெற்று - அதாவது இரண்டு சேர்ந்து தொடர்ந்து வராது.

### வஞ்சிப்பாவில் ஏனைச்சீர்களும் வருதல்

**வஞ்சி மருங்கின் எஞ்சிய உரிய. (1279)**

வஞ்சிப்பாவில் வஞ்சியுரிச்சீர்களுடன் ஏனைய சீர்களும் கலந்து வரும். அதாவது இயற்சீரும் ஆசிரியவுரிச்சீரும் (இவை ஈரசைச்சீர்கள், வெண்சீரும் (மூவசைச்சீர்) கலந்துவரும்.

### ஆசிரியப்பாவில் ஒருங்கு வராத சீர்கள்

**வெண்பா உரிச்சீர், ஆசிரிய உரிச்சீர்**
**இன்பா நேரடிக்கு ஒருங்கு நிலை இலவே. (1280)**

வெண்பாவுரிச்சீரும் (காய்ச்சீர்கள்), ஆசிரியவுரிச்சீரும் (நேர்பு நிரைபு சேர்ந்து வருவன) ஆசிரியப்பாவின் ஓரடிக்கண் ஒருங்கு நிற்றல் இல்லை.

### கலிப்பாவில் வெண்சீரும் ஆசிரிய உரிச்சீரும் மயங்குதல்

**கலித்தளை மருங்கில் கடியவும் படாஅ. (1281)**

கலித்தளையால் வரும் கலிப்பாவில் வெண்சீரும் ஆசிரியவுரிச்சீருமாகிய அவை, நீக்கப்பெறா. ஒருங்கு நிற்கும். (காய் முன் நிரை வருவது கலித்தளை).

### கலிப்பாவில் நேரீற்று இயற்சீர் வாராமை

**கலித்தளை அடிவயின் நேரீற்று இயற்சீர்**
**நிலைக்குரித்தன்றே தெரியு மோர்க்கே. (1282)**

கலித்தளையால் வரும் கலிப்பா அடியில் நேர் ஈற்று இயற்சீர் (நேர்நேர் - தேமா, நிரைநேர் - புளிமா), கலந்து நிற்றல் இல்லை.

### வஞ்சிப்பா இறுதியிலும் நேரீற்று இயற்சீர் நில்லாமை

**வஞ்சி மருங்கினும் இறுதி நில்லா. (1283)**

வஞ்சியடியிலும் இறுதியில் முற்கூறிய நேரீற்று இயற்சீர்கள் வந்து நில்லா. நிற்பின் வஞ்சிக்குரிய தூங்கலோசை கெடும்.

### ஓர் அசைச்சீர் நான்கும் சீர்களாக வருமிடங்கள்

**இசை நிலை நிறைய நிற்குவதாயின்**
**அசைநிலை வரையார் சீர்நிலை பெறவே. (1284)**

ஒரு பாடலடியின் இசைநிலை நிரம்பப் பொருந்திவருமேல், ஓரசைகளும் (நேரசை, நிரையசை, நேர்பசை, நிரைபசை) சீர்களாக வந்து நிலைபெறுதலை நீக்க மாட்டார்கள்.

### ஓரசைச் சீர்களைத் தளை கொள்ளும் விதம்

**இயற்சீர் பாற்படுத்து இயற்றினர் கொளலே**
**தளை வகை சிதையாத் தன்மையான. (1285)**

தளை வகை என்பது – சீரும் சீரும் சேரும்படியான தளை வகைகள். முன்னே கூறிய ஓரசைச்சீர்கள் வரின் எவ்வாறு தளை கொள்வது? அத்வத்தளை வகை சிதையாதபடி, ஓரசைச் சீர்களை இயற்சீர் போலக் கொண்டு (தேமா, புளிமா, கூவிளம் கருவிளம்) தளை கொள்க.

### வெண்சீர் ஈற்றசையின் ஓர் இயல்பு

**வெண்சீர் ஈற்றசை நிரையசை இயற்றே. (1286)**

வெண்சீர் இறுதி அசை 'காய்' என்பது (நேர்). அது இயற்சீர் இறுதி நிரையசைபோல (கூவிளம், கருவிளம்) நின்று தளை கொள்ளும். காய் முன் இயலசை நேர் = இயற்சீர் வெண்டளை. காய் முன் வெண்சீர் முதல் நேரசை (தேமாங்காய், கூவிளங்காய்) வெண்சீர் வெண்டளை. நிரையாயின் கலித்தளை. நேர்முன் நேர் வந்தாலும் அது நிரை முன் நேர் போல வெண்டளையாவதால் இவ்வாறு கூறப்படுகிறது.

### ஆசிரியப்பாவில் வெண்சீர் (காய்ச்சீர்) கலந்து வருதல்

**இன்சீர் இயைய வருகுவதாயின்**
**வெண்சீர் வரையார் ஆசிரிய அடிக்கே. (1287)**

இனிய இயற்சீருடன் (தேமா முதலியன) பொருந்தி வருமேல் வெண்சீர்கள் (காய்ச்சீர்கள்) ஆசிரிய அடியில் கலந்து வரும். இனிய ஓசை பயக்குமாறு அமைதல் வேண்டும்.

### ஆசிரியப்பாவில் வஞ்சிச்சீர் கலந்து வருதல்

**அந்நிலை மருங்கின் வஞ்சி உரிச்சீர்**
**ஒன்றுதல் உடைய ஓரொரு வழியே. (1288)**

அந்நிலை மருங்கின் – முன்சொன்ன அந்த ஆசிரிய அடியின்கண் வஞ்சி உரிச்சீர் – தேமாங்கனி புளிமாங்கனி, கூவிளங்கனி, கருவிளங்கனி. ஆசிரியத்துள் வஞ்சிச்சீர், சில போது பொருந்திவரும்.

இங்கு இளம்பூரணர், தொல்காப்பியப்படி, தமிழ்ச் சீர்களின் வகைகளையும் எண்ணிக்கைகளையும் பட்டியலிடுகிறார். அதன் கருத்து வருமாறு : ஓரசைச்சீர் நான்கு, ஈரச்சைச்சீர் பதினாறு, மூவசைச்சீர் அறுபத்து நான்கு – ஆகச்சீர் எண்பத்து நான்கு.

அவற்றுள் அசைச்சீர் நான்கும் தளை கொள்ளுமிடத்து இயற்சீரே போலக் கொள்ளப்படும்.

ஈரசைச்சீர் பதினாறிலும் சிறப்புடைய இயற்சீர் நான்கு, சிறப்பில்லாத இயற்சீர் ஆறு எனப்பத்தாகும். ஆசிரியவுரிச்சீர் ஆறு. மூவசைச்சீர் 64இல் வெண்பாவுரிச்சீர் 4; ஏனைய அறுபதும் வஞ்சியுரிச்சீர்.

## அடி

### நாற்சீர் அடியே கட்டளையடியாகும்

**நாற்சீர் கொண்டது அடி எனப்படுமே. (1289)**

நான்கு சீர் கொண்டதே 'அடி' என்று சிறப்பித்துக் கூறப்படும் இதனை நேரடி, அளவடி, கட்டளையடி என்றும் கூறுப. பிற எல்லாம் இதனின் வேறுபட்டுக் குறைந்தும் மிகுந்தும் வருவனவாம்.

### தளையும், தொடையும் கணிப்பது அளவடியில் அமையும்

**அடியுள்ளனவே தளையொடு தொடையே. (1290)**

சீர்கள் புணர்வது – ஒன்றுடன் ஒன்று தளைக்கப்படுவது தளை. தொடை – மோனை, எதுகை, முரண் இயைபு முதலான ஒலிநய அழகுகள், பொருள் நலன்கள் ஓரடியில் அமைவதும், பாடலில் அமைவதுமாம். இது தளை வகைகளையும் தொடை வகைகளையும் கணக்கிட்டுப் பெயர் குறிப்பது, நான்கு சீர் கொண்ட அளவடியில் மட்டுமேயாம். பிறவற்றிலுமெனில் அது

வரையறைக்குள் அடங்காது. எழுவது தளைப்பகுதியால் கட்டளையடி என உறழ்வதூஉம். அறுநூற்றிருபத்தைந்து அடியென வரையறைப் படுவதூஉம் பத்தொன்பதினாயிரத் திருநூற்றுத் தொண்ணூற்றொன்றென்னும் தொடைப்பகுதி கொள்ளப்படுவதூஉம் நாற்சீரடியே யாயிற்று, என்பது நச்சினார்க்கினியம்.

### அவை, நாற்சீரடிக்கே உரித்தாதல்

**அடியிறந்து வருதல் இல்லென மொழிப. (1291)**

நாற்சீரடியைக் கடந்து, தளை, தொடை வருதலில்லை. அதாவது அவ்வாறு கடந்து வருவனவற்றை வரையறைப்படுத்தவியலாதாகையால், இலக்கணத்தில் அவை கட்டுப்படுத்தப்படவில்லை.

### அடியின் சிறப்பே பாட்டு எனப்படும்

**அடியின் சிறப்பே பாட்டெனப் படுமே. (1292)**

சிறப்பு – சீர்மை, மிகுதி என இருபொருள்படும். அடியின் சிறப்பாலேயே, பாட்டுச் சிறப்புடையதெனப்படும். இங்கு 'அடி' என்றது அளவடி. நாற்சீர் கொண்ட அளவடியான் அமைந்தவை, தனக்குரிய சீர்மையுடன் அமையுமேல் அவ் ஓரடிகூடப் பாட்டெனப்படும். மேலும் பேராசிரியர் கருத்துப்படி அடிகள் இரண்டும் பலவுமாய் அடுத்துவந்து தொடுக்கப்படுவது பாட்டு எனப்படும். அசை சீர் முதலிய ஏனைய உறுப்புக்களால் இன்ன பா என வரையறுத்தல் இயலாது, அடி என்னும் உறுப்பொன்றே கூற இன்ன செய்யுளென்பது நன்கு விளங்கும் என்பர் க.வெள்ளைவாரணர்.

**ஓரடியின் சிற்றெல்லை மாத்திரை.**
**ஒரு பாடலின் சிற்றெல்லை ஓர் அடி.**

சங்கப் பாடல்களில் மிகப் பெரும்பான்மையாக, ஒரு பாடலின் அடிகள், தம்முள் நிறைவுடைய முழுமையுடையவையாய்ச் சிறந்து காணப்படும். 'யாதும் ஊரே, யாவரும் கேளிர்', 'புரைய மன்ற புரையோர் கேண்மை' எனச் சொல்லிப் பார்க்கலாம்.

### நான்கு முதல் ஆறு எழுத்துவரை குறளடி

**நால் எழுந்து ஆதியாக ஆறெழுத்து**
**ஏறிய நிலத்தே குறளடி என்ப. (1293)**

நாற்சீரடியையே குறளடி, சிந்தடி, அளவடி, நெடிலடி, கழிநெடிலடி எனப் பகுக்கும் இது, பழைய முறை. கட்டளையடியாம் நாற்சீரடி 4, 5, 6 எழுத்துக்களைக் கொண்டு வரும் போது குறளடி எனப்படும்.

### ஏழுமுதல் ஒன்பது வரை சிந்தடி

**ஏழ் எழுத்து என்ப சிந்தடிக்கு அளவே,**
**ஈர் எழுத்து ஏற்றம் அல்வழியான. (1294)**

நாற்சீர் அளவடியில் 7, 8, 9 எழுத்துக்களைக் கொண்டுவருவன சிந்தடியாகும்.

### பத்து முதல் பதினான்குவரை அளவடி

**பத்தெழுத்தென்ப நேரடிக் களவே;**
**ஒத்த நாலெழுத்து ஒற்றலங்கடையே. (1295)**

நேரடி, அளவடி எனப்படும் நாற்சீரடி 10, 11, 12, 13, 14 எழுத்துக்களைக் கொண்டது நேரடி எனப்படும். இவற்றுள் ஒற்றெழுத்துக்கள் எண்ணப்படுவதில்லை. உயிரும் உயிரேறிய மெய்யுமே உயிருள்ள எழுத்துக்கள். மெய்யை 'உயிரில் எழுத்து' என்பார். அது அலகு பெறுவதில்லை. எனவேதான் 'ஒற்றலங்கடை' என்றார். இஃது எல்லா அடிக்கும் பொருந்தும்.

### பதினைந்து முதல் பதினேழுவரை நெடிலடி

**மூவைந்தெழுத்தே நெடிலடிக்கு அளவே;**
**ஈரெழுத்து மிகுதலும் இயல்பென மொழிப. (1296)**

நெடிலடி அளவடியை விட நீண்டது. 15, 16, 17 எழுத்துக்கள் அமைந்தவை நெடிலடிகள்.

### பதினெட்டு முதல் இருபது வரை கழிநெடிலடி

**மூவாறு எழுத்தே கழிநெடிற்கு அளவே;**
**ஈரெழுத்து மிகுதலும் இயல்பென மொழிப. (1297)**

கழிநெடிலடி – மிக நீண்டது என்று பொருள். 18, 19, 20 எழுத்துக்கள் கொண்ட நாற்சீரடி கழிநெடிலடி எனப்படும்.

### சீர்நிலை ஒருசீர் என்பது ஐந்து எழுத்துக்கு மிகாது

**சீர்நிலை தானே ஐந்து எழுத்து இறவாது. (1298)**

எழுத்துக்களால் அடிகள் அமையும் வகை கூறியவர், அவற்றுள் ஓரடியில் எத்தனை சீர்களாக அவை அமையுமெனக் கூறவேண்டாமா? 4, 5, 6 எழுத்துக்கள் கொண்டது குறளடி என்றால், அது எத்தனை சீராக அமையும். ஓரெழுத்தும் அசையாக வாய்ப்புளது. அசைச்சீர் என ஒருசீர் என்பதன் எல்லை ஐந்தெழுத்து. அதைக் கடவாது. இறவாது – கடவாது.

### வஞ்சிப்பாவில் ஒருசீர் ஆறுவரை அமையும்

**நேர்நிலை வஞ்சிக்கு ஆறும் ஆகும். (1299)**

நேர்நிலை வஞ்சியடி இரு சீரான் வரும். கலி, வெண்பா, ஆசிரியம் மூன்றுமே அளவடி பெறுபவை. பெரிதும் இருசீரால் வரும் சமநிலை வஞ்சியடியில் வஞ்சியுரிச்சீர் வரும். அது கருவிளங்கனி என்பது போல ஆறெழுத்தால் வரும் வாய்ப்புளது. நேர்நிலை வஞ்சி – சமநிலைவஞ்சி. இது இருசீரடியால் வருவது. இதில் ஒருசீர் ஆறு எழுத்திலும் வருமென்பதாம். அளவடியாயின் ஒருசீர் ஐந்து எழுத்துக்கு மிகாது. (ஆறும் என்ற உம்மையால் ஏழும் எட்டும் அருகி வரக்கூடுமென்பர்.)

### சீரின் இயல்பு
### எழுத்து எண்ணிக்கைக்காகச் சீர்கள் மாறா

**எழுத்தளவு எஞ்சினும் சீர்நிலை தானே**
**குன்றலும் மிகுதலும் இல்லென மொழிப. (1300)**

ஓரடிக்கு ஓரடி எழுத்து எண்ணிக்கை குறைதலாலும் கூடுதலாலும் சீர்கள் குறைதலோ, மிகுதலோ இல்லை – எஞ்சுதல் – கூடுதல் அல்லது குறைதல். 'ஒளிநிலவு' – நிரை நிரைபு – ஈரசைச்சீர். 5 எழுத்து. 'பொலிந்துயிர்' நிரைநிரை – ஈரசைச்சீர். 4 எழுத்து. ஒரே சீர், எழுத்து எண்ணிக்கை கூடியும் அமையும்; குறைந்தும் அமையும். இவை அனைத்தையும் வரையறைப்படுத்திக் காட்டும் உரையாசிரியர்கள் திறம் வியப்பூட்டும்.

### மெய்யெழுத்து முதலானவை
### அலகுபெற்று எண்ணப்படாத எழுத்துக்கள்

**உயிரில் எழுத்தும் எண்ணப்படாஅ,**
**உயிர்த்திறம் இயக்கம் இன்மையான. (1301)**

உயிர் இல்லா எழுத்துக்கள் அசை, சீராகும் போது அலகு பெற்று எண்ணப்படா. உயிர்த்திறம் இயக்கம் – உயிர் போல இயங்கும் திறம். க – ஓரலகு,

நேரசை. கல் – இதுவும் ஓரலகு. நேரசை. ஏன்? 'ல்' – மெய் எண்ணப்படாது. உயிரில்லாதவை 18 மெய்யெழுத்துக்கள். ஆய்தமும் அவ்வாறே – குற்றியலிகரமும் குற்றியலுகரமும் உயிரும் உயிர்மெய்யும் போல, ஒலிக்காமல் அரை மாத்திரை அளவே ஒலித்து, மெய் போறலின் அவையும் எண்ணப்படா.

**சமநிலை வஞ்சிப்பா இருசீர் வஞ்சியடிகளையுடையது.**

**வஞ்சியடியே இருசீர்த்தாகும். (1302)**

வஞ்சியடி – இரண்டு சீர்களையுடையது. வெண்பா, ஆசிரியம், கலிப்பா – நான்கு சீர்களையுடையன. நேர்நிலை வஞ்சிப்பா சமநிலை வஞ்சிப்பா எனவும்படும். இரு சீர்களை மட்டுமே உடையது இது. இதைக் குறளடி வஞ்சிப்பா எனவும் ஆள்வர்.

வான்பொய்ப்பினும் தான்பொய்யா
மலைத்தலைய கடற்காவிரி (பட்டினப் பாலை)

இது இருசீர் கொண்ட நேர்நிலை வஞ்சிப்பா.

**வஞ்சிச்சீரின் சிற்றெல்லை மூன்றெழுத்து**

**தன்சீர் எழுத்தின் சின்மை மூன்றே. (1303)**

தன்சீர் – வஞ்சியுரிச்சீர். அதன் எழுத்துக்களின் சிற்றெல்லை மூன்று எழுத்துக்களாகும். (பேரெல்லை ஆறாகும் என்பது முன்னர்க் கூறப்பட்டது.)

**வஞ்சியடி மூன்று சீரானும் வரும் வியனிலை வஞ்சிப்பா**

**முச்சீரானும் வருமிடன் உடைத்தே. (1304)**

வஞ்சியடி மூன்று சீரால் வருமிடமும் உண்டு. அது வியனிலை வஞ்சி என வழங்கும்.

**வஞ்சிப்பாவின் முன் அசை கூன் ஆகும்.**

**அசை கூன் ஆகும் அவ்வயினான. (1305)**

கூன் – பின்வரும் பொருளைக் குறித்து, அடி முதற்கண் நிற்பது. சமநிலை, வியனிலையாகிய இருவகை வஞ்சிப் பாக்களிலும் அசை கூனாகி வரும்.

வாள்
வலந்தர மறுப்பட்டன.

களிறு

கதவெறியாச் சிவந்துரைஇ

வாள், களிறு என்பன கூன்.

**நாற்சீர் நேரடிமுன் சீர்கூன் ஆகும்**

**சீர்கூன் ஆதல் நேரடிக்கு உரித்தே. (1306)**

நேரடி எனப்படும் நான்குசீர் கொண்ட அடிகட்கு, சீர் கூனாக வரும். ஆசிரியம், வெண்பா, கலிப்பாவிற்கு இஃது அமையும்.

அவரே
கேடில் விழுப்பொருள் தருமார் பாசிலை
வாடா வள்ளியங் காடிறந் தோரே (குறு. 216)

அவரே – சீர் கூன் ஆக வந்தது.

**எழுத்தெண்ணிச் சொன்ன**
**ஐவகை அடியின் கூடுதல் எண்ணிக்கை**

**ஐவகை அடியும் விரிக்குங் காலை**
**மெய்வகை அமைந்த பதினேழ் நிலத்தும்**
**எழுபது வகையின் வழுவில வாகி**
**அறுநூற்று இருபத்து ஐந்து ஆகும்மே. (1307)**

குறளடி சிந்தடி அளவடி நெடிலடி கழிநெடிலடி – எழுத்து எண்ணி அமைக்கப்பட்ட இவ் ஐந்து அடிகளும் மொத்தம் எத்தனை எனப் பெருக்கும் போது, அது 625 ஆகும். 4 எழுத்து முதல் 20 எழுத்துவரை என்பதால், 17 எழுத்து எண்ணிக்கை அடிப்படையில் இவை அமைக்கப்பெற்றுள. இவற்றால் ஆகும் சீர் வகைகள், அசைச்சீர், இயற்சீர், ஆசிரியவுரிச்சீர் வெண்சீர், வஞ்சியுரிச்சீர் எனும் ஐந்தினையும் நிறுத்தி, இவ் ஐந்தும் வரும் சீராக உறழும் வழி 25 வகையாகும். அந்த 25 இன்கண் மூன்றாவதாக ஐந்து சீரையும் உறழ 125 ஆகும். அந்த 125 இன்கண் நான்காவது ஐந்து சீரையும் பெருக்க 625 அடிகளாகும்.

எழுபது வகையின் வழுவிலாவாகி என்பது இச்சீர்களைப் புணர்த்துத் தளை பெறுமிடங்கள். “தளை சிதையா ஆசிரிய அடி 324, வெண்பாவடி 181, கலியடி 120 என 625 ஆகும்” எனக் கணக்கிடும் அருமை, பண்டைய உரைகளில் விரிவாகவுளது.

### மேலும் விரிப்பின் அளவுகடந்து செல்லும்

**ஆங்ஙனம் விரிப்பின் அள விறந்தனவே;**
**பாங்குற உணர்ந்தோர் பன்னுங்காலை. (1308)**

இங்கு பெருக்கிக் கூட்டியுரைத்தபடி, ஐந்தாவது ஆறாவது ஆக வரும் சீர்களையும் பெருக்கினால் – அது மேன்மேலும் விரிந்து எல்லையின்றிப் போகும். பாங்குற – நன்கு தெளிவாக. பன்னுங்காலை – ஆராய்ந்து கூறுமிடத்து.

### நாற்சீருள்ள ஐவகை அடியும் ஆசிரியத்துக்கு உரியன

**ஐவகை அடியும் ஆசிரியக்கு உரிய (1309)**

நான்கு சீராகவும் பதினேழு (4 முதல் 20 வரை எழுத்து) எழுத்து அடிப்படையுடையனவாகவும் வகைப்படுத்தப்பட்ட குறளடி முதல் கழிநெடிலடி வரையிலான ஐவகை அடியும் ஆசிரியப்பாவில் வரும். நான்கு சீருடைய அளவடியே ஆசிரியப்பாவிற்குச் சிறப்பாக உரியது.

### ஆசிரியச்சீர் ஐவகை அடிகள் வந்ததே வருவதும் உண்டு; கலந்து வருவதும் உண்டு

**விராஅய் வரினும் ஒரூஉநிலை இலவே. (1310)**

முன்னே சொன்ன பதினேழு நிலத்து, ஐவகை அடியும் ஒவ்வொன்றும் தனித்தனியே ஆசிரியப்பாவில் வருதலன்றியும் அவை தம்முள் கலந்து ஒரே பாவில் வருதலும் நீக்கப்படா. விராஅய் – விரவி, கலந்து. ஒரூஉநிலை – நீக்கும் நிலை.

### தன் சீரும் தன் தளையுமே பாவிற்குரிய ஓசையைத்தரும்

**தன்சீர் வகையினும் தளைநிலை வகையினும்**
**இன்சீர் வகையின் ஐந்தடிக்கும் உரிய. (1311)**

முற்கூறிய ஐந்து வகையடிக்கும் இனிய ஓசை பெறும்போது, ஒரு பாவின் அதன் சீர்களே உள்ளவிடத்தும் அதனாலாம் தளைகளே வரும்போது அவ்வோசை அமையும்.

### தளைவேறுபடினும் தன் சீர்களே ஒரு பாவிற்குரிய ஓசையைத் தரவல்லன

**தன்சீர் உள்வழித் தளை வகை வேண்டா. (1312)**

தனது சீரும் தன்தளையும் ஒரு பாவில் வருமானால், அந்தப் பாவிற்குரிய ஓசை வெளிப்படும். தன் சீரே வரும்போது தளைபற்றிக் கருதவேண்டாம். சீர்களே பாவினது ஓசையைத் தரும்.

**ஆசிரியத்தளை**

**நேர் ஒன்றுவதும் நிரையாய் ஒன்றுவதும்**

**சீர்இயை மருங்கின் ஓரசை ஒப்பின்**
**ஆசிரியத் தளை என்று அறியல் வேண்டும். (1313)**

சீர் இயை மருங்கின் – இயற்சீர்கள் ஒன்றுடன் ஒன்று சேர்ந்து வருமிடத்து. ஓர் அசை ஒப்பின் – நேருக்கு நேரும் நிரைக்கு நிரையும் என ஒத்துவருமானால், அவற்றை ஆசிரியத்தளை என்று அறிய வேண்டும். அவை முறையே நேரொன்றாசிரியத்தளை, நிரையொன்றாசிரியத்தளை என ஆகும்.

**வஞ்சியடிகளில் நான்கு முதல் பதினான்கு எழுத்தளவுள்ள குறள், சிந்து அளவடிகள் கலக்கப்பெறா.**

**குறளடி முதலா அளவடி காறும்**
**உறழ்நிலை இலவே வஞ்சிக்கு என்ப. (1314)**

குறளடியின் சிற்றெல்லையாகிய நான்கு எழுத்து முதல் அளவடியின் பேரெல்லையாகிய பதினான்கு எழுத்தளவும் உள்ள குறளடி, சிந்தடி வஞ்சிப்பா அடிகளில் வந்து கலக்கப் பெறா. நெடிலடி, கழிநெடிலடிகள் வஞ்சியுள் வந்து கலக்கும் என்பது பெறப்படும்.

**வெண்பாவுக்குரிய அடிகளும் தளையும்**

**அளவும் சிந்தும் வெள்ளைக்கு உரிய;**
**தளை வகை ஒன்றாத் தன்மையான. (1315)**

அளவடி (10,11,12,13,14 எழுத்து), சிந்தடி (7,8,9 எழுத்து) ஆகிய இவ் எட்டு எழுத்தெண்ணிக்கை அடிகள் வெண்பாவிற்குரியன. தளை வகை ஒன்றாத் தன்மை – இயற்சீர்கள் ஒன்றாது வருவன இயற்சீர் வெண்டளை. நேர்முன் நிரை, நிரை முன்நேர். இவை ஒன்றாத தன்மையின. இனி ஒன்றிவருவன, வெண்சீர் (காய்ச்சீர்) நிற்ப, வருஞ்சீர் முதலசையோடு ஒன்றுவது – வெண்சீர் வெண்டளை.

**கலிப்பாவிற்குரிய அடிகள்**

**அளவடி மிகுதி உளப்படத் தோன்றி**
**இருநெடில் அடியும் கலியிற்கு உரிய. (1316)**

அளவடி மிகுதி 10,11,12,13,14 எழுத்துக்கள் உடைய அளவடியில், 'மிக்க அடிகள்' என்பன 13, 14 எழுத்துடையன. அவை கூடுதலான எழுத்துடைமையின். 'அளவடி மிகுதி' எனப்பட்டன. இரு நெடிலடி – நெடிலடியும் கழிநெடிலடியும். இவை கலிப்பாவிற்கு உரியன. இவை கலித்தளை பெற்று வரவேண்டும் என்பது கூறாமலே பெறப்பட்டது.

### கலித்தளை இலக்கணம்

**நிரை முதல் வெண்சீர் வந்து நிரைதட்பினும்**
**வரைநிலையின்றே அவ்வடிக் கென்ப. (1317)**

வெண்பாவுரிச்சீர், (காய்ச்சீர்) முன்னே நிற்ப, நிரைமுதல் வெண்சீர் வந்து (புளிமாங்காய், கருவிளங்காய்), நேர்முன் நிரையாய்த் தட்பினும் (தளைப்பினும், தளையானாலும்) கலியடிக்கு விலக்கத்தக்கதன்று. காய் முன் நிரை வருவது கலித்தளை. இதை 'முதலில் நிற்பது நிரையீற்று இயற்சீராகவோ (கூவிளம் கருவிளம்), ஆசிரியவுரிச்சீராகவோ நின்று நிரை முதல் வெண்சீருடன் நிரையாய் ஒன்றுதலும் கலித்தளை ஆகும் என உரையாசிரியர் விவரிப்பர்.

### கலிப்பாவில் பிற தளைகளும் வருதல்

**விராஅய தளையும் ஒரூஉநிலை இன்றே. (1318)**

கலியடியில், பிறதளைகளான ஆசிரியத் தளையும் வெண்டளையும் விரவிவரினும் அவை நீக்கப்படா.

### இயற்சீராலான வெண்பா அடி ஆசிரியத்துள் விரவிவரும்

**இயற்சீர் வெள்ளடி ஆசிரிய மருங்கின்**
**நிலைக்குரி மரபின் நிற்கவும் பெறுமே. (1319)**

இயற்சீர் வெள்ளடி (இயற்சீர் வெண்டளை அமைந்தவை) அதாவது வெண்பாஅடி, ஆசிரியப்பாவினிடையே கலந்து, நிற்றற்குரிய மரபின்படி கலந்து நிற்கவும் பெறும்.

### ஆசிரியத்துள் ஐஞ்சீர் அடிகள் கலந்து வருதல்

**வெண்டளை விரவியும் ஆசிரியம் விரவியும்**
**ஐஞ்சீர் அடியும் உளவென மொழிப. (1320)**

ஆசிரியப்பாவில் நாற்சீரடிகளே வரும். அன்றியும் ஐஞ்சீரடிகளும் சிறுபான்மை கலந்துவரும். அவை வெண்டளையும் ஆசிரியத்தளையும் உள்ள ஐஞ்சீரடிகளாகும்.

**ஆசிரியத்துள் அறுசீர் அடியும் கலந்துவரும்**

**அறுசீர் அடியே ஆசிரியத் தளையொடு**
**நெறிபெற்று வரூஉம் நேரடி முன்னே. (1321)**

ஆசிரியப் பாவின்கண் நாற்சீர் கொண்ட நேரடிக்கு அடுத்து, ஆசிரியத் தளைகொண்ட அறுசீரடியும் வரும்.

1320, 1321 இரண்டும் இளம்பூரணர் கருத்துப்படி ஆசிரியம் பற்றியன. ஆனால் பேராசிரியர் இவை இரண்டையும் கலிப்பாவிற்குரியதாக உரை கூறுகிறார்.

**எழுசீர் அடி விரைந்த சந்தமுடையதாக வரும்**

**எழுசீர் அடியே முடுகியல் நடக்கும். (1322)**

எழுசீரான் வரும் அடி, முடுகியலாக அமையும். முடுகியல் – விரைந்த நடையுடையதாய், எதுகைச்சந்தம் செறிந்திருப்பது. இது பரிபாடலுள்ளும் கலியுள்ளும் காணப்படும் (தாதுறுமுறிசெறி தடமலரிடையிட).

**ஐந்து சீர், அறுசீரடிகளும் முடுகியல் பெற்று, விரைந்த நடையுடையவாய் வரும்**

**முடுகியல் வரையார் முதல் ஈரடிக்கும் (1323)**

எழுசீரடிக்கு முன்னிற்கும் ஐஞ்சீரடிக்கும் அறுசீரடிக்கும் கூட முடுகியல் வருதல் நீக்கப்பெறாது.

**முடுகியல் பெறும் இம்மூன்று அடிகளும் ஆசிரியம், வெண்பாவில் வரா.**

**ஆசிரிய மருங்கினும் வெண்பா மருங்கினும்**
**மூவகை அடியும் முன்னுதல் இலவே. (1324)**

முடுகியல் பெற்றுவரும் ஐந்து, ஆறு ஏழு சீரடிகண் மூன்றும் ஆசிரியத்துள்ளும் வெண்பாவுள்ளும் வாரா. முன்னுதல் – பொருந்துதல்.

### ஆசிரியப்பாவின் ஈற்றயல் அடி மூன்று சீர்பெறும்.

**ஈற்றயல் அடியே ஆசிரிய மருங்கின்**
**தோற்றம் முச்சீர்த்தாகும் என்ப. (1325)**

ஆசிரியப்பாவின் ஈற்றயல் அடி (கடைசி அடிக்கு முன்னுள்ள அடி), மூன்று சீராகத்தோன்றி அமையும்.

### இடையிடையேயும் முச்சீரடிகள் வரும்

**இடையும் வரையார் தொடை உணர்வோரே. (1326)**

தொடை உணர்ந்தோர் - பாட்டுத் தொடுத்தலை அறிந்தோர். இடையிடையே முச்சீராக வருதலையும் தவிர்க்க மாட்டார்கள்.

### கலிப்பாவின் ஈற்றயலடி நான்கு சீராகவும் வரும்

**முச்சீர் முரற்கையுள் நிறையவும் நிற்கும். (1327)**

முரற்கையுள் - கலிப்பாவினுள். முரலுதல் போலும் ஓசை இனிமையால் கலிப்பா முரற்கை எனப்பட்டது. ஈற்றயலடி முச்சீர் எனப்பட்டது. நாற்சீராக நிறைந்து நிற்கும். கலிப்பாச்சுரிதகம் ஆசிரியத்தால் முடியும்போது, ஈற்றயலடி முச்சீர்த்தாகவும் நிற்பதோடு, நான்கு சீராகவும் நிற்கும். (ஆசிரியமே இவ்வாறு வந்து நிலைமண்டிலம் எனப் பெயர் பெறுதலுண்டு.)

### வஞ்சிப்பாவின் ஈற்றடிகள் ஆசிரிய ஈற்றடிகள் போல அமையும்

**வஞ்சித்தூக்கே செந்தூக்கு இயற்றே. (1328)**

வஞ்சிப்பா இறுதியில், ஆசிரியப்பாவின் இறுதிபோல் முடியும். தூக்கு - இறுதி. செந்தூக்கு - ஆசிரியப்பாவின் இறுதி; அதாவது ஈற்றயலடி முச்சீரான் வருதலும் நாற்சீரான் வருதலும் உண்டு.

### வெண்பாவின் ஈற்றடி மூன்று சீரால் முடியும்

**வெண்பாட்டு ஈற்றடி முச்சீர்த்து ஆகும். (1329)**

வெண்பாட்டு - வெண்பா, அதன் ஈற்றடி மூன்று சீராய் முடியும்.

### வெண்பாவின் இறுதிச்சீர் ஓரசைச்சீராக முடியும்

**அசைச்சீர்த்தாகும் அவ்வயினான. (1330)**

அதன் இறுதிச்சீர் அசைச்சீராக முடியும். (நேர் நிரை, நேர்பு, நிரைபு, இவற்றுக்கு வாய்பாடு : நாள் மலர், காசு பிறப்பு)

**வெண்பா இறுதிச்சீர் நிரையில் முடிதல்**

**நேர் ஈற்று இயற்சீரு நிரையும் நிரைபும்**
**சீர் ஏற்று இறூஉம் இயற்கைய என்ப. (1331)**

நேர் ஈற்று இயற்சீர் – நேர்நேர், நிரைநேர். இவை வெண்பா இறுதியடி இறுதிச்சீரின் முன்னர்வரின், முடிவாக வரும் சீர் நிரை அல்லது நிரைபு ஆக முடியும். இவ்வியல்பினை உடையன இவை. (தாளை வணங்காத் தலை – நேர்முன் நிரையாக முடிந்தது. மாற்றல் அரிது – நேர்முன் நிரைபு வந்து முடிந்தது.)

**வெண்பா இறுதிச்சீர் நேரில் முடிதல்**

**நிரை அவண நிற்பின் நேரும் நேர்பும்**
**வரைவின்று என்ப வாய்மொழிப் புலவர். (1332)**

வெண்பா இறுதியடியின் ஈற்றயல் சீர் 'நிரை'யாக நிற்பின் முடிவுச்சீர் நேர், நேர்பு என ஆகும். இவ்வாறு மொழிவதை வாய்மொழிப் புலவர் நீக்கப்பெறாது என்பர். (செறா அஅய் வாழியென் நெஞ்சு)

**கலிப்பா, ஆசிரியச் சுரிதகத்தால் முடிதல்**

**எழுசீர் இறுதி ஆசிரியம் கலியே. (1333)**

ஆசிரியச் சுரிதகத்தால் இறும் கலியும் இறுதியடிகள் ஏழுசீராக முடியும். ஈற்றயல் மூன்று சீரும் இறுதி நான்கு சீரும் ஆக ஏழு சீர்களில் முடியும். (முன்பு கலிப்பா இறுதி, ஈற்றயல் அடி நான்கு சீராக நிறையவும் பெறுமெனக் கூறியதையும் நினைவு கொள்க.)

**கலிப்பா வெண்பாச் சுரிதகத்தால் முடிதல்**

**வெண்பா இயலினும் பண்புற முடியும். (1334)**

கலிப்பா, வெண்பா இயல்புடன், வெண்பாவாம் சுரிதகத்துடனும் நன்கு முடியும்.

**யாப்பு**

**யாப்பு தமிழ் அடிப்படை இலக்கிய வகைமை**

**எழுத்து முதலா ஈண்டிய அடியில்**
**குறித்த பொருளை முடிய நாட்டல்**
**யாப்பென மொழிப யாப்பறி புலவர். (1335)**

எழுத்துப் பொருள் தருவது. அவ்எழுத்து முதலாக அசைசீர் அடி எனத் தொடர்புற்றுச் செறிந்து நிற்கும் அடியில், படைப்பாளி தான் கருதியபொருளை, முற்றமுடிய அதில் அமையுமாறு செய்தல், யாப்பு எனப்படும் - யாக்கப்படும் இலக்கியப் படைப்பு அது. யாப்பறி புலவர் - இலக்கியம் படைக்கவல்ல எழுத்தாளர்கள். ஈண்டிய - செறிவற்ற. 'முடிய நாட்டல்' - படைப்போன் திறமையால் அமைவது.

### தமிழிலக்கிய அடிப்படை வகைகள் ஏழு

**பாட்டு, உரை, நூலே, வாய்மொழி, பிசியே,**
**அங்கதம், முது சொல்லோடு, அவ்வேழ் நிலத்தும்**
**வண்புகழ் மூவர் தண்பொழில் வரைப்பின்**
**நாற்பேர் எல்லை அகத்தவர் வழங்கும்**
**யாப்பின் வழியது என்மனார் புலவர். (1336)**

அவ் யாப்பு - அடிப்படை இலக்கியப் படைப்பு வகை ஏழு ஆகும். அவை பாட்டு, உரை, வாய்மொழி (மந்திரம்), பிசி (நொடி, விடுகதை), அங்கதம், முதுசொல் (பழமொழி) என்பன. வண்புகழ் சேர் மூவேந்தரது தண்பொழில் நிலமாகிய, நான்கு பெரிய எல்லைகளையுடைய தமிழ்நாட்டகத்தே வாழ்வோர் வழங்கும் அந்த ஏழு வகை அடிப்படையில், படைப்பாக்கம் மரபு வழிப்பட்டது.

தண்பொழில் வரைப்பு - தமிழ்நாடு. வளம் மிக்கது என்பதாம். அகத்தவர் - புலவர்களேயன்றி மக்களும் வழங்குவன. 'தமிழ் நாட்டார் வழங்கும் மரபுப்பகுதி' என்பார் பேராசிரியர், நாற்பேர் எல்லை - வடவேங்கடம், தென்குமரி, மற்ற இருபுறமும் குண கடலும் குட கடலும்.

### மரபு

### இலக்கியப் படைப்பில் அமையும் சொல் மரபு

**மரபே தானும்**
**நாற்சொல் இயலான் யாப்பு வழிப்பட்டன்று. (1337)**

மரபு என்பது சொல்மரபு. நாற்சொல் - இலக்கியத்துள் (செய்யுளுள்) வரும் இயற்சொல் திரிசொல் திசைச்சொல் வடசொல் என்பன. இவை மரபு மாறாமல் முற்கூறிய எழுவகை யாப்பு வகைகளிலும் ஆளப்பட்டு வருவனவாகும்.

## தூக்கு

### அகவல் - அகவலோசை

**அகவலென்பது ஆசிரியம்மே.** (1338)

ஆசிரியம் அகவலோசையுடையது. தொடர்ந்து அகவுவது கூவுவது போன்ற ஓசை அது.

### வெண்பா - செப்பலோசை

**அஃது ஆன்று என்ப வெண்பா யாப்பே.** (1339)

வெண்பா யாப்பினது ஓசை அகவலோசை அல்லாதது. அது ஒன்றைச் செப்புவது போன்ற செப்பலோசை. அஃது ஆன்று – அஃதன்று. அகவலில் இசை நீளும்; வெண்பாவில் நீளாது, எடுத்துரைப்பது போல் ஒலிக்கும்.

### கலி - துள்ளலோசை

**துள்ளல் ஓசை கலியென மொழிப.** (1340)

கலிப்பாவிற்குரியது துள்ளல் ஓசை. உலக வழக்காம் நாடோடிப் பாடல்கள் ஆடலுடன் கூடியன. அதனால் துள்ளல் நடை படிந்திருக்கும்.

### வஞ்சி - தூங்கலோசை

**தூங்கல் ஓசை வஞ்சியாகும்.** (1341)

வஞ்சிப்பா தூங்கலோசையுடையது. இதுவும் ஆடலுடன் கூடியதே. ஆயினும் துள்ளலுக்கு மறுதலையானது. ஆற்றொழுக்குப் போலப் பாடி ஆடும்போது எழும் ஓசை. இதுவும் உலக வழக்கிலிருந்து பெற்றது.

அகவலும் வெண்பாவும் உலக வழக்கிலிருந்து பெற்றனவேயாயினும், இலக்கிய வழக்கிற்கேற்பச் செம்மைப்படுத்தப்பட்டன.

### மருட்பாவிற்கு வெண்பா, ஆசிரியம் பற்றிய ஓசைகளே உரிய

**மருட்பா ஏனை இருசார் அல்லது**
**தான் இது என்னும் தனிநிலை இன்றே.** (1342)

மருட்பா வெண்பா ஆசிரியப்பா இரண்டினாலானது. அதனால் அவ் இரண்டு சார்பினால் செப்பலோசையும் அகவலோசையும் கலந்து வரும். தனித்து வேறுபடுத்தி, இன்ன ஓசை என்று கூறுதல் இயலாது.

### ஓசையில்லாதது பாட்டாகாது

**அவ்வியல் பல்லது பாட்டாங்குக் கிளவார். (1343)**

அவ் இயல்பு அல்லது – அவ் ஓசைகளை உடைய தன்மை இருந்தாலல்லது பாட்டுப் புனையார். அதாவது ஏனைய அசை சீர் அடி என உறுப்பெல்லாம் அமைந்தாலும் உரிய ஓசையின்றேல் அது பாட்டாகாது. ஓசையுடையதே பாட்டு. பாடலை அவ்வவ் ஓசையுடனேதான் பாடவேண்டும் என்பதும் கிளவார் என்பதால் பெறப்படும்.

### ஓசை வகைகள் இவை நான்குமே

**தூக்கியல் வகையே ஆங்கென மொழிப. (1344)**

தூக்கு – ஓசை. ஆங்கென – இதுகாறும் கூறியபடி. இதற்குமேல் இல்லை என்றபடி.

### தொடை

### தொடை வகைகள் நான்கு

**மோனை எதுகை முரணே இயைபு என**
**நால்நெறி மரபின தொடை வகை என்ப. (1345)**

தொடை வகை நான்கு : மோனை, எதுகை, முரண். இயைபு. இயைபு – இறுதி ஒன்றி வருவது.

### அளபெடையும் ஒரு தொடையாகும்

**அளபெடை தலைப்பெய ஐந்தும் ஆகும். (1346)**

அளபெடையைக் கூட்ட ஐந்துவகையுமாகும். தலைப்பெய – சேர்க்க, கூட்ட.

### ஓரடிக்குள் வரும் தொடைகளும் இயற்கையாக அமைவனவும்

**பொழிப்பும் ஒரூஉம் செந்தொடை மரபும்**
**அமைந்தவை தெரியின் அவையுமார் உளவே. (1347)**

பொழிப்பு, ஒரூஉ, செந்தொடை மரபும் பாடல்களில் அமைந்துள்ளவற்றை ஆராயின், அவையும் தொடைகளேயாம்.

### தொடையோடு சேர்க்கக்கூடியவை

**நிரனிறுத்து அமைத்தலும், இரட்டையாப்பும்**
**மொழிந்தவற்றியலான் முற்றும் என்ப. (1348)**

'நிரல்நிறை' என்பது சொல்லவந்த பொருள்களை நிரலே நிறுத்தி, அவற்றின் முடிக்குஞ்சொற்களையும் அதே வரிசையில் நிறுத்துதல். இதனைப் பிற்காலத்தார் பொருள்கோள் என்றும் அணி என்றும் வகைப்படுத்தினர். இரட்டை யாப்பு - ஓரடி முழுவதும் வந்த சொல்லே வருதல் என முன்னையோர் கூறியுள்ளனர். இவ்விளக்கம் பொருத்தமாகப் படவில்லை.

மொழிந்தவற்று இயலான் முற்றுதல் - முன்னர்க்கூறிய பொருள்கோள், இரட்டுற மொழிதல் போன்றவற்றில் அவை போலப் பொருந்திவரும். இரட்டை யாப்பு - இரண்டுவிதமாகப் பிரித்து பொருள் கொள்ள இடம் தரும் யாப்பு.

### மோனைத் தொடையின் இலக்கணம்

**அடிதொறும் தலை யெழுத்து ஒப்பது மோனை. (1349)**

அடிதொறும் - ஒவ்வொரடியினுள்ளும், சீர்களின் முதல் எழுத்து ஒப்பது மோனை. இது அடிதோறும் வருவது சிறுபான்மை.

### எதுகைத் தொடையின் இலக்கணம்

**அஃதொழிந்து ஒன்றின் எதுகை ஆகும். (1350)**

அஃதுதொழிந்து - முதலெழுத்து நீங்கலாக இரண்டாம் எழுத்தும் சிலபோது மேலும் வருவனவும் ஒத்து வருவன எதுகையாகும். முதலெழுத்து அளவொத்திருக்க வேண்டும். அங்கு, ஆங்கு - இரண்டாமெழுத்து ஒன்றிவரினும் முதலெழுத்து அளவு ஒவ்வாமையால் எதுகை ஆகாது.

### மோனை எதுகைக்குக் கிளைஎழுத்தும் பொருந்தும்

**ஆயிருதொடைக்கும் கிளை எழுத்து உரிய. (1351)**

ஆ இரு தொடை - மோனை எதுகை எனும் அந்த இரண்டுதொடை. கிளையெழுத்து - ஏதேனும் ஒருவகையில் இன எழுத்து. அ வுக்கு ஆவரின் இன மோனையாகும். ஆறறி, தேறுநீர் - ற, று இன எதுகையாகும். இவை போல்வன. இதை வருக்க எதுகை என்பர்.

### முரண் தொடையின் இலக்கணம்

**மொழியினும் பொருளினும் முரணுதல் முரணே. (1352)**

சொல் அல்லது முரண்படத்தொடுப்பது முரண்தொடை. சிறு X பெரு = சொல்முரண். நீர் X தீ = பொருள்முரண்.

### இயைபுத் தொடையின் இலக்கணம்

**இறுவாய் ஒப்பின் அஃது இயைபு என மொழிப. (1353)**

அடியின் இறுதிச்சொல், சீர், எழுத்து ஒன்றிவந்தால் அஃது இயைபுத் தொடை எனப்படும். இஃது ஓரடிக்குள்ளும் வரும்; ஈரடி முதலாக அடிதோறும் அமைந்தும் சந்தம் தரும். இட்டும் தொட்டும் கவ்வியும் துழன்றும் – ஓரடிக்குள். இனிமைத் தமிழ் மொழி எமது – அது எமக்கு இன்பம் தரும்படி வாய்த்த நல் அமுது.

### அளபெடைத் தொடையின் இலக்கணம்

**அளபெழின் அவையே அளபெடைத் தொடையே. (1354)**

அடிதொறும் அளபெடை அமையத் தொடுப்பின் அஃது அளபெடைத்தொகையாகும். 'ஓஒ இனிதே எமக்கிந் நோய் செய்தகண் தாஅம் இதற்பட்டது.'

### ஓரடிக்குள் பொழிப்புத் தொடை அமையும் விதம்

**ஒரு சீர் இடையிட்டு எதுகை ஆயின்**
**பொழிப்பென மொழிதல் புலவர் ஆறே. (1355)**

ஓரடிக்குள் மட்டும் அமையும் தொடை வேறுபாடுகள். ஒருசீர் இடையிட்ட எதுகை பொழிப்புத்தொடை முதற்சீரிலும் மூன்றாம் சீரிலும் வருவன. ஒருசீர் இடையிடுதல் என்று பொதுப்படக் கூறியதால், இரண்டாம் சீரிலும் நான்காம் சீரிலும் வருவன போலவும் சங்கப் பாடல்களில் உள.

### ஓரடிக்குள் ஒரூஉத் தொடை அமையும் விதம்

**இருசீர் இடை இடின் ஒரூஉ என மொழிப. (1356)**

ஓரடிக்குள் இரண்டு சீர்கள் இடையிட்டு வருவது ஒரூஉத் தொடை. இவை இரண்டும் எதுகைக்கு மட்டுமன்றி, ஏனையவற்றுக்கும் வருவதை உரையாசிரியர்கள் மிக விரிவாகக் காட்டியுள்ளனர்.

**செந்தொடை - தொடைபற்றிக் கருதாது இயல்பாக அமைவது**

**சொல்லிய தொடையொடு வேறுபட்டு இயலின்**
**சொல்லியல் புலவர் அது செந்தொடை என்ப. (1357)**

இதுகாறும் சொல்லிய தொடை வகைகளோடு வேறுபட்டு, இயல்பாக அமைவனவற்றை சொல்லவல்ல புலவர்கள் 'செந்தொடை' என்பார்கள். அஃதாவது தொடையெதுவும் அமையாது, இயற்கையாய் அமைவது. "செயற்கை வகையான் அன்றி இயற்கையிலே பூந்துணர்களால் பொலிந்து தோன்றும் கொன்றையும் கடம்பும் போல, நின்றவாறே நின்று, இயற்கை வகையால் தொடைப் பொலிவு செய்தல் பற்றிய செந்தொடை என்னும் பெயர்த்தாயிற்று" எனும் பேராசிரியரது விளக்கம் அரியதாகும்.

**தொடைகளின் விரி - கூடுதல் எண்ணிக்கை**

**மெய்பெறு மரபின் தொடை வகை தாமே**
**ஐ ஈர் ஆயிரத்து ஆறு ஐஞ் நூற்றொடு**
**தொண்டு தலையிட்ட பத்துக்குறை எழுநூறு**
**ஒன்றும் என்ப உணர்ந்திசினோரே. (1358)**

மேலே கூரிய தொடைகளையும் தொடை விகற்பங்களையும் பெருக்கித் தொல்காப்பியர் கூறுவது நுண்மாண் நுழை புலமுடையோர்க்குக் கூரிய சீரிய நல்விருந்தாகும். மெய்பெறு மரபின் வடிவாக அமையும் இயற்கையின்படி. தொடை வகை: ஐ ஈராயிரத்து – பத்தாயிரம். ஆறு ஐஞ்ஞூற்சொடு – மூவராயிரத்துடன். தொண்டு – ஒன்பது. பத்துக்குறை எழுநூறு – அறுநூற்றுத் தொண்ணூறு. 'ஒன்றும் என்ப' என்பது இளம்பூரணர் பாடம். ஆகவே அவர் கருத்துப்படி தொடைவகை பதின்மூவாயிரத்து அறுநூற்றுத் தொண்ணூற்று ஒன்பது ஆகும். (13699).

பேராசிரியர் 'தொண்டுதலையிட்ட பத்துக்குறை எழுநூற்று ஒன்பஃது' எனப் பாடம் கொள்வார். இதன்படி எழுநூற்றெட்டு ஆகும். தொண்டு தலையிட்டது ஒன்பது கூடியது. பத்துக்குறை எழுநூற்று ஒன்பஃது - அறுநூற்றுத்தொண்ணூற்று ஒன்பது. மேலே கூறிய ஒன்பதைக் கூட்ட எழுநூற்று எட்டு. ஆக பதின்மூவாயிரத்து எழுநூற்றெட்டு என்பது (13708) என்பது பேராசிரியர் கணக்கு.

நச்சினார்க்கினியர் 'தொண்டு தலையிட்ட பத்துக்குறை எழுநூற்றொன்பஃது' என்பதற்கு 'ஒன்பது தலையிலே வைத்து பத்துக் குறைந்த எழுநூற்றொன்பது' என்று உரையெழுதுகிறார். இதன் விளக்கமாக அவர் தருவது: பத்துக் குறை எழுநூற்றொன்பது = 699. இதனைத் தலை வைத்த ஒன்பதனோடு பெருக்க வருவது = 6291. முன்னே கூறிய பதின்மூவாயிரத்துடன் இதைக் கூட்டவருவது 19291. ஒவ்வொருவரும் தத்தம் கணக்கை நிறுவியும் காட்டியுள்ளனர். கணித நூல் வல்லாரும் கண்டறியத் திகைப்புத்தரும் கணக்கு இது.

### தொடை வகைகளை விரித்தால் எல்லையில்லை

**தெரிந்தனர் விரிப்பின் வரம்பில ஆகும். (1359)**

தெரிந்தனர் – தெரிந்து, தொடை பற்றி நன்கு ஆராய்ந்து வரம்பில ஆகும் – எல்லையின்றிப் போகும்.

### இதுவும் அது

**தொடை நிலை வகையே ஆங்கென மொழிப. (1360)**

தொடைகளின் வகை இது காறும் கூறப்பட்டபடி ஆகும்.

## நோக்கு

### தொல்காப்பியர் சுட்டும் தமிழ்முறைத் திறனாய்வு

**மாத்திரை முதலா அடிநிலை காறும்**
**நோக்குதற் காரணம் நோக்கெனப்படுமே. (1361)**

'நோக்கு' என்பது தொல்காப்பியர் குறிப்பிடும் தமிழ்துறைத் திறனாய்வு. 'நயம் பாராட்டுதல்' அன்று இது. நயங்களைத் தேடிக் கண்டுபிடித்தல். ஆங்கிலத்தில் கிரிட்டிசிசம் (Criticism) என்பது குற்றங்களைத் தேடிக் காண்பது, தமிழில் நயங்களைக் காண்பது நோக்கு, நோக்கு – உற்று நோக்குதல், காதலர் நோக்கு உட்குறிப்புடையது. வயிரக்கற்களை நோக்குவது – நயம் பயம் தேடித் தரம் பிரிப்பது. இலக்கியத்தில் நோக்கு என்பது, அதன் குணம் குற்றங்களை ஆராய்வது.

மாத்திரை முதலா(க்) அடிநிலை காறும் – மாத்திரை முதலாக அசை, சீர், சொல், அடி, பா அனைத்தையும் அடி என்றாலும் அடிகள் கூடிய பாவையும் குறிக்கும். இவை அனைத்தையும் 'நோக்குதல்' என்றால் என்ன? 'இங்கு ஒரு

மாத்திரை அளவு கூடியது ஏன்? இச்சொல் இங்கு வருவானேன்? இப் பாவின் சந்தம் இவ்வாறிருப்பது ஏன்? - இவ்வாறு ஒவ்வொன்றையும் மறித்து - எதிர்மறுத்துக் கேட்டு, உரிய விடை காண்பதே நோக்கு. அதாவது பாடுபவன் - படைப்பவன் - எழுத்தாளன் தான் படைக்கும் ஒவ்வொரு சொல்லையும் கூட - ஏன் ஒவ்வொரு மாத்திரையையும் கூடப் பயன் கருதிப் படைக்க வேண்டும். பயனின்றி, வெற்றெனத் தொடுப்பன கவிதை ஆகா; படைப்பும் ஆகா.

மாத்திரையைக் குறிப்பிடக் காரணம் அதுவே சிற்றெல்லை. அவ்வாறெனில் பாடலில் - படைப்பில் அமைந்துள்ள அத்துணையும், ஒவ்வொன்றும் காரணம் கருதிப் பயனுடையவாகப் படைக்கப்பட்டிருக்க வேண்டும்.

தொல்காப்பியர் காலத்தே 'அடி' களுக்கே சிறப்பு. பல வகை அடிகள் கலந்தும் வேறுபட்டும் தனிவகையாகியும் வருவது கொண்டு பாடல்கள் ஆயின (Combination and permutation of poetical lines) எனவே சிறப்புற அமைவது. எனவே இது பாடல் முழுவதற்கும் சொன்ன இலக்கியக்கொள்கையே.

நோக்குதற் காரணம் - முன்னே சொன்ன மாத்திரை முதலியவற்றை, நோக்கும்படியான கருவி - ஆட்சி - அமைப்பு அதில் இருக்க வேண்டும். அது நம்மைத் திரும்பிப் பார்க்கும்படி நோக்கும்படி செய்யவேண்டும். படைப்பாளி, அதை நாம் 'திரும்பத் திரும்ப' நோக்குமாறு ஏதோ சிறந்த ஒன்றை அதில் வைத்திருப்பதே நோக்குதற்கான காரணம்.

நோக்குதற் காரணம் - படிப்பவர் அதைத் திரும்ப நோக்கிப் பயன்கொள்வது இதிலடங்கும். ஒரு பாடலடி, ஒரு கதைக் கூறு, ஒரு வண்ணனை, ஒரு சந்தம் நம்மால் திரும்பத் திரும்பப் பார்க்கும்படியோ, பாடும்படியோ, நினைக்கும்படியோ இருந்தால் அப்படி ஒரு சிறப்புத் திறன் அதிலிருக்கிறது என்பதுதான் பொருள். அதைப் படைப்பாளி படைப்பது, அதில் அமைந்திருப்பதையே 'நோக்குதற்கான காரணம்' என்று கூறப்படுகிறது. அங்ஙனம் அமைந்திருந்தால் அதை 'நோக்குடைய' பாடல் எனலாம். இன்றேல் அது பாடலாகாது. இலக்கியப் படைப்பு அனைத்திற்கும் இது பொருந்தும்.

பேராசிரியர் கூறும் அரிய விளக்கங்கள் :

'நோக்கென்பதோர் உறுப்புப் பெற்ற வழியே அது செய்யுளாவதாகலான்'... அதாவது நோக்கு இல்லாதது கவிதை ஆகாது; இலக்கியமாகாது.

'மாத்திரையும் எழுத்தும் அசைநிலையும் சீரும் முதலாக அடி நிரம்புந்துணையும் நோக்குடையவாகச் செய்தல் வன்மையால் பெறப்படுவது, நோக்கென்றும் உறுப்பாவது?' - அதாவது 'செய்தல் வன்மை'யால் - படைப்பாற்றல் திறமையால் அமைவது இது.

'கேட்டார் மறித்து நோக்கிப் பயன்கொள்ளும் கருவியை நோக்குதற் காரணம் என்றான் என்பது'. மறித்து - எதிர்க் கேள்வி எழுப்பி, விடைகண்டு, இலக்கிய இன்பம் துய்க்கவேண்டும். அதற்குரிய கருவி அமைந்திருப்பதே 'நோக்குதற்கான காரணம்' எனப்பட்டது. எழுதுவதெல்லாம் இலக்கியமாகாது. படைப்பதெல்லாம் பாட்டாகாது. ஒருமுறை படித்து, வீசி எறிவன செய்தியாக இருக்கலாம்; இலக்கியமாதல் இயலாது என்பது இதனால் பெறப்படும்.

'அடிநிலை காறும் என்பது ஓரடிக்கண்ணேயன்றியும் செய்யுள் வந்த அடி எத்துணையாயினும் அவை முடிகாறும்' என்றவாறு. ஒன்றன் முழுமையையும் நோக்கியது இது. தோள் கண்டோர் தோளே கண்டார். தொடுகழற் கமலன்ன தாள் கண்டார் தானே கண்டார் என்று கம்பன் பாடியது போல், தனியுறுப்புக்கள் பற்றியது மட்டுமன்று இது. தனியுறுப்பெல்லாம் முழுமையை நோக்கி, அமைய வேண்டும். 'முல்லை வைந்துனை' (அகம். 4) என்ற அகநானூற்றுப் பாடலை, இந்த இடத்தில் காட்டிப் பேராசிரியர் தந்திருக்கும் விளக்கம், உலக இலக்கியங்களிலேயே முதன்முதல் செய்த, தனித்த ஒப்பற்ற இலக்கியத் திறனாய்வாகும்.

இலக்கியம் முழுவதும் 'நோக்கு'டையவாகச் செய்தல் அரிய செயலே. சங்க இலக்கியம், சிலப்பதிகாரம், காப்பியம், சேக்சுபியர், காளிதாசம் - எனச் சில உலகளாவிய பெருமை மிகுபடைப்புகளுக்கே இது பொருந்தும்.

பேராசிரியர் அகநானூற்றுப் பாடலைக் காட்டி,' இவ்வாறு முழுவதும் வந்தன நோக்குதற்குச் சிறப்புடைய எனவும் இவை இடையிட்டு வந்தன சிறப்பில எனவும் கொள்ளப்படும்,' என்று தரப்படுத்துதலும் காணலாம்.

உருக்காட்சி, படிமம், தொன்மம் (Image, Symbol, Myth), சிறப்புற அமைவனவே, வசனத்தினின்றும் இலக்கியத்தைப் பிரிக்கும் எல்லைக் கோடுகள் என்பர் ரெனே வெல்லக்கும் ஆஸ்டின்வாரனும், தமது 'இலக்கியக் கொள்கை' பற்றிய நூலில். தொல்காப்பியர் ஒருபடி மேலே செல்கிறார்.

அவை மட்டுமல்ல, எவ்வகைத் திறனாயினும் உத்தியாயினும் மறித்து 'மறித்து நோக்கி நோக்கிப்' பயன்கொள்ளும்படியான இனிமையோ, அழகோ,

சிறப்போ, நயமோ அமைந்திருக்க வேண்டும் என்பார் அவர். மற்றவை எல்லாம் இலக்கியத்திற்கு உரமாகலாம்; இலக்கியமாக இயலா என்பது கருத்து.

இளம்பூரணர் தரும் விளக்கம் இதனிலிருந்து சிறிது வேறுபட்டது. ஆயினும் முழுமை நோக்கில் ஒன்றுபடுவது. நோக்குதற் காரணம் – நோக்குதலாகிய கருவி. பாடலின் கருத்தும் நடையும் உத்திகளும் பிறவும் எல்லாம் ஒரே நோக்குப்பட அமைவது அது. 'மற்றொன்று விரிப்பது, வெற்றெனத் தொடுப்பது', 'பயனில மொழிவது', 'சிதறிக்கிடப்பது' இலக்கியமாகாது. ஒருவகையில் 'முழுமை நோக்கு' வேண்டும். இதனைப் பிற்காலத்தார் 'பாவியம்' (பாவிகம்) என்றனர். இளம்பூரணர் விளக்கம்: 'அஃதாவது யாதானும் ஒன்றைத் தொடுக்குங் காலத்துக் கருதிய பொருளை முடிக்குங்காறும் பிறிது நோக்காது அது தன்னையே நோக்கி நிற்கும் நிலை. அடிநிலைகாறும் என்றதனால் ஓரடிக் கண்ணும் பலவடிக்கண்ணும் நோக்குதல் கொள்க. அஃது ஒரு நோக்காக ஓடுதலும் பல நோக்காக ஓடுதலும் இடையிட்டு நோக்குதலும் என மூன்று வகைப்படும்."

ஆற்றுப்படையில் பரிசு பெறாதான் கூட்டத்தினரது வறுமை, பெற்றானது கூட்டத்தினரின் செல்வச் செழிப்பு, பரிசில் தந்தானது ஊருக்குப் போகும் வழி, அக்கொடையாளனது பெருமை, சென்றால் பெறக்கூடியன எனப் பலவும் இருக்கும். இவை துணைப் பெருங்கருத்துக்களாயினும், 'ஆற்றுப்படுத்தல்' (வழிகாட்டுதல்) என்ற ஒன்றே அடிக்கருத்தாகும். அதாவது ஆற்றுப்படை வள்ளலது பெருமை பாடவந்தகன்று; அதன் உட்கருத்து, அடிப்படைக்கரு 'வழி காட்டுதலே'. இதனை மேனாட்டார் அடிக்கருத்தும், துணைக் கருத்துகளும் எனப் (Theme and motif) பலவாறு பகுப்பர். எல்லாம் ஒரே கருத்தை நோக்கியமைய, உறுப்புக்கூறுகள் துணை செய்ய வேண்டுமே தவிர, திசை திருப்பக்கூடாது.

பேராசிரியர், இளம்பூரணர் விளக்கங்களுடன் இக் கோட்பாடு, தனிப்பெரும் நூல்களாக விரிக்கத்தக்கது. சில இலக்கியக் கொள்கைகளே, உலகளாவியவை என்பர். அவற்றுள் 'நோக்கு'ம் ஒன்று.

### பா

### பா வகை

**ஆசிரியம், வஞ்சி, வெண்பா, கலி என**
**நால் இயற்று; என்ப பாவகை விரியே. (1362)**

ஆசிரியப்பா, வஞ்சிப்பா, வெண்பா, கலிப்பா எனத் தமிழ்ப் பா வகை நான்கு இயல்பினையுடையது.

### பாப்புனைதலின் குறிக்கோள்கள்

**அந்நிலை மருங்கின் அற முதலாகிய**
**மும்முதற் பொருட்கும் உரிய என்ப. (1363)**

அந் நான்கு பாவகைகளும் 'அறம் முதலாகிய மும்முதற்பொருள்களுக்கு' உரியன. அறம் பொருள் இன்பம் – உறுதிப் பொருள்கள், மானுட விழுமியங்கள், நிலை பேறான குறிக்கோள்கள். பாவகை கூறியதும் அவை பயன்பட வேண்டிய எல்லைகள் வரையறுக்கப்படுகின்றன.

### நால்வகைப் பாக்களும் இரண்டு வகைக்குள் அடங்கும்.

**பாவிரி மருங்கினைப் பண்புறத் தொகுப்பின்**
**ஆசிரியப்பா வெண்பா என்றாங்கு**
**ஆயிரு பாவினுள் அடங்கும் என்ப. (1364)**

பாவிரி மருங்கு – நான்காக விரிந்த பக்கம். அதைச் சீர்பட தொகுத்தால், ஆசிரியப்பா, வெண்பா என, அவ்விருபாவினுள் ஏனையிரண்டும் அடங்கும்.

### அவ்வாறு இரண்டாக அடங்குவதன் காரணம்

**ஆசிரிய நடைத்தே வஞ்சி; ஏனை**
**வெண்பா நடைத்தே கலி என மொழிப. (1365)**

வஞ்சிப்பா ஆசிரிய நடையையுடையது; அதனால் அவை ஒன்றினுள் ஒன்று அடங்கின. சங்கப் பாடல்களில் வஞ்சிப்பா எனத் தனியே வராது. வஞ்சியடிகள் ஆசிரியப்பாவின் இடையே விரவி வருகின்றன. பட்டினப்பாலைக்கு வஞ்சி நெடும் பாட்டு என்று பெயருண்டு. வஞ்சியடிகள் மிகுதியாக, ஆசிரியத்துள் விரவி வருவதே காரணம்.

கலிப்பா வெண்பா நடையையுடையது. கலிப்பாடல்களுக்குள் மிகக் கூடுதலாக வெண்பாக்களின் வகைகள் கலந்து வருவதைக் கலித்தொகையுள் காணலாம்.

இவை. நடையொப்புமை, ஓரளவு ஓசையொப்புமை உடையன. தொல்பழங்காலத்தில் இவை ஒன்றினொன்று கிளைத்தனவாகலாம்.

## வாழ்த்து வகைகள்

### வாழ்த்துக்கு நான்கு பாக்களும் உரியன.

**வாழ்த்தியல்வகை நாற்பாக்கும் உரித்தே. (1366)**

அறமுதலாகிய மூன்று உறுதிப் பொருளுக்கு முதிய (வாழ்த்து) எனும் அடிக் கருத்து, பலவகைப்படும். அவை நான்கு பாவாலும் பாடப்படும்.

### வழிபடு தெய்வம், குல தெய்வங்களைச் சுட்டி வாழ்த்துதல் புறநிலை வாழ்த்து

**வழிபடுதெய்வம் நிற்புறம் காப்பப்**
**பழிதீர் செல்வமொடு வழிவழி சிறந்து**
**பொலிமின் என்னும் புறநிலை வாழ்த்தே**
**கலிநிலை வகையும் வஞ்சியும் பெறாஅ. (1367)**

புறநிலை வாழ்த்து – எந்நாளும் புறத்தே நின்று காவலாகி அருள் செய்ய வாழ்த்துவது. தெய்வம் – வழிபடுதெய்வம். உரையாசிரியர்கள் குலதெய்வம் என்பர். தமிழர் பண்பாட்டில் இதுவும் ஒன்று. முழுமுதற் கடவுளரை வணங்குதலுடன், அவரவர் குலதெய்வமாகவும் வழிபடுதெய்வமாகவும் கொண்டு வழிபடுதல் இன்னும் கண்கூடாக நிகழ்வது. பத்திமையின் ஊற்றுக்கண் தமிழகமே. தமிழரின் பத்திமையைப் பயன்படுத்தி, தமக்குக் கிடைக்கும் வருமானம் ஒன்றே கருதி, அவர்களைத் தாய்மொழியில் வழிபட விடாது காலம் காலமாகத் தடுத்து வருகின்றனர். 'நீ வழிபடுகின்ற தெய்வம், உன்னையும் உன் குடும்பத்தையும் சுற்றத்தையும் பாதுகாவலாகச் சுற்றி உடன் நின்று காக்க குற்றமற்ற செல்வத்துடனே, மக்கள் பேரன் பேர்த்தியர் என வழிவழிச் சிறந்து பொலிவீர்களாக', என வாழ்த்துவது இது. இது ஆசிரியத்தாலும் வெண்பாவாலும் பாடப்படும். கலிப்பா வகைகளாலும் வஞ்சிப்பாவாலும் இது பாடப்பெறாது.

### ஏனைய மூவகை வாழ்த்துக்கள்

**வாயுறை வாழ்த்தே, அவையடக் கியலே,**
**செவியறிவுறூஉ என அவையும் அன்ன. (1368)**

ஏனைய வாழ்த்து வகைகளாவன: வாயுறை வாழ்த்து, அவையடக்கியல் வாழ்த்து, செவியறிவுறு வாழ்த்து – இவையும் கலிப்பாவாலும் வஞ்சிப்பாவாலும் பாடப்பெறா. ஆசிரியம், வெண்பாவால் பாடப்பெறும்.

## எதிர்கால நல்வாழ்வு கருதும் வாயுறை வாழ்த்து

**வாயுறை வாழ்த்தே, வயங்க நாடின்**
**வேம்பும் கடுவும் போல வெஞ்சொல்**
**தாங்குதல் இன்றி வழிநனி பயக்கும் என்று**
**ஓம்படைக் கிளவியின் வாயுறுத்தற்றே. (1369)**

வாயுறை வாழ்த்து – வாயால் சொல்லும் சொல்லாகிய மருந்தினால், கேட்போர் நலம்பெற வாழ்த்துவது. உறை – மருந்து, வாய் உறை – வாயால் சொல்லிப் புகட்டப்படும் மருந்து. வாய்மொழியாகிய மெய்ம்மையை உள்ளவாறே, தயக்கமின்றி, வெளிப்படச்சொல்லி வாழ்த்துவதுமாம். வயங்க நாடின் – விளங்க ஆராய்ந்தால் வேம்பு – கசக்கும் மருந்து. கடு, கடுக்காய் – துவர்க்கும் மருந்து. அவை முன்பு கசந்தாலும் பின்பு உடலுக்கு நன்மை தருபவை. உறையை இன்று 'கசாயம்' என்பர்; நன்கு உறைய வைக்கப்படுவது அது. வெஞ்சொல் தாங்குதல் இன்றி – கடுமையாகச் சொல்லுதலை மறைக்காது, வெளிப்படவே சொல்லுதல் இது. வழி நனிபயக்கும் என்று – எதிர் காலத்தில் மிகவும் நன்மை பயக்கும் எனும் அந்த நோக்கத்துடன், எண்ணத்துடன். ஓம்படைக் கிளவியின் – பாதுகாவற் சொல்லோடு, நன்மையுண்டாகுக என்ற நற்சொல்லோடு முடிவது. வாயுறுத்தற்று – உண்மையை, மெய்ம்மையை அறிவுறுத்தியது.

## அவையடக்கியல் வாழ்த்து

**அவையடக்கியலே, அரில்தபத் தெரியின்**
**வல்லா கூறினும் வகுத்தனர் கொண்மின் என்று**
**எல்லா மாந்தர்க்கும் வழிமொழிந் தன்றே. (1370)**

தமிழில் கற்றோர் அவையில் நூல்களை அரங்கேற்றுவதே தொல்காப்பியர்க்கு முன்புதொட்டு இருந்துவரும் வழக்கம். கற்றோர் அவையியல், எழுப்பப்படும் வினாக்களுக்கு விடை கூறித் தனது நூல் குற்றமற்றது என நிறுவவேண்டியது, நூலாசிரியன் பொறுப்பு. அவ்வாறு தொடங்குங்கால், அவன் அவையோரை வாழ்த்தித் தொடங்குவது மரபு. அது அவையடக்கியல் வாழ்த்து எனப்பட்டது. அரில் தபத் தெரியின் – அது பற்றிக் குற்றமற ஆராய்ந்தால். வல்லா கூறினும் வகுத்தனர் கொண்மின் என்று – கூறக் கருதியதனை விளங்க அறிவிக்கும் திறமில்லாத சொற்களாகக் கூறினாலும் (வல்லா – மாட்டாத, இயலாது) நல்லனவற்றையும் அல்லனவற்றையும் பகுத்துணர்ந்து, அல்லதை நீக்கி

நல்லதைக் கொள்வீராக என்று. எல்லா மாந்தர்க்கும் - அவையோர் அனைவருக்கும். தன்னின் உயர்ந்தவர், ஒப்பானவர், தாழ்ந்தவர் என எல்லோர்க்கும். வழிமொழிந்தன்று - பணிவுடைய சொற்களைக் கூறிப் பாராட்டி வாழ்த்துவது. அவைக்குத்தான் அடங்குதல் போல் தோன்றினும், இனிய பணிவான சொற்களால் அவையைத் தன்னகப்படுத்திக் கொள்ளுதலால் இஃது அவையடக்கியல் எனப்பட்டது.

### அடக்கமுடைமை அறிவுறுத்தும் செவியுறை வாழ்த்து

**செவியுறை தானே**
**பொங்குதல் இன்றிப் புரையோர் நாப்பண்**
**அவிதல் கடன் எனச் செவியுறுத் தன்றே. (1371)**

செவியுறை - செவி மருந்து. செவியின்கண் ஒருவனுக்கு அறிவுறுத்துவது. செவியறிவுறூஉ - செவிக்கண் அறிவுறுத்தல். மருந்துபோல் பயன்படும் வாயுறை போலச் செவியுறையும் ஒருவகை அறிவுரையாய்க் கேட்டவனை நல்வழிப்படுத்தி, நலமாக வாழச் செய்யும். பெரியோர் நாப்பண் பொங்குதல் இன்றி - தன்னிலும் பெயரியவர்களிடையே, தான் பெரியவனாகத் தன்னை அவரினும் மேம்படுத்திக் காட்டிக்கொள்ளாமல். அவிதல் கடன் - பணிந்தொழுகுதல் ஒருவனுக்குக் கடமை என. 'பணியுமாம் என்றும் பெருமை' அல்லவா? இங்ஙனம் செவியுறை, ஒருவரது செவிக்கண் சேருமாறு வலியுறுத்தி மொழிவதாயிற்று. இவை உறை என - மூலிகை ஏலாதி என மருந்து வகைகளின் பெயர்களால் நீதி நூல்களைப் படைக்கலாயினர்.

### ஆசிரியப்பா வகைகளும் ஒத்தாழிசைக் கலியும் நான்கு அடிகளுடன் மூச்சீரடி இருசீரடிகளையும் பெற்று வரும்

**ஒத்தாழிசையும் மண்டில யாப்பும்,**
**குட்டமும் நேரடிக்கு ஒட்டின என்ப. (1372)**

குட்டம் - குறைந்து வரும் அடி. இருசீரடி, முச்சீரடி, கலிப்பாவின் உறுப்பு ஒத்தாழிசை (தரவு, ஒத்தாழிசை, தனிச் சொல், சுரிதகம் என வரும். கலிப்பா உறுப்புக்கள் பல.) மண்டில யாப்பு - நாற்சீரடியாக வருவன. நேரடி - நாற்சீரடி பாடல்களில் இந் நாற்சீர் நேரடியுடன் ஏனைய முச்சீர் இருசீரடிகளும் வரும்.

**ஈற்றயலடி முச்சீரடியாயும் வரும்**

**குட்டம் எருத்தடி உடைத்துமாகும். (1373)**

எருத்து அடி - கடைசியடிக்கு முதலடியை. ஈற்றயலடி என்பர். குட்டமாக (முச்சீரடியாக வரும்). நேரிசை ஆசிரியத்தில் ஈற்றயலடி முச்சீரடியாக வரும்.

**ஆசிரியப்பா வகைகள் : நாற்சீரடிகளுள் முச்சீரடிகளும் கலந்து வரும்**

**மண்டிலம், குட்டம் என்றிவை இரண்டும்**
**செந்தூக்கு இயல என்மனார் புலவர். (1374)**

மண்டிலம் - நாற்சீரடி, குட்டம் - முச்சீரடி. சிறுபான்மை இரு சீரடி. இவை ஆசிரியப்பாவில் கலந்துவரும்.

தொல்காப்பியர் காலத்தில், நாட்டுப்புறப் பாடல் வகைகளிலிருந்து கிளைத்து வளர்ந்த தமிழ் இலக்கிய யாப்பிலக்கணம் பெரிதும் 'அடி' வகைகளை வைத்தே இன்ன பா என உணரப்பட்டது. மேலும் பா வகைப்பாடுகள் பல நிலையிலிருந்துள்ளன. இயற்கையான வளர்ச்சிநிலை. முதிர்ந்த நிலையில், அவை பிற்காலத்தே வகைதொகைப் படுத்தப்பட்டன. தொல்லாசான் தொடர்பு படாது, அன்றைய நிலைக்கு ஏற்ப, 'அடி' அமைப்புக்கே முக்கியத்துவம் கொடுத்துக் கூறிப்போகும் நிலையாக இது தென்படுகிறது.

செந்தூக்கு – ஆசிரியப்பா, நாற்சீரடியும் முச்சீரடியும் அதாவது மண்டிலமும் குட்டமும் ஆசிரியப்பா இயல்பின. நேரிசை நாற்சீரடியாவே முழுவதும் அமைந்தன. பின்பு நிலை மண்டிலம், அடிமறி மண்டிலம் எனப்பட்டன.

**அடியாலும் பொருளாலும் வெண்பாவின் வகைகள்**

**நெடுவெண் பாட்டே, குறுவெண் பாட்டே,**
**கைக்கிளை பரிபாட்டு அங்கதச் செய்யுளோடு**
**ஒத்தவை எல்லாம் வெண்பா யாப்பின. (1375)**

நெடுவெண் பாட்டு - அளவடிகள் எனப்படும் நான்கு அடிகளின் மிக்க அடிகளால் வருவது நெடுவெண்பாட்டு - ஐந்து அடிமுதல் பனிரண்டு அடிவரை வரும். இதைப் பஃறொடை வெண்பா என்பர். குறுவெண்பாட்டு - நான்கு அடிகளிற் குறைந்து இரண்டு அடிகளாலும் மூன்று அடிகளாலும் முடிவன இவை. குறள் வெண்பா, சிந்தடி வெண்பா என்பர்.ஒத்தவை - கூடுதல் குறைவில்லாச் சமநிலை

வெண்பாக்கள்; நான்கடி உடையன. அளவியல் வெண்பா எனவும் கூறுவர். கைக்கிளை வெண்பா, அங்கத வெண்பா இரண்டும் பாடுபொருளாற் பெயர்பெற்றன. பரிபாட்டு என்பது வெண்பாவும் கலந்துவரும் பல உறுப்புகளையுடைய வகைகள். 'இங்குக் கூறப்பட்ட குறள் வெண்பா முதலிய எல்லா வெண்பாக்களும் கொச்சகக் கலிக்கு உறுப்பாய்வரின் கொச்சகம் எனவும், பரிபாடற்கு உறுப்பாய்வரின் பரிபாடல் எனவும் கொள்ளப்படும்' என்பர் இளம்பூரணர். தமிழ்ப் பாவகை வளர்ச்சி, பரிணாம வளர்ச்சி போன்றதென்பதை இவற்றால் ஆராய்ந்து அறியலாம்.

**வெண்பாவில் மட்டுமன்றி, மருட்பாவாலும் கைக்கிளை பாடப்படும்.**

**கைக்கிளை தானே வெண்பாவாகி**
**ஆசிரிய இயலான் முடியவும் பெறுமே. (1376)**

கைக்கிளைப் பொருள் - இது புறத்திணை சார்ந்தது. முத்தொள்ளாயிரம் போல்வது. இது வெண்பாவில் தொடங்கி ஆசிரியத்தால் முடியவும் பெறும். இது மருட்பா எனப்படும். வெண்பாவால் மட்டுமன்றி மருட்பாவாலும் கைக்கிளை பாடப்படும்.

**பரிபாட்டு இலக்கணம்**

**பரிபாடல்லே தொகைநிலை வகையின்**
**இது பா என்னும் இயல்நெறி இன்றிப்**
**பொதுவாய் நிற்றற்கும் உரித்தென மொழிப. (1377)**

*பரிபாடல் :* தொகைநிலை வகையின் - இதுகாறும் நான்கு பா எனத் தொகுத்துக் கூறப்பட்ட வகையில். இது பா - இன்ன பா உறுப்பு இது. இயல்நெறி இன்றி - இயலும் தன்மையின்றி. பொதுவாய் நிற்றற்கு - வெண்பா உறுப்பால் வரும் என முன்னர்க் கூறப்பட்டபடியல்லாமல், பொதுவாகப் பல பாக்களின் உறுப்புக்களும் - அடிகளும் விரவி வரப்பாடப்படும். இசைப்பாட்டு ஆதலால் இவ்வாறு வரும்.

**பரிபாடலின் உறுப்புக்கள்**

**கொச்சகம், அராகம், சுரிதகம், எருத்தொடு**
**செப்பிய நான்கும் தனக்கு உறுப்பாகக்**
**காமங் கண்ணிய நிலைமைத் தாகும். (1378)**

பரிபாடல் - காமப் பொருளுடையது. காமவுணர்வை வெளிப்படையாகப் பாடும் இது. நாட்டுப்புறப் பாடல் தன்மையை நினைவூட்டுகிறது இது. அகத்திணைக் காமமேயன்றி, புறத்திணையாகக் கருதக் கூடிய காமப் பகுதிகளும் கலந்து வருவது. காமம் கண்ணிய - காமத்தைத் தன் பொருளாகக் கருதிய இதில் நான்கு உறுப்புகள் வரும். இவை வரிசைப்படக் கூறாமல், இடம் மாறிக் கூறப்பட்டுள்ளன. பரிபாடலும் இவ்வாறு உறுப்புக்கள் இடம் மாற்றிப் பாடப்படுவதுண்டு. எருத்து - கழுத்து, முன்பாகம். இது தரவு எனப்படும். முதலில் வருவது இது. கொச்சகம் - சேலைத் தலைப்பைக் கொய்து உடுத்துவர். சமமாக மடிப்பது அது.

கொச்சகம் நான்கு வகைப்பாக்களின் அடியும் விரவி, வெண்பாப் போல முடிவது. ஆசிரியவடி, வெண்பாவடி, வஞ்சியடி, கலியடி, சொற்சீரடி, முடுக்கியலடி என்ற அறுவகை அடியாலும் அமைந்த பாக்களை இடைஇடையே மிகுதியாகக் கொண்டுவரும் கொச்சகம் இசைத்தன்மை மிக்கது.

குற்றெழுத்துக்களை மிகுதியாகவுடையது - கம, பட, தரு என்பது போல குறிலிணைகள் நெருங்கி வருவது அராகம். இதனை முடுகியல் தன்மை எனலாம். அடிபடு சடுகுடு நடுநிலை என்பது போல வரும். அராக அடிகள் சந்தத்தை விரைவுபடுத்தும் கலிப்பாவிற்குரியவை. இங்கே கூறப்பட்ட இவ்வுறுப்புக்கள். சுரிதகம் - பாடலை முடிக்குமிடம். வெண்பா அல்லது ஆசிரிய நடையில் முடிவது சுரிதகம்.

### அதன்கண் பயிலும் அடிகள்

**சொற்சீர் அடியும், முடுகியல் அடியும்,**
**அப் பா நிலைமைக்கு உரியவாகும். (1379)**

அப் பா - அந்தப் பரிபாட்டு. சொற்சீரடி - சொல்லே சீராக முடிவது. அசை சீர்க்கு ஏற்பச் சொல்லை அமைப்பது பற்றிப் பொருளியலில் கூறினார் (1141). இங்கு சொல்லே சிதைவின்றிச் சீராக வருவது இசைப்பாடலுக்கு உரித்தென்கிறார். முடுகியலடி - அராகம் எனப்பட்டது போல, குறிலிணைகள் அடுக்கி வர, முடுகியலாகிய விரைந்த சந்தக் குழிப்புடைய சீர்கள் மிக்கவை.

### அவற்றுள் சொற்சீரடியின் இலக்கணம்

**கட்டுரை வகையான் எண்ணொடு புணர்ந்தும்,**
**முட்டு அடி இன்றிக் குறைவு சீர்த்தாகியும்,**
**ஒழியசை ஆகியும், வழியசை புணர்ந்தும்,**
**சொற்சீர்த்து இறுதல் சொற்சீர்க்கு இயல்பே. (1380)**

கட்டுரை வகை – உரைநடை போலும் பிறநடை எண் – பாடலிடையே ஓரடியானும் ஈரடியானும் விரவி வருவன. பரிபாட்டில் இவ்வாறு தனித்தனியே நிற்கும் அடிகளை நிரம்பப் பார்க்கலாம். இவை எண் எனப்பட்டன. முட்டடியின்றிக் குறைவு சீர்த்தாதல் – நாற்சீரடி என முழுமையாய் இன்றி முச்சீரடி. இருசீரடிகளால் இடையிடையே வருவன. ஒழி'பசை – இறுதிச் சீர் அசை ஒழிந்து (குறைந்து) வருவது. வழியசை புணர்த்தல் – ஒரே சீர் தனது அசையும் மாறாது அடுத்தடுத்து வரத் தொடுப்பது. சொற்சீர்த்து இறுதல் – சொல்லே சீராம் தன்மை பெற்று நிற்றல். இவை அனைத்தும் 'சொற்சீர்' என்பதன் இலக்கணமாகும்.

ஒருவித ஒழுங்குபட, ஓசை நயம் பொருந்த அமையும் சில 'புதுக்கவிதை'களில் வருவன, சொற்சீர் எனத்தக்கன.

## அங்கதப் பாட்டின் இலக்கணம்

**அங்கதம் தானே அரில்தபத் தெரியின்**
**செம்பொருள், கரந்தது என இரு வகைத்தே. (1381)**

அங்கதம் – எள்ளற் குறிப்புடையது; நகையாடலுடன் கூடியது; பழித்துப் பேசித் திருத்த முயல்வது. முன்பு உலக வழக்கில், நாடோடிப் பாடல்களில் இது பெருவரவிற்றாக இருந்துளது. அரில் தபத் தெரியின் – குற்றமற ஆராய்ந்தால். அங்கதச் செய்யுள் இருவகைப்படும். செம்பொருள் அங்கதம் (நேர் பொருளுடையது), பழிசுரப்பங்கதம் (பழிப்பதை மறைத்துச் சொல்வது), முன்னர் கைக்கிளைப்பாட்டு, அங்கதச் செய்யுள் என்றார் (1375). பாடல்களுக்கு அவற்றின் யாப்பு வடிவத்தால் பெயர் வைப்பது வழக்கமாகவும், இவை பொருளால் பெயர் வைக்கப்பட்டன. பரிபாட்டு இடையே வருவதால், பொருள் கருதியோ என்ற ஐயம் எழுகிறது. பரிவு – அன்பு, பக்தியுமாம்.

## வசை பாடுவது செம்பொருள் அங்கதம்

**செம் பொருளாயின் வசை எனப்படுமே. (1382)**

செம்பொருள் – மறையாது கூறுவது; வெளிப்படையாய் ஒருவர் குற்றங்குறையைச் சொல்வது. பளிச்சென்று கூறுவது வசை எனப்படும்.

## நகையாடுவது பழிசுரப்பு அங்கதம்

**மொழி சுரந்து சொல்லின் அது பழிசுரப்பாகும். (1383)**

வசையை அதற்குரிய சொல்லாற் சொல்லாது மறைத்துச் சொல்வது,

'மொழி சுரந்து சொல்வது'. இப் பழிசுரப்பங்கதமே அங்கதச் செய்யுளென்பதற்குப் பொருத்தம் மிக்கது. 'தேவர் அனையர் கயவர் அவருந்தாம் மேவன செய்தொழுகலான்' எனும் குறளில் கயவரைப் புகழ்வது போல் உளது. புகழ்வதுபோல் பழிப்பது இதிலடங்கும்.

**செவியறிவுறையும் அங்கதமும் தொடர்புடைய இரு செய்யுள்கள்**

**செய்யுள் தாமே இரண்டு என மொழிப. (1384)**

பொருளால் பெயர் பெற்ற செய்யுள் இரண்டு: செவியுறைச் செய்யுள், அங்கதச் செய்யுள் என்பன அவை.

**செவியுறை அங்கதச் செய்யுள்**

**புகழொடும் பொருளொடும் புணர்ந்தன்றாயின்**
**செவியுறைச் செய்யுள் அது என மொழிப. (1385)**

ஒருவரது புகழோடும் உறுதிப் பொருளுடனும் பொருந்தப்பாடப்படுமாயின் அது செவியுறை அங்கதச் செய்யுள் எனப்படும். இங்கு செவியறிவுறூஉ என, ஒருவரது பணிவுடைமையை அவர்தம் செவிக்கண் அறிவுறுத்துவதைக் கூறிய ஆசான், அதனை அங்கதமாக்கிப் பாடுங்கால் எங்ஙனம் பாடவேண்டுமென விளக்குகிறார். ஒருவர்க்குப் புகழுண்டாதற் பொருட்டு மட்டுமல்லாமல், அவரது நல்வாழ்வுக்குரிய உறுதிப் பொருள்களையும் கூறிப்பாடுதல் இது. வெறுமனே 'வசை' ஆகாது. வெளிப்படையாகவே குறைகளைக் காட்டி, நிறைகளைப் பெற வாழ்த்துவது இது.

**வசைபாடும்**

**செம்பொருள் அங்கதச்செய்யுள்**

**வசையொடும் நடையொடும் புணர்ந்தன்றாயின்**
**அங்கதச் செய்யுள் என்மனார் புலவர். (1386)**

செவியுறைச் செய்யுளொடும் அங்கதச் செய்யுளொடும் ஒற்றுமையும் வேற்றுமையும் உள்ளன. அவற்றை விளக்குவன இந்நூற்பாக்கள். அங்கதச் செய்யுள் வசையொடு பாடப்படும் போது இருவகைப்படுகிறது. பழிகரப்பங்கதம் எள்ளற் சுவையுடையது எனக் கூறப்பட்டது. செம்பொருளங்கதம் ஒருவர்க்கு நன்மை கருதியும் பாடப்படும் என்பது, முன்னைய நூற்பாக் கருத்து. வசை மட்டும் கருதியதன்று; செவியுறையுடன் தொடர்புடையது.

வசையுடனும் சொந்த (நகை) விருப்பு வெறுப்புடனும் பாடப்படுவது அங்கதச்செய்யுளாகும். இதில் செவியறிவுறுத்தும் தன்மை இல்லை. வேண்டுமென்றே வெறுப்பினால் வசைபாடும் அங்கதம் இது.

### கலிப்பாவின் வகை நான்கு

**ஒத்தாழிசைக் கலி, கலிவெண் பாட்டே,**
**கொச்சகம், உறழொடு கலி நால் வகைத்தே. (1387)**

கலிப்பா வகை நான்கு : ஒத்தாழிசைக்கலி, கலிவெண்பாட்டு, கொச்சகம், உறழ்கலி, ஒத்தாழிசை – தாழிசைகள் மூன்றாய்த் தம்முள் ஒத்துவருவன; இனிய இசையுடையன; ஒன்றின்மேல் ஒன்றாய் அடுக்கி வருவன. கலிவெண்பா – கலித்தளை தட்டு வெண்பா ஓசை பெற்று நீண்டு வருவன. கொச்சகம் இடையே வரும் உறுப்பு. மிகுதியாக வரும்போது, அவ்வுறுப்பால் பெயர் கூறுவர். உறழ்கலி – உரையாடலமைப்புடையது; கூற்றும் மாற்றமுமாய் வருவது; இது பொருளாற் பெயர் பெற்றது. வினாவும் விடையுமாவ்து.

### ஒத்தாழிசைக் கலி இருவகை

**அவற்றுள்**
**ஒத்தாழிசைக்கலி இருவகைத்தாகும். (1388)**

ஒத்தாழிசைக் கலிப்பா இருவகைப்படும்.

### அகம் தழுவிய ஒத்தாழிசைக்கலிப்பா

**இடைநிலைப் பாட்டு, தரவு, போக்கு, அடைஎன**
**நடைபயின்றொழுகும் ஒன்றென மொழிப. (1389)**

ஒன்று – முற்கூறிய இரண்டில் ஒன்று. உறுப்புக்கள் சிறப்பு நோக்கி இடம் மாறிக் கூறப்பட்டுள்ளன. தரவு, இடை நிலைப்பாட்டு அல்லது தாழிசை, அடைநிலைக் கிளவி அல்லது தனிச்சொல், போக்கு அல்லது சுரிதகம். இதுவே ஒத்தாழிசைக் கலியின் கட்டமைப்பு. போக்கு, சுரிதகம், வாரம், அடக்கியல் என்பன ஒரு பொருளன. பாட்டை முடித்துவைப்பது இவ்வுறுப்பு. இது ஆசிரியத்தாலோ, வெண்பாவாலோ முடியுமென்பது முன்னர்க் கூறப்பட்டது.

இக்கலிப்பா போல்பவை இசைப் பாக்கள். இவை கூத்திற் பயன்பட்டன. ஆடல் பாடல்களில் அதாவது குழுப்பாடல்களாகப் பயின்று வழங்கின. "இனி, இசைநூலாரும் இத்தரவு முதலாயினவற்றை **முகம் நிலை கொச்சகம் முரி**

என வேண்டுப. கூத்த நூலார் கொச்சகம் உள்வழி அதனை நிலை என அடக்கி, முகம் நிலை முரி என மூன்றாக வேண்டுப," எனவரும் பேராசிரியர் உரைப்பகுதிகளும் சிலப்பதிகாரத்தில் அடியார்க்கு நல்லார் விளக்கியுள்ள உரைப்பகுதிகளும் (கடலாடுகாதை) இங்கு நினைவு கொள்ளற்பாலன.

### முதலில் வரும் தரவு பெறும் அடிவரையறை

**தரவே தானும் நாலடி இழிபாய்**
**ஆறிரண்டு உயர்பு ஏறவும் பெறுமே. (1390)**

தரவு எனும் முதல் உறுப்பு சிற்றெல்லை நான்கடியாய் பேரெல்லை பன்னிரண்டு அடியாய், இடைப்பட்ட எல்லா அடியானும் வரப்பெறும். இழிபு - சிற்றெல்லை. உயர்பு - பேரெல்லை. ஏறவும் பெறும் - நான்கு, ஐந்து, ஆறு அடி எனக் கூடி வரவும் பெறும்.

### இடைநிலைப் பாட்டு அல்லது தாழிசைகள்

**இடைநிலைப் பாட்டே,**
**தரவு அகப்பட்ட மரபின என்ப. (1391)**

தரவுக்கு நான்கு அடி சிற்றெல்லை. அதற்கு உட்பட்ட மூன்றடி ஈரடிகளால், இடைநிலைப் பாட்டு - தாழிசை வரும். தரவுக்குள் வருதல் என்பதால், நான்கு அடியாலும் வரலாம் என்பர். அகப்பட்ட - அதற்குட்பட்ட.

### அடைநிலைக்கிளவி என்ற தனிச்சொல்

**அடைநிலைக் கிளவி, தாழிசைப் பின்னர்**
**நடைநவின் றொழுகும் ஆங்கென மொழிப. (1392)**

அடைநிலைக் கிளவி எனப்பட்ட தனிச்சொல் தாழிசைகளுக்குப் பிறகு, சுரிதகத்திற்கு முன்னால் இடம்பெறும். நடை நவின்று ஒழுகுதல் - இசையுடன் பாடிவரும்போது, அவற்றைக் கூட்டி, இனி முடிக்கப் பெறும் எனும் குறிப்பை நவின்று ஒழுகும். தனிச் சொல்லே யாயினும் அதன் சிறப்பைப் புலப்படுத்தியது இது. சொற்சீராய் நிற்கும்.

### அடக்கியல், வாரம், போக்கியல் என்னும் சுரிதகம்

**போக்கியல் வகையே வைப்பு எனப்படுமே. (1393)**

போக்கியல் என்பது கலிப்பாவின் முடிவில் வருவது. அகப்பாடலில் வரும் கருத்துக்களைத் தொகுத்து வைப்பதால் 'வைப்பு' எனவும் அழைக்கப்படும்.

அதனுடன் முடிவதால் போக்கு என்றும் சுரிந்து (சுருங்கி) முடிவதால் சுரிதகம் என்றும் முன்னைய கருத்துக்களை அடக்கியது எனும் பொருளில் அடக்கியல் என்றும் முன்னையதையே திரும்பப் பின்பற்றிச் சொல்வதால் வாரம் என்றும் இதற்குப் பெயர்கள் அமைந்தன என்பர்.

### சுரிதகத்தின் அடி வரையறை

**தரவியல் ஒத்தும், அதனகப்படுமே**
**புரைதீர் இறுதி நிலையுரைத் தன்றே. (1394)**

இறுதிச் சுரிதகம் தரவு எத்தனை அடிகளில் வந்துளதோ, அத்தனை அடிகளோடு ஒத்து, அந்த அளவே வரும். அல்லது அந்த அடி எண்ணிக்கைக்குக் குறைவான அடிகளால் வரும். குற்றம் இல்லாத முடிவு நிலை இவ்வாறு உரைக்கப்படும். புரை தீர் இறுதி நிலை – குற்றமில்லாத இறுதி நிலை. இது பெரிதும் தாழிசைகளின் பொருளை முடித்துவைக்கும் என்பர்.

அறிஞர் சிலர் ஒத்தாழிசைக் கலி அமைப்பில், இக்காலக் கீர்த்தனை வடிவை உள்ளுறுத்திக் காண்பர். தரவு – முதலில் வரும் பல்லவியும் அனுபல்லவியும் போல்வது, தாழிசைகள் சரணங்கள் போல்வன. இறுதிச் சரணம் சுரிதகம் போல் பாட்டுப் பொருளை முடித்து வைக்கும்.

### இருவகை ஒத்தாழிசைக் கலியுள் மற்றொன்று - தெய்வம் பரவுவது

**ஏனை ஒன்றே**
**தேவர்ப் பராஅய முன்னிலைக் கண்ணே. (1395)**

இரண்டாம் வகை ஒத்தாழிசைக்கலி, தேவரை – தெய்வங்களை முன்னிலையில் வைத்துப் பராவும் பொருளுடையதாகும்.

முன்பு கலிப்பா அகத்திணைக்கு உரிமையுடைத்து என்றார். முற்சுட்டிய ஒத்தாழிசைக்கலி அகம் பற்றியதே. இவ்விரண்டாம் வகை தேவபாணி எனச் சிறுப்பான்மை வரும் என்பதாம்.

### தேவர்ப்பரவுவதும் இருவகை

**அதுவே**
**வண்ணகம், ஒருபோகு என இரு வகைத்தே. (1396)**

தேவர்ப் பரவும் ஒத்தாழிசை இருவகைப்படும். வண்ணக ஒத்தாழிசை, ஒரு போகு ஒத்தாழிசை என்பன அவை.

### தேவர்ப்பரவுவதில் வண்ணக ஒத்தாழிசைக் கலிப்பா

**வண்ணகந் தானே,**
**தரவே, தாழிசை, எண்ணே, வாரம் என்று**
**அந்நால் வகையின் தோன்றும் என்ப. (1397)**

வண்ணக ஒத்தாழிசைக் கலிப்பா உறுப்புக்கள் நான்கு: தரவு, தாழிசை, எண் (அம்போதரங்கம்), வாரம் (சுரிதகம்) என்று வரும். எண் எனப்படும் இது நீரலைகள் போல வரவரச் சுருங்கிவரும் (அம்போதரங்கம் – நீரலைகள் சுருங்குதல்.)

### வண்ணக ஒத்தாழிசைக் கலியின் உறுப்புக்களுள் தரவு

**தரவே தானும்**
**நான்கும் ஆறும் எட்டும் என்ற**
**நேரடி பற்றிய நிலைமைத் தாகும். (1398)**

இவ் வண்ணகப் பாவிற்குத் தரவு நான்கு ஆறு எட்டு எனும் நாற்சீரடியாம் நேரடிகளைப் பெற்று வரும். இவ்வாறு வருதலை இரட்டைப்பட வருதல் என்பர்.

### அதன் தாழிசைகள்

**ஒத்து மூன்றாகும் ஒத்தாழிசையே. (1399)**

இதில் வரும் தாழிசையும் தரவை விடச் சுருங்கிய அடிகளால், அளவொத்து மூன்றாகி வரும். அளவாலும் பொருளாலும் ஓசையாலும் ஒத்துவருவது ஒத்தாழிசையாம்.

### அத்தாழிசைகளின் அடியளவு

**தரவின் சுருங்கித் தோன்றும் என்ப. (1400)**

இத் தாழிசைகள் முன்பு நான்கு ஆறு எட்டு எனப்பட்ட தரவடிகளில், சுருங்கி அவற்றைவிடக் குறைவான அடிகளால் அமையும்.

### சுரிதகத்தின் அடியளவு

**அடக்கியல் வாரம் தரவோடு ஒக்கும். (1401)**

அடக்கியலாகிய வாரம், முன்பு தரவுக்குக் கூறிய இலக்கணத்தை ஒத்ததாகும்.

## எண் அல்லது அம்போதரங்கம்

**முதல் தொடை பெருகிச் சுருங்குமன் எண்ணே. (1402)**

எண் – கலியுறுப்பு. முதலில் கொடுத்த உறுப்புப் பெரிதாகி, பின்னர் வருவன வரவரச் சுருங்குதல் 'எண்' உறுப்பாகும். இரண்டடியான் வருவன இரண்டு; ஓரடியான் வருவன நான்கு; இருசீரான் வருவன எட்டு; ஒருசீரான் வருவன பதினாறு, ஈரடியால் வருவன தலையெண்; ஓரடியால் வருவன இடையெண்; இருசீரால் வருவன கடைஎண்; ஒரு சீரால் வருவன சிற்றெண் எனப்படும்.

## தனிச் சொல் இன்றியமையாதது எண்கள் குறைந்து வரலாம்.

**எண் இடை ஒழிதல் ஏதம் இன்றே**
**சின்னம் அல்லாக் காலை யான. (1403)**

முன் சொன்ன 'எண்' (அம்போதரங்கம்) உறுப்புக்கள், இடையில் ஒவ்வொன்று இல்லாது போதலும் குற்றமின்று, சின்னம் என்ற ஒன்று இல்லாத நிலையில். சின்ன எண் அவசியம். இளம்பூரணர் சின்னம் தனிச்சொல் என்பர். அதுமட்டும் வர, ஏனைய மூவெண்ணும் வாராமையும் உண்டு. சின்ன எண் இன்றி, ஏனைய மூவகை எண்ணும் வருதலும் உண்டு. எட்டு என்ற எண் நான்காகியும் பதினாறு எண் எட்டாகியும் சுருங்குதலும் உண்டு. 'தனிச்சொல் இன்றி எண்ணிடையிட்டவழி ஒருபோகு எனப் பெயர்பெறும்' என்பர் இளம்பூரணர். ஆயினும் மூவகை எண்ணும் சின்னமும் பெற்றுவருதலே சிறப்பு. இவையின்றி வரினும் குற்றமின்று என்பது புறனடையே.

## தேவர்ப் பராயதில் மற்றொருவகை ஒரு போகு - கலிப்பாவின் வகை

**ஒருபோகு இயற்கையும் இருவகைத் தாகும். (1404)**

ஒத்தாழிசை இரண்டுவகை : அகநிலை ஒத்தாழிசை, தேவர்ப்பராயது.

தேவர்ப்பராயதும் இரண்டுவகை : வண்ணக ஒத்தாழிசை, ஒருபோகு. ஒரு உறுப்புப் போகியது ஒருபோகு.

ஒருபோகும் இருவகைத்தாகும் என்பது இந்நூற்பா.
கொச்சக ஒருபோகு. அம்போதரங்க ஒருபோகு.

**அவற்றின் பெயர் : கொச்சக ஒருபோகு, அம்போதரங்க ஒருபோகு**

**கொச்சக ஒருபோகு, அம்போதரங்கம் என்று**
**ஒப்ப நாடி உணர்தல் வேண்டும். (1405)**

கொச்சகம் முதலியன இல்லாது வருவது கொச்சக ஒருபோகு. எண்ணுறுப்பு ஒருவழி இன்றி வருவது அம்போதரங்க ஒருபோகு. பொருத்தமுற ஆராய்ந்து இவ் வகைகளை அறிதல் வேண்டும். கொச்சகம் இன்மையால் ஒரு போகு ஆவதால், இப்பெயர் வந்ததாம்.

**கொச்சக ஒருபோகு**

**தரவு இன்றாகித் தாழிசை பெற்றும்,**
**தாழிசை இன்றித் தரவுடைத் தாகியும்,**
**எண் இடைஇட்டுச் சின்னங் குன்றியும்,**
**அடக்கியல் இன்றி அடிநிமிர்ந்து ஒழுகியும்,**
**யாப்பினும் பொருளினும் வேற்றுமையுடையது**
**கொச்சக ஒருபோகு ஆகும் என்ப. (1406)**

ஏதேனும் ஓர் உறுப்புப் போகியது, இல்லாதது கொச்சக ஒரு போகு, அதன் இலக்கணம் வருமாறு : தரவு, தாழிசை, எண், தனிச்சொல், சுரிதகம் என ஐந்து கலியுறுப்புக்கள் இதுகாறும் கூறப்பட்டன. 'சின்னம்' என்பதைத் தனிச்சொல் என்று இளம்பூரணரும் ஓரசை, ஈரசை எண்கள் என பேராசிரியரும் கொள்வர். இவற்றுள் தரவு இன்றித் தாழிசை பெற்றுவருதல்; தாழிசையின்றித் தரவு பெற்று வருதல்; எண் உறுப்புக்கள் இடையிடையே இல்லாமல் சிற்றெண் என்னும் சின்னம் உறுப்புக் குறைந்து வருதல்; (சின்னம் தனிச் சொல் என்றும் கூறுவர்) அடக்கியலாகிய சுரிதகமின்றித் தரவு மட்டுமே அடிபலவாய்க் கூடிவருதல். இவ்வாறு யாப்பினும் பொருளினும் பலவகை வேறுபாடுகள் உடையது கொச்சக ஒரு போகு ஆகும். பாட்டு வடிவமும் பல வகை; பொருளும் பலவகை.

சங்க முற்காலத்தில் கலிப்பா பெரும் செல்வாக்குப் பெற்றிருந்தது. மக்களிடையே ஆடல் பாடல்களுக்குப் பயன்பட்டது. இசைத்தன்மை மிக்கிருந்தது. நாட்டுப்புற வடிவமே நூறுவகை இலக்கிய வடிவமாகியது. பிற்காலத்து விருத்தவகை – நூறுவிதச் சந்த வளர்ச்சி பெற்றதற்கு, இக் கலிப் பாவே கால்கோளிட்டது. பரிபாடலும் வரிப் பாடலும் இதனை ஒத்தனவே. இவற்றை மட்டும் தனியே ஆராய்ந்து, தமிழ் யாப்பு வடிவத் தோற்றமும் வளர்ச்சியும் – மற்றும் அதன் இசை, நாடகத் தொடர்புகளும் கண்டறியப்படலாம்.

### அதன் அடி வரையறை

**ஒருபான் சிறுமை இரட்டி அதன் உயர்பே. (1407)**

முன் நூற்பாவில், 'அடக்கியல் (சுரிதகம்) இன்றி அடி நிமிர்ந்து ஒழுகிய' ஒரு போகு என ஒன்று சொல்லப்பட்டது. இதில் ஏனைய உறுப்புகளுக்குமின்றி, தரவே நீள்வதாகத் தோற்றுகிறது. இதன் சிற்றெல்லை ஒருபான் சிறுமை – பத்தடிச் சிறுமை. உயர்பு – பேரெல்லை அதன் இரட்டி ஒருபதடியாகும்.

### அம்போதரங்க ஒருபோகின் அடி வரையறை

**அம்போதரங்கம் அறுபதிற்றடித்தே;**
**செம்பால் வாரம் சிறுமைக்கு எல்லை. (1408)**

அம்போதரங்க ஒருபோகு கலிப்பாவிற்குப் பேரெல்லை அறுபதடி. சிற்றெல்லை செம்பால் – செம்பாதி, சரிபாதி. செம்பால் வாரம் – அதன் பகுதியாகிய பதினைந்தடி. வாரம் – காற்கூறு என்பர். அதாவது அறுபதடியிற் பாதியிற் பாதியாகும்.

### அம்போதரங்க ஒருபோகின் உறுப்புக்கள்

**எருத்தே, கொச்சகம், அராகம், சிற்றெண்,**
**அடக்கியல், வாரமொடு அந்நிலைக்கு உரித்தே. (1409)**

அம்போதரங்க ஒருபோகின் உறுப்புக்கள்: எருத்து (தரவு), கொச்சகம் (முன்னர் இலக்கணம் கூறப்பட்டது.) அராகம் (முன்னர்க் கூறப்பட்டது). சிற்றெண், அடக்கியல் ஆகிய வாரம் என்பனவாம்.

கொச்சகம் பெரியதும் வெண்பா வடிவாயிருக்கும். அவை தம்முள் ஒப்ப அடுக்கிக் கூறப்படும். அராகம் – இடையறாது கடுகிச் செல்லும் நடையுடையதாதல். குற்றெழுத்துப் பயின்று வரும் நடையது. சிற்றெண் – ஓரசை, ஈரசை உறுப்புக்கள். இவை பரிபாடலிலும் வரும் உறுப்புக்கள். இவை எண்ணிய முறைப்படி வருவன அம்போதரங்க ஒருபோகு. அறுபதடியிற் குறைந்தும் முறை பிறழ்ந்தும் வருவனவும் அறுபதடியில் மிக்கு வருவனவும் பரிபாடலாகும் என்பர்.

### கலிவெண்பா

**ஒருபொருள் நுதலிய வெள்ளடி இயலால்**
**திரிபின்றி வருவது கலிவெண் பாட்டே. (1410)**

இதுவரை கூறப்பட்டவை அனைத்தும் ஒத்தாழிசைக் கலியின் இலக்கணம். இது கலிவெண்பாட்டின் இலக்கணம். தொடக்கத்திலிருந்து முடிவு வரை ஒரே பொருளை நுதலுதல் வேண்டும். வெண்டளை பெற்ற வெள்ளடியால் பாடப்பட வேண்டும். இவற்றில் திரிபு சிறிதுமின்றி அமைவது கலிவெண்பாட்டாகும். (இவற்றுள் முழுவதும் வெண்டளையான் வந்தன வெண்கலிப்பா என்றும் அயல்தளையால் (கலித்தளையால்) வந்தனைக் கலிவெண்பா என்றும் இளம்பூரணர் வேறுபடுத்துவர். இதனை மாற்றி வெவ்வேறு விதமாக உரையாசிரியர்கள் கூறியுள்ளனர்.)

இசைப்பாடல்களுடனும் கூத்துடனும் நாடோடிப் பாடல்களுடனும் கலிப்பா, வரிப்பா, பரிபா போல்பவை நெருங்கிய தொடர்புடையன. அவை பல வாய்மொழி வடிவாய் இருந்து வரிவடிவாய் மாறின. நாட்டுப்புற வழக்காயிருந்து ஏட்டுவழக்கில் ஏறின. மக்கள் பாடல்களாய் இருந்து இலக்கிய வடிவம் பெற்றன.

இவ்வாறு எண்ணுதற்குப் பேராசிரியர் தரும் சிற்சில குறிப்புக்களை மட்டும் இங்குத் தொட்டுக் காட்டுதல் மேலாய்வார்க்குத் தூண்டுகோலாகும். "... களம்பாடு பொருநர் கட்டுரையும் தச்சுவினைமாக்கள் சொற்றொடரும் ஏற்று, இக்காலத்து உரை நிகழ்ந்தனவும், ஓலைப் பாயிரமும் முதலாயினவெல்லாம் கொச்சகமாகற்கு இழுக்கென்னையெனின்...." (1406) இப்பகுதிக்கு வெள்ளைவாரணர் தரும் விளக்கம் வருமாறு: "ஏர்க்களம் பாடும் பொருநர் வாழ்த்திக்கூறும் கட்டுரையினையும் மரங்கொல் தச்சர் முதலிய தொழில் செய்வோர் தம் தொழிலின் கடுமையினைக் குறைத்துக்கொள்ளும் நிலையிற் கூறும் சொற்றொடர்களையும் ஏற்று இக்காலத்தார் (பேராசிரியர் காலத்தார்) இசைபடக் கூறும் உரைத்தொடர்களும் ஒருவர் ஒருவர்க்குக் கடிதம் எழுதும் முறையில் அமைந்த சீட்டு கவிகளும் முதலியனவெல்லாம் கொச்சகம் ஆம் எனக் கொண்டால் வரும் குற்றம் யாது? என்பது இங்குத் தோன்றும் வினாவாகும்". இவற்றை உரைவகை என அடக்கலாம் என்பது பேராசிரியர் முடிபு.

கலிவெண்பாட்டு நூற்பா உரையில் பேராசிரியர் கூறும் சில உரைப்பகுதிகளும் இங்கு நினைவுபடுத்த வேண்டியனவாகும். "கந்திருவ மார்க்கத்து வரியும் சிற்றிசையும் பேரிசையும் முதலாயின் போலச் செந்துறைப் பகுதிக்கே உரியவாகி வருவனவும், கூத்த நூலுள் வெண்டுறையும் அராகத்திற்கேயுரியவாகி வருவனவும் ஈண்டுக் கூறிய செய்யுள் போல வேறு பாடப்பெறும் வழக்கியல் என்பது கருத்து. இக் கருத்தானே அவற்றை

இப்பொழுதும் இசைப்பாவென வேறுபெயர் கொடுத்து வழங்குப. இனி யாப்பிலக்கணத்திற்கொப்பவே இசை நூலுட் சொல்லப்பட்ட செய்யுளும் உள. என்னை?

**வெண்பா இயலான் விரவுஉறுப்பு இன்றித்**
**தன்பா வகையொடு பொருந்திய பொருளே**
**ஒன்றுவிளைந்து இற்ற இறுதித் தாகும்**

என்றவழி, விரவுறுப்பின்றி என வேண்டா கூறி.. என இசைப் பாடல்களோடு யாப்புப் பாக்களுக்குரிய உறவும் தொடர்பும் பல இடங்களில் இவ்வாறு விளக்கப்படுகின்றன.

### கொச்சகக் கலி

**தரவும் போக்கும் பாட்டிடை மிடைந்தும்,**
**ஐஞ்சீர் அடுக்கியும் ஆறுமெய் பெற்றும்,**
**வெண்பா இயலான் வெளிப்படத் தோன்றும்**
**பாநிலை வகையே கொச்சகக்கலி என**
**நூல் நவில் புலவர் நுவன்று அறைந்தனரே. (1411)**

கொச்சகக்கலி இலக்கணத்தை, இலக்கண நூல் வல்லார் நுவன்று அறைந்துள்ளனர் (வரையறைப்படுத்திச் சொல்லியுள்ளனர்.) தரவும் சுரிதகமும் முதலும் முடிவுமாகாது இடையிடையே கலந்து வரும்; கலவாதும் வரும்.

குறளடி, சிந்தடி, அளவடி, நெடிலடி, கழிநெடிலடி எனும் ஐந்சீரடி பலவும் கலந்து வரும்.

ஆறு மெய் பெற்றும் – தரவு, தாழிசை, தனிச்சொல் சுரிதகம் சொற்சீரடி முடுகியலடி (அல்லது அராகம்) – இவை ஆறும் இடம்பெறும். வெண்பா இயல்பே பாட்டு முழுவதும் நிரம்பத் தோன்றும். இக் கொச்சகக் கலி வெண்பா யாப்பு வகை மிக்கு வருவது.

### உறழ்கலி

**கூற்றும் மாற்றமும் இடைஇடை மிடைந்தும்**
**போக்கின்றாகல் உறழ்கலிக்கு இயல்பே. (1412)**

உறழ்கலி – எதிரெதிரே உறழ்ந்து பேசி உரையாடும் கலி. ஒருவர் கூற்றும் அதற்கு மற்றொருவர் கூறும் மாற்றமும் இடையிடையே மிடைந்து – கலந்து வரும். இறுதியில் போக்கு – சுரிதகம் இல்லாமல், யாரேனும் ஒருவர் கூற்றுடன் முடியும்.

இதனைக் கொச்சகக்கலியின் பின்னே வைத்ததால், இது அதன் உறுப்புக்கள் பலவற்றையும் பெற்றுவரும் என்றும் பொருள் வேறுபாடும் வரலாற்றுவழி மரபும் கருதியே உறழ்கலி என வேறு வகையாகப் பிரித்து ஓதப்பட்டது என்றும் உரையாசிரியர்கள் விளக்குகின்றனர்.

## அளவியல்

### அடிவரையறை - ஆசிரியப்பாவின் அடியளவு

**ஆசிரியப் பாட்டின் அளவிற்கு எல்லை**
**ஆயிரம் ஆகும்; இழிபு மூன்றடியே. (1413)**

ஆசிரியப் பாட்டின் அடிவரையறை: இழிபு - சிற்றெல்லை: மூன்றடி. எல்லை (பேரெல்லை); ஆயிரம்அடி. இடைப்பட எத்தனை அடியானும் வரும், 'ஆசிரிய நடைத்தே வஞ்சி' என்றதனால் வஞ்சிப்பாவிற்கும் இவ்வரையறை பொருந்துமென்பார் இளம்பூரணர்.

### வெண்பாவின் அடி அளவு வரையறை

**நெடுவெண் பாட்டே முந்நால் அடித்தே;**
**குறுவெண் பாட்டின் அளவு எழுசீரே. (1414)**

பனிரண்டு அடிகொண்டது நெடுவெண்பாட்டு. இது பஃறொடை வெண்பா எனவும் படும். குறுவெண்பாட்டு முதலடி நான்கு சீரும் இரண்டாமடி முச்சீருமாய் ஏழு சீர்களாலான இரண்டடிக் குறள்வெண்பாப் பாட்டாகும். இவற்றுக்கு இடைப்பட்டன சிலவுள. நான்கடியாகிய அளவியல் வெண்பாட்டே பெருவழக்குடையது. மூன்றடியால் வருவன சிந்தியல் வெண்பா எனப்பட்டன.

### அங்கதப்பாட்டின் அடியளவு வரையறை

**அங்கதப் பாட்டு அளவு அவற்றொடு ஒக்கும். (1415)**

அங்கதச் செய்யுள் எனப்படும் வெண்பாவிற்குச் சிற்றெல்லை முற்கூறியவாறு இரண்டடி; பேரெல்லை பனிரண்டடி. அவற்றொடு முன் நூற்பாவில் கூறிய வெண்பா அடி அளவுடன்.

### அடி அளவு வரையறை இல்லாதன

**கலிவெண் பாட்டே, கைக்கிளைச் செய்யுள்,**
**புறநிலை, வாயுறை, செவியறிவு என்றிவை**
**தொகுநிலை அளவின் அடியில என்ப. (1416)**

கலிவெண்பாட்டு, கைக்கிளைப் பொருளில் பாடப்பெறும் மருட்பா, செவியுறை வாயுறை புறநிலை வாழ்த்துக்கள் – என்னும் இவை தொகுத்துக் கூறும் தன்மையால் அடி அளவு வரையறுக்கப்படா. பொருள் முடியுங்காறும் வேண்டிய அளவு பாடப்பெறும். இவை வெண்பா வகையின என்பதால் 'தொகுநிலை மரபின்' எனச் சேர்த்துக் கூறப்பட்டன.

**புறநிலை வாழ்த்து முதலியவற்றின் வடிவமும் அடியளவும்**

**புறநிலை, வாயுறை, செவியறிவுறூஉஎனத்**
**திறநிலை மூன்றும் திண்ணிதின் தெரியின்**
**வெண்பா இயலினும் ஆசிரிய இயலினும்**
**பண்புற முடியும் பாவின என்ப. (1417)**

புறநிலை வாழ்த்து, வாயுறை வாழ்த்து, செவியறிவுறூஉ – எனும் வாழ்த்துவகை மூன்றும், நன்கு ஆராய்ந்தால், வெண்பா இயல்புடனும் ஆசிரிய இயல்புடனும் இரண்டும் கலந்த மருட்பா இயல்புடனும் சிறப்புற முடியும் இயல்பின. இவற்றின் அடி வரையறை முற்கூறிய பாவகைகளைப் போன்றதே என்பது குறிப்பு.

**பரிபாடலின் அடி அளவு**

**பரிபாட்டெல்லை**
**நாலீர் ஐம்பது உயர்புஅடியாக**
**ஐ ஐந்து ஆகும் இழிபு அடிக்கு எல்லை. (1418)**

பரிபாடலுக்கு நானூறு அடி பேரெல்லை; இருபத்தைந்து அடி சிற்றெல்லை, இடையே எத்தனை அடியானும் வரும்.

**அடிஅளவு வரையறை உடையன இவை**

**அளவியல் வகையே அனைவகைப்படுமே. (1419)**

பாட்டுக்களின் அடி வரையறையாகிய அளவியல், முற்கூறிய அவ்விதமான வகைப்படும். எனவே இனி அடிவரையறை இல்லாதனவற்றைக் கூறுவதாகக் குறிப்பது இது.

**அளவியல் இல்லாதன**

**அடி வரையறை இல்லாதன இனி வருவன**

**எழுநிலத் தெழுந்த செய்யுள் தெரியின்**
**அடிவரை இல்லன ஆறுஎன மொழிப. (1420)**

முன்பு எழுவகைப்பட்ட யாப்பு என்றார்; அவையே இங்கு எழுநிலத்து எழுந்த செய்யுள் எனப்பட்டன. ஏழு அடிப்படை இலக்கிய வகைகள் இவை. இவற்றுள் இதுகாறும் கூறிய பாட்டு நீங்கலாக, அடி வரையறை இல்லாதன ஆறு வகைகள். உரை, நூல், வாய்மொழி, பிசி, அங்கதம், முதுசொல் என்பன.

### அடிவரையில்லாத யாப்பு வகைகள்
### அடிப்படையான இலக்கிய வகைகள்

**அவை தாம்**
**நூலினான, உரையினான,**
**நொடியொடு புணர்ந்த பிசியினான,**
**ஏது நுதலிய முதுமொழியான,**
**மறைமொழி கிளந்த மந்திரத்தான,**
**கூற்றிடை வைத்த குறிப்பினான. (1421)**

அடி வரையறை இல்லாத இலக்கிய வகை ஆறு: நூல், உரை, புனைந்துரையுடன் கூடிய பிசி, ஒன்றனைக் காரணம் காட்டி நிறுவவரும் முதுமொழி (பட்டறிவு மிகுந்த மொழி), மறைமொழியாகக் கிளக்கப்பட்ட மந்திரம், கூற்றிடை வைத்த குறிப்பு (பேச்சினிடையே வைக்கப்பட்ட உட்குறிப்பு) என்பன அவை. யாப்பு வகை ஏழு எனக் கூறிய நூற்பாவுடன் ஒப்பு நோக்குக. பாட்டு, உரை, நூல், வாய்மொழி (மந்திரம், மறைமொழி), பிசி, அங்கதம் (கூற்றிடை வைத்த குறிப்பு), முதுசொல் (முதுமொழி, பழமொழி) என அங்குக் கூறப்பட்டன. பழிகரப்பு அங்கதமே இங்குக் கூறப்படுவது.

பிசி விடுகதை, புதிர் என வழங்கும் நொடிதல் புனைந்துரைத்தல், பிசிக்குக் கற்பனை வேண்டும். முதுமொழி - அறிவு முதிர்ச்சியே இதிற் சுட்டப்படுவது. நெடுங்காலமாக வழங்குவதால் பழமொழியுமாம். இவை இன்றும் உலக வழக்கின. மந்திரமும் அங்கதமும் உலக வழக்கு இலக்கிய வழக்கு இரண்டிற்கும் பொது வென்பர் உரையாசிரியர். உரையும் அவ்வாறே இருவகை வழக்கிலும் காணப்பட்டது.

### அவற்றுள் நூல் யாப்பின் இலக்கணம்

**அவற்றுள்**
**நூல் எனப்படுவது நுவலுங்காலை,**
**முதலும் முடிவும் மாறுகோள் இன்றித்**

**தொகையினும் வகையினும் பொருண்மை காட்டி**
**உள் நின்று அகன்ற உரையொடு பொருந்தி**
**நுண்ணிதின் விளக்கல் அதுவதன் பண்பே. (1422)**

நூலென்பது முன்பு இலக்கண நூலையே குறித்தது. இன்று ஆய்வேடுகளுக்கும் பொருந்தும். பொதுவாகச் செய்யுள் வடிவ நூல்களுக்கும் பிற நூல்களுக்கும் பொருத்திப் பார்க்கலாம். நுவலுங்காலை – விளக்கும் பொழுது. முதலும் முடிவும் மாறுகோள் இன்றி – முன் தொடங்கிய கருத்து, முடிக்குமிடத்தில் மாறுபடாமல், அதவாது ஒன்றைப் பற்றி எழுதும் போது முன்னும் பின்னும் மாறுபட்ட கருத்து வந்துவிடாமல் தான் சொன்னதற்கே மாறானதைப் பின்பு சொல்லிவிடாமல். தொகையினும் வகையினும் பொருண்மைகாட்டி – சொல்லவந்த பொருளை முன்பு தொகுத்துச் சொல்லி, அவ்வாறு சொல்லியபடி நிரல்பட வகுத்துக்காடி உள்நின்று அகன்ற உரையொடு புணர்ந்து – அதனுள் நின்று விரிக்கும்படியான விரிந்து பரந்த கருத்தாழத்துடன் கூடி. 'சொல்லாத பொருண்மை எல்லாம் விரிக்கவேண்டிய வழி அதற்கெல்லாம் இடனுண்டாதல்' என்பர் இளம்பூரணர். அதாவது தன்கண் அடக்கிய பொருள்களை விரித்துரைத்தற்கு ஏற்றதாக இருக்க வேண்டும். பலவகை உரை தோன்றி விரியுமாறு என இலக்கண நூலுக்குக் கூறலாம். நுண்ணிதின் விளக்கல் – எதனையும் நுட்பமாக விளக்குதல். இவை நூலின் பண்புகளாம்.

## இலக்கண நூலின் நான்கு உட்பிரிவுகள்

**அதுவே தானும் ஒருநால் வகைத்தே. (1423)**

மேலே சொன்ன நூல் நான்கு வகைப்படும்.

## அவை நான்கின் பெயரும் இயல்பும்

**ஒரு பொருள் நுதலிய சூத்திரத் தானும்,**
**இனமொழி கிளந்த ஓத்தினானும்,**
**பொதுமொழி கிளந்த படலத்தானும்,**
**மூன்று உறுப்பு அடக்கிய பிண்டத்தானும் என்று**
**ஆங்கு அன்னமரபின் இயலும் என்ப. (1424)**

1. ஒரு பொருளையே விளக்கும் சூத்திரம் 2. ஓர் இனம் எனத்தக்க பொருள்களைத் தொகுத்த (நூற்பாக்களை) மொழிகளையுடையது ஒத்த அல்லது இயல் 3. அவ் வினமொழிகளாலான படலம் அல்லது அதிகாரம் 4. மேலே கூறிய

சூத்திரம், இயல், படலம் மூன்றையும் தனது உறுப்பாக அடக்கிய மூமுமை பிண்டம் அல்லது நூல். இது போன்ற மரபுப்படி வழங்குவது நூல் எனப்படும்.

### சூத்திரம்

**அவற்றுள்,**
**சூத்திரந் தானே,**
**ஆடி நிழலின் அறியத் தோன்றி**
**நாடுதல் இன்றிப் பொருள்நனி விளங்க**
**யாப்பினுள் தோன்ற யாத்து அமைப்பதுவே. (1425)**

ஆடி நிழல் - கண்ணாடியில் தோன்றும் நிழலுருவம் - பெரிய உருவத்தையும் சிறிய கண்ணாடி தன்னுள் அடங்கிக்காட்டும். பளிங்குபோல் தெளிவாகக் காட்டும். சூத்திரமும் கண்ணாடி நிழல் போல, அதனுள் அடங்கிய கருத்தைத் தெளிவாக அறியும்படி காட்டும். நாடுதல் இன்றிப் பொருள் நனி விளங்க - மிக ஆராய்ந்து உணர வேண்டாமல், படித்த அளவிலேயே அதன் பொருள் மிக நன்றாக விளங்கும்படி; யாப்பினுள் தோன்ற - யாத்துள்ள அமைப்பிலே வெளிப்படத் தோன்ற யாத்து அமைப்பது சூத்திரம்.

### ஒத்து

**நேரின மணியை நிரல்பட வைத்தாங்கு**
**ஓரினப் பொருளை ஒருவழி வைப்பது**
**ஓத்து என மொழிப உயர்மொழிப் புலவர். (1426)**

நேர் இன மணியை - ஒரே இனமான - ஒத்த இனத்தவாகிய மணிகளை. நிரல்பட வைத்தாங்கு - வரிசைப்படுத்தி வைத்தாற்போல, ஓர் இனப் பொருளை ஒருவழி வைப்பது ஒன்றுபட்ட கருத்துள்ளவற்றை ஒருசேர ஓரிடத்தே வைப்பது ஓத்து - இயல். ஓர் இயலில் ஓர் இனமான கருத்துக்களே நிரல்படக் கூறப்படும்.

### படலம்

**ஒரு நெறி இன்றி விரவிய பொருளால்**
**பொது மொழி தொடரின் அது படலமாகும். (1427)**

ஒரு நெறி இன்றி - ஓரினமாகிய நெறி இன்றி. விரவிய பொருளால் - பல நெறிப்பட்டுக் கலந்த பொருள்களால் அதாவது பல இயல்களால். பொதுமொழி தொடரின் - எழுத்ததிகாரம் என்பது போலப் பொதுவான கருத்துக்குரிய மொழி தொடர்ந்து அமையுமாயின். படலம் - அதிகாரம் எனப்படும்.

**பிண்டம்**

**மூன்று உறுப்பு அடக்கிய தன்மைத்தாயின்**
**தோன்று மொழிப் புலவர் அது பிண்டம் என்ப. (1428)**

மேலே கூறிய சூத்திரம் ஓத்து படலம் எனும் மூன்று உறுப்பையும் அடக்கிய தன்மையுடையதை, புகழ் பெற்ற புலவர்கள், பிண்டம் என அழைத்தனர். பிண்டம் என்பது முழுநூலாகும்.

**உரையாப்பு அல்லது உரைச்செய்யுள்**
**உரையின் வகை**

**பாட்டிடை வைத்த குறிப்பினானும்,**
**பாவின்று எழுந்த கிளவியானும்,**
**பொருள் மரபு இல்லாப் பொய்ம்மொழியானும்,**
**பொருளொடு புணர்ந்த நகைமொழியானும்,**
**உரை வகை நடையே நான்கு என மொழிப. (1429)**

'உரை' என்பது ஓர் இலக்கிய வகை – ஏழு யாப்பினுள் ஒன்று. அது நான்கு வகைப்படும்.

1. பாட்டிடை வைத்த குறிப்பானும் – பாட்டினிடையே வைக்கப்படும் உரைக் குறிப்புக்கள். சிலப்பதிகாரம் உரையிடையிட்ட பாட்டுடைச் செய்யுள் எனப்படும். அவ்வாறு இடையிடையே வரும் உரைக்குறிப்பு, முன்னும் பின்னுமுள்ள பாட்டுப் பொருளைத் தொடர்புபடுத்தும். இதனை உரைச்செய்யுள், உரையாப்பு என்றும் கூறுவர். கலித்தொகையிலும் இவ்வுரைக் குறிப்பு வரும்.

'பல சொல் தொடர்ந்து பொருள் காட்டுவனவற்றுள் ஓசை தழீஇயவற்றைப் பாட்டென்றார்; ஓசையின்றிச் செய்யுட் தன்மைத்தாய் வருவது நூலெனப்பட்டது; அவ்வகையுமன்றி வரும் உரைத்திறன் ஈண்டு உரையெனப்பட்டது' என்பது இளம்பூரணம்.

2. பா இன்று எழுந்த கிளவி – பாக்கள் அல்லாது தோன்றும் சொல்வகை. இது உலகவழக்கில் நிகழும் உரையாடல் என்பது இளம்பூரணர் கருத்து. பாட்டின்றிச் சூத்திரத்திற்குப் பொருள் எழுதுவன போல்வன என்பது பேராசிரியர் கருத்து.

3. பொருள் மரபு இல்லாப் பொய்ம்மொழி – ஒரு பொருள் கருதாது, குறிப்பிட்ட பயனெதுவும் இல்லாமல், பொழுதுபோக்கிற்காகக் கூறப்படும்

கட்டுக்கதைகள். இன்று பாட்டி கதைகள் எனவும், நாட்டுப்புறக் கதைகள் எனவும் வழங்குவன. நெடுநல்வாடையில், தலைவியை ஆற்றுவிக்கச் செவிலியர் கதைபல கூறினராம். 'செம்முகச் செவிலியர், கைம்மிகக் குழீஇ, குறியவும் நெடியவும் உரைபல பயிற்றி' எனவரும். குறியவும் – குட்டிக்கதைகள் நெடியவும் – நீண்ட கதைகள். இவை 'உரை பல' எனக் கூறப்பட்டுள்ளதை ஓர்க. உலகக் கதைத் தோற்றத்திற்கு வித்திட்டவை இவை.

4. பொருளொடு புணர்ந்த நகைமொழி – பஞ்சதந்திரக் கதைகள், தெனாலிராமன் கதைகள், தமிழில் விநோதரச மஞ்சரியில் தொகுக்கப்பட்ட கதைகள், தனிப் பாடல்களில் வரும் கதைகள். இவை நகைச்சுவை பொருந்தி, ஒரு நீதியை அல்லது வாழ்வியல் நெறியைப் போதிக்கும். அதுதான் பொருளோடு புணர்தல். முன்னது வெறும் பொழுதுபோக்குக்காக. அது ஒரு கருத்தினைப் புகட்டுவதற்காக.

உரைவகைநடை இவை. வாயால் உரைக்கப்படுவன. முன்னர் பாட்டுக்கு இடையே உரைக்குறிப்பு என்பது நாடகக்காப்பியங்களிலும் கூத்துக்களிலும் இடையே தொடர்ச்சிக்காக உரைக்கப்பட்டனவே. பா இன்று எழுந்த கிளவியான உரையாடல்களும் நாடகங்களிலும் ஆடல்களிலும் வந்தனவே. பாட்டுக்கு உரையென்பதும் வாய்மொழியாக வழிவழியாய் உரைக்கப்பட்டு, ஒருவர் கேட்டு மற்றவர்க்குச் சொல்லி வந்தனவே.

### இரண்டு வகை உரைகள் - கதைவகைகள்

**அதுவே தானும் இருவகைத் தாகும். (1430)**

அவ் உரை என்பது இருவகைப்படும். அவற்றுள் முன்னவை இரண்டும் ஒருவகை. பின்னவை இரண்டும் கதைவகை. அக்கதைவகை மகளிர்க்கு உரைப்பனவும் மைந்தர்க்கு உரைப்பனவும் என இருவகைப்படும். இது இளம்பூரணர் கருத்து.

### இருவகைக் கதைகளையும் கூறுதற்கு உரியார்

**ஒன்றே மற்றும் செவிலிக்கு உரித்தே**
**ஒன்றே யார்க்கும் வரை நிலை இன்றே. (1431)**

மகளிர்க்கு உரித்தென்றது செவிலிக்குரியது. அவை பொழுதுபோக்குக் கதைகள். அக் காலத்தே பிரிந்துறைந்த மகளிரிடையேயும் வீட்டிலிருந்த மகளிரிடையேயும் பெருவழக்கினவாய் இருந்தன. மற்றொன்று இளையோர்க்குக்

கூறப்பட்ட, அவரை ஈர்க்க நகைச்சுவையுடன் கூறப்பட்ட நீதிக்கதைகள். இது மைந்தர்க்கு மட்டுமன்றி, இன்னார்க்கு என்று வரையறைப்படாது எல்லோர்க்கும் உரியதுமாகும்.

**பிசி - (விடுகதை)**

**ஒப்பொடு புணர்ந்த உவமத் தானும்**
**தோன்றுவது கிளந்த துணிவி னானும்**
**என்று இருவகைத்தே பிசிவகை நிலையே (1432)**

பிசி என்பது விடுகதை. இதற்குக் கற்பனைத்திறன் மிகுதியாக வேண்டும். 'ஒப்பொடு புணர்ந்த உவமை' கூறிய புதிர் போடலாம். அதை விடுவிக்க வேண்டுமெனில் ஒப்புமைத்தன்மை தெரிய வேண்டும். 'தோன்றுவது கிளந்த துணிவு' – ஒன்றைச் சொன்ன அளவில், அதனோடு தொடர்புடையது தோன்ற வேண்டும். 'கத்திபோல் இலையிருக்கும், கவரிமான் பூப்பூக்கும்' என்றது வேப்பிலை. இது ஒப்பொடு புணர்ந்த உவமை. அதன் தொடர்ச்சியாகத் தின்னப் பழம் பழுக்கும் தின்னாத காய்காய்க்கும் – இது வேப்பம் பழம். தோன்றுவது கிளந்த துணிவு இது. இதில் உவமையில்லை. விடுகதை நாட்டுப்புற மக்கள் இலக்கியம். இதில் புதிர்போடவும் விடுவிக்கவும் இலக்கியக் கற்பனைத் திறன், அதற்கு அடித் தளமான உலக அனுபவம், பட்டறிவு, கூர்மை, உடனே நுனித்தறியும் துடிப்பு எல்லாம் வேண்டும். பழமொழியும் இலக்கியமாவதை நுண்ணிதாய் அறிதல் வேண்டும்.

**முதுமொழி**

**நுண்மையும் சுருக்கமும் ஒளியுடைமையும்**
**மென்மையும் என்று இவை விளங்கத் தோன்றிக்**
**குறித்த பொருளை முடித்தற்கு வரூஉம்**
**ஏது நுதலிய முதுமொழி என்ப. (1433)**

முதுமொழி – அறிவு பொதிந்தது; பட்டறிவுடையது என்று பொருள். ஏது நுதலியது என்பது, எப்பொழுதும் பழமொழியை காரணம் காட்டி, சொல்லவந்ததை நிறுவவே பயன்படுத்துவதைப் பற்றியது. வஞ்சகர்க்கு இடம் கொடுத்தால் தம்மை ஏமாற்றி, நல்லது செய்த நம்மையும் திண்டாட வைப்பர். 'நரிக்கு இடம் கொடுத்தால், கிடைக்கு இரண்டு குட்டி கேட்கும்' என்பது போலத்தான், தீயவர்களுக்கு நன்மை செய்வது. இதையே 'குறித்த பொருளை முடித்தற்கு வரும் ஏது (காரணம்) நுதலும் பழமொழி' என்றார். பழுத்த பெரியவர்கள் தம் நுண்ணறிவு,

சொல்வன்மை, பட்டறிவு, உயர்ந்த நோக்கம் ஆகிய எல்லாவற்றையும் திரட்டிக் கூறியவை பழமொழிகள். நுண்மை – நுட்பமுடைமை. சுருக்கம் – ஓரடி ஈரடியில் அரிய கருத்தை வெளிப்படுத்தல். ஒளியுடைமை – பளிச்சென்ற அறிவொளியின் வீச்சு. மென்மை – மிகு எளிமை. இவையாவும் பழமொழி இலக்கியத்தில் விளங்கித் தோன்றும்.

### தமிழ் மந்திரம்

**நிறைமொழி மாந்தர் ஆணையிற் கிளந்த**
**மறைமொழி தானே மந்திரம் என்ப. (1434)**

மந்திரம் – பயனை விளைவிக்கும் சொல். சிலர் 'மந்திரம்' என்று மாயவித்தை செய்வதையும் வடமொழியார் தம் மொழிவழி ஓதுவனவே மந்திரம் என்பதையும் மறுப்பது இது. மந்திரத்திற்கு வாய்மொழி எனவும் தொல்லாசான் பெயர் குறிப்பார். இதைச் சொல்லுதற்குரியார் யார்? அந்தணர்களும் மந்திரவாதிகளுமே என எண்ணும் மக்களும் இருந்த காலத்தில், நிறைமொழி மாந்தர் கூறுதற்குரியார் என்றார். 'நிறைமொழி மாந்தரென்பது, சொல்லிய சொல்லின் பொருண்மை யாண்டும் குறைவின்றிப் பயக்கச் சொல்லும் ஆற்றலுடையராவார்' என்பர் பேராசிரியர். ஆணையிற் கிளக்கும் ஆற்றலுள்ள தமது ஆணையாற் கூறும் சொற்கள். தம் பதிகங்களைப் பாடுவார் 'அரசாள்வர் ஆணை நமதே' என்பார் திருஞானசம்பந்தர். மறைமொழி – பொருள் மறைந்திருக்கும் மொழி. கருத்துப் பொதிந்திருப்பது. உள்ளுள்ள கருத்தைத் தேடிக் கண்டுகொள்ளுமாறு சொல்லப்படுவதே மறைமொழி. மறைந்திருப்பதைக் கண்டுகொள்ள வேண்டும்; தேடவேண்டும். திருக்குறளை மறை என்றது, அதனுட்பொருள் தேடத்தேடப் புதிது புதிதாய் வருதல் பற்றியே. திருமூலரின் நூல் திருமந்திரம் ஆவதை நினைக. திருவாய்மொழி, திருமொழி என்பனவும் மந்திரங்களே. இவை 'தமிழ் மந்திரம்' எனப் பேராசிரியர் உரைப்பதும் காண்க.

### அங்கதம் எனப்படும் கூற்றிடைவைத்த குறிப்பு மொழி

**எழுத்தொடும் சொல்லொடும் புணராதாகிப்**
**பொருள் புறத்ததுவே குறிப்பு மொழி என்ப. (1435)**

அங்கதம் (1336) என்றார். பின்னர் கூற்றிடை வைத்த குறிப்பு (1421) என்றார். ஒன்றைக் கூறுங்கால், அதில் வரும் எழுத்தும் சொல்லும் ஒரு பொருளை உணர்த்த, அதனொடு பொருந்தாது, அப்பொருளின் புறத்ததாய் வேறொரு பொருளை உணர்த்துவது குறிப்பு மொழியாகும். உலக வழக்கில் 'நீ பெரிய ஆள்'

என்னும்போது, நேர்மாறான கருத்தில் சொல்வதுண்டு. அது சொல்பவர் கூற்றிடை வைத்த குறிப்பு. "உன் ஊரிலுள்ள எருமை, தான் நின்ற இடத்தைச் சேறாக்கிக் கொண்டு, கட்டவிழ்த்துப் போய், குளத்திலுள்ள வண்டுதும் புதுமலரைத்தின்னும் ஊரனே", எனத் தோழி தலைவனை விளித்தால், அவள் கூற்றிடை ஒரு குறிப்பு உளது. உனது ஊர் எருமைபோல, நீயும் கட்டுப்பாட்டை விடுத்துப் பரத்தையரை நாடினாய் என்பது எள்ளற்சுவை பொருந்திய அங்கதம். இதுவே சொன்ன தொடரொடு பொருந்தாது, அதன் புறத்தே பெற்ற பிறிதொரு உள்ளுறைப் பொருள். இதற்குக் 'குறிப்பு மொழி' என்று பெயர் சூட்டப்படுகிறது. 'கூற்றிடை வைத்த குறிப்பு' என்றது, அக்கூற்றிலேதான் குறிப்பு உளது. எனவே கூற்றின் பொருளுணர்ந்தே, அதன் வழியாகவே குறிப்பை உணர வேண்டும். 'பொருள் புறத்தது' என்பதன் பொருளும் அதுவேயாம்.

### நாட்டுப்புறக்கலை சார்ந்த
### நாடோடி இசைப்பாடல் வகை பண்ணத்தி

**பாட்டிடைக் கலந்த பொருளவாகிப்**
**பாட்டின் இயல பண்ணத்தி இயல்பே. (1436)**

பண்ணையுடையது 'பண்ணத்தி'. பண்ணைத் தோற்றுவித்தலால் பண்ணத்தி என்றார் என்பது இளம்பூரணம். இவை பாட்டுக்களின் இயல்பையுடையன; இலக்கிய வடிவான பாட்டுக்களுடன் கலந்த பொருளையே பாடுவன; பாட்டின் இயல – அவ்வரிவடிவப் பாட்டின் இயல்பையுடையன; அவையாவன சிற்றிசையும் பேரிசையும் முதலாக இசைத்தமிழில் ஓதப்படுவன. இத்துணையும் விளக்கும் இளம்பூரணர், இவை மக்கள் பயன்படுத்திய, பாடிய நாட்டுப்புறவியல் இசைப் பாட்டுக்கள் என்பதையே சொல்லாமற் சொல்கிறார்.

பேராசிரியர் இளம்பூரணருக்குப் பின்வந்தவர். அவர் விளக்கம் இதனை மேலும் தெளிவுபடுத்துகிறது. 'பழம்பாட்டினூடு கலந்த பொருளே தனக்குப் பொருளாகப் பாட்டும் உரையும் போலச் செய்யப்படுவன பண்ணத்தி', என்பார் அவர். 'மெய்வழக்கல்லாத புறவழக்கினைப் பண்ணத்தி என்ப' என்பது, இது இலக்கிய வழக்கல்லாத – எழுதப்படாத – மக்கள் வழக்கு என்று நிறுவுகிறது. மேலும் அவர், "இஃது எழுதும் பயிற்சியில்லாத புறவுறுப்புப் பொருள்களைப் பண்ணத்தி என்பவென்பது. அவையாவன நாடகச் செய்யுளாகிய பாட்டும் மடையும் வஞ்சிப் பாட்டும் மோதிரப்பாட்டும் கடகண்டு முதலாயின. அவற்றை மேலதே போலப் பாட்டென்னாராயினார், நோக்கு முதலாயின உறுப்பின்மையின் என்பது. அவை

வல்லார்வாய்க் கேட்டுணர்க", என விளக்குகிறார். இவை பேராசிரியர் கால நாட்டுப்புறக் கலைகளில் பயின்ற பாடல்கள். எழுவகை யாப்பில் அடக்காது தனியே கூறியுள்ளது. இதில் 'நோக்கு' முதலிய உறுப்பு இன்மையால் என்பார் அவர். எங்ஙனமாயினும் இவை தொன்மைமிக்கன; இலக்கிய வழக்கிற்கு தோற்றுவாய் செய்தன; பண்களைத் தோற்றுவித்தன; மக்கள் வழக்கின என்பதற்கு ஐயமில்லை.

### கற்பனைத்திறனில் பிசிபோல்வது

**அதுவே தானும் பிசியொடு மானும். (1437)**

அப் பண்ணத்தியும் 'பிசி' எனப்படும் விடுகதைப் பாடல்களுடன் ஒப்புமையுடையதாகும். உரையாசிரியர்கள் தொடர்பின்றி இதற்கு உரையெழுதக் காரணம், தொல்காப்பியர் போல உலக வழக்காகிய நாட்டுப்புற இலக்கியம் பற்றி நல்ல அறிமுகமோ, பயிற்சியோ, உயர்ந்த கருத்தோ இல்லாமையேயாகும். நொடியொடு புணர்ந்தது பிசி – புனைந்துரையோடு – கற்பனை வளத்தோடு பொருந்தியது அது. பண்ணத்தியும் நொடியொடு (கற்பனையோடு) பொருந்தியது என்பதே கருத்து. மானும் – போலும், ஒத்ததாகும்.

### இசைப் பாட்டின் அடியளவு

**அடிநிமிர் கிளவி ஈராறு ஆகும். (1438)**

பண்ணத்தியின் அடிப் பெருக்கமாய் வரும் பாட்டு, பனிரண்டு அடிகளையுடையதாகும். இது இக்காலக் 'கீர்த்தனைகளை'த் தமிழில் 'உருப்படி' என்பதையும், உருப்படிகள் பனிரண்டடியாய்ப் பண்ணுடன் பாடப்பட வேண்டுமென்பதையும் சுட்டுகின்றது.

### அடி கூடுதலாகவும் வருதல்

**அடி இகந்து வரினும் கடிவரை இன்றே. (1439)**

ஓரடியில் நாற்சீரின் மிக்குவரினும் அல்லது அடியெல்லை பனிரண்டடியின் மிக்கு வரினும் நீக்கும் நிலைமையின்று. இளம்பூரணர் பண்ணத்தி வகையைப் பாவினமெனவும், இவை, 'பிறநூல் (இசைநூல்) முடிந்தது தானுடம்படுதல் என்பதனானும் கொள்க' எனவும் கூறுகிறார். அவர் கருத்துப்படி, பாவினங்கள் நாட்டுப்புற இசைப்பாக்கள் வழி, இலக்கியமாயின என்பது தெளிவு. "மேற்குறித்த பாக்களின் இயல்பினவாய் இசைத்திறத்திற்குரியவாகி வருதலின் பண்ணத்தி

எனப்படும் பாவினம் ஆயின என்பதும்.. 'பாட்டின் இயல பண்ணத்தி' எனத் தொல்காப்பியனார் ஓதுதலின் இயற்றமிழிற் பாடப்படும் பாட்டு வேறு என்பதும், அவற்றின் இயல்பினை ஒருவாற்றாற் பெற்றுவரும் இசைத்தமிழ்ப் பாட்டாகிய பண்ணத்தி வேறு என்பதும் இனிது புலனாதலறிக", எனவரும் வெள்ளைவாரணம் உற்றுணரத்தக்கது.

## அடிவரை உள்ளனவும் இல்லனவும் பற்றிய அளவியல் முடிபு

**கிளரிய வகையில் கிளந்தன தெரியின்**
**அளவியல் வகையே அனை வகைப்படுமே. (1440)**

கிளரியல் வகையில் – கிளைத்துப் பரந்து விரிந்த வகைகள். கிளந்தன தெரியின் – இதுகாறும் சொல்லப்பட்டவற்றை ஆராய்ந்தால், அளவியல் வகை – முன்னர்க் கூறப்பட்ட பாட்டுக்களின் அடிவரையறை பற்றியதும் (1419) பிறகு கூறப்பட்டுள்ள பிற அனைத்துவகை யாப்புக்களும் பண்ணத்தியும் பற்றிய கட்டமைப்பு வரையறை பற்றியதுமான இவையாவும் அவ் 'அளவியல்' எனும் உறுப்பின் விளக்கங்களாகும். அடிவரையறையுள்ளனவும் அஃது இல்லனவும் முடித்துக் கூறப்பட்டன.

## திணை

### திணை ஏழு என்பது

**கைக்கிளை முதலா எழுபெருந்திணையும்**
**முற்கிளந்தனவே முறைநெறி வகையின. (1441)**

கைக்கிளை முல்லை குறிஞ்சி பாலை மருதம் நெய்தல் பெருந்திணை என, நெறிமுறைப்படி முன்னே கூறப்பட்டன. (அகத்திணையியல் முதற் சூத்திரம்)

முற்கிளந்தனவே என்றதனால் அவற்றை ஒட்டிப் பிற்கிளக்கப்பட்ட புறத்திணை ஏழும் கொள்ளப்படும். பாடாண்திணை கைக்கிளைப்புறம், வஞ்சி முல்லைப்புறம், வெட்சி குறிஞ்சிப்புறம், வாகை பாலைப்புறம், உழிஞை மருதப்புறம், தும்பை நெய்தற்புறம், காஞ்சி பெருந்திணைப் புறம்.

செய்யுளிலும் பெரிதும் அகத்திணை பற்றிய செய்திகளே இடம் பெறுகின்றன.

## கைகோள்

### களவுக் கைகோள் நான்கு

**காமப் புணர்ச்சியும், இடந்தலைப் படலும்,**
**பாங்கொடு தழாலும், தோழியிற் புணர்வும் என்று**
**ஆங்க நால் வகையினும் அடைந்த சார்பொடு**
**மறையென மொழிதல் மறையோர் ஆறே. (1442)**

செய்யுள் உறுப்புக்கள் 34 என வந்தவற்றுள் கைகோளும் ஒன்று. கைகோள் – ஒழுகலாறு. இன்ப ஒழுக்கம் பற்றியது. காமப் புணர்ச்சி – முதன்முதற் கண்டு கூடும் கூட்டம். அது ஊழால் நிகழ்வதாகலின் தெய்வப்புணர்ச்சி எனவும் இயல்பான மனித உணர்வால் நிகழ்வதாகலின் இயற்கைப் புணர்ச்சி என்றும் கூறப்படும். இடந்தலைப்படல் – தொடர்ந்து முன்பு கண்ட இடத்தே மீண்டும் கண்டு கூடுதல், இதனை இரண்டாம் கூட்டம் என்பர். பாங்கொடுதழாஅல் – பாங்கற் கூட்டம் எனும் உரைதவறு. தன்வயிற் பாங்கன் அவள்வயிற் பாங்குசெய்யானாகலின் என்பது பேராசிரியம். பாங்கனைச் சந்தித்து இதுபற்றி உரையாடுவதே, பாங்கனைத் தழுவுதல் – அளவளாவுதல். அவன் தலைவன் நிலைகண்டு இடித்துரைப்பது (கழறுதல்); தலைவன் அதற்கு எதிர் மறுத்து மொழிதலும் (கழற்றெதிர் மறை) இதன்கண் நிகழற்பாலன. தலைவன் பாங்கனிடம் தலைவியைப் புகழ்வான். தோழியிற்புணர்வு – தோழி மூலம் அவள் துணைபெற்றுத் தலைவியைக் கூடுதல். இந்நான்குடன், 'அடைந்த சார்பொடு' என்பது, இவற்றின் சார்பான பிறவற்றுடனும். மறை என மொழிதல் – களவொழுக்கம் எனக் கூறுதல். மறையோர் ஆறு – வேதநூலாரின் கந்தருவ வழக்கத்துடன் ஒத்ததாகும்.

### கற்பு

**மறை வெளிப்படுதலும், தமரின் பெறுதலும்,**
**இவை முதலாகிய இயல் நெறி திரியாது**
**மலிவும், புலவியும், ஊடலும், உணர்வும்,**
**பிரிவோடு புணர்ந்தது கற்பெனப் படுமே. (1443)**

கைகோள் களவு கற்பு என இருவகைப்படும். அவற்றுள் கற்பு என்பது திருமணமும் பிரிவும் பற்றியது. பாடுவதற்குச் சிறப்புடையது பிரிவென்றே கருதியுள்ளனர். மேனாட்டார் அவல நாடகங்களையே விரும்பிச் சுவைத்தது போன்றது இது. மறைவெளிப்படுதல் – களவு வெளிப்படுதல், தமரின் பெறுதல் –

தலைவியின் சுற்றத்தார் தரப்பெறுதல் என மணம் இருவகைப்படும். வெளிப்பட வரைதல், படாமை வரைதல் என முன்பு சொன்னதை (1087) ஒப்பு நோக்குக. இவை முதலான தன்மை மாறுபடாது நிகழ்வது இல்லறம். இது கற்பு எனப்படும். இதில் பொருள் தேடவோ, பிறவினைகள் கருதியோ பிரிவுகள் ஏற்படும். அப் பிரிவில் குறித்தபடி திரும்பி வந்தான் என மகிழ்தலும் (மலிவு), காலந்தாழ்த்தான் என்பதனாலும் பிறவற்றாலும் புலத்தலும் ஊடலும் ஊடலைத் தலைவன் தீர்க்க முயலுதலும் ஆகிய இவை பிரிவொடு சார்ந்தவை. இவையாவும் நிகழ்வது கற்பெனப்படும். மலிவு - மகிழ்ச்சி. புலவியின் முதிர்ச்சி ஊடல். உணர்தல் - தலைவன் பணிந்து உறுதி கூறவே தலைவி ஊடல் தவிர்தல். 'பிரிவொடு புணர்ந்தது கற்பு' என்றது, பொதுவாகக் கற்பு ஒழுக்கம் பற்றிப் புனையும் பாடல்களில் பிரிவே பேரிடம் பெறுதலால் என்க.

### கைகோள் முடிபு

**மெய்பெறும் அவையே கைகோள் வகையே. (1444)**

மெய்பெற - பொருள் பொருந்த, பாடல்களில் காணப்பட்ட அவை இரண்டுமே கைகோள்களாகும்.

### கூற்று

#### களவில் கூற்று நிகழ்த்துவோர்

**பார்ப்பான், பாங்கன், தோழி, செவிலி,**
**சீர்த்தகு சிறப்பின் கிழவன், கிழத்தியோடு,**
**அளவியல் மரபின் அறுவகை யோரும்**
**களவினில் கிளவிக்கு உரியர் என்ப. (1445)**

களவொழுக்கப் பாடல்களில் 'கூற்று' நிகழ்த்துதற்குரியவர்கள்: பார்ப்பான் (நன்றும் தீதும் ஆராய்ந்து உறுதி கூறுவான்) பாங்கன், தோழி, செவிலி, சிறப்புமிகு தலைவன் தலைவியொடு அளவளாவிப் பழகும் மரபினையுடைய அறுவகையோர் ஆவர். அளவியல் மரபு - அளவளாவிப் பழகுதல். கிளவிக்கு - கூற்றுக்கு.

#### கற்பில் கூற்று நிகழ்த்துவோர்

**பாணன், கூத்தன், விறலி, பரத்தை,**
**யாணம் சான்ற அறிவர், கண்டோர்,**
**பேணுதகு சிறப்பின் பார்ப்பான் முதலா**

**முன்னுறக் கிளந்த அறுவரொடு தொகைஇத்**
**தொல்நெறி மரபின் கற்பிற்குரியர். (1446)**

பாணன், கூத்தன், விறலி, பரத்தை, அன்பு மிகுந்த அறிவர் (யாணம் சான்ற – அன்பு நிறைந்த) பாலை வழியினைக் கண்டோர், யாவராலும் பேணிப் போற்றத்தக்க சிறப்பினையுடைய பார்ப்பான் முதலாக முன்பு களவிற்குக் கூறப்பட்ட அறுவரையும் சேர்த்து தொன்று தொட்டுவரும் கற்புப் பாடல்களில் கூற்று நிகழ்த்துதற்கு உரியவர்கள் ஆவர். பன்னிருவருள் பார்ப்பான் பின்னரும் கூறப்பட்டது சிறப்பு நோக்கியாதல் வேண்டும்.

### இதுவும் அது

**ஊரும், அயலும், சேரியோரும்,**
**நோய் மருங்கு அறிநரும், தந்தையும், தன்னையும்,**
**கொண்டு எடுத்து மொழியப்படுதல் அல்லது**
**கூற்று அவண் இன்மை யாப்புறத் தோன்றும். (1447)**

அகத்திணைப் பாடல்களில் நேரே கூற்று நிகழ்த்தாமல் பிறரால், எடுத்துமொழியப்படுவர் அறுவர் உளர். 'இப்படிச் சொன்னார்என' எடுத்து மொழியப்படுவதுண்டே தவிர, அவரே நேரில் கூற்று நிகழ்த்தியதாகச் செய்யுள் யாக்கப்பெறா. ஊரார், அயல்மனையுள்ளார், சேரியில் உடன் வசிப்போர், (காமநோய்) பற்றி அறியவல்லவர். அதாவது வெறியாடும் வேலன், கட்டுவிச்சி முதலான நோயின் தன்மைகளை அறிவோர். தந்தை, தன் ஐ (தமையன்மார்) ஆகிய இவ் அறுவரும் பிறரால் தம் கூற்றில் கொண்டு எடுத்து மொழியப்படுவர். தாமே அவர்களுக்குக் கூற்று இல்லை என்பது அகப்பாடல்களில் நன்கு காணப்படும்.

### நற்றாய் கூற்றின் இயல்பு

**கிழவன் தன்னொடும் கிழத்தி தன்னொடும்**
**நற்றாய் கூறல் முற்றத் தோன்றாது. (1448)**

தலைவன் தலைவியுடன், தலைவியின் நற்றாய் கூறுதல் என்பது, அறவே முழுவதும் தோன்றாது. முற்ற – முழுவதும், அறவே. தோழி, செவிலியுடன் நற்றாய் கூறுதலுண்டு. தலைவியின் தந்தையும் தமையன்மாரும் அவ்வாறே கூறார் என்பதும் இதனால் பெறப்படும்.

### கண்டோர் மொழிதல்

**ஒண்தொடி மாதர் கிழவன் கிழத்தியொடு**
**கண்டோர் மொழிதல் கண்டதென்ப. (1449)**

ஒள்ளிய தொடியணிந்த மாதராகிய நற்றாயும் செவிலியும் தோழியுமாகியவர்களோடு தலைவன் தலைவியும் வழியிடைக் கண்டோர் கூறியதாக வரும் கூற்று அகப்பாடல்களில் கண்டதாகும். தலைவன் தலைவியை உடன்போக்கில் ஒருசேரக் கண்டு கூறுவர் என்பதால் ‘கிழவன் கிழத்தியொடு கண்டோர்’ என்றார். உடன் போக்கில் செவிலியும் தோழியும் தேடிப் போவராதலால், அவர்களை வழியிடைக் கண்டோர் கூறுவர். நற்றாயைக் கண்டோர் கூறுவது மிக அரிதாக இடம் பெறும்.

### தலைவன் கூற்றுப்பற்றிய கருத்து

**இடைச்சுர மருங்கில் கிழவன் கிழத்தியொடு**
**வழக்கியல் ஆணையின் கிளத்தற்கும் உரியன். (1450)**

உடன்போக்கில் தலைவியை அழைத்துப் போகும் தலைவன், சுர வழியிடையே, தலைவி அஞ்சினும் தமர் எதிர்ப்படுவரெனக் குறிப்புத் தோன்றினும், தனது ஆற்றல் தோன்ற உலக வழக்கை ஒட்டி, ‘எதுவரினும் அஞ்சற்க; யான் உன்னைக் காப்பேன்’ என ஆணையிட்டுக் கூறுதற்கும் உரியன். வழக்கியல் ஆணை – உலக வழக்கப்படியான உறுதிமொழி. ஆணை – ஆண்மை தோன்ற உரைக்கும் உறுதிமொழி. கிளத்தற்கும் – தலைவி மென்மையுடையவளாதலால், அவளை அச்சுறுத்தாது, கூறவேண்டிய சூழல் வருமேல் சொல்லுதற்கும் உரியன். பெரிதும் ஆணை கூறாமையே உளதாகும்.

### ஏனையோர் கூற்றுப்பற்றிய கருத்து

**ஒழிந்தோர் கிளவி கிழவன் கிழத்தியொடு**
**மொழிந்தாங்கு உரியர் முன்னத்தின் எடுத்தே. (1451)**

ஒழிந்தோர் – தலைவன் தலைவி தவிர்த்த ஏனைய பதின்மர். கிளவி - அவர்கள் கூறும் கூற்று. கிழவன் கிழத்தியொடு – தலைவன் தலைவியொடு பேசும் போது முன்னத்தின் எடுத்து மொழித்தாங்கு உரியர் – காலம் இடம் சூழல் முகக்குறிப்பெல்லாம் அறிந்து, முன்னர்க் கூறிப் போந்த மரபின்படி கூற்று நிகழ்த்துதற்குரியர். இது பாடல்களில் காணப்படும் மரபு.

**கேட்போர்**

**மனையோள் கிளவியும், கிழவன் கிளவியும்**
**நினையுங் காலை கேட்குநர் அவரே. (1452)**

மனையோளாம் தலைவி கூற்றையும் தலைவன் கூற்றையும் கேட்போர், நினைத்துப் பார்க்குமிடத்து, முன்பு கூறப்பட்ட பன்னிருவரில், அவர்களல்லாத பதின்மருமே ஆவர். தலைவி கூற்றைத் தலைவனும் தலைவன் கூற்றைத் தலைவியும் கேட்பது கூறாமலே பெறப்பட்டது. 'கேட்குநர் அவரே' என்றதால் அவர்களிருவருமே எனவும் பொருள்தரும். மிகப் பெரும்பாலான கூற்றுக்கள் அவையேயாதல் பாடல்களில் காணலாம்.

**பார்ப்பார் அறிவர் கூற்றினைக் கேட்போர்**

**பார்ப்பார், அறிவர் என்றிவர் கிளவி**
**யார்க்கும் வரையார் யாப்பொடு புணர்ந்தே. (1453)**

பார்ப்பார், அறிவர் என்னும் இருவரது கூற்றும் அறிவுரையும் அறவுரையுமாதலின், இன்னார்க்கு என வரைதல் இல்லை; எல்லோருமே கேட்டதற்குரியர். இது யாப்பொடு புணர்ந்தது - நூல்களிற் கண்டது. அறநூல்களின்படி பொருந்தி எனவுமாம்.

**தலைவி கேட்பாளாகக் கூறும் கூற்றுக்கள்**

**பரத்தை வாயில் என இரு வீற்றும்**
**கிழத்தியைச் சுட்டாக் கிளப்புப் பயனிலவே. (1454)**

பரத்தை கூற்று வாயில்கள் கூற்று என வேறுபட வந்த இவ்விருவகைக் கூற்றுக்களும், தம்முள் பேசிக் கொள்ளுங்கால் தலைவியைச் சுட்டி, அவள் பொருட்டாகவே பேசப்படும். அல்லாது தமக்குத் தாம் வேறு பேசுதல் பயனற்றதாம். கிழத்தி கேட்கும் அளவியலும் அவளுக்குப் பாங்காயினார் கேட்குமாறும் பேசுவர்.

'தலைமகளைச் சுட்டாத கூற்றுப் பயனில்லை' என்னும் இளம்பூரணர் உரையும் பொருத்தமானது. இரு வீற்றும் – இரண்டு வேறுபட்ட இடத்தும். பரத்தை பேசுவது வேறு; வாயில்கள் பேசுவது வேறு. இருவேறு சூழல்கள் இவை.

**வாயில்கள் கூற்றினைக் கேட்போர்**

**வாயில் உசாவே தம்முளும் உரிய. (1455)**

வாயில்களாவர் தமக்குள்தாம் ஒருவருக்கொருவர் பேசிக்கொள்வதுமுண்டு. தலைவியைச் சுட்டி, அவள் கேட்கும்படி பேசுதலேயன்றி, அவளைப் பற்றித் தாங்களாகவே பேசிக் கொள்ளுதலும் உண்டு. உசாவுதல் - வினவுதல். தலைவி நிலைபற்றி ஒருவரை ஒருவர் உசாவி, விடை கூறி உரையாடுதல்.

### மக்கள் அல்லாதோர் கேட்பனவாகக் கூறல்

**ஞாயிறு, திங்கள், அறிவே, நாணே,**
**கடலே, கானல், விலங்கே, மரனே,**
**புலம்புறு பொழுதே, புள்ளே, நெஞ்சே,**
**அவையல பிறவும் நுதலிய நெறியால்**
**சொல்லுந போலவும் கேட்குந போலவும்**
**சொல்லியாங்கு அமையும் என்மனார் புலவர்.** **(1456)**

தலைவன் தலைவி தனிமைத்துயர் மிகுதியால் அஃறிணைப் பொருள்களையும் முன்னிறுத்திப் பேசுவர். அவை தாம் தமக்கு ஏதோ சொல்லுந போலவும் தாம் சொல்வதை அவை கேட்குநபோலவும் அக்கூற்றுகள் சொல்வதுபோல் அமையும்.

ஞாயிறு, திங்கள், அறிவு, நாணம், கடல், கானல் (கடற்கரைச்சோலை), விலங்கு, மரம், புலம்புறு பொழுது (தனிமைத்துன்பத்தை மிகுவிக்கும் கார், மாலை, ஏனைய பருவம் முதலிய பொழுதுகள்), பறவைகள், தனது நெஞ்சம் எனும் பதினொன்றும் அவையல்லாத பிறவும் இதுகாறும் பாடப்பட்டுவந்த மரபுப்படி, சொல்வதுபோலவும் கேட்பது போலவும் பெரிதும் தலை மக்களால் கூற்று நிகழ்த்தப்படும். பொருளியலில் நெஞ்சொடும் சொல்லா மரபின் அவற்றொடும் பேசி மன ஆறுதலடையும் தலைவன் தலைவியர் கூற்றுப்பற்றி வந்ததை இங்கு ஒப்பிடுக. (1142).

### களன்

**ஒரு நெறிப்பட்டாங்கு ஓரியல் முடியும்**
**கரும நிகழ்ச்சி இடம் என மொழிப.** **(1457)**

கரும நிகழ்ச்சி - ஒரு பாடலில் வரும் செயல் நிகழ்வு ஏதேனும் ஒரு பொருளைப் பற்றியோ அதன் வினை நிகழ்வைப் பற்றியோ பாடல் புனையப்படுகிறது. களம் எனினும் இடம் எனினும் ஒன்றே. களமும் காலமும்

செய்யுள் உறுப்பு 34இல் கூறப்பட்டன. ஒரு பாடலில் முக்கியமானது அதிலுள்ள 'நிகழ்வு' – அதுவே களமெனப்பட்டது. நாடக இலக்கியத் தொடர்புள்ள உறுப்பு இது. அந் நிகழ்வு ஒரு 'வழி' (நெறிப்) பட்டு, ஓர் இயல்புடன் (பிறிது நோக்காது, மற்றொன்றில் செல்லாது) முடிய வேண்டும்.

அரிட்டாட்டில் நாடக முவ்வொருமைக் கோட்பாட்டில் காலம், இடம், வினைநிகழ்வு மூன்றும் ஒத்திருக்க வேண்டும் என்பார், அதனை ஒத்தது இது.

ஒரேஒரு அடிக்கருத்து ஒரு பாடலாக விரிவதை நெறிப்படுத்துவது இது. "அஃதாவது காட்சியும் ஐயமும் துணிவும் புணர்ச்சியும் நயப்பும் பிரிவச்சமும் வன்புறையும் என்று இன்னோரன்ன எல்லாம் ஒரு நெறிப்பட்டு இயற்கைப் புணர்ச்சி என்னும் ஓரிலக்கணத்தான் முடியும் என்பது", என்ற பேராசிரியர் விளக்கம் கருதத்தக்கது. அரிட்டாட்டிலின் முவ்வொருமைக் கோட்பாட்டில் காலம், இடம், வினை நிகழ்வு (Time, Place, Auction) என்பவற்றுக்குப் பல்வேறு தொடர்பற்ற விளக்கங்கள் வந்துள. தமிழில் தொல்காப்பியர் குறிக்கும் இவையே பொருந்திய விளக்கமென உலகிற்கு உணர்த்தப்படவேண்டும்.

### காலம்

**இறப்பே நிகழ்வே எதிரது என்னும்**
**திறத்தியல் மருங்கின் தெரிந்தனர் உள்ளப்**
**பொருள் நிகழ்வு உரைப்பது காலம் ஆகும். (1458)**

இறந்தகாலம் நிகழ்காலம் எதிர்காலம் என்பன, மரபுவழித் திறன் அறிந்தோர் அறிந்துகொள்ளும் வகையில், கரும நிகழ்ச்சியாகிய பொருள் நிகழ்வதை உரைப்பதே 'காலம்' என்னும் உறுப்பாகும். முற்கூறிய 'களம்' எனும் வினைநிகழும் காலம் பற்றியது இது.

### பயன்

**இது நனி பயக்கும் இதனான் என்னும்**
**தொகை நிலைக் கிளவி பயன் எனப்படுமே. (1459)**

ஒரு பாடலின் கடைசியில் கூறப்படாமல், தொக்குநின்று உணர வைப்பது, அப் பாடற்கருத்தாலாகும் ஒரு பயனைக் கருதியது என்றால் அது 'பயன்' எனப்படும். இதுவும் பாடலினால் சொல்லாமல் சொல்லப்பட்டு, எஞ்சி நிற்பதுவே. ஆனால் அது ஒரு 'பயன்' கருதியது என்றால் 'பயன்' எனும் உறுப்பாகும். இதனால்

இப்பயனை சொல்லப்பட்ட இக்கருத்து மிகவும் உறுதியாக விளைவிக்கும் என்றால், அவ்வாறு தொக்குநிற்கும் கூற்று பயன் எனப்படும். தோழி தலைவியைப் பெற்றோர் வெளிவிடாது காக்கின்றனர் என்று மட்டும் கூறி முடிக்கும் பாட்டு ஒரு பயன் கருதியது. தலைவனை 'விரைவில் திருமணம் செய்துகொள்' என தூண்டுவதுஇது. இக்கூற்று, பாட்டுக்குள் இல்லை. பாடலில் வரும் செய்தியை வைத்து, உய்த்துணரப்படுகிறது. இவ்வாறு உய்த்துணரும் குறிப்புப் பொருள்கள் (Suggestion) மிகப் பலவுள. இங்கு அகப்பாடல்களில் 'பயன்' எனும் உறுப்பு மிக இன்றியமையாதது. இது பாடலின் உள்ளே இல்லாமல், அதன் முடிவில் உணரப்படும். தொகுநிலைக் கிளவி – தொக்குநிற்கும் சொல், மறைந்து நிற்பது.

## மெய்ப்பாடு

**உய்த்துணர்வு இன்றித் தலைவரு பொருளான்**
**மெய்ப்பட முடிப்பது மெய்ப்பாடாகும். (1460)**

தொல்காப்பியர் 34 இலக்கிய உறுப்புக்கள் கூறிய செய்யுளியல் முதல் நூற்பாவில், உவமை, உள்ளுறை, இறைச்சி ஆகியவற்றைக் கூறவில்லை. அங்ஙனம் கூறாத 'உவமைக்கு' மட்டும் தனி இயல் வகுத்தார். இவை 'கூற்றை'ச் சிறப்பிக்க வருவன என்றும் அதனால் கூற்றுள் அடங்குமென்றும் உரையாளர் கருதினர். மெய்ப்பாடும் சிறுசிறு நாடக வடிவினதாகிய தமிழ் இலக்கியத்தில், கூற்றைச் சிறப்பிக்க வருமெனினும், அதன் சிறப்பு நோக்கித் தனி உறுப்பாக்கியும் தனிஇயலில் விரித்தும் விளக்கினார். செய்யுளியல் முதல் நூற்பா உரையில் 'மெய்ப்பாடென்பது சொற்கேட்டார்குப் பொருள் கண்கூடாதல்' எனப் பேராசிரியர் விளக்கினார். மெய்ப்பாட்டியல் முதல் நூற்பாவில், அப் பெருமகனார், 'மெய்ப்பாடென்பது பொருட்பாடு (பாட்டுப் பொருள் தோன்றுதல்). அஃதாவது உலகத்தார் உள்ள நிகழ்ச்சி ஆண்டு நிகழ்ந்தவாறே புறத்தார்க்குப் புலப்படுவ தோராற்றான் வெளிப்படுதல்', என விளக்கம் தந்தார். மெய்ப்பாட்டியல் இறுதி நூற்பாவில், தொல்காப்பியரே மெய்ப்பாட்டை 'நன்னயப் பொருள் கோள்' என்றார். நல்ல நயம் மிகுந்த பாட்டுப்பொருளை அறிந்துகொள்ளும் முறை என்பது இதன் பொருள். பொருளின் நயத்தை அறிந்துகொண்டவரிடம் தான் சுவை தோன்றும்; பாட்டிலுள்ள மெய்ப்பாடு பிறக்கும்.

உய்த்துணர்வு இன்றி – ஒருவர் ஒரு பாடலில் 'யாதேனும் ஒன்றைக் கூறியவழி, அதன்கட் பொருண்மையை விசாரித்து உணர்தலன்றி' என்பது இளம்பூரணம். அப் பாடலில் வரும் அப்பொருண்மையானே மெய்ப்பாடு தோன்ற

முடிப்பது மெய்ப்பாடு என்பார் அவர். மேலும் படிப்பவனிடம் 'செய்யுள் செய்வார் மெய்ப்பாடு தோன்றச் செய்தல் வேண்டும்' எனவும் வற்புறுத்துவார்.

தலைவரு பொருளால் – பாடலில் பொருந்தியுள்ள பொருள். மெய்ப்பட – உணர்வை, சுவையை, மெய்ம்மயிர் சிலிர்த்தல் கண்ணீரரும்பல் முதலாய சத்துவம் வெளிப்பட. அதாவது பாடலை அல்லாது இலக்கணத்தைக் கேட்டாரிடத்தும் படித்தாரிடத்தும் இவ்வாறு சுவை தோன்றச் செய்வதே மெய்ப்பாடென்னும் உறுப்பாகும். இம்மெய்ப்பாடு முழுமையாய் அமைந்த கவிதையே மிகச் சிறந்ததாகும்.

இது பாட்டுச் சந்தத்தால் இருக்கலாம்; பொருள் கூறப்பட்ட விதத்தால் அமையலாம்; உவமை முதலான அணிகளால் வெளிப்படலாம்; பாடற் கட்டமைப்பே கூடத்தோற்றுவிக்கலாம். "நோக்குறுப்பால் உணர்ந்த பொருட்பிழம்பினைக் காட்டுவது மெய்ப்பாடு"; "இக்கருதினாற் 'கவி கண்காட்டும்' எனவும் சொல்லுப"; "கவிப்பொருள் உணர்ந்தால் அதனானே சொல்லப் படும்பொருள் உய்த்து வேறு கண்டாங்கு அறிதலை மெய்பாடென்றான்; அது தேவருலகங்கூறினும் அதனைக் கண்டாங்கு அறியச் செய்தல்", எனவரும் பேராசிரிய விளக்கங்கள் இதனை ஒரு கோட்பாடாக்கி உலகிற்குணர்த்தும் பெருஞ் சிறப்புடையன.

### அதன் முடிபு

**எண்வகை இயல்நெறி பிழையாதாகி**
**முன்னுறக் கிளந்த முடிவினது அதுவே. (1461)**

அம்மெய்ப்பாடு நகை அழுகை இளிவரல் மருட்கை அச்சம் பெருமிதம் வெகுளி உவகை என எட்டுவகையாக, அவற்றின் இயல்புநெறி சிறிதும் பிறழாமல், முன்னே மெய்ப்பாட்டியலில் கூறிய அதே முடிபினையுடையதாகும். நாடக வழக்கிற்கும் உரியதாகலின், இலக்கியத்திற்கு இங்குக் கூறப்பட்டனவே முடிந்த முடிபாகும் என்பதாம்.

### எச்சம்

**சொல்லொடும் குறிப்பொடும் முடிவு கொள் இயற்கை**
**புல்லிய கிளவி எச்சம் ஆகும். (1462)**

ஒரு பாடலை முடித்தாலும் அது பொருள் முடிந்து நில்லாது; ஒரு சொல்லைக் கொண்டுவந்து முடித்தால்தான் பாட்டுப் பொருள் முடியும். இது

சொல்லெச்சம். ஓர் உள்ளக் குறிப்பைக் கொண்டு சேர்த்தால்தான் பாட்டுப்பொருள் நிறைவுறும். அது குறிப்பெச்சம். பாட்டுக்கு வெளியிலிருந்து இவை பொருத்தப்படுதலால் 'புல்லிய கிளவி' என்றார். சொல்லோ, குறிப்போ வந்து முடியும்படியான இயல்பைப் பொருந்திய கிளவி அல்லது கூற்று 'எச்சம்' எனப்படும்.

'பிறிதோர் சொல்லொடும் பிறிதோர் குறிப்பொடும் முடிவு கொள்ளும் இயற்கையைப் பொருந்தியது' என்பது இளம்பூரணம். 'செய்யுளின் கண்ணதன்றிப் பின்கொணர்ந்து முடிக்கப்படும் என்பது பெற்றாம்', என்பது பேராசிரியம்.

தொல்காப்பிய எச்சவியல் சூத்திரத்துடன் (913) இதை இணைத்துக் காட்டுவார், இளம்பூரணர்.

'பயன்' என்பது, கூற்றிற்குரிய பயனை அறிவது, அல்லது ஒரு பயன் கருதி ஒன்றைக் கூறுவது.

எச்சம் இன்றேல் பாட்டு முடிவுறாது. அதனால்தான் சொல்லாலோ, குறிப்பாலோ 'முடிவுகொள் இயற்கையைப் புல்லிய கிளவி' என்றார் தொல்காப்பியர்.

தலைவன் தழையுடை கொண்டுவந்தான். தோழி "எங்களிடமும் அதற்கு வேண்டிய செங்காந்தள் பூக்கள் நிரம்ப உள்ளன" என்றாள். பாட்டுக்குள் உள்ளது இதுவே (குறு. 1) நீ தரும் உடை 'வேண்டாம்' என்பது சொல்லாமற் சொன்னது. இது சொல்லெச்சம்.

தலைவி இருக்குமிடம் நோக்கித் தலைவன் வருவதைத் தோழி பார்த்தாள். தலைவியிடம், 'மலையுச்சியில் செங்காந்தட்பூக்கள் நிறையப் பூத்துள்ளன' என்றாள். தலைவன் வரும்போது, நான் இங்கிருப்பது சரியன்று; மலையுச்சிக்குப் போய்ப் பூக்கொய்து வருவேன். அதுகாறும் தலைவனிடம் நீ அளவளாவி இரு' என்பது சொல்லாமற் சுட்டிய குறிப்பு. இது குறிப்பெச்சம்.

அகப்பாடல்களில் பயன், சொல்லெச்சம், குறிப்பெச்சம் வரும் பாடல்களைத் தனியே தொகுத்துப் படிக்க வேண்டும். மிகச் சிறந்த பாடல்களுக்கு இலக்கணம் இவை.

## முன்னம்

**இவ்விடத்து இம்மொழி இவர் இவர்க்கு உரிய என்று**
**அவ்விடத்து அவரவர்க்கு உரைப்பது முன்னம். (1463)**

திணைப் பாடல்கள் நாடக வடிவின. அதிலும் 'ஒரு கூற்று' நாடகம் என்பர். கூறியவர் யார்; யாருக்குக் கூறப்பட்டது; எச்சூழலில் அதாவது இடம், காலம், நிகழ்ச்சிச் சூழலில் இது கூறப்பட்டது என்பனயாவும், பாடலை வைத்து உய்த்துணர வேண்டும். அவ்வாறு உய்த்தறியுமான சொற்கள் பாடலுக்குள் இருக்க வேண்டும். பாடலைப் பாடியவன் தன் திறமையால் அதை அறிய வழியொன்று வைத்துப் படைக்கவேண்டும். படிப்பவனும் தன் இலக்கிய மரபு பற்றிய திறமையால் அதை அறிய வேண்டும்.

முன்னம் என்பது முகக்குறிப்பு. 'முன்னம் காட்டி முகத்தின் உரையா' என்பது அகநானூறு. வாய் பேசாது, முகத்தாலேயே பேசுவது அது. ஒரு செய்யுளைப் படைப்பவன், "இந்த இடத்தில் (காலத்தில், சூழலில்) இவ்விதமான சொற்கள், இன்னஇன்னார் கூறுதற்குரியர் என்று அறிந்து, அவ்வவ் இடத்து அவரவர்க்கு உரிய மொழிகளை அமைத்து முடிப்பது முன்னம் என்னும் உறுப்பாகும்."

பேராசிரியர், "யாதோரிடத்தானும் யாதானுமொரு மொழி தோன்றியக்கால், இம்மொழி சொல்லுதற்குரியாரும் கேட்டற்குரியாரும் இன்னாரென்று அறியுமாற்றான் அங்ஙனம் அறிதற்கு ஓரிடம் நாட்டி, அவ்விடத்துக் கூறுவார்க்கும் கேட்பார்க்கும் ஏற்ற செய்யுட்கு ஈடாகச் சொல்லுவது முன்னம்" என வரைந்திருப்பது, இக்கோட்பாட்டை நன்கு வளர்த்துக்காட்டுகிறது. மேலும் சிந்திக்கவும் இது தூண்டுகிறது.

**செம்புலப் பெயல்நீர் போல**
**அன்புடை நெஞ்சம் தாம்கலந் தனவே**

இது தலைவன் கூறியது; தலைவிக்குக் கூறியது; முதற் கூட்டத்து இறுதியில் மகிழ்ந்து நலம்பாராட்டிக் கூறியது என்பன, பாடலை வைத்து உய்த்துணரப்படுகின்றன.

புறப்பாடல் முதல் உலகப் பாடல் எதுவாயினும் இம் 'முன்னமும்' உணரப்பட்டால்தான் சுவை மிகுதிப்படும்.

'உரைப்பது' என்பது பாடலாசிரியன் படைக்கும் திறன். 'இவரிவர்க்கு உரிய' என்று அறிவது அப்பாடலைக் கேட்டவனது திறன். படைப்புத் திறத்தால் படைக்கப்பட்ட பாடலே, தன்னை இவ்வாறு உணர்த்துவது முன்னம்.

## பொருள்

**இன்பமும் இடும்பையும் புணர்வும் பிரிவும்**
**ஒழுக்கமும் என்று இவை இழுக்குநெறி இன்றி**
**இதுவாகித் திணைக்கு உரிப்பொருள் எனாது**
**பொதுவாய் நிற்றல் பொருள்வகை என்ப. (1464)**

பாடலின் அடிக் கருத்து உரிப்பொருள். மாந்தரது காதல் வாழ்வும் உலக வாழ்வும். அகப்பாடலில் முதலும் கருவும் உரிக்கேற்ற இயற்கைப் பின்புலம். மற்றபடி பாட்டில் பொதிந்துள்ள துணைப்பொருள்கள் பலவாகும். அவை பொதுவாகப் பாட்டின் பொருள் (content) அல்லது உள்ளடக்கம் எனப்படும். புலவனது கற்பனை எல்லாப் பாடல்களிலும் இடம் பெறும். பொதுவான கற்பனைகள், வண்ணனைகள், விளக்கங்கள் போல்வன எல்லாவகைப் பாக்களுக்கும் உரியன. இன்பமும் துன்பமும் புணர்வும் (கூடுதலும்) பிரிவும் ஒழுக்கமும் என அறக் கருத்துக்கள் சிறிதும் குற்றப்படாது பாடப்படும். இது இத்திணைக்கு உரிப்பொருள் என்று வரையறைப்படாது. பொதுவாக வருவன யாவும் பாட்டின் பொருளடக்க வகைகள் எனப்படும். பாட்டுப் புனைபவன் திறமைக்கேற்ப பரந்துபட்டு வருவன இவை. அகம் புறம் எனாது பொதுவான பாடல்களும் பாடப் பெற்றிருக்க வேண்டும்.

## துறை

**அவ்வவ மாக்களும் விலங்கும் அன்றிப்**
**பிற அவண் வரினும் திறவதின் நாடித்**
**தத்தம் இயலான் மரபொடு முடியின்**
**அத்திறத்தானே துறை எனப் படுமே. (1465)**

புறப்பாடல்கள் 'துறை' எனப்படும். கூற்றுக்களாலான அகப்பாடல்களிலும் அறத்தொடுநிலை, இற்செறிப்பு, கழற்றெதிர் மறை எனத் துறைப் பெயர்கள் சுட்டப்படுவதுண்டு. பலசெய்திகள் வரினும் அவை, ஒரு குளத்தில் நீருண்ணும் துறைபோல, ஒருமுகப்பட்டு ஒரு செய்தியாவது அது. பாடல்களில் அவ்வவற்றிற்குரிய மக்களும் விலங்கும் அல்லாமல் பிற மக்கள், விலங்குகள்,

பறவைகள் முதலியன வரினும், திறம்பட, ஆராய்ந்து, தத்தமக்குரிய இயல்பொடு மரபு மாறாமல் முடியின், அவ்வாறு வரும் இலக்கியத்திறனே 'துறை' எனப்படும். பல்வேறு வகைப் பொருள்கள் வரலாம். ஆயினும் அவை ஒரு கருத்தையே நோக்கி நிற்கின் 'துறை' எனப்படும்.

## மாட்டு

**அகன்று பொருள் கிடப்பினும் அணுகிய நிலையினும்**
**இயன்று பொருள் முடியத் தந்தனர் உணர்த்தல்**
**மாட்டு என மொழிப பாட்டியல் வழக்கின். (1466)**

ஒரு நெடும்பாட்டில் பொருள் கொள்ளும்போது, அவற்றுக்கான சொற்றொடர்கள் அகன்று சேம்மைய்கண்ணே கிடப்பினும், அப் பாட்டின் பொருள் சேர்ந்து முடியுமாறு, சொற்களைத் தொடர்புபடத் தந்து உணருமாறு செய்தல் 'மாட்டு' எனும் உறுப்பாகும். பாட்டு இயல்பு சார்ந்த வழக்கில் இவ்வாறு கூறுவர்.

மாட்டு – கொண்டுவந்து கூட்டுதல்.

**ஈர்ங்கை விதிரார் கயவர், கொடிறுஉடைக்கும்**
**கூன் கையர் அல்லா தவர்க்கு. (1077)**

கொடிறு உடைக்கும் கூன்கையர் அல்லாதவர்க்குக் கயவர் ஈாங்கை விதிரார் என அணுகிய நிலையில் 'மாட்டு' வந்து, பொருள் முடிய இயன்று தந்தது. உணர்த்தல் – அவ்வாறு தந்து உணர்த்துபவன் பாடலாசிரியன். அதனால் வரும் பாட்டின்பம் கருதியது இது.

சங்கப் பாடல்கள் பல இம் 'மாட்டு' அமைந்தவை. இதன் செல்வாக்கை நோக்கி நச்சினார்க்கினியர் இவ்வாறு எழுதுகிறார்: "அருமையும் பெருமையும் உடையவாய்ப் பரந்த சொல் தொடர்ந்து பொருள் தருவதோர் இன்பம் நோக்கிச் சான்றோர் இம்மாட்டிலக்கணமே யாண்டும் பெரும்பான்மை வரச் செய்யுள் செய்தலின், பின் தொடர்நிலைச் செய்யுள் செய்தவர்களும் இம்மாட்டிலக்கணமே யாண்டும் வரச் செய்யுள் செய்தார்."

## இவற்றில் சிலவற்றிற்கு முடிபு

**மாட்டும் எச்சமும் நாட்டல் இன்றி**
**உடனிலை மொழியினும் தொடைநிலை பெறுமே. (1467)**

மாட்டு எச்சம் எனுமிவை அமைக்கப்படாமல், உடனிலையாகச் செய்யுள்

கிடந்தவாறே பொருள் கொள்ளும்படி பாடினாலும், பாட்டின் அமைப்பு நிலைபெறும். ஒரே தொடராகவும் எச்சக் குறிப்பின்றிப் பொருளும் கிடந்தவாறே பாடினும், பாட்டின் அழகும் சுவையும் கெடாமல் பாடமுடியும். அத்தகைய பாடல்களும் பலவுள.

## வண்ணம்

**வண்ணம் தானே நாலைந்து என்ப. (1468)**

வண்ணம் இருபது வகைப்படும்.

பிற்காலத்தார் நூறும் பலவுமாக வண்ணங்களைக் குறிப்பர். அவை அத்துணைச் சந்த வேறுபாடு செய்யா, அவை யாவும் இவ்இருபதில் அடங்கும் என்பர்.

'கம்பன் சொன்ன வண்ணமும் தொண்ணூற் றாறே' என்பது ஒரு தனிப்பாடல். வண்ணம் என்பது சந்த வேறுபாடு. உலகவழக்கில் சிந்துப் பாடல்களிலும் நாடகப்பாடல்களிலும் இலக்கியத்தில் சந்த விருத்தங்களிலும் திருப்புகழ்ப் பாடல்களிலும் நூற்றுக்கணக்கான வண்ணங்கள் படைக்கப்பட்டுள்ளன. இருவகை வழக்கிலும் காணப்படும் வண்ணங்கள் எழுத்தாலும் சொல்லாலும் தொடை நலன்களாலும் என இவை போல்வனவற்றால் அமைவன. வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள் வண்ணத்தியல்பு எனச் சிறுநூல் எழுதியுள்ளார். இவ் வண்ணங்கள் இன்னும் முழுமையாக ஆராயப்படவும் தொகுக்கப்படவும் வேண்டும். சங்ககால வண்ணப்பாக்கள் வாய்மொழியாக இருந்து மறைந்தன. அதனால் வண்ணங்களுக்கு எடுத்துக்காட்டுத்தர உரையாசிரியர்கள் இடர்ப்படுகின்றனர்.

### இருபது வண்ணங்களின் பெயர்

**அவைதாம்,**
**பாஅ வண்ணம், தாஅ வண்ணம்,**
**வல்லிசை வண்ணம், மெல்லிசை வண்ணம்,**
**இயைபு வண்ணம், அளபெடை வண்ணம்,**
**நெடுஞ்சீர் வண்ணம், குறுஞ்சீர் வண்ணம்,**
**சித்திர வண்ணம், நலிபு வண்ணம்,**
**அகப்பாட்டு வண்ணம், புறப்பாட்டு வண்ணம்,**
**ஒழுகு வண்ணம், ஒரூஉ வண்ணம்,**

**என்னு வண்ணம், அகைப்பு வண்ணம்,**
**தூங்கல் வண்ணம், ஏந்தல் வண்ணம்,**
**உருட்டு வண்ணம், முடுகு வண்ணம் என்று**
**ஆங்ஙனம் அறிப அறிந்திசினோரே. (1469)**

வண்ணங்கள் இருபது : பாஅவண்ணம், தாஅ வண்ணம், வல்லிசை வண்ணம், மெல்லிசை வண்ணம், இயைபு வண்ணம், அளபெடை வண்ணம், நெடுஞ்சீர் வண்ணம், குறுஞ்சீர் வண்ணம், சித்திர வண்ணம், நலிபு வண்ணம், அகப்பாட்டு வண்ணம், புறப்பாட்டு வண்ணம், ஒழுகு வண்ணம், ஒரூஉ வண்ணம், எண்ணு வண்ணம், அகைப்பு வண்ணம், தூங்கல் வண்ணம், ஏந்தல் வண்ணம், உருட்டு வண்ணம், முடுகு வண்ணம் - இவ்வாறு வண்ணங்களை அறிந்தவர்கள் வகைப்படுத்துவர்.

### நூற்பா வண்ணம்
### பாஅ வண்ணம்

**அவற்றுள்**
**பாஅ வண்ணம்**
**சொற் சீர்த் தாகி நூற்பால் பயிலும். (1470)**

பாவண்ணம் என்பது சொல்லே சீராகி இலக்கிய நூல்களில் இடம்பெறும்.

பாஅ வண்ணம் - நூற்பா வண்ணம். சொற்சீர்த்தாகி - சொல்லே சீராகி, ஓசை தழுவாது வரும். நூல் - இலக்கண நூல். தொல்காப்பிய நூற்பாக்களே சான்று. கலியுள்ளும் பரிபாடலுள்ளும் சொற்சீர் வருமிடங்கள் பாஅ வண்ணம் உடையவையே. (சொற்சீர்க்கு இலக்கணம் : 1380)

### பொழிப்பெதுகை பொருந்திய
### தாஅ வண்ணம்

**தாஅ வண்ணம்**
**இடையிட்டு வந்த எதுகைத் தாகும். (1471)**

தாவண்ணம் என்பது ஒருசீர் இடையிட்டு வரும் பொழிப்பெதுகைத் தொடை உடையதாகும்.

தாஅ வண்ணம் - இடையிட்டுத் தாவும் சந்தம். இது இடையிட்ட எதுகையால் வரும். இது பொழிப்பெதுகை ஒன்றே மிக்குவரத் தொடுக்கும்போது,

பாடலில் ஏற்படும் சந்த இனிமை பற்றியது. (பொழிப்பெதுகை இலக்கணம் : 1355) 'மலர்மிசை ஏகினான் மாணடி சேர்ந்தார்'.

### வல்லெழுத்தே வந்தமையும் வல்லிசை வண்ணம்

**வல்லிசை வண்ணம் வல்லெழுத்துப்பயிலும். (1472)**

வல்லெழுத்துக்களே தொடர்ந்து மிக்குவந்து தொடுப்பின் அது வல்லிசை வண்ணமாகும்.

### மெல்லின எழுத்தே அமையும் மெல்லிசை வண்ணம்

**மெல்லிசை வண்ணம் மெல்லெழுத்து மிகுமே. (1473)**

மெல்லெழுத்துக்களே தொடர்ந்து மிக்குவரத் தொடுப்பின் அது மெல்லிசை வண்ணமாகும்.

### இடையெழுத்து மிக்குவரும் இயைபு வண்ணம்

**இயைபு வண்ணம் இடையெழுத்து மிகுமே. (1474)**

இடையெழுத்துக்களே தொடர்ந்து மிக்குவரத் தொடுப்பின் அது இயைபு வண்ணமாகும். காவடிச்சிந்து, நொண்டிச்சிந்து, சந்தவிருத்தம் என இருவகை வழக்கிலும், இவ்வாறு எழுத்துக்களாலாகும் சந்தங்கள் நூற்றுக்கணக்கின எனலாம்.

### அளபெடைகள் அடுக்கி வரும் அளபெடை வண்ணம்

**அளபெடை வண்ணம் அளபெடை பயிலும். (1475)**

அளபெடை இரண்டும் (உயிரளபெடை, ஒற்றளபெடை) தொடர்ந்து மிக்குவரின் அதனை அளபெடைத் தொடை என்பர். இசைப்பாடல்களில் இவை மிகுதி. (அளபெடைத் தொடை : 1354)

### நெட்டெழுத்துத் தொடர்ந்துவரும் நெடுஞ்சீர் வண்ணம்

**நெடுஞ்சீர் வண்ணம் நெட்டெழுத்துப் பயிலும். (1476)**

நெட்டெழுத்துக்களே தொடர்ந்து மிக்குவரின் நெடுஞ்சீர் வண்ணமாகும்.

## குற்றெழுத்துத் தொடர்ந்துவரும் குறுஞ்சீர் வண்ணம்

**குறுஞ்சீர் வண்ணம் குற்றெழுத்துப் பயிலும். (1477)**

குற்றெழுத்துக்களே தொடர்ந்து மிக்குவரின் குறுஞ்சீர் வண்ணமெனப்படும்.

## நெடிலும் குறிலும் கலந்து வரும் சித்திர வண்ணம்

**சித்திர வண்ணம்**
**நெடியவும் குறியவும் நேர்ந்துடன் வருமே. (1478)**

நெட்டெழுத்தும் குற்றெழுத்தும் தம்முட்பொருந்தி, தொடர்ந்து உடன் வருமேல் அது சித்திர வண்ணமாகும்.

## ஆய்த எழுத்து அடுத்தடுத்து வரும் நலிபு வண்ணம்

**நலிபு வண்ணம் ஆய்தம் பயிலும். (1479)**

ஆய்த எழுத்துத் தொடர்ந்து பல்கி வருவது நலிபு வண்ணம்.

## நாடோடிப் பாடல்கள்போல் முடியாமல் முடியும் அகப்பாட்டு வண்ணம்

**அகப்பாட்டு வண்ணம்**
**முடியாத் தன்மையின் முடிந்ததன் மேற்றே. (1480)**

அகப்பாட்டு வண்ணம், பாட்டு முடிவுற்றபிறகும் அது முடியாதது போலத் தோன்றி நிற்கும். நாட்டுப்புறப் பாடல்களில் அப்படியப்படியே பாட்டு நின்றுவிடும். ஒரு கருத்தை முடிக்காமலே, பாட்டை முடிப்பன அவை. இது பெரிதும் காதற் பாடல்களில் காணப்படும்.

## நாடோடிப்பாடல்கள் போல் முடிந்தும் முடியாதவை புறப்பாட்டு வண்ணம்

**புறப்பாட்டு வண்ணம்**
**முடிந்தது போன்று முடியா தாகும். (1481)**

புறப்பாட்டு வண்ணம் முடிவுற்றது போலப் பாடி முடிக்கப்படுவது. முன்னது பாட்டு முடியாததுபோல் நின்றுவிடுவது. இன்னும் பாடுவரோ என எண்ணத் தூண்டுவது. இது முடிந்துவிட்டது என நினைக்க வைப்பது. ஆனாலும் பாட்டுக் கருத்து, முடிவுபெறாது நிற்கும். இவை இரண்டும் பாடலமைப்பைப் பற்றியன. ஒன்று முடியாததுபோல் இடையில் நின்றுவிடுவது, மற்றது முடிந்தது போல்வது. இவற்றாலும் சந்த இனிமை உண்டாகும். வண்ணங்கள் பல பெரிதும் உலக வழக்குப் பாடல்களைப் பற்றியன.

### ஆற்றொழுக்கம் போலும் ஒழுகு வண்ணம்

**ஒழுகு வண்ணம் ஓசையின் ஒழுகும். (1482)**

ஒழுகு வண்ணம் ஆற்றொழுக்குப் போன்று, ஒரே சீரான சந்த ஒழுங்கில் பாடப்படுவது, ஓசையின் ஒழுகும் – ஒழுகிய ஓசையுடையது. ஓட்டம் தடைப்படாதது இது.

### ஒரூஉத் தொடை மிகுந்துவரும் ஒரூஉ வண்ணம்

**ஒரூஉ வண்ணம் ஒரீஇத் தொடுக்கும். (1483)**

ஒரூஉ வண்ணம், ஒரூஉத் தொடை இருசீர் இடையிட்டு வருவதுபோல, முழுவதும் தொடர்ந்து அத்தொடைகளால் தொடுக்கப்படுவது, (ஒரூஉத் தொடை: 1356). 'அகர முதல எழுத்தெல்லாம் ஆதி'.

### எண்ணும் முறையில் எண்ணி வரும் எண்ணு வண்ணம்

**எண்ணுவண்ணம் எண்ணுப் பயிலும். (1484)**

எண்ணும் மரபில் தொடர்ந்து மிகுதியாக அமையும் அனைத்துத் தொடையும் எண்ணு வண்ணமாகும். 'நிலம்நீர் வளிவிசும்பென்ற நான்கின் அளப்பரியையே'.

### ஆற்று அறல்போல் அற்றற்று ஓடும் அலைகள் போன்ற அகைப்பு வண்ணம்

**அகைப்பு வண்ணம் அறுத்தறுத்து ஒழுகும். (1485)**

அகைப்புவண்ணம் ஒழுகுவண்ணத்திற்கு மறுதலையானது. ஆற்றின்கண் அறல்போல, ஓசை அலைபோல மேலும் கீழுமாய்ச் சந்தப்படும். அறுத்து அறுத்து – இடையிட்டு இடையிட்டு.

## வஞ்சிச் சீர் மிகுந்து, தூங்கலோசை தவழும் தூங்கல் வண்ணம்

**தூங்கல் வண்ணம் வஞ்சி பயிலும். (1486)**

வஞ்சியுரிச்சீர் (கனிமுன்நேரும் கனிமுன் நிரையும்) பயின்று தொடர்ந்து மிக்கு வருவது தூங்கல் வண்ணம். தேவராட்டம், ஒயிலாட்டப் பாடல்களில் இச் சந்தம்படப் பாடக் காணலாம். தூங்கலோசையே ஒரு வண்ணம் (சந்தம்) ஆகிறது.

## சொல்லிய சொல்லே தொடர்ந்து வரும் ஏந்தல் வண்ணம்

**ஏந்தல் வண்ணம்**
**சொல்லிய சொல்லில் சொல்லியது சிறக்கும். (1487)**

ஏந்தல் வண்ணம் முன் சொல்லிய சொல்லே பின்னும் சொல்லி அமைவது. இதைச் சொற்பின்வரு நிலையணி, சொற்பொருட் பின்வருநிலையணி என்பர் பிற்காலத்தார். உடம்பொடு புணர்த்தல் எனும் உத்தியின்படி, இவ்வண்ணம் ‘சொல்லிய சொல்லிற் சொல்லியது சிறக்கும்’ என அதிலேயே அமைந்துளது. ஒரு சொல்லே திரும்பத் திரும்ப வருவதில் ஒரு சந்த இனிமை உளது. ‘வைகலும் வைகல் வரக்கண்டும் அஃதுணரார் வைகலும் வைகலை வைகுமென்று இன்புறுவர்...’ (நாலடியார்)

## உருளும் ஓசையுள்ள உருட்டு வண்ணம்

**உருட்டு வண்ணம் அராகம் தொடுக்கும். (1488)**

அராகம் – குறிலிணைகள் அடுக்கி வருவது. குறுஞ்சீர் வண்ணம் போலாது, இஃது உருட்டும் ஓசைபோலச் சந்தத்தை உருள வைக்கும். நாற்சீரடிக்குள் வரும். ‘எரியுருவுழை இலவ மலர’ என்றாற் போல்வன. உருட்டு வண்ணம் என்றது, குற்றெழுத்தை விடவும் உருட்டும் ஓசைக்கே முக்கிய இடம் தருகிறது. அதற்குக் குறிலும் பயன்படும். அராகம் – முடுகியது. விரைந்து உருண்டு ஓடும் இசை இது. அராகத்திலிருந்து பிறந்ததே இராகம், ராகம் வடமொழி அராகம் காமம் பற்றியது. அரத்தம், இரத்தம் பிறகு ரத்தமான கதை இது.

## விரையும் சந்தம் அடிகடந்து ஓடும் முடுகு வண்ணம்

**முடுகு வண்ணம்**
**அடியிறந்தோடி அதனோரற்றே. (1489)**

அராகமும் முடுகும் ஒன்றே. நாற்சீரடிக்குள் வருவது உருட்டு வண்ணம். நாற்சீரின் மிக்க அடிகளில், எல்லை கடந்து உருள்வது முடுகு வண்ணம். அதனோரற்றே - அவ் அராகம் போன்றதே. அதாவது உருட்டு வண்ணமே நாற்சீர்க்கு மேலே அடிகடந்து பாடப்படும்போது முடுகு வண்ணமாகிறது.

## அனைத்து வண்ணத்திற்கும் அடிப்படை இருபது வண்ணமே

**வண்ணம் தாமே இவைஎன மொழிப. (1490)**

இதுகாறும் கூறிய இவையே அடிப்படை வண்ணங்களாகும். இதனை எத்தனையோ கூறுபடுத்தலாம்; நூறுவகையாக்கலாம். எனினும் அவையெல்லாம் இவ் அடிப்படையிலிருந்து வெவ்வேறாகக் கிளைப்பனவே. அதற்காகவே இவையே அடிப்படையானவை என முடிக்கப்படுகிறது.

இவ்வண்ணங்கள் ஒரு பாட்டில் ஒரு வண்ணமே முழுவதும் வருமென்பதில்லை. இடையே சில அடிகளிலும் வரும்; அரிதாக முழுவதுமே வரவும் செய்யும். ஒரே பாடலில் பல வண்ணங்கள் வருதலும் கூடும். "எனவே, இவ் வண்ண வகைகள் எல்லாம் செய்யுள் முழுவதுமே பெறுவனவாகக் கொள்ளக் கிடந்தனவல்ல; இவற்றை உறுப்பென்ற தன்மையால் கந்திருவ நூலார் வண்ணங் கூறியவாறு போல ஒரு செய்யுளுட் பலவும் வரப்பெறும் என்பதாம்", என்பார் பேராசிரியர். இசை நூலாரைக் கந்திருவ நூலார் என்றது இடைக்கால வழக்கு.

## வனப்பு

தமிழில் அழகு, வனப்பு, எழில், சாயல், கவின், பொலிவு, எனப்பல சொற்களுண்டு. அழகு - தோற்றம் பற்றியது. எழில் - உறுப்பழகு, சாயல் - மயில்போல, கிளிபோல எனப்படுவது. கவின் - கவர்ச்சியுள்ளது, நுண்ணிய அழகு. பொலிவு - விளங்கி ஒளிபெறக் களையுடன் தோன்றுவது. 'வனப்பு - பெரும்பான்மையும் பல உறுப்பும் திரண்டவழிப் பெறுவதோர் அழகு' என்பது பேராசிரியம்.

இலக்கியம் என்பது உலக வழக்கிலும் உளது. இவ் இருவகை இலக்கியங்களையும் வகைப்படுத்துவனவே வண்ணமும் வனப்பும். வண்ணம் – உடல் சார்ந்தது, பாட்டுக் கட்டமைப்புச் சார்ந்தது, அதில் வரும் எழுத்து, தொடை, ஓசை நலம் சார்ந்தது. வனப்பு – வடிவத்தொடு பொருளும் உணர்வும் சார்ந்தது. வனப்புக்கு இலக்கியமும் – காட்டும் உலக வாய்மொழி மரபினவே. இவை பல மறைந்தன. எனினும் இலக்கிய வரிவடிவிலும் அவை பல உள. இலக்கியம் பாதி இருக்க பாதி மறைந்தாலும், இலக்கணம் இருக்கிறது. அது தொல்காப்பியர் நமக்குத் தந்த கொடை. வனப்பு – நுண்கலை சார்ந்த இலக்கிய வகைமைப்பாடு ஆகும்.

### அம்மை வனப்பு

**வனப்பியல் தானே வகுக்குங் காலைச்**
**சின் மென் மொழியால் தாய பனுவலொடு**
**அம்மை தானே அடிநிமிர்பு இன்றே. (1491)**

சில சொற்கள், எளிய சொற்கள். அவையே சின் மென் மொழிகள். தாய பனுவல், தாய பனுவல் – அவ்வகைச் சொற்கள் நிரம்பிய நூல்கள். அடி நிமிர்பு இன்று – அடிவரையறை கூடாது. திருக்குறள், கொன்றை வேந்தன் உள்ளிட்டவை. பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள் இதிலடங்கும்.

### அழகு வனப்பு

**செய்யுள் மொழியால் சீர்புனைந்துயாப்பின்**
**அவ்வகை தானே அழகெனப்படுமே. (1492)**

செய்யுளுக்கேயுரிய மொழி. அவை இயற்சொல், திரிசொல், திசைச்சொல், வடசொல் என்பன (880). இச் சொற்களைக் கொண்டு சீர் புனைந்து பாடினால், அவை ‘அழகு’ வகைப்படும். இது ‘அம்மை’யின் வேறுபட்டது. சங்க இலக்கியத்துள் பல இதற்குக் காட்டத்தகும்.

### தொன்மை வனப்பு

**தொன்மை தானே**
**உரையொடு புணர்ந்த பழைமை மேற்றே. (1493)**

புகழ்வாய்ந்த பழைய தொன்மக் கதைகள். புராணக் கதைகள். மக்களிடையே செல்வாக்குப் பெற்றிருந்தால் ‘உரை (புகழ்)யுடன் பொருந்திய’

என்றார். பழைமை – பழங்கதைகள். புகழ்பெற்ற நாட்டுப்புறக் கதைகளுமாம். மக்கள் நம்பவியலாத, இயற்கை இகந்த தொன்மக் கதைகளில் அதிக ஈடுபாடு காட்டுவர். பாரதம் இராமாயணம் தவிர, தகடூர் யாத்திரையும் சிலப்பதிகாரமும் இதன் பாற்படும் என்பர் நச்சினார்க்கினியர். சிலப்பதிகாரம் வரலாறு புனைந்துரை வழக்காய்த் தொன்மமுமாய்ப் படைக்கப்பட்டுள்ளது. இதனை அறியாதார் 'மார்பைத் திருகி எறிந்தால் தீப்பற்றுமா' என வினவித் தம் அடி முட்டாள் தனத்தை வெளிப்படுத்துவர். 'கொதியழற் சீற்றம் கொங்கையின் விளைத்து' என்றது நெஞ்சின் நெருப்பே ஊரை எரித்ததென உணர்த்தும். தொன்மம் இதை புராணப்படுத்தும். அஃது ஓர் இலக்கிய இயல்; உளவியலுமாம்.

## தோல் வனப்பு

**இழுமென்மொழியான் விழுமியது நுவலினும்**
**பரந்த மொழியான் அடிநிமிர்ந்து ஒழுகினும்**
**தோல் என மொழிப தொன்மொழிப் புலவர். (1494)**

தோல்வனப்பும் அம்மை அழகு வனப்புக்களிலிருந்து சிறிது வேறுபட்டது. 'இழும்' என்னும் இசைதழுவிய மென்மை மிக்க இனிய சொற்களால், விழுமிய கருத்துக்களை நுவல்வது தோல்வனப்பு. பரந்துபட்ட சொற்களால் அடி எண்ணிக்கை கூடிக்கொண்டே போவதும் அது. தொன்மை வாய்ந்த தமிழ்மொழிப் புலவர்கள், தொன்றுதொட்டு வரும் இலக்கியங்களைச் கவின்கலையுணர்வு அடிப்படையில் – அழகியல் நோக்கில் இவ்வாறு வகைப்படுத்தியுள்ளனர். 'பத்துப்பாட்டும்' இதற்குக் காட்டாகத் தக்கன.

## விருந்து வனப்பு

**விருந்தே தானும்**
**புதுவது புனைந்த யாப்பின் மேற்றே. (1495)**

விருந்து – புதியது. யாப்பு வடிவமும் பொருளும் முன்பு இன்றிப் புதிதாய்ப் படைப்பது. இலக்கியத்திற்குப் புதிய வரவுகளை இது குறிக்கும். "புதுவது புனைந்த – ஒருவன் சொன்ன நிழல்வழியன்றித் தானே தோற்றுவித்தல்". "விருந்தாவது முன்புள்ளார் சொன்ன நெறிபோய்ப் புதிதாகச் சொன்ன யாப்பின் மேலது". – இளம்பூரணம். 'அந்தாதி பார்த்து ஒரு அந்தாதியும் கலம்பகம் பார்த்து ஒரு கலம்பகமும்' பாடுவதன்று இது. இக்காலச் சிறுகதை, புதினம் முதல் புதுக்கவிதை வரை இது பொருந்தும்.

## இயைபு வனப்பு

**ஞகாரை முதலா னகார ஈற்றுப்**
**புள்ளி இறுதி இயைபு எனப்படுமே. (1496)**

இயைபுத்தொடை, இறுதி எழுத்தோ, சீரோ, சொல்லோ ஒத்து வருவது (1353). ஞணநமன யரலவழள என்னும் பதினொரு மெய்களை இறுதியாகக் கொண்டு முடிவன இயைபு வனப்புடையனவாம். இலக்கணம் உளதே தவிர, இவற்றுக்கான இலக்கியம் 'வீழ்ந்தன' (மறைந்தன) போலும் என இடைக்கால உரையாசிரியர்களே கூறியுள்ளனர்.

## புலன் வனப்பு

**சேரி மொழியால் செவ்விதில் கிளந்து**
**தேர்தல் வேண்டாது குறித்தது தோன்றின்**
**புலன் என மொழிப புலன் உணர்ந்தோரே. (1497)**

சேரி மக்களின் மொழியால் என்பது, பொது மக்களின் பேச்சு வழக்கின்படி அமைவன. தமிழ் இருவகை வழக்குடைய மொழி, பேசுவதுபோல் எழுதுவதில்லை; எழுதுவதுபோல் பேசுவதுமில்லை. தெருக்கூத்தில் மக்கள் பேச்சு வழக்கும் வரும். சாகுந்தலத்தில் மீனவர்கள் பேசும்போது அது சமற்கிருதமாகாமல், கிரந்த மொழியால் அமைகிறது. மறைமலையடிகள் மொழிபெயர்ப்பிலும் இதைக் காணலாம். தமிழிலும் இலக்கிய வழக்கினூடே 'சேரிமொழி' நாடகமாகும் போது கலந்துவந்திருக்கலாம். வாய்மொழிப்பாட்டு, கதை, நாடகம், இலாவணி எல்லாம் சேரிமொழி (மக்கள் பேச்சுமொழி) யால் ஆனவையே. செவ்விதிற் கிளந்து – அதனையும் செவ்விய முறையில் தொகுத்து. தேர்தல் வேண்டாது – ஆராய வேண்டாமல். குறித்தது தோன்றின் – குறித்த பொருள் செவ்வனே வெளிப்பட்டால் அது புலன்வனப்பு என்பர். புலவர் வழக்காற்றை அறிந்த 'புலன் உணர்ந்த' புலவர்களே, அதைப் புலன் வனப்பு என ஏற்பர் என்பதாம். 'வழக்குச்சொல்' வருவது. விளக்கத்தார் கூத்து; நாடகச் செய்யுளாகிய வெண்டுறைச் செய்யுள் என உரையாசிரியர்கள் கூறுவன கருதற்பாலன. சேரி மொழி என்பது பாடிமாற்றங்கள் என்பார் பேராசிரியர். இது சிற்றூர்ப் பேச்சு வழக்கு; இதனைக் கிராமிய வழக்கு என்பார் இக்காலத்தார் என்பது வெள்ளை வாரண விளக்கம்.

## இழைபு வனப்பு

**ஒற்றொடு புணர்ந்த வல்லெழுத்து அடக்காது**
**குறளடி முதலா ஐந்தடி ஒப்பித்து**
**ஓங்கிய மொழியான் ஆங்கவண் ஒழுகின்**
**இழையின் இலக்கணம் இயைந்ததாகும். (1498)**

மிக இனிதாக இசைப்பது இது. இதில் ஒற்றுடன் கூடிய வல்லெழுத்து வராது. இருசீரடியாம் குறளடி முதல் சிந்தடி, நேரடி, நெடிலடி, கழிநெடிலடி எனும் ஐந்தடியையும் நாற்சீரடியுடன் ஒப்புமைப்படச்செய்து, ஓங்கிய இசைக்குரிய மொழிகளுடன் பாடப்பெறுமானால், அஃது இழைபு வனப்பின் இலக்கணமாகும். கலி, பரிபாடலை எடுத்துக்காட்டுவர்.

## தொல்காப்பியரின் தொலைநோக்கு

### புறனடை

**செய்யுள் மருங்கின் மெய்பெற நாடி**
**இழைத்த இலக்கணம் பிழைத்தன போல**
**வருவ உள எனினும் வந்தவற் றியலான்**
**திரிபின்றி முடித்தல் தெள்ளியோர் கடனே. (1499)**

தொல்காப்பியர் ஒவ்வோர் இயலிலும் அதிகாரத்திலும் முடிவாகப் புறனடை ஒன்று கூறுவார். சொல்லப்பட்டன கொண்டு, சொல்லப்படாதனவற்றையும் அதே நெறியில் கொள்க என்பார். தாம் சொல்வதே முடிபு என்றோ, இத்துடன் முடிந்தது என்றோ கூறார். எதிர்கால வளர்ச்சிக்கும் இடம் தந்து கூறுவார்.

இவ் இறுதி நூற்பா, இலக்கியப் படைப்பில் எதிர்காலத்தில் இலக்கணத்தில் வழுவியவை போல எவையேனும் தோன்றினும் அவற்றையும் முன்னதாக இதுவரை கூறப்பட்ட இலக்கணத்தோடு மாறுபடாமல் கூடியவரை பொருத்தி ஏற்றுக் கொள்ளுதல் அறிஞர்தம் கடமையாகும் என்று கூறுகிறது.

செய்யுள் மருங்கின் – இலக்கியத்தில். மெய்பெற நாடி – பொருள்பட நன்கு ஆராய்ந்து. இழைத்த இலக்கணம் பிழைத்தன போல – இதுவரை நுண்ணிதாய் வரையறுக்கப்பட்ட இலக்கணத்திலிருந்து வழுவியன போல வருவன உள எனினும் என்ன செய்ய வேண்டும்?

இன்றும் புதியன வரின் ஏற்கத் தயங்குவர்; அது பழைய மரபை விட்டு விட்டதென்பர்; பிழைபட்டது என்பர்.

'இலக்கியத்திற்கு இறந்தகாலம் என்று ஒன்றில்லை' என்பது ஒப்பியல். அது என்றும் வாழ்வது; வளர்வது.

எனவே பிழை போலத் தோன்றினாலும் புறக்கணிக்காது, இதுகாறும் வந்த மரபுக்கு ஏற்பச் செய்து திரிபு படாமல், அவற்றைச் செம்மைப்படுத்தி ஏற்றுக்கொள்வதே தெளிவுடைய அறிஞர் கடமையாகும்.

தொல்காப்பியரின் தொலைநோக்கு காலங்கடந்தது; கால எல்லைகளையும் தாண்டி மொழியையும் இலக்கியத்தையும் நிலை நிறுத்துவது. இதற்குத் தொல்காப்பியக் கல்வி தமிழரிடையே மேன்மேலும் பரவவேண்டும்; ஆழப் பதிய வேண்டும். உலகத்திற்கு அறிமுகப்படுத்தப்பட வேண்டும்.

# செய்யுளியல்

## நூற்பா முதற்குறிப்பு அகரநிரல்

எண் – நூற்பா எண்


அஃதான் றென்ப 1339
அஃதொழித் தொன்றின் 1350
அகப்பாட்டு வண்ணம் 1480
அகவ லென்பது 1338
அகன்று பொருள் 1466
அகைப்பு வண்ணம் 1485
அங்கதந்தானே 1381
அங்கதப் பாட்டு 1415
அசைச்சீர் 1330
அசைகூன் ஆகும் 1305
அசையுஞ் சீரும் 1268
அடக்கியல் வாரம் 1401
அடிஇகந்து 1439
அடி இறந்து வருதல் 1291
அடி தொறுந் தலையெழுத் 1349
அடி நிமிர் கிளவி 1438
அடியின் சிறப்பே 1292
அடியுள் ளனவே 1290
அடைநிலைக் கிளவி 1392
அதுவே தானும் இருவகைத் 1430
அதுவே தானும் ஈரிரு 1423
அதுவே தானும் பிசியோடு 1437
அதுவே வண்ணகம் 1396
அந்நிலை மருங்கின் அறமுத 1363
அந்நிலை மருங்கின் வஞ்சி 1288
அம்போத ரங்கம் 1408
அவ்வவ மாக்களும் 1465
அவ்வியல் பல்லது 1343
அவற்றுள் பாஅ 1470
அவற்றுள் ஒத்தா 1388
அவற்றுள் சூத்திரம் 1425
அவற்றுள் நூலெனப் 1422
அவற்றுள் மாத்திரை 1260
அவைதாம் நூலி 1421
அவைதாம் பாஅ 1469
அவையடக் கியலே 1370
அளபெடை அசைநிலை 1274
அளபெடை தலைப்பெய 1346
அளபெடை வண்ணம் 1475
அளபெழின் அவையே 1354
அளவடி மிகுதி 1316
அளவியல் வகையே 1419
அளவுஞ் சிந்தும் 1315
அறுசீர் அடியே 1321
ஆங்ஙனம் விரிப்பின் 1308
ஆசிரிய நடைத்தே 1365
ஆசிரியப் பாட்டின் 1413
ஆசிரியம் வஞ்சி 1362
ஆசிரிய மருங்கினும் 1324
ஆயிரு தொடைக்கும் 1351
இசைநிலை நிறைய 1284
இடைச்சீர மருங்கிற் 1450
இடைநிலைப் பாட்டே தரவகப் 1391
இடைநிலைப் பாட்டே தரவு போக் 1389
இடையும் வரையார் 1326
இதுநனி பயக்கும் 1459
இயலசை ஈற்றுமுன் 1273
இயலசை மயக்கம் 1270
இயலசை முதலிரண் 1263
இயற்சீர் இறுதிமுன் 1276

| | | | |
|---|---|---|---|
| இயற்சீர் பாற்படுத் | 1285 | ஒத்தமூன் றாகும் | 1399 |
| இயற்சீர் வெள்ளடி | 1319 | ஒப்பொடு புணர்ந்த | 1432 |
| இயைபு வண்ணம் | 1474 | ஒருசீ ரிடையிட்டு | 1355 |
| இருசீர் இடையிடின் | 1356 | ஒருநெறி இன்றி | 1427 |
| இருவகை உகரமோ | 1262 | ஒருநெறிப் பட்டாங் | 1457 |
| இவ்விடத் திம்மொழி | 1468 | ஒருபான் சிறுமை | 1407 |
| இழுமென் மொழியால் | 1494 | ஒருபொருள் நுதலிய சூத்திரத் | 1424 |
| இறப்பே நிகழ்வே | 1458 | ஒருபொருள் நுதலிய வெள்ளடி | 1410 |
| இறுவாய் ஒன்றல் | 1353 | ஒருபோ கியற்றையும் | 1404 |
| இறுவாய் ஒப்பினஃ இன்சீ ரியைய | 1287 | ஒரூஉ வண்ணம் | 1483 |
| இன்பமும் இடும்பையும் | 1461 | ஒழிந்தோர் கிளவி | 1451 |
| ஈரசை கொண்டு | 1269 | ஒழுகு வண்ணம் | 1482 |
| ஈற்றயல் அடியே | 1325 | ஒற்றள பெடுப்பினும் | 1275 |
| உய்த்துணர் வின்றித் | 1460 | ஒற்றெழுத் தியற்றே | 1265 |
| உயிரில் லெழுத்தும் | 1301 | ஒற்றொடு புணர்ந்த | 1498 |
| உருட்டு வண்ணம் | 1488 | ஒன்றே மற்றுஞ் | 1431 |
| ஊரும் அயலும் | 1447 | கட்டுரை வகையான் | 1380 |
| எண்ணிடை ஒழிதல் | 1402 | கலித்தளை மருங்கின் | 1281 |
| எண்ணு வண்ணம் | 1484 | கலித்தளை யடிவயின் | 1282 |
| எண்வகை இயனெறி | 1461 | கலிவெண் பாட்டே | 1416 |
| எருத்தே கொச்சகம் | 1409 | காமப் புணர்ச்சியும் | 1442 |
| எழுசீ ரடியே | 1322 | கிழவன் தன்னொடுங் | 1448 |
| எழுசீர் இறுதி | 1333 | கிளரியல் வகையிற் | 1440 |
| எழுத்தன் வெஞ்சினும் | 1300 | குட்டம் எருத்தடி | 1373 |
| எழுத்து முதலா | 1335 | குற்றிய லுகரமும் | 1267 |
| எழுத்தொடுஞ் செல்லொடும் | 1435 | குறளடி முதலா | 1314 |
| எழுநிலத் தெழுந்த | 1420 | குறிலே நெடிலே | 1261 |
| ஏந்தல் வண்ணம் | 1487 | குறுஞ்சீர் வண்ணங் | 1477 |
| ஏழெழுத் தென்ப | 1294 | கூற்றும் மாற்றமும் | 1412 |
| ஏனை ஒன்றே | 1395 | கைக்கிளை தானே | 1376 |
| ஐவகை அடியும் ஆசிரிய | 1309 | கைக்கிளை முதலா | 1441 |
| ஐவகை அடியும் | 1307 | கொச்சக ஒருபோகு | 1405 |
| ஒண்தொடி மாதர் | 1449 | கொச்சகம் அராகஞ் | 1378 |
| ஒத்தா ழிசைக்கலி. | 1387 | சித்திர வண்ணம் | 1478 |
| ஒத்தா ழிசையும் | 1372 | சீர்கூன் ஆதல் | 1306 |

சீர்நிலை தானே 1298
சீரியை மருங்கின் 1313
செம்பொரு ளாயின் 1382
செய்யுண் மருங்கின் 1499
செய்யுள் தாமே 1384
செவியுறை தானே 1371
சொல்லிய தொடையொடு 1357
சொல்லொடுங் குறிப்பொடும் 1462
சொற்சீ ரடியும் 1379
ஞகார முதலா 1496
ஞாயிறு திங்கள் 1456
தரவின் 1400
தரவின் றாகித் 1406
தரவியல் 1394
தரவும் போக்கும் 1411
தரவே தானும் நாலடி 1390
தரவே தானும் நான்கும் 1398
தன்சீர் எழுத்தின் 1303
தன்சீர் உள்வழி 1312
தன்சீர் வகையினுந் 1311
தன்பா அல்வழித் 1278
தனிக்குறில் முதலசை 1264
தாஅ வண்ணம் 1471
துள்ளல் ஓசை 1340
தூக்கியல் வகையே 1344
தூங்கல் ஓசை 1341
தூங்கல் வண்ணம் 1486
தெரிந்த மொழியாற் 1497
தெரிந்தனர் விரிப்பின் 1359
தொடைநிலைவகையே 1360
தொன்மைத் தானே 1498
நலிபு வண்ணம் 1479
நாலெழுத் தாதி 1293
நாற்சீர் கொண்டது 1289
நிரனிறுத்தமைத்தலும் 1348
நிரைமுதல் வெண்சீர் 1317
நிரையவண் நிற்பின் 1332
நிறைமொழி மாந்தர் 1434
நுண்மையுஞ் சுருக்கமும் 1433
நெடுஞ்சீர் வண்ணம் 1476
நெடுவெண் பாட்டே குறுவெண் 1375
நெடுவெண் பாட்டே முந்நால் 1414
நேரவண் நிற்பின் 1272
நேரின மணியை 1426
நேரிற் றியற்சீர் 1331
பத்தெழுத் தென்ப 1295
பரத்தை வாயில் 1454
பரிபாட்டெல்லை 1418
பரிபா டல்லே தொகைநிலை 1377
பாட்டிடைக் கலந்த 1436
பாட்டிடை வைத்த 1429
பாட்டுரை நூலே 1336
பாணன் கூத்தன் 1446
பார்ப்பார் அறிவர் 1458
பார்ப்பான் பாங்கன் 1445
பாவிரி மருங்கினைப் 1364
புகழொடும் பொருளொடும் 1385
புறநிலை வாயுறை 1417
புறப்பாட்டு வண்ணம் 1481
பொழிப்பும் ஒரூஉம் 1347
போக்கியல் வகையே 1393
மண்டிலம் குட்டம் 1374
மரபே தானும் 1337
மருட்பா ஏனை 1342
மறைவெளிப் படுதலும் 1443
மனையோள் கிளவியுங் 1452
மாட்டும் எச்சமும் 1467
மாத்திரை முதலா 1361
மாத்திரை யெழுத்தியல் 1259
முச்சீர் முரற்கையுள் 1327

முச்சீ ரானும் 1304
முடுகியல் வரையார் 1323
முடுகு வண்ணம் 1489
முதல்தொடை பெருகிச் 1402
முற்றிய லுகரமும் 1266
முன்நிரை உறினும் 1271
மூவா றெழுத்தே 1297
மூவைந் தெழுத்தே 1296
மூன்றுறுப் படக்கிய 1428
மெய்பெறு மரபின் 1358
மெய்பெறும் அவையே 1414
மெல்லிசை வண்ணம் 1473
மொழிகரந்து 1383
மொழியினும் பொருளினும் 1352
மோனை எதுகை 1345
வசையொடும் நசையொடும் 1386
வஞ்சிஅடியே 1302
வஞ்சிச் சீரென 1277
வஞ்சித் தூக்கே 1328
வஞ்சி மருங்கின் 1279
வஞ்சி மருங்கினும் 1283
வண்ணகம் தானே 1397
வண்ணந் தாமே அவையென 1490
வண்ணந் தானே நாலைந் 1468
வல்லிசை வண்ணம் 1472
வழிபடு தெய்வம் 1367
வனப்பியல் 1491
வாயில் உசாவே 1455
வாயுறை வாழ்த்தே அவையடக் 1368
வாயுறை வாழ்த்தே வயங்க 1369
வாழ்த்தியல் வகையே 1366
விராஅய தளையு 1318
விராஅய் வரினும் 1310
விருந்தே தானும் 1495
வெண்சீர் ஈற்றசை 1286
வெண்டளை விரவியும் 1320
வெண்பா இயலினும் 1334
வெண்பா ஈற்றடி 1329
வெண்பா உரிச்சீர் 1280

# உ. மரபியல்

தமிழில் 'மரபு' என்பது பொதுவாகச் சொல் மரபையே குறித்தது. பின்னர் சொற்பொருள் வளர்ச்சிக்குப் பிறகே, அச்சொல் 'இலக்கிய மரபு' அனைத்தையும் குறித்தது. தொல்காப்பியர் செய்யுளியலில் 'மரபே தானும், நாற் சொல் இயலான் யாப்புவழிப் பட்டன்று' (1337) எனக் கூறுகிறார். இலக்கியத்துள் எடுத்தாளப் பெறும் இயற்சொல், திரிசொல், திசைச்சொல், வடசொல் என்ற நான்கையும் மரபுவழி ஆளவேண்டும் என்பது கருத்து. இம் மரபியலிலும், 'மரபுநிலை திரிதல் செய்யுட்கு இல்லை, மரபு வழிப் பட்ட சொல்லினான' (1590) என்று சொல் மரபே வலியுறுத்தப்படுகிறது.

உண்ணுதல், தின்னுதல், பருகுதல், அருந்துதல், அயிலுதல், சாப்பிடுதல் – இவற்றை இடமறிந்து பயன் படுத்தவேண்டும். பகர்தல், உரைத்தல், மொழிதல், பன்னுதல், விளம்புதல் என வாயாற் சொல்வதற்கு மட்டும் நாற்பதுக்கும் மேற்பட்ட சொற்கள் தமிழில் உள. அவை மரபறிந்து பயன்படுத்தப்பட வேண்டும்.

தொல்காப்பியர் 'மரபியல்' வகுத்திருப்பது, பெரிதும் அகத்திணைப் பாடல்களுக்கென்றே தோற்றுகிறது. அவற்றில்தான் கருப்பொருள்கள் என மரம் செடி கொடி முதல் விலங்கு பறவை இனம் வருகின்றன. அவற்றின் இளமைப் பெயர்கள், ஆண்பாற் பெயர்கள், பெண்மைப் பெயர்கள் பட்டியலிடப்படுகின்றன. யானை 'மேய்ப்பவன்' பாகன்; ஆடு மேய்ப்பவன் இடையன். இவை இரண்டும் ஒரு தன்மைப்பட்ட தொழிலினவாயினும் மாற்றிக் கூறல் கூடாது. உலக வழக்குப் பற்றி, இலக்கியத்துள்ளும் ஆளப்படுவது இது.

தொடர்ந்து மக்களின் குலமரபு வருவது வியப்பாக உளது (1570 – 1584). அதன்பிறகு மீண்டும் மரங்கள் பற்றியும் அவற்றின் உறுப்புக்கள் பற்றியும் வருகிறது. பின்னர் நூலின் மரபு என ஒன்று மிக விரிவாக இடம்பெற்று முடிகிறது.

பொருளதிகாரம் – செய்யுளியலுட்படப் பெரிதும் திணையிலக்கியம் பற்றியே அமைகிறது. அதிலும் குறிப்பாக அகத்திணைக்கே பேரிடம் தருகிறது. இம் மரபியலாலும் அது விளங்குகிறது.

குலமரபு பற்றி வருவனவும் நூன்மரபு பற்றி வருவனவும் இடைச் செருகல்களே என்பது, தொல்காப்பியத்தை ஐயமற, ஆழமாகப் பயின்ற அறிஞர்

முடிபு. திணைப்பாடல்களில் அந்தணர், அரசர், வைசியர், வேளாளர் என்று குலத்தொழில்கள் பற்றி யாண்டும் வரவில்லை. வைசியர் என்பது மிகப் பிற்பட்ட காலத்து வழக்கு. நூல், அதன் உட்பிரிவுகள். சூத்திரம், அதன் உரை பற்றிய யாவும் செய்யுளியலுள் வந்துள்ளன. மீண்டும் மரபியலில் அவை இடம்பெறுவது கூறியது கூறலாகும். தொல்காப்பியர் 'முறைப்பட எண்ணிப் புலம் தொகுத்துப் போக்கு (குற்றம்) அற்ற பனுவல்' படைத்தவர். அவர் இவ்வாறு எழுதியிருப்பார் என எண்ணுவது தவறான முடிபாகும்.

### இயல் கருத்து நிரல்

| இளமைப் பெயர்கள் | இளமைப் பெயர் பெறும் உயிரினங்கள் |
|---|---|
| பார்ப்பு | பறப்பவை, தவழ்பவை, குரங்கு |
| பறழ் | மூங்கா, வெருகு, எலி, அணில், நாய், பன்றி, புலி, முயல், நரி, குரங்கு |
| குட்டி | மூங்கா (கீரி), வெருகு (காட்டுப்பூனை), எலி, அணில், நாய், பன்றி, புலி, முயல், நரி, குரங்கு |
| குருளை | நாய், பன்றி, புலி, முயல், நரி |
| கன்று | யானை, குதிரை, கழுதை, கடமை, ஆன், எருமை, மரைஆ, கவரி, கராம், ஒட்டகம், ஓரறிவுயிராம் மரம் செடி கொடி |
| பிள்ளை | பறப்பவை, தவழ்பவை, பன்றி, புலி, முயல், நரி, குரங்கு, ஓரறிவுயிர்களாம் மரம் செடி கொடி |
| மகவு | குரங்கு, மக்கள் |
| மறி | யாடு, குதிரை, நவ்வி, உழை, புல்வாய் |
| குழவி | யானை, ஆ, எருமை, கடமை, மரைஆ, குரங்கு, முசு, ஊகம்(குரங்கு வகை), மக்கள், ஓரறிவுயிர்களாம் மரம் செடி கொடி. |
| போத்து | ஓரறிவுயிர்களாம் மரம் செடி கொடி |

நெல், புல்லுக்கு இளமைப் பெயரில்லை. புல் – இங்கு பயிர்வகை; மரவகை அன்று.

தொல்காப்பியர் காலத்துத் தமிழர், அறிவியல் அடிப்படையில் உயிரினங்களை ஆறு ஆகப் பகுத்தமை:

1. உடம்பில் தொட்டு அறியும் அறிவுடையது ஓரறிவுயிர் மரம் செடி கொடிகள்
2. தொடுதலுடன் நாச்சுவையுடையன – ஈரறிவுயிர்கள் நந்து (நத்தை), முரள் – சிப்பி.
3. தொடுதல், நாவுடன் முகர்தலறிவுடையன – மூவறிவுயிர்கள் சிதல், எறும்பு.
4. தொடுதல், நா, மூக்குடன் கண்ணறிவுடையன – நான்கறிவுயிர்கள் வண்டு, தும்பி.
5. தொடுதல், நா, மூக்கு, கண்ணுடன் செவியறிவுடையன – ஐந்தறிவுயிர்கள் மா (விலங்கு), புள் (பறவை)
6. ஐம்பொறி அறிவுடன் மனவுணர்வுடையன ஆறறிவுயிர்கள் (மக்கள்)

இவற்றின் இனமானவையும் இவற்றில் அடங்கும் என்பார்.

| ஆண்பாற் பெயர்கள் | ஆண்பாற் பெயர்பெறும் உயிரினங்கள் |
|---|---|
| எருது | காளை |
| ஏற்றை | ஆண் இனம் அனைத்துக்கும் |
| ஏறு | பன்றி, புல்வாய், உழை, கவரி, எருமை, மரை ஆ, பெற்றம் (பசு), சுறவு |
| ஒருத்தல் | புல்வாய் (மான்), புலி, உழை, மரைஆ, கவரி, கராம், யானை, பன்றி, எருமை. |
| களிறு | வேழம், கேழல் |
| சே | காளை |
| சேவல் | பறவையினம் (ஆண் மயில் தவிர்த்து) |
| இரலை | புல்வாய் (மான்) |
| கலை | கலை (மான்), உழை (மான்), முசு (குரங்கு) |
| மோத்தை | யாடு (ஆடு) |
| தகர் | யாடு |

| | |
|---|---|
| உதள் | யாடு |
| அப்பர் | யாடு |
| போத்து | பெற்றம், எருமை, புலி, மரை, புல்வாய், நீர்வாழ் சாதியாகிய சுறா, முதலை, இடங்கர், கராம், வரால், வாளை, மயில், எழால் |
| கண்டி | எருமை |
| கடுவன் | குரங்கு |
| ஆண் | ஆண்பால் அனைத்தும் |

| பெண்பாற் பெயர்கள் | பெண்பாற் பெயர்பெறும் உயிரினங்கள் |
|---|---|
| பேடை | ஒட்டகம், குதிரை, கழுதை, மரை, பறவை |
| பெடை | ஒட்டகம், குதிரை, கழுதை, மரை, பறவை |
| பெட்டை | ஒட்டகம், குதிரை, கழுதை, மரை, பறவை |
| ஆ | பெற்றம், எருமை, மரை |
| பெண் | மக்கள் |
| மூடு | யாடு |
| நாகு | எருமை, மரைஆ, பெற்றம், நந்து (நத்தை) |
| கடமை | யாடு |
| அளகு | கோழி, கூகை, மயில் |
| மந்தி | குரங்கு, முசு, ஊகம் |
| பாட்டி | பன்றி, நாய், நரி |
| பிணை | புல்வாய், நவ்வி, உழை கவரி |
| பிணவல் | பன்றி, புல்வாய், நாய் |
| பிணவு | பன்றி, புல்வாய், நாய் |
| பிணா | மக்கள் |
| பிடி | பெண் யானை |

சில புதிய வழக்குகளாகத் தொல்காப்பியர் குறிப்பன. அவர் காலத்திலேயே, இவை தவிர்க்கவொண்ணாதனவாயின.

குரங்கின் ஏறு கடுவன் எனப்பட்டது (ஆண்).

கூகை – கோட்டான்

கிளி – தத்தை

வெருகு – பூசை

குதிரை – சேவல்

பன்றி – ஏனம்

எருமை – கண்டி

பெண், ஆண், பிள்ளை என இருதிணைக்கும் பொதுவானவையாயிருந்தவை, பிறகு மக்களுக்கே உரியனவாயின.

1570 முதல் 15 நூற்பாக்கள் வருணாசிரமம் பற்றியவை. இவை இடைச்செருகல்கள், அந்தணர், அரசர், வணிகர், வேளாளர் பற்றிய இவை குழப்பமுடையன.

சொல் மரபு பற்றிய இயலில், இவை தொடர்பின்றி உள்ளன. தொடர்ந்து மீண்டும் சொல்மரபு பற்றிய நூற்பாக்கள் வருகின்றன. ஓரறிவுயிர் பற்றியவை அவை.

மர' வகையில் புறத்தே வயிரம் பாய்ந்து, அகத்தே துளையுடன் திண்மை இல்லாதவை 'புல்' வகை எனப்படும்.

உள்ளும் புறமும் வயிரம் பாய்ந்தவை 'மரம்' எனப்படும்.

'புல்' வகை மரங்களின் உறுப்புப் பெயர்கள்:

| | | |
|---|---|---|
| **தோடு** | **மடல்** | **ஓலை** |
| **ஏடு** | **இதழ்** | **பாளை** |
| **ஈர்க்கு** | **குலை** | |

'மர' வகை மரங்களின் உறுப்புப் பெயர்கள்:

| | | | |
|---|---|---|---|
| **இலை** | **முறி** | **தளிர்** | **கோடு** |
| **சினை** | **குழை** | **பூ** | **அரும்பு** |
| **நனை** | | | |

**இரண்டிற்கும் பொதுவானவை**

**காய் பழம் தோல் செதிள்**
**வீழ் (வீழுது)**

உலகச் சூழல் பற்றிய சொற்களை மரபு மாறாமல் ஆள வேண்டும்.

இந்த உலகம் நிலம் தீ நீர் வளி விசும்பு ஐந்தினால் கலந்து உருவான ஒன்றேயாகும். இவ்வுலகிலுள்ள உயர்திணை, அஃறிணை, ஐம்பால் அனைத்தையும் அவ்வவற்றின் மரபு நிலையாம் இயல்பு நெறி வழுவாமல் திரிபு இல்லாத சொற்களையே சொல்லி ஆளுதல் வேண்டும்.

1590 முதல் 1610 வரையுள்ள நூற்பாக்கள் நூல் பற்றிய மரபுகளாக உள்ளன. இவை பிற்காலப் பொதுப்பாயிரம் போன்றவை. இலக்கணத்திற்குச் சிறப்புப் பாயிரம் வேண்டும். பனம்பாரனார் சிறப்புப் பாயிரம் முன்னே உளது. பொதுப் பாயிரம் நூல் எழுதுதல், பாடம் சொல்லுதல், பாடம் கேட்டல் பற்றியதாகப் பிற்காலத்தே விளக்கப்பட்ட ஒன்று. தொல்காப்பியத்தில் அஃது இன்றேல் குறை எனக் கருதிய நூல் வல்ல புலவர் ஒருவர், அதைப் பாடி இணைத்திருக்க வேண்டும்.

இதில் மரபின் இன்றியமையாமை, நூலின் இலக்கணம், அதன் வகை, நூற்பா இலக்கணம், உரை விளக்க விவரங்கள், நூற் குற்றங்கள், நூலில் அமையும் உத்திகள் யாவும் விரிவாகக் கூறப்படுகின்றன.

செய்யுளியலில் நூலின் இலக்கணம் முதலிய யாவும் (1422 - 1428) கூறப்பட்டிருப்பதால், இங்கு மீண்டும் அவையே வேறு விதமாக வருவது கூறுவது கூறலாகும். இவ்வாறு நூற்குற்றம் அமைய எழுதுவது தொல்காப்பிய நெறிமுறைக்கு முரணானது.

## மரபியல்

### உயிரினங்களின் இளமைப் பெயர்கள்

**மாற்றரும் சிறப்பின் மரபியல் கிளப்பின்**
**பார்ப்பும், பறழும், குட்டியும், குருளையும்**
**கன்றும், பிள்ளையும், மகவும், மறியும் என்று**
**ஒன்பதும் குழவியோடு இளமைப் பெயரே. (1500)**

மரபு என்பது மாற்றுதற்கு அரியது; மாற்றக் கூடாதது; மாற்றினால் பொருள் விளங்காதது. பனை ஓலையைப் பனை இலை என்பது வழக்கில்லை. வாழை ஓலை என்று யாராவது சொல்வார்களா? தென்னம்பிள்ளை என்பது ஒரு சொல் மரபு. இவை மாற்ற அரும் சிறப்புடைய சொல் மரபுகள் உலக வழக்கிற்கும் இலக்கிய வழக்கிற்கும் பொதுவானவை.

பார்ப்பு, பறழ், குட்டி, குருளை, கன்று, பிள்ளை, மகவு, மறி, குழவி – இவை ஒன்பதும் தமிழில் பொதுவாக உயிரினம் அனைத்திற்கும் வழங்கும் இளமைப் பெயர்கள். பேராசிரியர் போத்து என்பதையும் அவர் கால வழக்கை ஒட்டிச் சேர்த்துக் கூறுகிறார். தமிழர்கள் பழங்காலத்தில் இயற்கையுடன் ஒன்றி, உயிரினங்களுடன் பழகி வாழ்ந்த காலத்துப் பெயர் மரபுகள் இவை. இன்றும் பார்ப்பு என்பதே பாப்பா ஆயிற்றென்பர். குட்டி, கன்று, பிள்ளை, மகவு, மறி, குழவி ஆகியன இன்றும் வழங்கவே காண்கிறோம். ஒருசில மாற்றங்கள் நேர்ந்துள்ளமை காலப் பழமையின் விளைவு.

மாற்ற அரும் – மாற்றிச் சொல்லுதற்கு அரிய. உயிரினங்களின் இளமைப் பெயர்கள் : பார்ப்பு பறழ் குட்டி குருளை கன்று பிள்ளை மகவு மறி – குழவி. குழவியுடன் சேர்த்து ஒன்பது. (போத்து என்பதும் பேராசிரியர் கூறுவது.)

### ஆண்பாற்பெயர்கள்

**எருதும், ஏற்றையும், ஒருத்தலும், களிறும்**
**சேவும், சேவலும், இரலையும், கலையும்**
**மோத்தையும், தகரும், உதளும், அப்பரும்,**
**போத்தும், கண்டியும், கடுவனும், பிறவும்**
**யாத்த ஆண்பால் பெயரென மொழிப. (1501)**

எருது, ஏற்றை (ஏறு), ஒருத்தல், களிறு, சே, சேவல், இரலை, கலை, மோத்தை, தகர், உதள், அப்பர், போத்து, கண்டி, கடுவன் - இவை போல்வன பிறவும், பாடல்களில் வைத்து யாக்கப்பட்ட ஆண்பாற் பெயர்களாகும். இவை உலக வழக்கிலிருந்து பெறப்பட்டவையே. போத்து இளமையையும் குறிக்கும் எனப் பேராசிரியர் குறித்தது அவர் கால வழக்கு. முன்பு இது ஆணையே குறித்துளது. ஆண்பால் பெயர் என வருவதால் ஆண் எனும்சொல் இயல்பாகப் பெறப்பட்டது. ஆண் உட்படப் பதினாறு பெயர்கள் குறிக்கப்பட்டுள்ளன. விடை, கிடாய் என்பன பின்னர் குறிக்கப்படுகின்றன. இவற்றுட் சிலவே இன்றும் வழங்குவன.

**ஆண்பால் பெயர்கள்: எருது ஏற்றை (ஏறு) ஒருத்தல் களிறு சே சேவல் இரலை கலை மோத்தை தகர் உதள் அப்பர் போத்து கண்டி கடுவன். யாத்த - பாடல்களில் வைத்து யாக்கப்பட்ட. பிற என்றதனால் ஆண் விடை கிடாய் சேர்ப்பர். ஆண்பால் என வருவதிலேயே ஆண் இருப்பதால், அது பட்டியலில் இல்லை, போத்து - ஆணையே சிறப்பாகக் குறிக்கும். இளமையை இரண்டாவதாகவே கொள்ள வேண்டும்.**

**பெண்பாற்பெயர்கள்**

**பேடையும், பெடையும், பெட்டையும் பெண்ணும்**
**மூடும், நாகும், கடமையும், அளகும்,**
**மந்தியும், பாட்டியும், பிணையும், பிணவும்,**
**அந்தம் சான்ற பிடியொடு பெண்ணே. (1502)**

பேடை, பெடை, பெட்டை, பெண், மூடு, நாகு, கடமை, அளகு, மந்தி, பாட்டி, பிணை, பிணவு, பிடி ஆகியன பதின்மூன்றும் பெண்மைப் பெயர்கள். ஆ இதனுடன் சேர்ப்பர்; பசுவும் உண்டு. பேடு, பேடை, பெடை, பெட்டை - ஓர் அடிச் சொல்லிற் பிறந்தனவே. பிடி, பிணை, பிணா, பிணவு - ஓர் அடிச்சொல்லினவே. கடுவன், மந்தி எனவும் களிறு பிடி எனவும் ஆணும் பெண்ணும் குறிக்கப்பட்டன.

**பெண்மைப் பெயர்கள்: பேடை, பெடை, பெட்டை, பெண் மூடு நாகு கடமை அளகு மந்தி பாட்டி பிணை பிணவு பிடி. அந்தம் சான்ற - அழகமைந்த (பிடி). ஆ (பசு) சேர்ப்பர். (கடமை என்பது மான் வகையுள் ஒன்று, இங்குள்ளது வேறு.)**

**தொகுத்துக் கூறியதை வகுத்துக் கூறுகிறார்**

**இளமைப் பெயர்கள் பறப்பன : பார்ப்பு, பிள்ளை**

**அவற்றுள்**

**பார்ப்பும் பிள்ளையும் பறப்பவற்று இளமை. (1503)**

பார்ப்பு, பிள்ளை – பறப்பனவாம் பறவைகளின் இளமைப் பெயர்கள்.

**பார்ப்பு, பிள்ளை இரண்டும் பறப்பனவற்றின் இளமைப் பெயர்கள். கிளிப்பிள்ளை.**

**ஊர்வன**

**தவழ்பவை தாமும் அவற்றோ ரன்ன. (1504)**

தவழ்ந்து ஊர்வனவும் அவைபோலப் பார்ப்பு, பிள்ளை எனப்படும்.

**தவழ்பவை – ஊர்வன. பார்ப்பு, பிள்ளை எனப்படும். கீரிப்பிள்ளை.**

**குட்டி**

**மூங்கா வெருகு எலி மூவரி அணிலொடு**
**ஆங்கு அவை நான்கும் குட்டிக்குரிய. (1505)**

குட்டி என அழைக்கப்படுபவை : மூங்கா (கீரி), வெருகு (காட்டுப்பூனை), எலி (எலிக்குட்டி), முதுகில் மூன்று கோடுள்ள அணில். (மூவரி அணில் என்றது, அதன் அழகில் ஈடுபட்டுக் கூறியதுபோல் தோன்றுகிறது). இன்று அணிற்பிள்ளை எனும் வழக்குளது. காலப் போக்கில் மாறியவை இவைபோல் சிலவுள.

**குட்டி எனப்படுவன மூங்கா (கீரி), வெருகு (காட்டுப்பூனை), எலி, (முதுகில் மூன்று கோடுள்ள) அணில். எலிக்குட்டி, அணிற்குட்டி.**

**பறழ்**

**பறழ் எனப்படினும் உறழ் ஆண்டு இல்லை. (1506)**

மேலே கூறிய உயிரினங்களைக் குட்டி என்பதோடன்றி, பறழ் என்று கூறினும் தவறில்லை. இவை பேராசிரியர் காலத்திலேயே (14ஆம் நூற்றாண்டு) வழக்கு வீழ்ந்தன என்று கூறுகிறார் அவர். தொல்காப்பியரும் கூறுகின்ற முறையில் இஃது அன்றே அரிய வழக்காகிவிட்டது என்றுதான் குறிக்கின்றார்.

**மேற்கூறிய நான்கும் 'பறழ்' எனவும் படும். உறழ் – வேறுபாடு. 'இவை இக்காலத்து வீழ்ந்தன' என்பர் பேராசிரியர். அவர் காலத்திலேயே காட்டுக் கிடைக்கவில்லை. 'மந்தி வன்பறழ்' என்று குரங்குக்குப் பறழ் வருகிறது (குறு. 69).**

**குருளை**

**நாயே பன்றி புலி முயல் நான்கும்**
**ஆயுங் காலைக் குருளை என்ப. (1507)**

குருளை – எனும் இளமைப் பெயர் பெறுவன : நாய், பன்றி, புலி, முயல். இஃது இன்று அரிய வழக்கு. பழந்தமிழ் இலக்கியங்களில் காணப்படுவது.

**குருளை எனற்பாலன: நாய் பன்றி புலி முயல். ஆயுங்காலை – பாடல்களை ஆராயுமிடத்து. 'சாய்செவிக் குருளை' (நாய்), புலிக்குருளை.**

**நரியும் அற்றே நாடினர் கொளினே. (1508)**

ஆராய்ந்து பார்த்தால் நரியும் குருளை எனப்படும். இவ்வாறு தனித்துக் கூறப்படுவது அவை சிறுபான்மை என்பதைக் குறிக்கும்.

**நாடினர் – ஆராய்ந்து. நரியும் குருளை எனப்படும். தனி நூற்பாவில் வருவது, சிறுபான்மை வழக்கு என்பதற்காம்.**

**குட்டி, பறழ்**

**குட்டியும் பறழும் கூற்று அவண் வரையார். (1509)**

முன் சொன்ன நாய், பன்றி, புலி, முயல், நரி ஆகிய ஐந்தனுக்கும் குருளை என்பதேயன்றி குட்டி, பறழ் எனும் பெயர்களைச் சேர்த்து வழங்குவதும் உண்டு. நாய்க்குட்டி, புலிக்குட்டி, முன்பு சிறு வழக்காகக் குறிக்கப்படும் இது இன்று பெருவழக்காகவுளது.

**அவண் – முன் சொல்லிய ஐந்து. நாய் பன்றி புலி முயல் நரி. அவை குட்டி, பறழ் எனவும் வருதலை நீக்கமாட்டார்கள். நாய்க்குட்டி, புலிக்குட்டி. முன்பு சிறு வழக்காக இருந்தவை இன்று பெருவழக்காயின.**

**பிள்ளை**

**பிள்ளைப் பெயரும் பிழைப்பு ஆண்டு இல்லை**
**கொள்ளும் காலை நாய் அலங்கடையே. (1510)**

முன் சொன்ன ஐந்தனுள் நாய் அல்லாத மற்ற நான்கனையும் (பன்றி புலி முயல் நரி) பிள்ளை என அழைத்தாலும் தவறில்லை.

**நாய் அல்லாத மற்ற நான்கனுக்கும், பிள்ளை என அழைப்பதாலும் தவறில்லை.**

## மறி எனும் இளமைப்பெயர்

**யாடும் குதிரையும் நவ்வியும் உழையும்**
**ஓடும் புல்வாய் உளப்பட மறியே. (1511)**

மறி – எனப்படும் இளமைப் பெயர் பெறுவன: யாடு, குதிரை, நவ்வி, உழை, புல்வாய் எனும்இவை ஐந்தும். இவற்றுள் நவ்வி உழை புல்வாய் மூன்றும் மான் இன வகைகள்.

யாடு, குதிரை, நவ்வி, உழை, (விரைந்தோடும்) புல்வாய் யாவும் மறி என அழைக்கப்படும். (நவ்வி, உழை, புல்வாய் என்பன மான் இன வகைகள்.)

## குரங்குக் குட்டி

**கோடுவாழ் குரங்கும் குட்டி கூறுப. (1512)**

குட்டி என அழைக்கப்படுபவை முதலில் நான்கும் பிறகு ஐந்தும் என முன்னரே கூறப்பட்டது. (1505, 1509) மீண்டும் குரங்கும் குட்டி என அழைக்கப்படும் என்று கூறுகிறார். இதிலிருந்து குட்டி என்பதன் பெருவழக்கை அறியலாம். குரங்கின் இனமான ஊகமும் முசுவும் குட்டி எனப்படும் என்று உரையாசிரியர் குறிப்பிடுகின்றார்.

குரங்கையும் ‘குட்டி’ என்பர். கோடு – கிளை. அதுமட்டுமன்றிக் குரங்கின் இனமாகிய ஊகமும் முசுவும் ‘குட்டி’ எனப்படும் என்பது உரையில் காணப்படுகிறது.

## குரங்குக்கு மகவு பிள்ளை பறழ் பார்ப்பு

**மகவும் பிள்ளையும் பறழும் பார்ப்பும்**
**அவையும் அன்ன அப்பா லான. (1513)**

குரங்குவகைக்கு (ஊகம், முசு) மகவு, பிள்ளை, பறழ், பார்ப்பு என்பனவும் உரியவாம்.

அப்பாலான – அக் குரங்கு வகைக்கு. அவையும் அன்ன – மகவு, பிள்ளை, பறழ், பார்ப்பு என்பனவும் இளமைப் பெயர்களாகும்.

## கன்று

**யானையும் குதிரையும் கழுதையும் கடமையும்**
**மானொடு ஐந்தும் கன்று எனற்கு உரிய. (1514)**

கன்று – எனப்படும் இளமைப்பெயர் யானை, குதிரை, கழுதை, கடமை, மான் எனப்படும் ஐந்தனுக்கும் உரியது. மான் என்பதை ஆன் என்று பாடங்கொள்வர் பேராசிரியர்.

யானை குதிரை கழுதை கடமை (மான்வகை) மான் – இவை ஐந்தும் கன்று என அழைக்கப்படுதற்குரியன. ஆன் எனப் பாடங்கொள்வார் பேராசிரியர்.

**எருமையும் மரையும் வரையார் ஆண்டே. (1515)**

கன்று என்று எருமையையும் மரையையும் கூறுவது முண்டு.

ஆண்டே – அவ்வாறு ‘கன்று’ எனப்படுதற்கு. எருமை, மரை (மான்இனம்) இரண்டும் கன்று எனப்படும். வரையார் – அங்ஙனம் கூறுதலை நீக்கமாட்டார்கள்.

**கவரியும் கராமும் நிகர்அவற் றுள்ளே. (1516)**

கவரி (மானும்) கராமும் அவைபோலக் கன்று எனப்படும்.

கவரி (மான்வகை) கராம் – இரண்டும். அவற்றுள் நிகர் – அவை போலக் ‘கன்று’ என்பதற்கு ஒப்புமையுடையன. கராம் – முதலை.

**ஒட்டகம் அவற்றொடு ஒருவழி நிலையும். (1517)**

ஒட்டகமும் ஒரோவழிக் கன்று எனப்படும்.

ஒட்டகமும், ஒருவழி நிலையும் – ஒரோவழி கன்று எனப்படும். சிறுபான்மை வழக்கு.

## குழவி

**குஞ்சரம் பெறுமே குழவிப் பெயர்க் கொடை. (1518)**

குஞ்சரம் எனும் யானை குழவி எனப் பெயர் பெறும்.

குஞ்சரம் (யானை), குழவி எனப் பெயர் கொடுக்கப்படும்.

**ஆவும் எருமையும் அது சொலப்படுமே. (1519)**

ஆ, எருமை என்பனவும் குழவி என அழைக்கப்படும்.

ஆ, எருமை. அது – அக் குழவி எனும் இளமைப் பெயர்.

**கடமையும் மரையும் முதல்நிலை ஒன்றும். (1520)**

கடமை, மரை ஆகிய மான் இனங்களுக்கு முதலிற் கூறிய குழவிப் பெயர் பொருந்தும்.

கடமை, மரை (மான் இனங்கள்). முதல்நிலை – முதலிற் கூறிய 'குழவிப் பெயர்'. ஒன்றும் – பொருந்தும்.

**குரங்கும் முசுவும் ஊகமும் மூன்றும்**
**நிரம்ப நாடின் அப்பெயர்க் குரிய. (1521)**

குரங்கு, முசு, ஊகம் (குரங்கு வகை) மூன்றும் அக் 'குழவி'ப் பெயர் பெறுமிடங்களையும் ஆராய்ந்து காணலாம்.

குரங்கு, முசு, ஊகம். மூன்றும் குரங்கினம். நிரம்ப நாடின் – நன்கு ஆராய்ந்தால். அப் பெயர் – 'குழவி' எனும் பெயர்.

## குழவி, மகவு இரண்டும் மக்களின் குழந்தைப் பெயர்கள்

**குழவியும், மகவும் ஆ இரண்டு அல்லவை**
**கிழவ அல்ல மக்கள் கண்ணே. (1522)**

மக்களுக்கு குழவி, மகவு ஆகிய இரண்டுமல்லாதவை எதுவும் உரிமையுடையன அல்ல.

மக்களுக்குப் பொருந்துவன : குழவி மகவு. கிழவ அல்ல – வேறு எதுவும் உரிமையுடையன அல்ல.

## ஓரறிவுயிர் - பயிரினம் - பெறும் இளமைப்பெயர்கள்

**பிள்ளை குழவி கன்றே போத்து எனக்**
**கொள்ளவும் அமையும் ஓர்அறி வுயிர்க்கே. (1523)**

ஓர் அறிவுயிர்களாகிய மரம் செடி கொடிகளுக்குப் பிள்ளை, குழவி, கன்று, போத்து என நான்கு பெயர்களும் பொருந்தும்.

ஓரறிவுஉயிர் – பயிர்வகை. மரம் செடி கொடிகள், தொடுதல் உணர்வு மட்டும் உடையன. அவற்றுக்கான இளமைப் பெயர்கள்: பிள்ளை குழவி கன்று போத்து. (தென்னம் பிள்ளை, மரக்கன்று).

## நெல், புல்லுக்கு இளமைப் பெயர் இல்லை

**நெல்லும் புல்லும் நேரார் ஆண்டே. (1524)**

நெல்லுக்கும் புல்லுக்கும் (அறுகம்புல், சிறுபுல்வகை) இளமைப்பெயர் கூறும் வழக்கமில்லை.

நெற்பயிர், புல் - இரண்டிற்கும் அங்ஙனம் இளமைப்பெயர் கூறுதற்கு நேரார் - உடம்படார். இளமைப் பெயர் இல்லை. (புல் எனப்படும் மரவகை வேறு. இது பயிர் வகை. அறுகம்புல், புல்லரிசி.)

**முடிந்த முடிபு - தமது கால வழக்குப் பற்றியவை**

**சொல்லிய மரபின் இளமை தானே**
**சொல்லுங் காலை அவை அலது இலையே. (1525)**

நூல்களுள்ளும் உலக வழக்கிலும், இதுகாறும் கூறப்பட்டவையே இளமைப் பெயர்கள். இவை தவிர வேறு இல்லை. 'நாகு' என்பதை இளமைப் பெயராக உரையாசிரியர்கள் குறிப்பர். ஆனால் இது முன்பு பெண்மையைக் குறித்தது. காலப்போக்கில் ஒன்றற்கு உரிய இளமைப் பெயர், மற்றதற்கு மாறி வழங்கியதுமுண்டு. தொல்காப்பியரே இவை மாறிமாறி வழங்குவதை மேலே கூறியுள்ளார். இவை எடுத்துக்காட்டானவை. எனினும் முழுமையும் அறிய வழி காட்டுபவை; மாறாத சொல் மரபுகள் பலவுள என நினைவூட்டுபவை.

சொல்லிய மரபின் - நூல்களுள் சொல்லி வந்துள்ள மரபுப்படி அவை தவிரப் பிறிதில்லை. தொல்காப்பியர் கருத்துப்படி இவை மட்டுமே இளமைப் பெயர்கள். அவருக்குப் பிறகு 'நாகு' என இளமைப் பெயர் வழங்கியதை உரையாசிரியர் காட்டுவர். இது முன்பு பெண்மையைக் குறித்தது. காலப்போக்கில் இளமைப் பெயர்கள் ஒன்றற்குரியது மற்றதற்கு மாறி வழங்கியமையும் உண்டு.

**உயிர்களின் பாகுபாடும் அவற்றுக்கான காரணங்களும்**

**ஒன்று அறிவதுவே உற்று அறிவதுவே**
**இரண்டு அறிவதுவே அதனொடு நாவே**
**மூன்று அறிவதுவே அவற்றொடு மூக்கே**
**நான்கு அறிவதுவே அவற்றொடு கண்ணே**
**ஐந்து அறிவதுவே அவற்றொடு செவியே**
**ஆறு அறிவதுவே அவற்றொடு மனனே**
**நேரிதின் உணர்ந்தோர் நெறிப்படுத்தினரே. (1526)**

தொல்காப்பியர் தமக்கு முன்னதாக, இவ்வுலக உயிரினங்களை மிக நேரிதாக நன்கு உணர்ந்த சான்றோர் ஆறுவகையாக நெறிப்படுத்தினர் என்று கூறுகிறார். இது தமிழினத்துச் சான்றோரின் அறிவுக் கூர்மைக்கு ஒரு சான்று. நோபல் பரிசு பெற்ற பேரறிஞர் சந்திர சேகரன் உட்படப் பல அறிவியலாளர் மரம் செடி கொடி இனத்திற்கும் உயிருண்டு என்று ஆய்ந்து கூறியுள்ளனர். தொன்மைமிக்க காலத்தில் செடி கொடிகளும் பேசுவதாகக் கற்பனை செய்துள்ளனரே தவிர, அறிவியல் கண்டுபிடிப்பாக, இங்ஙனம் வரையறைப் படுத்தினோர், எவருமிலர்.

ஓரறிவுயிர் – தொடுதல் உணர்வு மட்டும் உடையவை.

ஈரறிவுயிர் – தொடுதலுணர்வுடன் நாவினால் சுவைத்தறிதல் இரண்டும்.

மூவறிவுயிர் – தொடுதல், நாச்சுவை, மூக்கால் முகர்தல் மூன்றும்.

நாலறிவுயிர் – தொடுதல், நாச்சுவை, மூக்கால் முகர்தல், கண்ணாற்காண்டல்.

ஐயறிவுயிர் – அவை நான்குடன் செவியாற் கேட்பது.

ஆறறிவுயிர் – முன்னவை ஐந்தும் ஐம்பொறியால் அறியும் ஐம்புல அறிவுகள் – அவற்றுடன் ஆறாவதாகிய மனத்தால் அறியும் அறிவும் உடைய உயிர்கள் மக்கள்.

ஐம்பொறி உடல், நா, மூக்கு, கண், செவி. இவற்றால் அறிவன ஐம்புலன்கள் எனப்படும். அவை முறையே தொடுதல், சுவை, மணம், ஒளி, ஓசை என்பன. பேராசிரியர் பொறியுணர்வு வேறு, மனவுணர்வு வேறு என்பார். ஈரறிவுயிர் முதல் மனவுணர்வும் உண்டென்பர் ஒருசாரார். மனம் படைத்த மனிதனைத் தவிரப் பிறவுயிர்களுக்குப் பொறியுணர்வே உண்டு. அவை சிந்திப்பதில்லை. பழக்கத்தால் அவை அங்ஙனம் நடப்பதாகக் கூறுவர்.

**ஓர் அறிவுயிர் – உற்று (தொட்டு) அறிவது. பயிர்கள் தட்பவெப்பம் அறியும்.**

**ஈர் அறிவுயிர் – உறுதலுடன் (உடம்பிற்படுதல், தொட்டறிவு) நாவினால் சுவைத்து அறிவது.**

**மூவறிவுயிர் – உறுதல், நாவுடன் மூக்கால் முகர்ந்தறிவது.**

**நாலறிவுயிர் – உறுதல், நா,மூக்குடன் கண்ணாற் காண்பது.**

**ஐந்தறிவுயிர் – உறுதல், நா, மூக்கு, கண்ணுடன் செவியாற் கேட்டறிவது.**

**ஆறறிவுயிர் – முற்கூறிய ஐம்பொறி அறிவுடன், மனத்தால் அறிவது.**

இவ்வாறு 'நேரிதின் உணர்ந்தோர் நெறிப்படுத்தினர்' - நன்கு தெளிந்து உணரவல்ல சான்றோர், முறைப்படுத்தியுள்ளனர். பொறியுணர்வும் மன உணர்வும் வேறு என்பர் பேராசிரியர். பொறியுணர்வுகள், ஐம்பொறிவரை பழக்கத்தால் வருவன என்பார் அவர். ஈரறிவுயிர் முதல் பொறியுணர்வுள்ளவற்றுக்கு, மனவுணர்வு உண்டென்பர் ஒருசாரார். இவை மேலும் ஆராய்தற்குரியன.

### ஓர் அறிவுடையன

**புல்லும், மரனும் ஓர் அறிவினவே**
**பிறவும் உளவே அக்கிளைப் பிறப்பே. (1527)**

புல் என்பது மூங்கில் போல உள்ளே துளையுடையவற்றுக்குப் பெயர். ஆம்பல் கொடி உள்ளே துளையுடையது. இங்ஙனம் உள் வயிரமில்லாதவை அனைத்தும் 'புல்' வகையின. 'புல்லாங்குழல்' எனும் பெயர், உட்துளையுடைய அனைத்தாலும் வாசிக்கப்பட்ட குழல் ஆகும். சிலம்பில் 'கொன்றையம்தீம் குழல், ஆம்பலம் தீம் குழல், முல்லையம் தீம் குழல்' என வருவன புல் வகையின. மரம் என்பன உள்ளும் புறமும் வயிரமுடையன. தேக்கு, வேம்பு போல்வன. இன்று எல்லாவற்றையும் மரம் என்கிறோம். இவை (மரம் புல் செடி கொடி எனும் பயிர்வகை) ஓர் அறிவாகிய - முதல் உணர்வாகிய உடல் உணர்வுடையன. உடலுணர்வு தொடுதல் உணர்வு. உடம்பில் படுவதனை அறிவது. கண் பார்வை இழந்தவர்க்கு இவ்வுணர்வு பல மடங்கு வலுவானது.

ஓர் அறிவுடையன புறத்தே வயிரமும் உள்ளே துளையுமான 'புல்' எனப்படும் வகையும் (மூங்கில்) உள்ளும் புறமும் வயிரமுடைய 'மரம்' எனப்படும் வகையும் (வேம்பு, தேக்கு) ஆகும். அக்கிளைப் பிறப்பு - அவற்றுக்கு இனமான, அவை போன்ற பிறப்புடையவை. இங்கு செடிகொடிகள் முதலாயின. ஓர் அறிவு உற்று அறிதல், தொடுதலுணர்வு தட்பவெப்பம் படுதலால் இவை மாறுவன. இடம் கிடைக்கும் திசை நோக்கிக் கிளைவிடுவன. 'பயிலத் தொடுங்கால் புலருமாகலின்' (பல முறை தொடத்தொட வாடுதல்) இவை தொடுதலுணர்வென்னும் உடம்பொடுபட்ட உணர்வுடையன என்பது பேராசிரியர் கருத்து.

### ஈர் அறிவுடையன

**நந்தும் முரளும் ஈர் அறிவினவே**
**பிறவும் உளவே அக்கிளைப் பிறப்பே. (1528)**

ஈரறிவுடையன தொட்டறிவோடு நாச்சுவையுணர்வின. அவற்றுக்கு இவை பழக்கத்தால் வருவதால் வேண்டியதைச் சுவைக்கின்றன என்பர். நந்து எனப்படும் நத்தை முரள் எனப்படும் இப்பி – இவற்றுக்கு இவ் இருவகை அறிவே உண்டு. சங்கு, கிளிஞ்சல் என இதன் இனம் பல வகைப்படும்.

**ஈரறிவுடையன: நந்து – நத்தை. முரள் – இப்பி (சிப்பி). அக்கிளைப் பிறப்பாய்ப் பிறவும் என்பன சங்கு, கிளிஞ்சல். தொடுதலுணர்வு தொட்டதும் ஓடுவது. இரண்டாவது பொறி உணர்வு சுவை. நாவால் சுவைத்து உணவை அறிவது.**

### மூன்று அறிவுடையன

**சிதலும் எறும்பும் மூஅறிவினவே**
**பிறவும் உளவே அக்கிளைப் பிறப்பே. (1529)**

மூன்று அறிவு தொடல், சுவையுடன் முகர்தல் (மூக்கறிவு) சேர்த்து மூன்றுமாகும். சிதல் (கறையான்), எறும்பு. அவற்றின் இனமான செல், ஈசல், மூதாய் (தும்பலப்பூச்சி, பட்டுப்பூச்சி) முதலியனவும் மூவறிவுடையன. இவை தாக்கிய வழியல்லது அறியாமையின் கண்ணில்லை என்பதும் உரப்பியவழி (ஓசையிட்டபோது) ஓடாமையின் செவியில்லை என்பதும் அறியப்படும் என்பார் பேராசிரியர்.

**மூன்று அறிவுடையன: சிதல்(கறையான்), எறும்பு. பிறவும் என்பன செல், ஈசல், மூதாய் (தும்பலப் பூச்சி) முதலியன. இவை தொடுதல், நாச்சுவையுடன் மூக்கறிவுடையன. எறும்பு இனிப்பிருக்குமிடம் அறியும்.**

### நால் அறிவுடையன

**வண்டும் தும்பியும் நான்கு அறிவினவே**
**பிறவும் உளவே அக்கிளைப் பிறப்பே. (1530)**

இவற்றுடன் கண்ணும் உடையன நாலறிவின. வண்டு, தும்பி, ஞிமிறு சுரும்பு, (வண்டினம்), ஈ, குளவி – இவற்றுக்குக் கண்ணும் முற்கூறியனவும் உண்டு.

**நான்கு அறிவின: வண்டு, தும்பி. பிறவும்: ஞிமிறு, சுரும்பு(யாவும் வண்டு வகையே), ஈ, குளவி முதலியன. இவற்றுக்குக் கண்ணுண்டு.**

### ஐந்து அறிவுடையன

**மாவும் புள்ளும் ஐயறிவினவே**
**பிறவும் உளவே அக்கிளைப் பிறப்பே. (1531)**

மேலே கூறிய நான்குடன் செவியறிவுமுடையன ஐந்தறிவுடைய உயிரினமாகும். விலங்குகள், பறவைகள், ஓசை கேட்டு ஓடுவதால் செவியறிவுண்டு. பிறவும் என்றதால் பாம்பு, மீன், முதலை, ஆமை, வெளவால் சேர்ப்பர். மக்களுள் ஆறாவது அறிவு பெறாதாரும் உறுப்புக்குறையுடையாரும் (ஊமை, குருடு, செவிடு) இதில் அடங்குவர் என்பர் உரையாசிரியர்கள்.

ஐந்தறிவுடையவை: விலங்குகள், பறவைகள். இவற்றுக்குச் செவியுண்டு. ஓசையைக் கேட்டு ஓடும். பிறவும் : பாம்பு, மீன், முதலை, ஆமை, வெளவால் – சேர்ப்பர் உரையாசிரியர்கள்.

### ஆறு அறிவுடையன

**மக்கள் தாமே ஆறு அறிவுயிரே**
**பிறவும் உளவே அக்கிளைப் பிறப்பே. (1532)**

மக்களுக்கு மெய் வாய் கண் மூக்கு செவி என ஐம்பொறிகளும் சுவை ஒளி ஊறு (தொடுதல்) ஓசை நாற்றம் (மணம்) என ஐம்புலன்களும் இருப்பதால் ஐயறிவும் ஆறாவதாக மனம் என ஒன்று பெற்று, நன்மை தீமை அறிவதாலும் சிந்திப்பதாலும் அவர்களை ஆறறிவுடைய உயிரினம் என்பார் தொல்லாசான். பிற உயிரினங்கள் குரங்கு, கிளி, மைனா எல்லாம் பழக்கப்படுத்தினால் அவ்வாறே செய்யும். யானை, சிங்கம், புலி, கரடிகளும் கூடப் பழக்கப் படுத்தப்படுவதைக் கண்டு மகிழ்கிறோம். இவை மனத்தால் சிந்தித்து நிகழ்வன அல்ல என்பர்.

மக்கள் ஆறறிவுடையார். ஆறாவது அறிவு மனத்தால் அறிவது. நினைதல், கனவு, நனவு யாவும் மனத்திற்குண்டு. சிந்தித்தல், நல்லது கெட்டது பகுத்தறிதல் உண்டு. அக்கிளைப் பிறப்பு என்பதற்கு உரையாசிரியர்கள் தேவர், அசுரர், இயக்கர் எனக் காட்டுவன பொருந்தா. 'விண்டவர். கண்டிலர்'. குரங்கு, யானை, கிளி முதலியவற்றுள் மனவுணர்வுடையவை உளவாயின் அவையும் ஆறறிவுயிராய் அடங்கும் எனப் பேராசிரியர்வழிக் குறிப்பாய் அறியலாம்.

ஐந்து பொறிகளாகிய மெய் வாய், மூக்கு, கண், செவி என்பன உலகை அறியும், வாயில்கள் ஆதலின் அவற்றால் அறிவதே

'அறிவெனப் பட்டது'. மனம் இவ் ஐந்தன் வழி அறிவதோடு, தானே தனித்தும் சிந்திக்கும் ஆற்றலுடையது. அறிவும் மனமும் ஒன்றா? அறிதலும் உணர்தலும் ஒன்றா? ஐந்தறிவுடையனவற்றுக்கெல்லாம் மனம் உண்டா? 'ஓரறிவுயிர்' என்றே, தொல்காப்பியர் ஆள்வதால் அதற்கும் உயிருண்டு என்பது உறுதிப்படுகிறதே? பொறியுணர்வு முந்தியதா? மனவுணர்வு முந்தியதா?

பொறியுணர்வென்பது தனக்கென அறிவின்றிப் பயிற்சி வயத்தால் நிகழ்வதா? மனவுணர்வால் அது அறிகிறதா? தேனை வாயுள் பெய்தவழி இனிக்கிறது; கண்ணுள் பெய்தவழிக் கடுக்கிறது. மனவுணர்வு இங்ஙனம் வேறுபடாது. இவை இரண்டும் வேறுவேறு என்பது உண்மையே. இவற்றிடையேயுள்ள இயைபைப் பலவாறு சிந்திக்கும் உரையாசிரியர்களுள், பேராசிரியர், 'அவையெல்லாம் வல்லார்வாய்க் கேட்டுணர்க' என முடிக்கிறார்.

தொல்காப்பியர் காலத்துக்கு முன்பிருந்தே சமணம் உட்படப் பல சமயத்தாரும், உயிர் வகைகள் பற்றிப் பலவாறு எண்ணியுள்ளனர். ஆயினும் தமிழ் முன்னோர், இவற்றை நுனித்தறிந்து ஆராய்ந்து தெளிந்து ஒரு வகைதொகைப் படுத்தியுள்ளனர். அதைத்தான் தொல்காப்பியர், தாம் மட்டுமன்று என அடக்கத்துடன் கூறுவாராய், 'நேரிதின் உணர்ந்தோர் நெறிப்படுத்தினரே' எனக் குறிப்பிடுகின்றார்.

## ஆண்பால் பெயர்கள்

### களிறு

**வேழக் குரித்தே விதந்து களிறு என்றல். (1533)**

வேழம் எனப்படும் யானையின் ஆண், 'களிறு' என நன்கு வேறுபடுத்திச் சொல்லப்படும்.

வேழம் - யானை. இதன் ஆண்பாற்பெயர் களிறு. களிறு - யானைக்குப் பொதுப்பெயராயும் வரும். அதனால் 'விதந்து' குறிப்பாக ஆணுக்குமட்டும் கூறுவதுண்டு என்று கூறுகிறார்.

**கேழல் கண்ணும் கடிவரை இன்றே. (1534)**

கேழல் என்னும் காட்டுப்பன்றியையும் 'களிறு' எனச் சிலபோது வழங்குவர். அது நீக்கப்பெறுவதில்லை.

கேழல் - பன்றி, கடிவரை இன்று - களிறு என்பது நீக்குதற்குரியதன்று.

### ஒருத்தல்

**புல்வாய் புலி உழை மரை கவரி**
**சொல்லிய கராமோடு ஒருத்தல் ஒன்றும். (1535)**

ஒருத்தல் – ஆணின் தலைமைக்குப் பெயர். புல்வாய் (மான்), புலி, உழை, மரை, கவரி, கராம் எனும் ஆறனுக்கும் பொருந்தும்.

**ஒருத்தல் எனும் ஆண்பாற்பெயர் புல்வாய் புலி உழை மரை கவரி கராம் எனும் ஆறுக்கும் பொருந்தும்.**

**வார்கோட்டு யானையும் பன்றியும் அன்ன. (1536)**

நீண்ட கொம்பையுடைய யானைக்கும் பன்றிக்கும் ஒருத்தல் பெயர் பொருந்தும். யானைக் குடும்பத்தின் தலைமை ஆண் யானை ஒருத்தல் எனப்படும். யானைக்கு வருவது சங்கப்பாடல்களில் பெருவழக்கு. தொல்காப்பியர் காலத்தில் அது அரிதாய் இருந்துளது.

**வார் கோட்டு யானை - நீண்ட கொம்பினையுடைய யானை. யானை, பன்றியும் ஒருத்தல் எனப்படும்.**

**ஏற்புடைத் தென்ப எருமைக் கண்ணும். (1537)**

எருமைக்கும் 'ஒருத்தல்' எனும் ஆண்பெயர் பொருந்தும். ஆக மேலே கூறிய ஒன்பதும் ஒருத்தல் பெயர் பெறும். அவற்றின் பெரும்பான்மை சிறுபான்மை வழக்காறு நோக்கி, மூன்று நூற்பாக்களில் கூறப்பட்டுள்ளதாகப் பேராசிரியர் கூறுவர்.

**எருமைக்கும் இச்சொல் ஏற்புடையது. ஆக மேலே கூறிய ஒன்பதும் ஒருத்தல் எனப்படும். இவை வழங்கும் பெரும்பான்மை சிறுபான்மை பற்றி மூன்று சூத்திரங்களாகக் கூறப்பட்டன.**

### ஏறு

**பன்றி புல்வாய் உழையே கவரி**
**என்று இவை நான்கும் ஏறு எனற்கு உரிய. (1538)**

**ஏறு, எனும் ஆண்பெயர் பன்றி, புல்வாய், உழை, கவரி எனும் நான்கனுக்கும் உரியது. பன்றி தவிர்த்தவை மான் இனம்.**

**'ஏறு' எனும் ஆண்பாலுக்குரியவை: பன்றி, புல்வாய், உழை, கவரி எனும் நான்கு.**

**எருமையும் மரையும் பெற்றமும் அன்ன. (1539)**

எருமையும் மரைஆவும் (காட்டுப்பசு) பெற்றமும் (மாடும்) முன்பு கூறிய ஏறு என அழைத்தற்குரியன. காளை மாடு ஆனேறு எனப்படும்.

**எருமையும், மரை ஆவும் (காட்டுப்பசு), பெற்றமும் (மாடும்) ஏறு எனற்குரியன.**

**கடல்வாழ் சுறவும் ஏறு எனப் படுமே. (1540)**

கடலில் வாழும் சுறாமீனின் ஆணும் ஏறு எனப்படும்.

### போத்து

**பெற்றமும் எருமை புலி மரை புல்வாய்**
**மற்று இவை எல்லாம் போத்து எனப் படுமே. (1541)**

போத்து என்பது ஓர் ஆண்பாற்பெயர். பெற்றம் (மாடு), எருமை புலி மரை புல்வாய் – இவை யாவும் போத்து எனப்படும்.

**'போத்து' எனும் ஆண்பாலுக்குரியன: பெற்றம் (மாடு) எருமை புலி மரை புல்வாய்.**

**நீர்வாழ் சாதியுள் அறு பிறப்பு உரிய. (1542)**

நீரில் வாழும் சாதியாகிய சுறா, முதலை, இடங்கர், கராம், வரால், வாளை எனும் ஆறும் போத்து எனும் பெயர் பெறும். சாதி – வகைமை, இனம் எனும் பொருளுடைய தமிழ்ச்சொல்.

**நீர் வாழ்சாதி – நீருள் வாழும் உயிர்வகை. சாதிதமிழ்ச் சொல்லே. அது பிறப்புப் பற்றியதன்று; வகைமை பற்றியது. அறுபிறப்பு: சுறா, முதலை, இடங்கர், கராம், வரால், வாளை. இவை போத்து எனப்படும்.**

**மயிலும் எழாலும் பயிலத் தோன்றும். (1543)**

மயில், எழால் (வல்லூறு) – இவை இரண்டுக்கும் 'போத்து'ப் பெயர் மிகுதியாகத் தோன்றும்.

மயில். எழாஅல் – வல்லூறு. பயிலத் தோன்றும் – இவை இரண்டுக்கும் 'போத்து'ப் பெயர் மிகுதியாக வழங்கும்.

## இரலை, கலை

**இரலையும் கலையும் புல்வாய்க் குரிய. (1544)**

புல்வாய் எனப்படும் மானுக்கு இரலை, கலை என்பன ஆணின் பெயர்கள்.

இரலை, கலை என்பன ஆண்பாற் பெயர்கள். இவை புல்வாய் மானுக்குரியன.

**கலை என் காட்சி உழைக்கும் உரித்தே. (1545)**

உழை எனப்படும் மானுக்கும் 'கலை' எனும் பெயர் உரியதாகும்.

உழை (மானுக்கும்) 'கலை'ப் பெயர் உரியது. காட்சி – பெயர் தோன்றுதல்.

**நிலையிற்று அப்பெயர் முசுவின் கண்ணும். (1546)**

'கலை'ப் பெயர் முசு எனப்படும் குரங்கு வகைக்கும் பொருந்தி நிலை பெற்றது.

முசு (குரங்கு). கலைப்பெயர் 'முசு'வுக்கும் பொருந்தி நிலை பெற்றது.

## மோத்தை, தகர், உதள், அப்பர்

**மோத்தையும் தகரும் உதளும் அப்பரும்**
**யாத்த என்ப யாட்டின் கண்ணே. (1547)**

யாடு (ஆடு) பெறுகின்ற ஆண் பெயர்கள் : மோத்தை, தகர், உதள், அப்பர்.

யாட்டிற்குரிய ஆண்பாற்பெயர்கள் : மோத்தை, தகர், உதள்,அப்பர். யாடு – ஆடு. யாத்த – நன்கு பொருந்திய.

## சேவல்

**சேவல் பெயர்க் கொடை சிறகொடு சிவணும்**
**மாயிரும்தூவி மயில் அலங் கடையே. (1548)**

சேவல் பெயர் சிறகுடைய பறவை இனம் அனைத்துக்கும் வரும். ஆனால் கரிய பெரிய தோகையையுடைய ஆண் மயிலை மட்டும் சேவல் என்பதில்லை. தோகையுடைமை காரணமாக, அது பெண்போல இருப்பதால் அதைச் சேவல் என்பதில்லை.

'சேவல்' – பெயர்க்கொடை – பெயர் வழக்கம். சிறகுடன் பொருந்திய பறவை இனம் அனைத்துக்கும் பொருந்தும். சிவணும் – பொருந்தும். மா– கரிய, இரும் – பெரிய, தூவி – தோகையையுடைய மயில். ஆனால் தோகையையுடைய ஆண்மயிலுக்குமட்டும் 'சேவல்' பொருந்தாது. அல்ங்கடை – அது அல்லாத மற்ற பறவைகளுக்கு. ஏன் மயிலைச் சேவல் என்பது இல்லை? ஆண்மயில் தோகையால் பெண் போல உளது. அதனால் சேவல் எனப்படுவதில்லை. "எனவே, செவ்வேள், ஊர்ந்த மயிற்காயின் அதுவும் நேரவும் படுமென்பது" எனப் பேராசிரியர் கூறுவது, அவர் முருகன்பாற்கொண்ட, பத்திமையைக் காட்டுகிறது. அதாவது முருகன் ஏறும் மயிலை மட்டும் சேவல் எனலாமாம்.

### ஏற்றை

**ஆற்றலொடு புணர்ந்த ஆண்பாற்கு எல்லாம்**
**ஏற்றைக் கிளவி உரித்தென மொழிப. (1549)**

ஆற்றல் மிக்க வலிமைவாய்ந்த ஆண் இனம் அனைத்திற்கும் 'ஏற்றை' எனும் பெயர் உரியது.

ஆற்றல் மிக்க ஆண்பால் உயிரினம் அனைத்துக்கும் 'ஏற்றை' எனும் பெயர் பொருந்தும். ஏறு, ஏற்றை என்பன வேறு வேறு பெயர்களளென்பர்.

### முடிபு

**ஆண்பால் எல்லாம் ஆண் எனற்கு உரிய**
**பெண்பால் எல்லாம் பெண் எனற்கு உரிய**
**காண்பவை அவையவை அப்பா லான. (1550)**

உயிரினங்களில், 'ஆண்' எனற்குரிய அடையாளம் நன்கு தெரிந்தவை – அதற்குரிய உடலமைப்புடையவை எல்லாம் ஆண் என அழைப்பதற்குரியன. ஆண் குரங்கு, ஆண் குருவி என்பது போலச் சொல்வர். காய்க்காத பனையை ஆண்பனை என்பதுண்டு. பெண் எனும்படியான அனைத்தும் 'பெண்' எனும் அடைமொழியுடன் கூறப்படுதற்குரியன. பெண் குரங்கு, பெண் பறவை, பெண் பனை.

இவ்வாறு தனிப் பெயர்களால் கூறுவதல்லாமல், ஆண்பாலின எல்லாவற்றையும் ஆண் பறவை, ஆண் குருவி, ஆண் குரங்கு என ஆண்

என்று கூறுவதுண்டு. பெண்பறவை, பெண்குரங்கு, பெண் யானை எனலும் உண்டு. அவையவை ஆண் பெண் என அறிதற்குரிய அறிகுறியுடன் கூடிய உடலமைப்புடன் காணப்படுமிடத்து, அவ்வாறு கூறுதற்குரியன.

## பெண்பால் பெயர்கள்

### பிடி

**பிடி என் பெண் பெயர் யானை மேற்றே. (1551)**

பெண் யானையைப் 'பிடி' என்பர்.

பெண் யானை 'பிடி' எனப்படும்.

### பெட்டை

**ஒட்டகம் குதிரை கழுதை மரை இவை**
**பெட்டை என்னும் பெயர்க்கொடைக்கு உரிய. (1552)**

பெட்டை என அழைக்கப்படுவன : ஒட்டகம் குதிரை கழுதை மரை ஆ.

'பெட்டை' எனற்பாலன: ஒட்டகம் குதிரை கழுதை மரை ஆ.

**புள்ளும் உரிய அப்பெயர்க்கு என்ப. (1553)**

பறவை இனம் அனைத்தும் பெட்டைப் பெயர்க்கு உரியன.

பெட்டைப் பெயர்க்குப் பறவை இனம் அனைத்தும் உரிய. அப்பெயர் – முற்சுட்டிய 'பெட்டை'ப் பெயர்.

### பேடை, பெடை

**பேடையும் பெடையும் நாடின்; ஒன்றும். (1554)**

பேடை, பெடை என்பனவும் முன்சொன்ன பெட்டைப் பெயர் போலப் பறவை இனத்துக்குப் பொருந்தும்.

பேடை, பெடை என்பனவும் பெட்டைப் பெயருடன் பொருந்தும். அதாவது முன்சொன்ன பறவைகளுக்கு உரியனவாகும்.

### அளகு

**கோழி கூகை ஆயிரண்டு அல்லவை**
**சூழும் காலை அளகு எனல் அமையா. (1555)**

அளகு எனும் பெண்பெயர் கோழி, கூகை இரண்டுக்கு மட்டும் வரும். கூகை – கோட்டான், ஆந்தை வகையுள் ஒன்று என்பர்.

**பறவையுள் கோழி, கூகை அல்லாதவை, ஆராயுமிடத்து 'அளகு' எனப்படா. எனவே கோழியும் கூகையும் மட்டுமே 'அளகு' எனும் பெண்பாற் பெயர் பெறும். கூகை – கோட்டான். ஆந்தைவகையுள் ஒன்று என்பர்.**

**அப்பெயர்க் கிழமை மயிற்கும் உரித்தே. (1556)**

மயிலுக்கும் சிறுபான்மை அளகு எனும் பெயர் உண்டு.

**'அளகு' எனும் பெயரின் உரிமை, மயிலுக்கும் உண்டு.**

**பிணை**

**புல்வாய் நவ்வி உழையே கவரி**
**சொல்வாய் நாடின் பிணை எனப்படுமே. (1557)**

பிணை எனும் பெண்பாற்பெயர் புல்வாய், நவ்வி, உழை, கவரி எனும் மான்வகைக்கு உரியதாகும்.

**பிணை எனும் பெண்பாற்பெயர் புல்வாய், நவ்வி, உழை, கவரி எனும் மான்வகைகளுக்கு உரியது. சொல்வாய் நாடின் – சொல் வழக்கை ஆராயுமிடத்து.**

**பிணவு**

**பன்றி புல்வாய் நாய் என மூன்றும்**
**ஒன்றிய என்ப பிணவின் பெயர்க் கொடை. (1558)**

பிணவு என்பது பன்றி, புல்வாய், நாய் எனும் மூன்றுக்கும் பொருந்தும்.

**'பிணவு' எனும் பெயர் பெறுபவை : பன்றி புல்வாய் நாய். ஒன்றிய – பொருத்தமுடையன.**

**பிணவல்**

**பிணவல் எனினும் அவற்றின் மேற்றே. (1559)**

பிணவல் என்பது முற்கூறிய பன்றி புல்வாய் நாய்க்கு உரியதே. பிணவு, பிணவல் எனப்பட்டது.

**'பிணவல்' என்பதும் பன்றி புல்வாய் நாய் மூன்றற்கும் உரியது.**

### ஆ எனும் பெண்மைப் பெயர்

**பெற்றமும் எருமையும் மரையும் ஆவே. (1560)**

ஆ எனும் பெண்பாற்பெயர் பெற்றம் (பசு), எருமை, மரைஆ (காட்டுப்பசு), மூன்றனுக்கும் உரியது.

**ஆ எனும் பெண்பாற்பெயர் பெற்றம் (பசு), எருமை, மரைஆ (காட்டுப்பசு), மூன்றற்கும் உரியது.**

### பெண், பிணா (பிணவு)

**பெண்ணும் பிணாவும் மக்கட்கு உரிய. (1561)**

உயர்திணை மக்களுக்கு பெண், பிணா இரண்டும் உரிய.

**மக்கட்கு - உயர்திணை மக்களுக்கு, பெண் பிணா இரண்டும் உரிய. பிணா பிணவு எனவும் வழங்கும்.**

### நாகு

**எருமையும் மரையும் பெற்றமும் நாகே. (1562)**

நாகு எனும் பெண்பாற் பெயர் எருமை, மரைஆ, பெற்றம் எனும் மூன்றனுக்கும் வழங்கும்.

**நாகு எனும் பெண்பாற் பெயர் பெறுவன: எருமை மரைஆ பெற்றம்.**

**நீர் வாழ் சாதியுள் நந்தும் நாகே. (1563)**

நீரில் வாழும் உயிரினவகையுள் நந்தும் நாகு எனப்படும். நந்து – பெண் நத்தை.

**நீர்வாழ் உயிர்வகையுள் (சாதி) நந்தும் (நத்தையும்) நாகு எனப்படும்.**

### மூடு, கடமை

**மூடும் கடமையும் யாடு அல பெறா. (1564)**

யாடு (ஆடு) ஒன்றே மூடு, கடமை எனும் பெண்பெயர் பெறும். இவை மிக முற்பட்ட வழக்கின என்பார் பேராசிரியர்.

யாடு (ஆடு) மட்டுமே மூடு கடமை எனும் பெண்பாற் பெயரைப் பெறும். பேராசிரியர் காலத்திலேயே இவை 'வழக்கினுள் அரிய' எனப்பட்டன.

### பாட்டி

**பாட்டி என்பது பன்றியும் நாயும் (1565)**

பாட்டி – பெண்பெயர், பன்றியும் நாயும் பாட்டி எனப்படும்.

பன்றி நாய் – 'பாட்டி' எனப்படும்.

**நரியும் அற்றே நாடினர் கொளினே. (1566)**

மிக அரிதாக ஆராயின் 'நரி'யும் பாட்டி எனப்படுதல் காணலாம்.

நரியும் 'பாட்டி' எனப்படும். நாடினர் – ஆராய்ந்து அறிந்துகொண்டால்.

### மந்தி

**குரங்கும் முசுவும் ஊகமும் மந்தி. (1567)**

மந்தி எனும் பெண்பெயர் குரங்குக்கும் அதன் வகைமையான முசுவுக்கும் ஊகத்திற்கும் வழங்கும்.

மந்தி எனும் பெண்பாற் பெயர் குரங்கு வகைகளுக்கு உரியது. அவை குரங்கு முசு ஊகம் என்பன.

### சில சிறப்பு வழக்குகள்

**குரங்கின் ஏற்றினைக் கடுவன் என்றலும்**
**மரம்பயில் கூகையைக் கோட்டான் என்றலும்**
**செவ்வாய்க் கிளியைத் தத்தை என்றலும்**
**வெவ்வாய் வெருகினைப் பூசை என்றலும்**
**குதிரையுள் ஆணினைச் சேவல் என்றலும்**
**இருள் நிறப் பன்றியை ஏனம் என்றலும்**
**எருமையுள் ஆணினைக் கண்டி என்றலும்**
**முடிய வந்த அவ்வழக்கு உண்மையின்**
**கடியலாகா கடன் அறிந்தோர்க்கே. (1568)**

தொல்காப்பியர் காலத்திலேயே சில வழக்குகள் வேறுபட்டு வழங்கியுள்ளன. இளமை ஆண் பெண்ணைக் குறிப்பதில் மிக அடிப்பட்ட வழக்குகள் தவிர மற்றவை மாறி வழங்குதல் இயல்பே. சில புதிய வழக்குகள் நிலைபெற வந்துவிட்டதால், அவற்றை நீக்க முடியாது என்கிறார் தொல்காப்பியர். வழக்காற்றுக்கு இலக்கணம் உட்பட வேண்டும் - கட்டுப்பட வேண்டிய அளவு வந்துவிடின் - கடிதல் (நீக்குதல்) இயலாது என்பது அவர் கருத்தாகப்படுகிறது. குரங்கின் ஆணினைக் கடுவன் என்றனர்; மரத்தில் வாழும் கூகையைக் கோட்டான் என்றனர்; செவ்வாய்க் கிளியைத் தத்தை என்றனர்; கொடிய வாயையுடைய காட்டுப் பூனையாகிய வெருகினைப் பூசை என்றனர்; பறந்து ஓடும் தன்மையுடைமையால் குதிரையுள் ஆணைச் சேவல் என்றனர்; இருள் போலும் கருநிறப் பன்றியை ஏனம் என்றனர்; ஆண் எருமையைக் கண்டி என்றனர். இவை பெரிதும் ஆண்பாற் பெயர்களாகவே உள்ளன.

தொல்காப்பியர் காலத்திலேயே சில வழக்குகள் பொது வழக்கினின்றும் வேறுபட்டு வழங்கியுள்ளன. ஏறு - ஆண் குரங்கு. மரம் பயில் - மரக்கிளையில் வாழும். வெவ்வாய் - பிற உயிர்களை மறைந்திருந்து கவ்வும் கொரடிய வாய், வெருகு - காட்டுப்பூனை. பறக்கும் குதிரை என்பராதலால் அது சேவல் எனவும் சொல்லப்பட்டது. முடிய வந்த வழக்கு - உலகில் பெரிதும் வழங்குவது, கடியலாகா - அவற்றை நீக்க இயலாது. கடனறிதல் - மரபை அறிதல்.

**சிறப்பு வழக்குகள் - மக்களுக்குரியவை**

**பெண்ணும் ஆணும் பிள்ளையும் அவையே. (1569)**

பெண், ஆண், பிள்ளை என்பன, உயர்திணை மக்களுக்கே உரியவாய் வழங்கத் தொடங்கியதும் உண்டு. ஏனெனில் முன்பு இவை இருதிணைக்கும் பொதுவாய் இருந்தவை.

**பெண் ஆண் பிள்ளை என்பன இருதிணைக்கும் பொதுவாயினும், முன்னர்ச் சுட்டியவைபோல, உயர்திணை மக்களுக்கே உரியனவாய் வருமிடங்களுமுண்டு.**

**இதுமுதல், அதாவது 1570 முதல் 1584 வரை நால்வகைச் சாதிபற்றி, பெயர் அல்லது சொல்மரபு அல்லாத நிலையில் நூற்பாக் கருத்துக்கண் உள. இடைக்காலத்தே வருணாசிரமம் செல்வாக்குப் பெற்ற காலத்தே இவை நுழைக்கப்பட்டிருக்கவேண்டும் என்பது நுண்மாண்**

நுழைபுல ஆய்வாளர் கருத்து. 1585 முதல் ஓரறிவுயிர் பற்றிய சொல் மரபுகள் தொடர்வதாலும், இவை இடைச்செருகல் என்பது உறுதிப்படுகிறது.

### அந்தணர்க்கு உரியவை

**நூலே கரகம் முக்கோல் மணையே**
**ஆயும் காலை அந்தணர்க்கு உரிய. (1570)**

நான்கு வகைக் குலவேறுபாடுகள் குலத்தவர் இயல்புகள்

அந்தணர்க்கு உரியவை முப்புரிநூல், கமண்டலம் (கரகம்), முக்கோல் தண்டு, மணை இருக்கை ஆகியன.

நூல் - முப்புரிநூல். கரகம் - கமண்டலம். முக்கோல் - தண்டு. மணை - இருக்கை. அந்தணத் துறவிகளின் கருவிகள்.

### அரசர்க்கு உரியவை

**படையும் கொடியும் குடையும் முரசும்**
**நடை நவில் புரவியும் களிறும் தேரும்**
**தாரும் முடியும் நேர்வன பிறவும்**
**தெரிவு கொள் செங்கோல் அரசர்க்கு உரிய. (1571)**

அரசர்க்கு உரியவை படை, கொடி, வெண்கொற்றக்குடை, முரசு, படைப்பயிற்சி பயின்ற குதிரை, பட்டத்து யானை, தேர், அடையாள மாலையாகிய தார், முடி எனப்படும் மகுடம் என்பன. இவை போலக் கவரி, அரியணை எனப் பொருந்தியன பிறவும் உள.

குடை - வெண் கொற்றக்குடை நடை நவில் புரவி - படைப்பயிற்சியாகிய நடை பயின்ற குதிரை. களிறு - பட்டத்து யானை. தார் - அடையாளமாலை. முடி- மகுடம். பிறவும் - கவரி, அரியணை முதலியன. நேர்வன - பொருந்தியன. இவை அரசர்கட்கு உரியன.

### அந்தணர்க்கு உரியன அரசர்க்கும் பொருந்தும்

**அந்தணாளர்க் குரியவும் அரசர்க்கு**
**ஒன்றிய வரூஉம் பொருளுமார் உளவே. (1572)**

அந்தணர்க்குக் கூறப்பட்டவற்றுள் அரசர்க்குப் பொருந்தி வருவனவும் சிலவுள.

அந்தணர்க்குரியன சில அரசர்க்குப் பொருந்தியன வருமாம்.

### அரசர்க்குரியன அந்தணர்க்கு இல்லை

**பரிசில் பாடாண் திணைத் துறைக்கிழமைப் பெயர்**
**நெடுந்தகை, செம்மல், என்றிவை பிறவும்**
**பொருந்தச் சொல்லுதல் அவர்க்குரித்து அன்றே. (1573)**

பரிசில், பாடாண் திணை துறைகட்குரிய பெயர்களாகிய நெடுந்தகை, செம்மல் என்பனவும் அவை போல்வன பிற பெயர்களும் அந்தணர்க்குப் பொருந்துமாறு கூறுவதில்லை.

**பரிசில் துறைக்கும் பிற பாடாண் திணைத் துறைகட்கும் உரிய பெயர்களாகிய நெடுந்தகை, செம்மல் போல்வனவும் பிறவும் அந்தணர்க்குப் பொருந்தச் சொல்லுதல் இல்லை.**

### ஊரும் பெயரும் கருவியும்

**ஊரும் பெயரும் உடைத்தொழில் கருவியும்**
**யாரும் சார்த்தி அவை அவை பெறுமே. (1574)**

எல்லாக் குலத்தவர்க்கும் அவரவர்க்கு ஏற்ப ஊர்ப்பெயர், இயற்பெயர், தொழிலுக்குரிய கருவிகள் சார்த்திக் கூறப்படும்.

### தலைமைக் குணச் சொல்

**தலைமைக் குணச் சொல்லும் தத்தமக்குஉரிய**
**நிலைமைக்கு ஏற்ப நிகழ்த்துப என்ப. (1575)**

தலைமைப் பண்பைக் குறித்துச் சொல்லும் பெயர்கள் அவரவர் நிலைமைக்கு ஏற்ப உயர்த்திக் கூறப்படும்.

**தலைமைக் குணச்சொல் – உயர்த்துக் கூறப்படும் புகழ்ச் சொல். அவரவர் தகுதிக்கேற்ப எல்லோர்க்கும் உண்டு.**

### படைக்கலனுக்குரியோர்

**இடை இருவகையோர் அல்லது நாடின்**
**படைவகை பெறாஅர் என்மனார் புலவர். (1576)**

அந்தணர் அரசர் வணிகர் வேளாளர் என்ற வரிசையில், இடைப்பட்ட அரசரும் வணிகரும் மட்டுமே படைக்கலம் ஏந்துதலும் படைப் பயிற்சியும் பெறுவர். இவர்களல்லாத அந்தணரும் வேளாளரும் போருக்குத் தகுதியுடையவரல்லர்.

இடை இருவகையோர் – அரசரும் வணிகரும். இவர்களைத் தவிரப் பிறர் படைக்கலம் ஏந்துதலும் பயிற்சியும் பெறார். அந்தணரும் வேளாளரும் போர் புரியத் தகுதியுடையரல்லர். இக் கருத்துக்கள் பலவும் சங்கப் பாடல்களில் காணப்படாதன; தமிழ்ப் பண்பாட்டிற்கு முரண்பட்டன. தமிழர் வரலாற்றிலும் இடம்பெறாதன.

### வணிகர்

**வைசியன் பெறுமே வாணிக வாழ்க்கை. (1577)**

வைசிகன் வாணிகம் செய்து வாழ்பவனாவான். (பழங்கால இலக்கியத்தில் காணப்படாத சொல் இது. வடமொழியிலும் வேசிமகன் எனப் பொருள்படுவது. தமிழில் வைசியன் என வழங்குவதும் பொருளற்ற சொல்லாகவே உளது என்பர் ஆய்வாளர்.)

வைசிகன் – பழங்காலத் தமிழ் இலக்கியத்தில், எதிலும் காணப்படாத சொல் இது. இது மிகப் பிற்பட்ட கால வழக்கு. வடமொழியிலும் வழுப்பட்ட வழக்கென்பர்.

### வணிகர் தொழில்

### எண்வகைக் கூலம் விளைவிக்கவும் வேண்டும்

**மெய்தெரிவகையின் எண்வகை உணவின்**
**செய்தியும் வரையார் அப்பாலான. (1578)**

நடைமுறையை ஆராயுமிடத்து, வணிகர்கள் எண்வகைக் கூலத்தையும் விளைவித்தற்கும் உரியர். அவையாவன: பயறு உழுந்து கடுகு கடலை எள்ளு கொள்ளு அவரை துவரை ஆகிய தானியங்கள்.

செய்தி – தொழில். மெய் தெரி வகையின் – உண்மையை ஆராயுமிடத்து. எண்வகை உணவு – எண்வகைக் கூலம் – தானியம்: பயறு உழுந்து கடுகு கடலை எள்ளு கொள்ளு அவரை துவரை. வணிகர் இவற்றை வாணிகம் செய்தலேயன்றி உழுது விளைவித்தற்கும் உரியர்.

### கண்ணி, தார் வணிகர்க்கும் உண்டு

**கண்ணியும் தாரும் எண்ணினர் ஆண்டே. (1579)**

தலை மாலையும் அடையாள மாலையும் வணிகர்க்கும் உண்டு என்பர்.

கண்ணி - தலைமாலை. தார் - அடையாள மாலை. இவை வணிகர்க்கும் உண்டெனக் கருதுவர்.

### வேளாளர் தொழில்

**வேளாண் மாந்தர்க்கு உழுதூண் அல்லது**
**இல்லென மொழிப பிறவகை நிகழ்ச்சி. (1580)**

வேளாளர்க்கு உழுது உண்பதே தொழிலாகும். பிறவகை வாழ்வு எதுவுமில்லை.

உழுது உண்பதே வேளாளர் தொழில், பிறவகைச் செயல் எதுவுமில்லை என்பதைச் சங்கப்பாடல்கள் மறுக்கின்றன.

### வேளாளர் அரசரிடத்திற் பெறுவன

**வேந்து விடு தொழிலின் படையும் கண்ணியும்**
**வாய்ந்தனர் என்ப அவர் பெறும் பொருளே. (1581)**

வேந்தன் ஏவியதைச் செய்யும் தொழிலின் காரணமாகப் படைக்கலமும் தலைமாலையும் வேளாளர் பெறலாம். 'வேளாளர் படைவகை பெறாஅர்' (1576) என மறுத்துவிட்டு, வேந்துவிடு தொழிலுக்குரியராவார் என்பது நேர்முரணாகப் படுகிறது.

வேந்துவிடு தொழிலின் - வேந்தன் ஏவுகிற தொழில் காரணமாக. படைக்கலமும் கண்ணியும் அவர்கள் பெறலாம். 'படைவகை பெறாஅர்' (1576) என்பதுடன் இது முரண்படுகிறது.

### அந்தணர் அரசரிடத்திற் பெறுவன

**அந்த ணாளர்க்கு அரசுவரை வின்றே. (1582)**

அந்தணர்களுக்கு அரச கருமங்களும் உண்டு. அரசராற் கொடுக்கப் பெற்று கொடி குடை கவரி முதலியன உடையவராதலும் நீக்கப்பெறாது. அவர்கள் அமைச்சராகவோ, புரோகிதராகவோ ஆகியவழி இவை உளவாகும் என்பர் இளம்பூரணர்.

அந்தணர்களுக்கு அரச கருமங்களும் அரசராற் கொடுக்கப் பெற்று கொடி குடைகவரி முதலியன உடையராதலும் நீக்கப்பெறாது. அமைச்சர், புரோகிதராகிய வழி இவை உளவாகும் என்பர் இளம்பூரணர்.

## வேளாளரல்லாத பிறரும் பெறுவன

**வில்லும் வேலும் கழலும் கண்ணியும்**
**தாரும் மாலையும் தேரும் வாளும்**
**மன்பெறு மரபின் ஏனோர்க்கும் உரிய. (1583)**

மன்னனால் ஏவப்பெறும் மற்றையோரும் வில், வேல், கழல், முடிக்கண்ணி, தார், மாலை, தேர், வாள் ஆகியவற்றைப் பெறுதற்குரியர்.

**மன் பேறு மரபின் ஏனோர்க்கும் - மன்னனது ஏவலைப் பெறுகின்ற மற்றவர்க்கும். வில், வேல், கழல், முடிக்கண்ணி, தார், மாலை, தேர், வாள் - இவை பெறுதற்குரியர்.**

## அவர்களில் தாழ்ந்தவர்க்கு

**அன்னராயினும் இழிந்தோர்க்கு இல்லை. (1584)**

அவர்களில் தாழ்ந்தவர்களுக்கு முன்பு சொல்லிய வில், வேல் முதலியன பெறும் உரிமை இல்லை.

இவற்றுள் எதுவும் சங்கப் பாடல்களில் காணாதன. முற்காலத்தில் இத்தகைய வருணாசிரம தருமங்கள் இங்கில்லை. வைசிகன் என்ற சொல்லே வழங்காத காலம் அது. இந்நூற்பாக்கள் பலரால் எழுதப்பட்டு, இடையிடையே ஏட்டில் சேர்க்கப் பெற்றவை என்பது தெளிவாகத் தெரிகிறது. இவை இடைக்காலத்தவை.

**இழிந்தோர் - உயர்ந்தோர் அல்லாதார். அவர்க்கு முன்பு சொல்லிய வில், வேல் முதலானவை இல்லை.**

**இவை அனைத்தும் இடைக்காலத்துப் புகுத்தப்பட்டவை. மேலும் குழப்பமாகவும் உள்ளன. சங்க இலக்கியத்திலும் தமிழர் வழக்கத்திலும் காணாதவை பல இவற்றிலுள.**

## ஓரறிவுயிரில் வேறுபாடு

**புறக் காழனவே புல் என மொழிப**
**அகக் காழனவே மரம் என மொழிப. (1585)**

புறத்தே வயிரமும் உட்துளையுமுடையவை 'புல்' எனப்படும். உள்ளும் புறமும் வயிரமுடையவை மரம் எனப்படும். இன்று எல்லாவற்றையும் மரம் என்கிறோம்.

புறத்தே வயிரமுடையவை 'புல்' எனப்பட்டன. தென்னை, பனை, கமுகு, மூங்கில். அகத்தே வயிரமுடையவை மரமெனப் பட்டன. விள, பலா. இங்கு மரபுச்சொற்கள் பற்றி வருவதால், இதுவே முன்னதின் தொடர்ச்சியாகும்.

**புல்வகையின் உறுப்புக்களின் பெயர்கள்**

**தோடே மடலே ஓலை என்றா**
**ஏடே இதழே பாளை என்றா**
**ஈர்க்கே குலை என நேர்ந்தன பிறவும்**
**புல்லொடு வரும் எனச் சொல்லினர் புலவர். (1586)**

*புல்வகையினது உறுப்புக்களின் பெயர்கள்*

வாழை இலை என்பதை வாழை ஓலை என்பதில்லை. தென்னங்கீற்று, பனை ஓலையைத் தென்னை இலை, பனை இலை என்பதில்லை. மொழி தெரியாதவரென நகைப்பிற்கு இடமாகும். இவையே 'சொல்மரபு' எனப்படும். எழுத்து, மரபு, இலக்கிய மரபு என்பன யாவும் வழிவழி வரும் வழக்காறுகளாகும். அவை போல் சொல்மரபும் மாற்றருஞ் சிறப்பினையுடையதாகும். 'எப்பொருள் எச்சொலின் எவ்வாறு உயர்ந்தோர், செப்பினர் அப்படிச் செப்புதல் மரபே' (388) என்பது நன்னூல், 'புல்' எனப்படும் 'மர' வகையின் உறுப்புக்கள் பல மரபு வழிப்பட்டன. அவை தோடு, மடல், ஓலை, ஏடு, இதழ் பாளை, ஈர்க்கு, குலை - இவற்றைப் போல வருவன பிறவும் 'புல்' வகையின் உறுப்புகளாகும்.

வாழை இலை, பனை மடல், தென்னை ஓலை என வருவன போல, சொல் மரபுகள் பல உலக வழக்கிலுள. இவை மாற்றவியலாதன. உள்வயிரமில்லாத பனை, தென்னை அனைய 'புல்' இன வகைகளின் உறுப்புக்கள் வழங்கப்படும் மரபு முறை: தோடு மடல் ஓலை ஏடு இதழ் பாளை ஈர்க்கு குலை - இவ்வாறு வழங்குவன. இவ்வாறு வருவன பிறவுமுள.

**மரவகை உறுப்புக்களின் பெயர்கள்**

**இலையே முறியே தளிரே கோடே**
**சினையே குழையே பூவே அரும்பே**
**நனை உள்உறுத்த அனையவை எல்லாம்**
**மரனொடு வரூஉம் கிளவி என்ப. (1587)**

இலை, முறி, தளிர், கோடு, சினை, குழை, பூ, அரும்பு, நனை இவற்றை உள்ளடக்கிய, இவை போன்ற எல்லாம் மரம் என்பதுடன் பொருந்திய உறுப்புக்களின் பெயர்களாகும். முறி – முற்றாத இலை. நனை – மொக்குள். குழை – கொழுந்து.

**மரவகை உள் வயிரமுடையவை. உள்ளே துளை போல இல்லாது முழுவதும் – உள்ளும் புறமும் திண்மையானவை. அவற்றின் உறுப்புக்களின் பெயர்கள் வருமாறு: இலை முறி தளிர் கோடு சினை குழை பூ அரும்பு நனை – இவை உள்ளிட்ட, இவை போன்ற அனைத்தும். கிளவி – சொல். முறி – முற்றாத இலை. நனை – மொக்கு. குழை – கொழுந்து.**

### இரண்டிற்கும் பொதுவான பெயர்கள்

**காயே, பழமே, தோலே, செதிளே,**
**வீழோடு என்றாங்கு அவையும் அன்ன. (1588)**

காய் பழம் தோல் செதிள் வீழ் – புல், மரம் இரண்டுக்கும் பொதுவாய் வழங்குவன. வீழ் – விழுது.

### ஐம்பெரும் பூதத்தாலாகிய உலகத் தோற்றமும் அதன் சொல் மரபுகளும்

**நிலம் தீ நீர் வளி விசும்போடு ஐந்தும்**
**கலந்த மயக்கம் உலகம் ஆதலின்**
**இருதிணை ஐம்பால் இயல்நெறி வழாஅமைத்**
**திரிவுஇல் சொல்லொடு தழாஅல் வேண்டும். (1589)**

இவ்வுலகம் என்பது நிலம் தீ நீர் வளி (காற்று) விசும்பு (ஆகாயம்) ஆகிய ஐம்பெரும் பூதமும் கலந்த கலப்பால் ஆகியது. இவ்வுலகமும் உலகப் பொருள்களும் இவ் ஐந்து பூதங்களால் உருவானவை. அழியும் போதும் இவ் ஐந்தாகவே மாறும். மீட்டுருவாக்கம் பெற்று இவை சேர்ந்தும் பிரிந்தும் பலவகைப் பொருள்கள் ஆகின்றன. மனித உடலுட்படத் தோன்றியும் மறைந்தும் உலகம் நடக்கிறது. இதிலுள்ள உயர்திணை அஃறிணை எனும் இருதிணையும் ஆண் பெண் பலர் ஒன்று பல எனும் இருதிணையும் பெயர்களனைத்தும் அவ்வவற்றின் மரபு வழக்கு மாறாமல் (வழுவாமல்), திரிவுபடாத நல்ல வடிவமைந்த சொற்களைக்கொண்டு வழங்க வேண்டும்.

இதனுடன் மரபியல் கருத்து முடிவுறுகிறது எனலாம்.

இதற்குப் பிறகு வருவன நூல் பற்றியன. செய்யுளியலில் நூல் பற்றி வந்தவை பல திரும்ப வருகின்றன. இடைக் காலத்தே நூலின் பொதுப்பாயிரம் என அறிஞர்கள் போற்றிய நூலின் பொது இலக்கணம், தொல்காப்பியத்தின் பின்னிணைப்பாக யாரோ ஓர் அறிஞரால் சேர்க்கப்பட்டுள்ளது. இஃது இல்லையென்றால் குறையாகிவிடும் என எண்ணி இது இடைச்செருகப்பட்டுள்ளது.

ஐம்பெரும்பூதம் கலந்த கலவையே இவ்வுலகம்: நிலம் தீ நீர் வளி(காற்று) விசும்பு (ஆகாயம்). இவை ஐந்தும் கலந்த கலவையே உலகிலுள்ள ஒவ்வொரு பருப்பொருளும், உலகமும். எந்த ஒரு பொருளிலும் இவற்றின் கலவையே உளது. இஃது உயர்திணை, அஃறிணை என இருதிணைப்படும். ஆண், பெண், பலர், ஒன்று, பல என ஐம்பாற்படும். இவற்றின் பாற்படும் பெயர்கள், குறியீடுகளாம் சொற்கள் அனைத்தையும் அவற்றின் மரபு வழக்கு வழுவாமல், திரிவுபடாத (பிழைபடாத) சொற்களால் சொல், அதன் வரன் முறையை மாற்றாது - சிதைக்காது தழுவிக் கொள்ளுதல் வேண்டும்.

### சொல் மரபு மாறுதல் கூடாது

**மரபுநிலை திரிதல் செய்யுட்கு இல்லை**
**மரபு வழிப்பட்ட சொல்லினான. (1590)**

இலக்கியத்திற்கு மரபு திரிதல் இல்லை. மரபு வழிப்பட்ட சொற்களால் ஆனவை இவ் இலக்கியங்கள்.

செய்யுட்கு - இலக்கியத்திற்கு. மரபுநிலை திரிதல் இல்லை - வழிவழியாக உலகிலும் இலக்கியத்திலும் வழங்கிவரும் மரபு திரிவு படுதல் இல்லை. செல்லினான - மரபுச் சொற்கள் ஆதலால். அவற்றை மாற்றுவது கூடாது.

### மரபு மாற்ற முடியாதது, மாற்றக் கூடாதது

**மரபு நிலை திரியின் பிறிது பிறிது ஆகும். (1591)**

மரபுகள் மாறினால், பொருளுணர்வுகள் வேறு வேறாகிவிடும் சொல்வோன் கருத்துக் கேட்பவனுக்குப் போய்ச் சேராது, திரிவுபடும். மரபுச் சொல்லை மாற்றக் கூடாது என்பது, முன்னே சொல்லி முடிந்ததுதான்.

மரபுகளை மாற்றினால், பொருள் உணர்வு வேறு வேறாகிச் சொல்வோன் கருத்துக் கேட்பவனுக்குப் போய்ச் சேராது.

**உயர்ந்தோர் வழக்கே மரபாகும்**
**மரபு தோன்றும் முறைமை**

**வழக்கு எனப்படுவது உயர்ந்தோர் மேற்றே**
**நிகழ்ச்சி அவர் கட்டு ஆகலான. (1592)**

மரபு என்பது உயர்ந்தோர்களின் வழக்காறேயாகும். உலக நிகழ்வுகள் பெரிதும் அவ் உயர்ந்தோர்களால் தோற்றுவிக்கப்பட்டு, அவர்களால் நிகழ்கின்றமையால், மரபுகளும் அவர்களின் வழிப்பட்டனவே.

உலக நிகழ்வுகள், உயர்ந்தவர்கள்பால் தோன்றி நிலைபெறுவனவே. ஆதலால் உலக வழக்கு, இலக்கிய வழக்கு எனப்படுவன, அவ் உயர்ந்தோர் கையாள்வனவேயாம். ஈண்டு உயர்ந்தோர் என்பது நிலைமையில், தகுதியில், தொழிலில், அறிவில், திறமையில் உயர்ந்தோர்.

**நூலின் இலக்கணம்**
**நூல் இருவகை**

**மரபு நிலை திரியா மாட்சிய ஆகி**
**உரைபடு நூல்தாம் இருவகை இயல**
**முதலும் வழியும் என நுதலிய நெறியின. (1593)**

நூல் என்பது முன்பு இலக்கண நூலையே குறித்தது. மரபுநிலை திரியாத மாண்பினையுடையதாய், உரைக்கப்படும் அந்நூல் யாக்கப்படும் முறைப்படி முதல்நூல், வழிநூல் என இருவகையின.

நூல் என்பது இங்கு இலக்கண நூலையே குறிக்கும். மரபு திரியாது உரைக்கப்படும் நூல் இருவகைப்படும். முதல் நூல், வழிநூல் என முன்னோர் கூறிய நெறியின.

**முதல் நூல்**

**வினையின் நீங்கி விளங்கிய அறிவின்**
**முனைவன் கண்டது முதல் நூலாகும். (1594)**

இயல்பாகவே வினைகளின் நீங்கிய விளங்கிய அறிவினையுடைய, இறைவன் படைத்தது முதனூலாகும். இறைவன் அனைய முன்னோன் ஒருவனால் படைக்கப்பட்டதுமாம்.

**இயல்பாகவே வினைகளின் நீங்கியவன் இறைவன். முனைவன் – முன்னவன். அறிவின் முன்னவன் – இறைவன் அனைய சான்றோனுமாம். அவன் இயற்றியது முதனூல்.**

**வழி நூல்**

**வழி எனப்படுவது அதன் வழித்தாகும். (1595)**

அம் முதல் நூலின் வழியாக, அதனைப் பின்பற்றி எழுதப்படுவது வழிநூலாகும்.

வழி – வழிநூல். முதல்நூலின் வழியாகத் தோன்றுவது.

**வழிநூல் வகை நான்கு**

**வழியின் நெறியே நால்வகைத்தாகும். (1596)**

வழிநூல் இயற்றுகின்ற நெறிகள் நான்கு வகைப்படும்.

**வழியின் நெறி – வழி நூல் இயற்றுதலின் வகை.**

**நால்வகை நூல்கள்**

**தொகுத்தல், விரித்தல், தொகைவிரி, மொழி பெயர்த்து**
**அதர்பட யாத்தலோடு அனை மரபினவே. (1597)**

முதனூல் சொன்னதைத் தொகுத்துச் சுருக்கிப் படைத்தல், அதனை விரித்துப் படைத்தல், தொகுத்தும் விரித்தும் இரு திறமும் படயாத்தல், மொழியாக்கம் செய்து, அம் முதனூலின் வழிப்படுமாறு படைத்தல் என இந்நான்கு மரபு நெறிகளையுடையது வழிநூல். 'மொழி பெயர்த்து அதர்ப்பட யாத்தல்' – மொழி பெயர்ப்பு எனத் தோன்றாவாறு மூல நூல்போலவே தோற்றுமாறு அதனொடு பொருந்தயாப்பது.

**முதனூல் சொன்னதைத் தொகுத்துச் செய்தல்; விரித்துச் செய்தல் முதனூலிற் சொல்லியதை தொகுத்தும் விரித்தும் செய்தல்; பிறமொழி நூலை மொழிபெயர்த்து, அம் மூலநூலின் வழிப்பட்டுத் தமிழ்மூல நூல்போலப் பொருந்தும்படி செய்தல், வழிநூல் இவ்வாறு நான்கு**

வகையின. முன்பு அந்நாளில் வடமொழி நூலைத் தமிழாக்கம் செய்வதையே இவ் வகையாகக் கருதினர்.

**இலக்கண நூலின் இயல்புகள்**

**ஒத்த சூத்திரம் உரைப்பின் காண்டிகை**
**மெய்ப்படக் கிளந்த வகையது ஆகி**
**ஈர்ஐங்குற்றமும் இன்றி நேரிதின்**
**முப்பத்து இரு வகை உத்தியொடு புணரின்**
**நூல் என மொழிப நுணங்கு மொழிப் புலவர். (1598)**

*இலக்கண நூலின் இலக்கணம்*

முதலில் கூறிய தொகுத்தல், விரித்தல், தொகைவிரி எனும் மூவகை இலக்கண நூலுக்கும் பொருந்திய விளக்கம் கூறின், அவை காண்டிகை உரையுடன் பொருள்பட விளக்கிக்கூறும் விளக்கவுரையும் பெற்று பத்துவகைக் குற்றமும் இல்லாமல், முறையாக முப்பத்திரண்டு உத்தியும் அமைந்து வருவனவாகும். நுட்பமைந்த மொழிப் புலவர் இங்ஙனம் கூறுவர். இவை பின்னைய நூற்பாக்களில் விளக்கப்படும். நூல் இலக்கணம் முன்னரே உளது (1422).

ஒத்த சூத்திரம் - முதலிற்கூறிய மூவகை நூலுக்கும் பொருந்திய நூற்பா. உரைப்பின் - உரை மூலம் விளக்கினால். காண்டிகையுரை. மெய்ப்படக் கிளந்த வகை - பொருள் பெற விரித்துக் கூறிய விளக்கவுரை. பத்துக் குற்றமும் இல்லாமல். நேரிதின் - முறையாக முப்பத்து இரண்டு உத்திகள். இவை அமைவனவே நூல் எனப்படுவன. நுணங்குமொழி - நுட்பமாய் உரைக்கவல்ல புலவர்.

**உரை எடுத்து அதன்முன் யாப்பினும், சூத்திரம்**
**புரைதப உடன்படக் காண்டிகை புணர்ப்பினும்**
**விதித்தலும் விலக்கலும் உடையோர் வகையொடு**
**புரைதப நாடிப் புணர்க்கவும் படுமே. (1599)**

சூத்திரத்திற்கு முன்னரே, உரை குறி விளக்கினும் குற்றமறக் காண்டிகையுரை சேர்த்தும் விதி முறையால் இவ்வாறு கூறுக எனவும் விலக்கும் முறையால் இன்னது தவிர்க்க எனவும் விலக்கும் முறையால் இன்னது தவிர்க்க எனவும் பொருந்திய வகையுடன் பிழையின்றி எழுதப்படுவதே நூலாகும்.

சூத்திரம் உரை எடுத்து அதன்முன் யாப்பினும் - சூத்திரத்திற்கு முன்னரே உரையைக் கூறுதல். புரைதப - குற்றம் கெட. காண்டிகை உரையை இணைத்தல். விதித்தலும் - இவ்வாறு கூறு என விதித்தலும். விலக்கல் - இவ்வாறு கூறலாகாதென விலக்கல். இதுவும் நூலின் இலக்கணம். கூறியது கூறலும் குழப்பமும் உடையவை இந்நூற்பாக்கள்.

**நூற்பாவின் இலக்கணம்**

**மேற் கிளந்து எடுத்த யாப்பின் உட்பொருளொடு**
**சில்வகை எழுத்தின் செய்யுட்டாகிச்**
**சொல்லுங்காலை உரைஅகத்து அடக்கி**
**நுண்மையொடு புணர்ந்த ஒண்மைத்து ஆகித்**
**துளக்கல் ஆகாத் துணைமை எய்தி**
**அளக்கல் ஆகா அரும்பொருட்டு ஆகிப்**
**பல்வகை யானும் பயன் தெரிவுடையது**
**சூத்திரத்து இயல்பு என யாத்தனர் புலவர். (1600)**

முன்பு கூறியபடி ஆடி நிழல் போல் விளங்கத் தோன்றும் யாப்பின் உட்பொருளுடன், சுருங்கிய அளவினவாம் எழுத்துக்களையுடைய சிறிய பாட்டாகி, பாடம் சொல்லும் போது விளக்கிக் கூறுதற்கேற்ற உரையை உள்ளடக்கி வருவது சூத்திரம். நுட்பமும் ஒளியுடைமையுமாகி மறுக்க முடியாத கருத்து வலிமையுடையதாய், அளக்கவியலா அரிய பொருள்களைக் கொண்டு பலவகையாலும் பயன் மிகவுடையது சூத்திரத்தின் இலக்கணமாகும்.

மேற் கிளந்து எடுத்த யாப்பின் உட்பொருளொடு - முன்பு கூறிய நான்குவகைப் பொருளுடன் (தொகுத்தல் விரித்தல் தொகைவிரி மொழிபெயர்ப்பு). சில்வகை எழுத்து - சுருக்கிக் கூறும் செய்யுள், சூத்திரம். உரை அகத்து அடக்கி - விரித்துரைக்கக் கூடிய கருத்துக்களை உள்ளடக்கி. நுண்மை - நுட்பம். ஒண்மை - ஒளியுடைமை, தெளிவு. துளக்கல் ஆகா - மறுக்க முடியாத. துணைமை - கருத்து வலிமை. பயன்மிக விளங்குவது சூத்திரம் எனும் நூற்பா. முன்னரே சூத்திர இலக்கணம் கூறப்பட்டுளது (1425).

**காண்டிகை உரை இயல்பு**

**பழிப்பில் சூத்திரம் பட்ட பண்பின்**
**கரப்பின்றி முடிவது காண்டிகை ஆகும். (1601)**

குற்றமற்ற சூத்திரத்துடன் பொருந்திய பண்பினையுடையதாய், பொருளைச் சிறிதும் மறைவின்றி விளக்குவது காண்டிகையுரையாகும். (காண்டிகை என்பதும் பிற்கால வழக்குச்சொல், இச் சூத்திர நடைகள் குழம்புவதைப் பார்த்தால், தொல்காப்பியர்க்கு இவற்றில் எவ்விதத் தொடர்புமில்லை என்பது புலப்படும். இருந்தாலும் முன்னர் வந்த தொல்காப்பியச் சொல் நடை சிலவற்றைப் பொருத்தமின்றிப் பெய்வது, போலியை உண்மையென்று காட்டுவதற்கேயாம்.)

பழிப்பு இல் – குற்றமில்லாத. பட்ட பண்பின் – பொருள் தோன்றுமாறு. கரப்பு இன்றி – மறைவு இல்லாமல். காண்டிகை உரை – சூத்திரப் பொருளை மறைவின்றி விளக்குமாம்.

**விட்டு அகல்வு இன்றி விரிவொடு பொருந்திச்**
**சூட்டிய சூத்திரம் முடித்தல் பொருட்டா**
**ஏது நடையினும், எடுத்துக் காட்டினும்**
**மேவாங்கு அமைந்த மெய்ந் நெறித்ததுவே. (1602)**

சூத்திரப் பொருளை விட்டு, நீங்காமல், விரிவாக விளக்கி, சூத்திரப் பொருளை முடிப்பதற்காகக் காரணகாரிய நடையும் எடுத்துக்காட்டுத் தருவதும் உடையதாய்ப் பொருந்தி அமைவதே அக்காண்டிகை உரையாகும்.

விட்டு அகல்வு இன்றி – சூத்திரப் பொருளை விட்டு நீங்காமல் விரிவாகச் சூத்திரக் கருத்தை முழுதும் விளக்குவதற்காக. ஏதுநடை – காரண காரிய நடை. எடுத்துக்காட்டு – உதாரணம் காட்டுதல். மேவாங்கு – ஆசிரியன் கருத்துப் பொருந்தி. மெய்ந்நெறித்து – பொருள்கூறும் நெறியுடையது காண்டிகை உரை.

### விரிவான உரை - விளக்கவுரை

**சூத்திரத்து உட்பொருள் அன்றியும் யாப்புற**
**இன்றியமையாது இயைபவை எல்லாம்**
**ஒன்ற உரைப்பது உரை எனப்படுமே. (1603)**

சூத்திரத்தினுள் உள்ள பொருளை மட்டுமன்றி, பொருந்தும்படி இன்றியமையாதுவரும் அனைத்தையும் இணைத்து, பொருந்தவுரைப்பது 'உரை' எனப்படும்.

விளக்கிவுரையை 'உரை' என்றே குறிக்கப்படுகிறது. சூத்திரத்துப் பொருள் மட்டுமல்லாது, அதனுடன் இயைபுடைய, இன்றியமையாத

அனைத்தையும் அச்சூத்திரப் பொருளொடு இணைத்து விளக்கியுரைப்பது 'உரை' எனப்படுமாம். ஒன்ற - பொருந்த.

**மறுதலைக் கடாஅ மாற்றமும் உடைத்தாய்த்**
**தன் நூலானும் முடிந்த நூலானும்**
**ஐயமும் மருட்கையும் செவ்விதின் நீக்கித்**
**தெற்றென ஒருபொருள் ஒற்றுமை கொளீஇத்**
**துணிவொடு நிற்றல் என்மனார் புலவர். (1604)**

இடைமறித்து வினவியும் அதற்கு விடை கூறியும் தனது நூலானும் முன்னைய முதனூலாலும் ஐயத்தையும் மயக்கத்தையும் முழுமையாய் நீக்கி, தெளிவாக ஒரு பொருளைப் பொருத்தமுற நிறுவி, துணிவொடு விளக்குதல் அவ் 'உரை'யின் இலக்கணமாம். விளக்கவுரையை வெறுமனே 'உரை' என்றே குறிக்கின்றார்.

மறுதலைக் கடாஅம் - இடைமறித்து வினவும் வினா. மாற்றமும் - அதற்கு விடையும். மறுத்து எழும் வினாவை எழுப்பி விடை கூறியும் தன்னூலாலும் தனது முதல் நூலாலும் அல்லது பிற துணைநூல்களாலும் ஐயமும் திரிபும் செவ்விதின் நீக்கி, தெளிவாக ஒரு பொருளை நிறுவி நிற்பது அவ் 'உரை' என்பர். மருட்கை - திரிபு, மாற்றியுணர்தல். தெற்றென - தெளிவாக. ஒற்றுமை கொளீஇ - நூலொடு பொருந்தும்படி.

**வழிநூலின் குறைபாடு**

**சொல்லப் பட்டன எல்லா மாண்பும்**
**மறுதலை யாயினும் மற்று அது சிதைவே. (1605)**

முன்னே குறித்த சூத்திரம், காண்டிகை, உரைபற்றிய மாண்பு அனைத்தும் மாறுபடவும் முதனூலுடன் ஒன்றாமலும் எழுதப்படின், அவ்வழிநூல் சிதைந்தது எனவே கொள்ளப்படும். அவ்வாறு வழிநூல் எழுதலாகாது என்பது கருத்து.

சொல்லப்பட்டன எல்லா மாண்பும் - சூத்திரம் காண்டிகை உரை எனச் சொல்லப்பட்ட மூன்றுக்கும் உள்ள இலக்கண மாண்பனைத்தும். மறுதலையாயினும் - அவற்றுக்கு மாறாகவும் முதனூலொடு மாறுபடவும் எழுதப்படின், அவ் வழிநூல், சிதைந்தது எனவே கொள்ளப்படும். அவ்வாறு வழிநூல் எழுதலாகாது என்பது கருத்து.

### முதனூலின் சிறப்பு

**சிதைவு இல என்ப முதல்வன் கண்ணே. (1606)**

முனைவன் செய்த முதனூலின் கண்ணே இத்தகைய சிதைவுகள் குற்றங்கள் எவையும் இரா.

முனைவன் செய்த முதல் நூலின் கண்ணே கூறியது கூறல் முதலிய குற்றங்கள் உளவாகா. சிதைவு - குற்றம்.

### வழிநூலின் குறை ஏற்படும் நிலை

**முதல் வழியாயினும் யாப்பினும் சிதையும்**
**வல்லோன் புணரா வாரம் போன்றே. (1607)**

வழிநூல், முதல்நூலின் வழியே படைக்கப்பட்ட தாயினும். நூலை யாக்கும்வகையில் சிதைய வாய்ப்புளது. இசைவல்லான் இசையமைக்காத இசைப்பாட்டுக் குறையுறுவது போல ஆகும் அது.

முதல்வழி ஆயினும் - வழிநூல் முதனூல் வழித்தாயினும். யாப்பினும் - தொகுத்தல் விரித்தல் முதலிய யாக்கும் வகைகளுட் சிதைவுற வாய்ப்புளது. வல்லோன் புணரா வாரம் - இசைவல்லவன் பண் பொருந்தியமைக்காத இசைப்பாட்டுப் போலப் பிழைபடும். அவ்வாறு குற்றமுண்டாகாதவாறு, வழிநூல் யாக்கப்பட வேண்டும். வாரம் - இசைப்பாட்டு. தே + வாரம் = தெய்வ வணக்கப்பாட்டு.

### நூலில் அமையக்கூடிய பத்துக் குற்றங்கள்

**சிதைவு எனப்படுபவை வசை அற நாடின்**
**கூறியது கூறல், மாறுகொளக் கூறல்**
**குன்றக்கூறல், மிகைபடக்கூறல்,**
**பொருள் இலமொழிதல், மயங்கக் கூறல்**
**கேட்போருக்கு இன்னா யாப்பிற்று ஆதல்**
**பழித்த மொழியான் இழுக்கம் கூறல்**
**தன்னான் ஒரு பொருள் கருதிக் கூறல்**
**என்ன வகையினும் மனங்கோள் இன்மை**
**அன்ன பிறவும் அவற்று விரி ஆகும். (1608)**

குற்றமற ஆராயின், நூற் குற்றங்கள் எனப்படுபவை வருமாறு:

பத்துக் குற்றங்கள்

1. கூறியது கூறல்
2. மாறுகொளக்கூறல் (முன்பின் முரண்)
3. குன்றக் கூறல் (வேண்டிய விளக்கமின்மை)
4. மிகைபடக் கூறல் (தேவைக்கு மேல் கூடுதலாகக் கூறுதல்)
5. பொருளில மொழிதல் (பயனற்றவற்றை விரித்தல்)
6. மயங்கக் கூறல் (பொருள் மயக்கம்)
7. கேட்பவர்க்குப் பா இனிமை இன்றிப் படைத்தல்.
8. பழியொடுபடும் குற்றமுடைய சொற்களால் இழிவுபடக் கூறுதல்.
9. தன்னான் ஒரு பொருள் கருதிக் கூறல் - மரபு வழியின்றித் தானே ஒன்றைப் படைத்துக்கொண்டு விளங்காதபடி கூறுதல்.
10. எந்தவகையிலும் மற்றவர்க்கு விளங்கும்படி கூறாமை. இவை போல்வன பிறவும் நூற் குற்றங்களாகும்.

சிதைவு - நூற்குற்றம். வசை ஆறு - குற்றத்தால் பழிச்சொல் உண்டாகாதபடி. அவை பத்து வகையினவும் முறையே வருமாறு: கூறியதையே திரும்பக்கூறல், முன் சொன்னதற்குப் பின் சொல்வது மாறுபடக் கூறல், வேண்டிய விளக்கமின்றிக் குறைவுபடக் கூறல், கூறவேண்டியதைவிட மிகுதியாகத் தோன்றும்படி கூறுதல், பயனற்றன கூறிப்போதல், தெளிவின்றிப் பொருள் மயக்கமுண்டாகக் கூறல், கேட்பவர்க்கு இனிமை பயவாது, சந்தவனப்பின்றி அமைதல், பழியொடுபடும் சொற்களால் இழிவு தோன்றக் கூறல், மரபு வழியன்றித் தானே ஒன்றைக் கருதிக்கொண்டு அதை மனங்கொள்ளும் படி கூறாமை. இவை போல்வன பிறவும் நூற் குற்றங்களாகும்.

**எதிர் மறுத்து உணரின் அத்திறத்தவும் அவையே. (1609)**

ஒருவன் கூறுவது, அவ்வாறு கூறியதற்கே மாறாகத் தோன்றும்படி எழுதினால் - அதாவது தன் கருத்தைத் தானே எதிராக மறுத்ததுபோல் பிறர் உணரும்படி எழுதினால் அவையும் குற்றங்களேயாம்.

எதிர் மறுத்து உணரின் - ஒருவன் கூறிச் செல்வது, சொல்வோன் கருத்துக்கே மாறுபடக் கேட்பவர் உணருமாறு கூறின்: அத்திறத்தவும்

அவையே - அத் தன்மையுடையனவும் குற்றங்களே. பேராசிரியர் மேலே கூறிய பத்துக் குற்றங்களையும் எதிர்மறுத்து உணரும்படி படைத்தால், அவை பத்து அழகுகளாகும் என்று இதை விளக்குகிறார். அது பொருத்தமாகத் தோற்றவில்லை.

### நூலின் உத்திகள்

ஒத்த காட்சி உத்திவகை விரிப்பின்
நுதலியது அறிதல், அதிகார வகையே
தொகுத்துக் கூறல், வகுத்து மெய்ந் நிறுத்தல்
மொழிந்த பொருளோடு ஒன்ற அவ்வயின்
மொழியாததனை முட்டின்று முடித்தல்,
வாராததனான் வந்தது முடித்தல்
வந்தது கொண்டு வாராதது உணர்த்தல்
முந்து மொழிந்ததன் தலை தடுமாற்றே
ஒப்பக் கூறல், ஒருதலை மொழிதல்
தன் கோள் கூறல், உடம்பொடு புணர்த்தல்
பிறன் உடம்பட்டது தான் உடம்படுதல்
இறந்தது காத்தல், எதிரது போற்றல்
மொழிவாம் என்றல், கூறிற்று என்றல்
நான்குறியிடுதல், ஒரு தலை அன்மை
முடிந்தது காட்டல், ஆணை கூறல்
பல்பொருட்கு ஏற்பின் நல்லது கோடல்
தொகுத்த மொழியான் வகுத்தனர் கோடல்
மறுதலை சிதைத்துத் தன்துணிபு உரைத்தல்
பிறன் கோட் கூறல், அறியாது உடம்படல்
பொருள் இடைஇடுதல், எதிர்பொருள் உணர்த்தல்
சொல்லின் எச்சம் சொல்லியாங்கு உணர்த்தல்
தந்துபுணர்ந்து உரைத்தல், ஞாபகம் கூறல்
உய்த்துக் கொண்டு உணர்த்தலொடு மெய்ப்பட நாடிச்
சொல்லிய அல்ல பிற அவண் வரினும்
சொல்லிய வகையால் சுருங்க நாடி
மனத்தின் எண்ணி மாசு அறத் தெரிந்துகொண்டு
இனத்திற் சேர்த்தி உணர்த்தல் வேண்டும்
நுனித்தகு புலவர் கூறிய நூலே.* (1610)

## நூலின் 32 உத்திகள்

பொருந்திய அறிவுடன் உத்திவகையை விரித்தெழுதுவதானால் அவை 32 ஆகும்.

1. நுதலியது அறிதல் - சொல்லியிருப்பது விளங்க எழுதுதல்.

*யாப்பு வகையில் ஒன்ற நூல்(1336). அடிவரையறை இல்லாததில் அஃது ஒன்று (1421). நூல் இலக்கணம், அதன் வகைகள், சூத்திரத்து இலக்கணம், நூலின் உட்பிரிவுகள், உரைவகைகளுள் உரைவிளக்கம் ஒன்றாதல் யாவும் செய்யுளியலில் வருகின்றன (1422 - 1429). அங்ஙனமாகவும் அவையே மீண்டும் மரபியலில் வருவது (1589 - 1609) கூறியது கூறலாகும். நூல் எழுதும் முறைபற்றிப் பொதுப் பாயிரம் என நன்னூலில் வருகிறது. இவை மிகச் சிறந்த நூலெழுது முறைபற்றிய இலக்கணங்கள். தொல்காப்பிய மரபியலில், 'நிலம் தீ நீர்வளி விசும்போடு ஐந்தும், கலந்த மயக்கம் உலகமாதலின்' (1588) எனவரும் நூற்பாவுடன் சொன்மரபு பற்றிய இலக்கணம் முடிகிறது. பின்னர் வருவன, பிற்சேர்க்கையாக, தொல்காப்பியத்தில் பிற்காலத்தே சேர்க்கப்பட்டன என்பதற்கு ஐயம் இல்லை. இடைக்காலத்தே 'பொதுப்பாயிரம்' என ஒன்று, இலக்கண நூல்களிலே, யாரோ சிறந்த புலவர் ஒருவரால் வகுக்கப்பட்டனவாதல் வேண்டும். அவற்றைத் தொல்காப்பிய இறுதியில் சேர்த்துள்ளனர். க. வெள்ளை வாரணனார் போன்ற பலரும் இதை மிகத் தெளிவுபட விளக்கி, இவை (வருணாசிரம தருமம் பற்றியவையும் நூல் பற்றியவையும்) இடைச் செருகலே என நிறுவி உள்ளனர்.

2. அதிகாரவகை - பகுப்பு முறை
3. தொகுத்துக் கூறல் - 'நகையே அழுகை'-- என்பது போலத் தொகுத்துக் கூறுதல்.
4. வகுத்து மெய்ந்நிறுத்தல் - அவற்றை வகுத்து ஒவ்வொன்றாகச் சொல்லுதல்.
5. மொழிந்த பொருளோடு ஒன்ற அவ்வயின், மொழியாததனை முட்டின்று முடித்தல் - கூறியதை வைத்துக் கூறாததையும் முட்டின்று முடித்தல் - அறியுமாறு செய்யும் ஓர் உத்தி.
6. வாராததனான் வந்தது முடித்தல் - பலவற்றில் கூறாததை வைத்தே கூறியதை அறியச் செய்தல்.

7. வந்தது கொண்டு வாராதது உணர்த்தல் – அவற்றில் கூறியதை வைத்துக் கூறாததை அறியச் செய்தல்.
8. முந்து மொழிந்ததன் தலை தடுமாற்று – வரிசை மாறின், காரணம் காட்டிக் கூறுதல்.
9. ஒப்பக் கூறல் – ஒப்புமையுடையவற்றைச் சேர்த்துக் கூறுதல்.
10. ஒருதலை மொழிதல் – இருபொருள்படும்போது, ஒன்றைத் தெளிதல்.
11. தன் கோள் கூறல் – தானே கண்ட தன் கோட்பாட்டைக் கூறல்.
12. உடம்பொடு புணர்த்தல் – சூத்திரத்திலேயே அதற்கான எடுத்துக்காட்டும் அமையக்கூறுதல்.
13. பிறள் உடம்பட்டது தான் உடம்படுதல் – பிற நூலாசிரியர் உடம்பட்டதைத் தானும் உடம்படுதல்.
14. இறந்தது காத்தல் – முன்பு கூறியதைப் பின்பும் உறுதி செய்தல்.
15. எதிரது போற்றல் – பின் வருவதற்குப் பாதுகாவலாக முன்னரே கூறி வைத்தல்.
16. மொழிவாம் என்றல் – பின்பு விளக்குவோம் எனல்
17. கூறிற்று என்றல் – முன்னரே கூறினோம் எனல்
18. தான் குறியிடுதல் – தான் புதிதாக ஒரு குறியீடு படைத்துக் கூறுதல்
19. ஒருதலை அன்மை – ஒருபக்கம் துணியப் படாததைப் பொதுப்படக் கூறுதல்
20. முடிந்தது காட்டல் – முன்பே தொல்லாசிரியர் கூறினர் எனச் சுட்டுதல்
21. ஆணை கூறல் – தானே ஒரு கருத்தை ஆணையிட்டுக் கூறல்
22. பல்பொருட்கு ஏற்பின் நல்லது கோடல் – பலபொருள் படுவனவற்றில் நல்லதை ஏற்றுக்கூறுதல்
23. தொகுத்த மொழியான் வகுத்தனர் கோடல் – எண்ணிக்கை கூறி வகுத்துக் கொள்ளுமாறு கூறுதல்
24. மறுதலை சிதைத்துத் தன் துணிபு உரைத்தல் – தன்னை மறுத்தவரைத் தான் மறுத்துத் தன்முடிபை நிலை நிறுத்துதல்.
25. பிறன்கோட் கூறல் – மேற்கோள் காட்டுதல்
26. அறியாது உடம்படல் – தான் அறியாத ஒன்றைப் பிறர் கூறியிருப்பின் அதை உடம்படுதல்
27. பொருள் இடையிடுதல் – தொடர்ச்சியின்றி இடையீடுபடக் கூறுதல்
28. எதிர்பொருள் உணர்த்தல் – எதிர்கால வழக்கிற்கும் ஏற்பன கூறல்

29. சொல்லின் எச்சம் சொல்லியாங்கு உணர்த்தல் – சொன்னதைக் கொண்டு, அதன் எச்சப் பொருளை உணர வைத்தல்

30. தந்து புணர்ந்து உரைத்தல் – உட்கருத்தை வெளிப்படுத்தி, சொன்னவற்றுடன் பொருந்திக் காட்டுதல்

31. ஞாபகம் கூறல் – முன்னர்க் கூறியவற்றையோ, இனமானவற்றையோ நினைவுபடுத்துதல்

32. உய்த்துக் கொண்டு உணர்த்தல் – ஒரு கருத்தை உய்த்துணர யூகித்து அறிய வழிவைத்தல்.

இவ்வாறு பொருள்பட ஆராய்வது பிற உத்திகள் மேலும் தோன்றின் அவையும் கொள்க. அவற்றை இங்குச் சொல்லிய வகைப்படி சுருங்க நாடி, மனத்தினால் சிந்தித்து, மாசு அறத் தெரிந்துகொண்டு, இவ் உத்தி இனத்தில் சேர்த்து உலகிற்கு உணர்த்தல் வேண்டும். நுண்ணிய அறிவுடைய புலவர்கள் படைத்த நூல்கள் இவ்வாறு அமையும்.

இவ்வுத்திகளுக்குக் கூறப்பட்டுள்ள விளக்கங்களில் ஒருசில வேறுவகையாக விளக்கப்படுவதுண்டு. இவை இலக்கண நூல்களுக்குச் சிறப்பாகவும் ஏனைய நூல்களுக்குப் பொதுவாகவும் அமைந்து பயன்படுவன.

ஒத்த காட்சி – நூலுக்குப் பொருந்திய. உத்திவகை 32 கூறப்படுகிறது. இவை நூலை எழுதுவோர் பலருக்கும் இன்றும் பொருந்தக் கூடியனவும் உள. முற்கால இலக்கண நூல்களுக்கே உரியனவும் உள. இன்றைய மேலை நாட்டாரின் ஆய்வேடு எழுதும் நெறிமுறைகளுடன் ஒப்பிடக் கூடியன பலவும் இருப்பது வியப்பளிப்பதாகும். பாட வேறுபாடுகள் சிலவுள. காலந்தோறும் பலராலும் உத்திவகைகள் கூறப்பட்டு வந்தனவுமுள. வெவ்வேறு விளக்கம் கூறுமாறு சில உத்திகள் உள்ளன. உத்தி – நூல் எழுதும் திறன். பனம்பாரனார், தொல்காப்பியப் பாயிரத்தில், புலந்தொகுத்தல், போக்கறு பனுவல், மயங்காமரபின் எழுத்துமுறை காட்டல் எனக் கூறியன பல பிற்பாடு இவ் உத்தித் திறன்களாக வளர்க்கப் பட்டன எனலாம். இவற்றை சூத்திரத்திலுள்ள வரிசைப்படி பொருள் காணலாம்.

1. சூத்திரம் நுதலியதை அறியும்படி எழுதுதல். 2. அதிகார வகைகள் பகுத்தல். 3. முதலில் தொகுத்துச் சொல்லுதல். 4. அவ்வாறு தொகுத்துச் சொல்லியதை வகுத்துப் பொருள்படச் சொல்லுதல். 5. கூறிய

பொருளுடன் பொருந்த, கூறாததையும் தடையின்றி உணர வைத்தல். 6. பலவற்றைக் கூறவேண்டிய இடத்தில் கூறப்படாதது விடுத்த ஒன்றனாலே, கூறப்பட்டதை முடிய உணர வைத்தல். 7. அத்தகைய இடத்தில் கூறியது கொண்டு, கூறாததை உணர வைத்தல். 8. முன்னர்ச் சுட்டிய முறையை வரிசை மாற்றிக் கூறவேண்டிய இடத்தில், அவ்வாறு காரணங்காட்டிக் கூறுதல். 9. ஒன்றைக் கூறிய வழி, அதனுடன் ஒப்புமையுடையவற்றையும் கூறல். 10. இருபொருள்படுமாறு உள்ளவற்றில், ஒன்றைத் தெளிவுபெறக் கூறுதல். 11. தன் கோட்பாட்டைக் கூறுதல். 12. சூத்திரத்தினுள்ளேயே அதற்கான உதாரணமும் அமையும்படி கூறுதல். 13. பிற நூலாசிரியர் உடம்பட்டதைத் தானும் உடம்படுதல். 14. முன்பு கூறியதைப் பின் வருவதால் காத்தல். 15. பின்னே வரும் கருத்திற்குப் பாதுகாவலாக முன்னர் உரைத்துப் போதல். 16. பின்னர் இதுபற்றி விளக்குவோம் எனல். 17. முன்னரே கூறினோம் எனல் (இடம் காட்டுதல்) 18. தான் புதிதாக ஒரு குறியீடு இட்டுக் கூறுதல். 19. ஒருபக்கம் துணியப்படாத கருத்துக்களைப் பொதுப்படக் கூறுதல். 20. முன்பே தொல்லாசியர் கூறினர் எனச் சுட்டுதல். 21. ஒரு கருத்தைத் தானே ஆணையிட்டுக் கூறுதல். 22. பல் பொருள்படுவனவற்றில் நல்லதை ஏற்றுக் கூறுதல். 23. எண்ணிக்கை கூறி அதை வகுத்துக் கொள்ளுமாறு கூறுதல். 24. தனக்கு மறுப்புக் கூறிய வழி, அதை, எதிர் மறுத்துத் தன் கருத்தை நிலைநிறுத்துதல். 25. பிறனது கோட்பாட்டை மேற்கோள் காட்டுதல். 26. தான் அறியாத ஒன்றைப் பிறர் கூறியிருப்பதை உடம்படுதல். 27. ஒரு பொருளைத் தொடர்ச்சிபடக் கூறாது. இடையீடுபடக் கூறுதல். 28. எதிர்காலத்தில் வரக் கூடிய பொருளுக்கும் - வழக்கிற்கும் ஏற்பன கூறுதல். 29. சொன்னதைக் கொண்டு, அதன்வழி அதன் எச்சப் பொருள்களை உணர்த்தல். 30. உட்பொருள் போல்வனவற்றைத் தந்து, சொன்னவற்றுடன் பொருத்திக் காட்டுதல். 31. முன்னர்க் கூறியதை நினைவுபடுத்துதல். ஒன்றற்கு இனமானவற்றை உணரவைப்பது இது. 32. ஒரு கருத்தைப் படிப்பவன் உய்த்துணர வழிவைத்தல். மெய்ப்படநாடி - நூல்களில் சான்றுகளின்படி ஆராய்ந்து இங்கு சொல்லாத உத்திகளையும் இது போலவே சேர்த்துக் கொள்க என்பதாம்.

மனத்தில் எண்ணி, பிழையின்றிச் சிந்தித்து, ஒன்றனொடு ஒன்று இயைபுடைய, இனமானவற்றை உணர்த்தல் வேண்டும். நுண்ணியதாக அறியும் புலவர்கள் கூறும் நூல்கள் இவ்வாறு அமைய வேண்டும்.

# மரபியல்

## நூற்பா முதற்குறிப்பு அகரநிரல்

எண் - நூற்பா எண்


அப்பெயர் 1556
அந்தணாளர் - அரசு 1582
அநந்தணாளர் - உளவே 1572
அவற்றுள், பார்ப்பும் 1503
அன்னராயினும் 1584
ஆண்பால் 1550
ஆவும் 1519
ஆற்றலொடு 1549
இடையிரு 1576
இரலையும் 1544
இலையே 1587
உரை எடுத்து 1599
ஊரும் பெயரும் 1574
எதிர்மறுத்து 1609
எருதும் 1501
எருமையும் - அன்ன 1539
எருமையும் - ஆண்டே 1515
எருமையும் - நாகே 1562
ஏற்புடைத்து 1537
ஒட்டகம் - உரிய 1552
ஒட்டகம் - நிலையும் 1517
ஒத்த காட்சி 1610
ஒத்த சூத்திரம் 1598
ஒன்றறி 1526
கடமையும் 1520
கடல்வாழ் 1540
கண்ணியும் 1579
கலை என 1545
கவரியும் 1516
காயே 1588
குஞ்சரம் 1518
குட்டியும் 1509
குரங்கின் 1563
குரங்கும் - உரிய 1521
குரங்கும் - மந்தி 1567
குழவியும் 1522
கேழல் 1534
கோடுவாழ் 1512
கோழி 1555
சிதலும் 1529
சிதைவில 1606
சிதைவு என 1608
சூத்திரத்து 1603
சேவல் 1548
சொல்ல 1605
சொல்லிய 1525
தலைமை 1575
தவழ்பவை 1504
தொகுத்தல் 1597
தோடே 1586
நந்தும் 1528
நண்டும் 1530
நரியும் 1508
நரியும் 1566
நாயே 1507
நிலம் தீ 1589
நிலையிற்று 1546
நீர்வாழ் - உரிய 1542
நீர்வாழ் - நாகே 1563
நூலே 1570

நெல்லும் 1524
படையும் 1571
பரிசில் 1573
பழிப்பில் 1601
பறழ் 1506
பன்றி -உரிய 1538
பன்றி - கொடை 1558
பாட்டி 1565
பிடி என் 1551
பிணவல் 1559
பிள்ளை குழலி 1523
பிள்ளைப் பெயரும் 1510
புல்லும் 1527
புல்வாய் நவ்வி 1557
புல்வாய் புலி 1535
புள்ளும் 1553
புறக்காழன 1585
பெண்ணும் ஆணும் 1569
பெண்ணும் பிணாவும் 1561
பெற்றமும் - ஆவே 1560
பெற்றமும் - படுமே 1541
பேடையும் - ஒன்றே 1554
பேடையும் - பெண்ணே 1562
மகவும் 1531
மக்கள் 1532
மயிலும் 1543
மரபுநிலை - ஆகும் 1591
மரபுநிலை- ஆன 1590
மரபுநிலை - நெறியின 1593
மறுதலை 1604
மாவும்... 1531
மாற்றமும்... 1500
மெய்தெரி 1578
மேற்கிளந்து 1600
முதல்வழி 1607
மூங்கா 1505
மூடும் 1564
மோத்தையும் 1547
யாடும் 1511
யானையும் 1514
வழக்கு 1592
வழிஎன 1595
வழியின் நெறி 1596
வார் கோட்டு 1536
விட்டு 1602
வில்லும் 1583
வினையின் 1594
வேந்துவிடு 1581
வேழக்கு 1523
வேளாண் 1580
வைசிகன் 1577

# தொல்காப்பியம்

## மாணவர்களுக்கு என முதன்முதலில் எழுதப்பெற்ற புதியமுறை எளியவுரை

- தொல்காப்பியம்

  1. எழுத்ததிகாரம்
  2. சொல்லதிகாரம்
  3. பொருளதிகாரம் – அகத்திணையியல், புறத்திணையியல்
  4. களவியல், கற்பியல், பொருளியல்
  5. மெய்ப்பாட்டியல், உவமையியல்
  6. செய்யுளியல், மரபியல்

  ( ஆறு தனிநூல்கள்)

- தொல்காப்பியமூலம் முற்றிலும் நல்ல பாடமாக அமைக்கப் பெற்றுள்ளது.

- 'இயல் கருத்து நிரல்' என்பது முற்றிலும் புதிய முயற்சி. நூற்பா வரிசைப்படி,கருத்து நிரல் தரப்பெற்றிருப்பதால், அவ்வியலின் உள்ளடக்கம் முழுமையாய் விளங்கும்.

- நூற்பாக்கள் தோறும் தந்துள்ள தலைப்புக்கள் வாக்கியமாகத் தரப்பட்டுள்ளன. இது தொல்காப்பியம் நன்கு விளங்க வேண்டும் என்பதற்கான முயற்சி.

- நூற்பாக்களுக்குக் கருத்துரை, அருஞ்சொற்பொருள், புதிய – இக்கால – நடைமுறை எடுத்துக்காட்டுகள் தந்திருப்பது, இந்நூல்களின் தனிச் சிறப்பு.